

எண்டமூரி வீரேந்திரநாத்
பர்ண சாலை
எண்டமூரி வீரேந்திரநாத்
பர்ண
சாலை

உரிமைப் பதிப்பு
முதற் பதிப்பு - 2008

© ஆசிரியருக்கு

விலை: ரூ. 95-00

அல்லயன்ஸ்
கம்பெனி

ப.எண். 244, ராமகிருஷ்ணா மடம் சாலை,
தபால்பெட்டி எண்: 617
மயிலாப்பூர், சென்னை - 600 004.
தொலைபேசி : 24641314
இணைய தளம் : www.alliancebook.com
தொலை நகல் : srinivasan@alliancebook.com

Laser Typeset by : IMAGE DTP, T. Nagar, Chennai - 17
Printed at : Kay Em Packaging Industries, Chennai - 5

0 1436509
89978

## முன்னுரை

பிரபல தெலுங்கு எழுத்தாளர் திரு. எண்டமூரி வீரேந்திரநாத் அவர்கள் எழுதிய "பர்ணசாலா" என்ற நாவலை தமிழாக்கம் செய்து அதே தலைப்பில் வாசகர்கள் முன்னால் வைத்துள்ளேன்.

பணம் எந்த அளவுக்கு மனிதர்களிடம் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதையும் வாழ்க்கை யின் போக்கை எப்படி யெல்லாம் மாற்றி விடும் என்பதையும் நேரடியாக புரியவைக்கும் புதினம் இது. கணவன் மனைவி உறவை கூட பிளக்கச் செய்யக்கூடிய வல்லமை படைத்தது பணம் என்றால், அது மிகை அல்ல. தனித்தன்மையும், தன்னம்பிக் கையும் துணையாக இருந்தால் வாழ்க்கையின் பிரச்சனைகளை, சவால்களை எதிர்கொண்டு நல்லதொரு தீர்வை காண முடியும்.

மொழிபெயர்ப்புக்கு அனுமதி வழங்கிய திரு. வீரேந்திரநாத்துக்கும், புத்தகமாக வெளியிட்ட அல்லயன்ஸ் நிறுவனத்தாருக்கும் எனது நன்றி என்றும் உரியது.

*19.2.2007*

சென்னை

கௌரி கிருபானந்தன்

# பர்ணசாலை

## 1

பேரிரைச்சலோடு அலைகளைச் சிதறி விழும்படியாக செய்து கொண்டிருந்த பிரளயகால சண்ட மாருதமே வினாடி நேரம் திகைத்துப் போய் நின்று விட்டாற்போல், வானம் படீரென்று வெடித்த சத்தம்!

கதிரவன் நிலவோடு கூடுவதற்கு மேற்கு மலையில் சாய்ந்து கொஞ்சம் கண் மறைவானதுமே பனித்திரையைப் போர்த்திக் கொண்டு உலா வந்த மேகங்கள்...

மழைநீரில் குளிர்த்தெழுந்த பூமா தேவி... தவம் கலைந்துவிட்ட ரிஷியைப் போல் காட்சியளித்த இயற்கை.. பெயர் தெரியாத ஓவியனின் தூரிகையிலிருந்து நழுவிய கோடு! மலையைப் புரட்டிப் போடும்

எண்ணத்துடன் பலமாக வீசும் காற்று. சிருஷ்டி தனக்குத் தானே பேசிக் கொள்வது போன்ற பேரிரைச்சல்! சைதன்யா லேசாக நடுங்கினான்.

பலமாக வீசிக் கொண்டிருந்த காற்றிற்குத் தென்னைக் கீற்றுகள் அப்படியும் இப்படியும் அசைந்த ஓசையை எழுப்பிக் கொண்டிருந்தன. ஜன்னல் கதவுகள் அடித்துக் கொண்டிருந்தன. விட்டு விட்டு வீசிக்கொண்டிருந்த காற்றால் லேசான சாரல்கள் அலையலையாய் வந்துத் தெறித்துக் கொண்டிருந்தன.

திடீரென்று விழிப்பு வந்துவிட்டது. ஏதோ கனவு! பூமி நழுவிவிட்டது போல்... வானமே சுருங்கிவிட்டாற்போல்... தெளிவில்லாத தீய கனவு.

அவனுக்குச் சிறு வயதிலிருந்தே மழையைப் பார்த்தால் அலர்ஜி. வெளியே மின்னல் பளீரென்று மின்னி வினாடி நேரம் அறையில் வெளிச்சத்தை நிரப்பிவிட்டு மறைந்தது. அவ்வளவு குளிரிலும் அவன் நெற்றியில் வியர்வை அரும்பியது.

வெனிஷியன் பிளயிண்ட்ஸ் பின்னாலிருந்து மரங்களின் நிழல்கள் கண்ணாடிக் கதவுகளின் மீது விகாரமாக நாட்டிமாடிக் கொண்டிருந்தன. வராண்டா கோயிலிருந்து தாரையாய் தண்ணீர் கீழே விழும் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. மீன் தொட்டியில் இருந்த மீன்குட்டிகள் வெளியே நிகழும் பயங்கர மாறுதலைப் பற்றி அறியாமல் தூங்கிக் கொண்டிருந்தன. நனைந்த நைட் க்வீன் பூக்களின் நறுமணம் காற்றில் குப்பென்று மயக்கத்தை ஊட்டுவது போல் வீசிக் கொண்டிருந்தது.

நெற்றியில் படிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டே பக்கத்தில் பார்த்தான். காந்திமதி தூக்கத்திலேயே மகனை அணைத்துக் கொண்டாள்.



தொலைவில் எங்கேயோ இடி இடித்தது.

சைதன்யாவுக்கு ஜோதிடத்தின் மீதும், சகுனங்களின் மீதும் நம்பிக்கை இல்லை. ஆனால் மனம் ஏதோ குறிப்பை இடைவிடாமல் மூளைக்கு அனுப்பிக்கொண்டே இருந்தது. என்ன நடக்கப் போகிறது?

இடிவிழுந்து, தான் குடும்பத்தோடு அழிந்துபோய் விடுவானா? சாவு கெட்ட சகுனம் இல்லையே?

இரண்டு மணி நேரத்திற்கு முன்னால் நிகழ்ந்த வியாபார ஒப்பந்தத்தில் நஷ்டம் ஏற்பட்டு விடுமோ? எவ்வளவுதான் நஷ்டம் வந்தாலும் ஐம்பதாயிரத்திற்கு மேல் வராது. அது ஒரு பெரிய இழப்பு இல்லை.

பின்னே!

அவன் தன் கனவை மறுபடியும் நினைவுப் படுத்திக் கொள்ளப் பார்த்தான். ஒரு பிச்சைக்காரன், உடைகள் கிழிந்த நிலையில், தாடியுடன் பைத்தியம் போல் இருந்தான். இரு கைகளையும் நீட்டியபடி உரத்தக் குரலில் அழுது கொண்டிருந்தான். அதற்குள் ஏதோ ஒளிவட்டம் கண்களைப் பறிக்கும் படியாக மின்னல் வேகத்தில் வந்து அவனோடு ஐக்கியமாகிவிட்டது.

தலையைச் சிலிர்த்துக் கொண்டே படுக்கையை விட்டு எழுந்துகொண்டு ஓசைப் படுத்தாமல் வெளியே வந்தான். திடீரென்று குளிர்ந்த காற்று வந்து சூழ்ந்து கொண்டது. மனதில் சூழ்ந்து கொண்டிருந்த அதிருப்தியெல்லாம் மாயமாகி விட்டாற் போலிருந்தது.

விசாலமான தாழ்வாரம் கலைஞனின் சூனியம் போல் இருந்தது. திரும்பவும் மின்னியது. தெருவுக்கு

அந்தப் பக்கமாக கொஞ்சம் தொலைவில் பனை ஓலை யிலான குடிசை ஒன்று, பர்ணசாலையைப் போல் தோற்ற மளித்தது. இவ்வளவு குளிரில் அதில் இருப்பவர்கள் எப்படித்தான் படுத்துக் கொண்டிருப்பார்களோ என்று நினைத்தபடி உள்ளே வந்தான். ஊதக் காற்றை கண்டிஷன் செய்து உள்ளே அனுப்பிக்கொண்டிருந்தது ஏர் கண்டிஷனர்.

படிகளில் இறங்கி கீழே வந்தான். ரவி உறங்கிக் கொண்டிருந்தான்.

மேஜை விளக்கிற்கு முன்னால் உட்கார்ந்து படித்துக் கொண்டே, அப்படியே முன்னால் சாய்ந்து மேஜை மீது தலையை வைத்துக் கொண்டே தூங்கிக் கொண்டிருந் தாள். அவளுடைய நீண்ட கூந்தல் தரையில் புரண்டுக் கொண்டிருந்தது. எழுப்பிச் சரியாக படுத்துக் கொள்ளச் சொல்வோம் என்று நினைத்தவன், உடனே அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டான். எழுப்பிவிட்டால் விடியும் வரையில் படித்துக்கொண்டே உட்கார்ந்து விடு வாளோ என்று பயந்தான். உண்மையில் ரவிக்குக் கூட அடுத்த நாளிலிருந்து தேர்வுகள் இருந்தன. ஆனாலும் கௌசல்யாவிடமிருந்த பிடிவாதம் அவனிடம் இல்லை. அது அவ்வளவு கலைப்பட வேண்டிய விஷயமும் இல்லை. விழுந்து விழுந்து படிக்காவிட்டாலும் அவன் நல்ல மதிப் பெண்களை பெற்றுக் கொண்டுதான் இருந்தான்.

சைதன்யா படியேறி மாடிக்கு வந்தான். தூக்கம் வரும் ஜாடைத் தெரியவில்லை. ஜன்னல் அருகில் வந்து நின்றான். மழையில் நனைந்த சாலை, விளக்குகளின் வெளிச்சத்தில் கழுவிய கண்ணாடியைப் போல் மின்னிக் கொண்டிருந்தது. எங்கும் ஆளரவமிருக்கவில்லை.



திடீரென்று அவன் காதுகளில் தொலைவில் யாரோ சண்டைப் போட்டுக் கொள்ளும் சத்தம் அரைகுறையாய் கேட்டது. ஒரு நிமிஷம் தான் கேட்டதை உறுதி படுத்திக் கொள்வதற்காக நின்றான். அது பிரமையில்லை என்று தெரிந்ததுமே காரிடாருக்கு வந்தான்.

வெளியே கேட்டருகில் லேசாக பெய்துக் கொண்டிருந்த தூறலுக்கு நடுவில் கூர்க்காவுடன் யாரோ வாக்குவாதம் செய்து கொண்டிருந்தார்கள். உருவம் தெரிந்ததே தவிர யார் என்று தெளிவாகப் புரியவில்லை. அவ்வளவு மழை பெய்துக் கொண்டிருக்கும் வேளையில், இரவு சுமார் மூன்று மணிக்கு, தன் வீட்டிற்கு முன்னால் நின்று கூர்க்கா வுடன் சண்டை போட்டுக் கொண்டிருந்த அந்த நபர் யார் என்று புரியாமல் சட்டென்று கீழே இறங்கி வந்தான்.

அந்த நள்ளிரவு நேரத்தில் தன் வீட்டிற்குள் நுழையப் போன அந்த மனிதன், தன் வாழ்க்கையின் போக்கையே மாற்றிவிடப் போகிறான் என்று தெரியாத சைதன்யா, வேகமாக கேட்டை நோக்கி நடந்தான்.

* * *

"சரி போகட்டும். என்னைதான் விடலை. நீயாவது போய்ச் சொல்லு." பலவீனமான குரலில் கெஞ்சிக் கேட்டுக் கொண்டிருந்தான் அவன்.

"என் வேலை போய் விடணும்னு இருக்கா உனக்கு. போ... போ... நள்ளிரவில் வந்து தொந்தரவு செய்யாதே. நாளைக் காலையில் வா." கூர்க்காவின் வார்த்தைகளில் எரிச்சல் வெளிப்பட்டது.

சைதன்யா கேட் அருகில் வந்தான். மங்கலான விளக்கு வெளிச்சத்தில் அந்த ஆளின் உருவம் தெளிவில்லாமல் தெரிந்தது. வேட்டி உடலோடு ஒட்டியிருந்தது. சட்டை அங்கங்கே கிழிந்து தொங்கிக் கொண்டிருந்தது. தலையிலிருந்து மழைத் தண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. எலும்புக் கூட்டிற்கு உடைகள் மாட்டினாற்போல் இருந்தான் அவன். குளிருக்கு நடுங்கிக் கொண்டே கீழே விழுந்து விடாமல் இருக்க முயற்சி செய்து கொண்டிருந்தான்.

கூர்க்கா அவன் கழுத்தன் மீது கையை வைத்து தள்ள முயன்றுகொண்டே "மரியாதையாகப் போய் விடுகிறாயா பிடித்துத் தள்ளட்டுமா?" என்றான்.

"சங்கர்லால்!"

யஜமானரின் குரலைக் கேட்டதும் கூர்க்கா விரைப்பாக நின்றுவிட்டான். "சார்! இவன்..." என்று ஏதோ சொல்லப் போவதற்குள் அந்த ஆள் காற்றாய் அருகில் வந்தான்.

"கிருஷ்ணா! நான்தான்டா. சங்கரன் வாத்தியார்."

தள்ளாடி விழப் போனவனை பிடித்துக் கொள்ளப் போய் ஷாக் அடித்தாற்போல் கையைப் பின்னால் இழுத்துக் கொண்டான் சைதன்யா. அவ்வளவு குளிரிலும் அவன் உடல் அனலாக கொதித்துக் கொண்டிருந்தது. "டேய்! கிருஷ்ணா!" அதற்கு மேல் வார்த்தைகள் வரவில்லை.

அவன் உடல் பல நாட்களாக அன்ன ஆகாரமின்றி இளைத்துத் துரும்பாகிவிட்டிருந்தது. கன்னங்களின் சதை வற்றிப்போய், தோல் தொங்கிக் கொண்டிருந்தது. கண்கள் ஜீவக்களை இழந்து கண்ணாடிக் குண்டுகளைப் போல் பளபளத்தன. நன்றாக நரைத்துப் போயிருந்த கேசம் முன் நெற்றியில் அசிங்கமாக தொங்கிக் கொண்டிருந்தது.



"கிருஷ்ணா! என்னை அடையாளம் தெரிந்து கொண்டாயா?" ஆசைக்கும் நிராசைக்கும் இடையே தவித்துக் கொண்டிருந்தது அந்தக் குரல்.

அவரை அணைத்துக் கொண்டாற்போல் பிடித்துக் கொண்டு வீட்டை நோக்கி அழைத்துக் கொண்டு போனவன் "சார்! உங்களை அடையாளம் கண்டுகொள்ள முடியாமல் போனால் என்னை நானே மறந்து போய் விட்டாற்போல்தான்" என்றான்.

"போதும் கிருஷ்ணா! போதும். இனி நிச்சிந்தையாய்..." தொண்டையில் ஏதோ அடைத்துக் கொண்டாற்போல் அதற்கு மேல் வார்த்தைகள் வெளிவரவில்லை. அவரைப் பிடித்துக் கொண்டே ஹாலுக்கு வந்தான். இந்தச் சந்தடியைக் கேட்டு கௌசல்யா விழித்துக்கொண்டு விட்டாள் போலும். அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள்.

தங்களையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த தங்கையைப் பார்த்து "அந்தக் கதவைச் சாத்து. ஊதக் காற்று வீசுகிறது" என்றான். கனவிலிருந்து மீண்டவளைப் போல் அவள் சட்டென்று அந்தப் பக்கம் போனாள்.

அதுவரை உயிரைக் கையில் பிடித்து வைத்துக் கொண்டு இயற்கையின் சீற்றத்தைத் தாக்குப்பிடித்துக் கொண்டிருந்த உடல் அதற்கு மேல் சக்தி இல்லாதது போல் சோபாவில் சரிந்துவிட்டது.

"கௌசல்யா! கொஞ்சம் ஹார்லிக்ஸ்."

அதற்குள் காந்திமதி கீழே வந்தாள். ரவியின் அறையில் விளக்கு எரிந்தது. ஒரு நிமிஷத்தில் சூழ்நிலை மாறிவிட்டது. அவுட் ஹௌசிலிருந்து வேலைக்காரர்கள் ஓடி வந்தார்கள், எங்கும் பரபரப்பு. இதை எதையும் பொருட்படுத்தாதது போல் வாத்தியாரின் உடல் சலனமற்ற நிலையில் கிடந்தது.

கௌசல்யா ஹார்லிக்ஸ் கொண்டு வந்தாள்.

தலையை மடியில் தூக்கி வைத்துக் கொண்டு மெதுவாக ஹார்லிக்ஸை அவருக்குப் புகட்டத் தொடங்கினான். எல்லோரும் தொலைவில் நின்றபடி பார்த்துக் கொண்டிருந்தார்கள். வந்த நபர் யார் என்று ஒருவருக்குமே தெரியாது. ஆனால் வந்த நபரின் பால் சைதன்யா காண்பித்துக் கொண்டிருந்த அக்கறையைப் பார்த்தால் அவனுக்கு ரொம்ப வேண்டியவன் என்று மட்டும் தெரிந்தது.

அவன் எழுந்து போன அவரருகில் சென்றான்.

"ஹலோ!"

ஹலோ!"

"டாக்டர் நாயுடு!"

"ஸ்பீக்கிங்!" மறுமுனை குரலில் எரிச்சலும், சலிப்பும் வெளிப்பட்டன. "யாரு?"

"சைதன்யா! கிருஷ்ண சைதன்யா!"



டாக்டரின் தூக்கக் கலக்கம் சட்டென்று விடுபட்டது. "ஹலோ சைதன்யா!"

"ஒருமுறை எங்கள் வீட்டுக்கு வர முடியுமா?"

"ஷ்யூர்... ஷ்யூர்" என்றவர் "யாருக்காவது சீரியஸ்ஸா?" என்று கேட்டார்.

"சொல்கிறேன். ப்ளீஸ் கம் ஸூன்."

"உடனே கிளம்பி வருகிறேன்."

போனை வைத்துவிட்டு பின்னால் திரும்பினான். கௌசல்யா தலையணையை சரி செய்து கொண்டிருந்தாள். அவன் யாரென்று தெரியாவிட்டாலும், அண்ணனுக்கு வேண்டிய ஆளாக எண்ணி அவள் செய்து கொண்டிருந்த பணிவிடையைப் பார்த்தபோது சைதன்யாவின் மனதில் தங்கையின் பால் அன்பு பெருக்கெடுத்தது.

ஐந்து நிமிடங்களில் டாக்டரின் கார் அந்த வீட்டின் முன்னால் வந்து நின்றது. நாயுடு உள்ளே வந்து நோயாளியைப் பரிசோதித்து முடிக்கும் வரை சைதன்யா அருகிலேயே நின்றிருந்தான்.

"எனிதிங் சீரியஸ் டாக்டர்?"

"நத்திங். நத்திங் டு வர்ரீ அபௌட் இட்." இஞ்ஜக்ஷன் தந்துகொண்டே சொன்னார்.

ரவியின்அறையில் படுக்கைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. வேலைக்காரர்கள் இருவரையும் அங்கேயே படுத்துக் கொள்ளச் சொன்னான் சைதன்யா.

"மறுபடியும் ஏதாவது பயப்படும் படியாக இருந்தால் திரும்பவும் உங்களைத் தொந்தரவு செய்ய வேண்டியிருக் கும் டாக்டர்." காரில் ஏறப்போன டாக்டரிடம் சொன்னான் சைதன்யா.

"இதில் தொந்தரவு என்ன இருக்கு? கட்டாயம் வரு கிறேன்" என்றார் டாக்டர். அவருக்கு ஆச்சரியமாக இருந்தது, எதற்குமே கலங்காத, அதிகமாகப் பேசாத சைதன்யா இவ்வளவு பதற்றமாக தென்பட்டது.

கார் புறப்பட்டது.

சைதன்யா உள்ளே வந்த போது அவர் ரவியின் அறைக்கு மாற்றப்பட்டிருந்தார். நோயாளியின் முகத்தில் முன்பிருந்த சோர்வு நீங்கி தெளிவாக இருந்தது.

வேலைக்காரர்கள் பக்கம் திரும்பி "ஜாக்கிரதை யாகப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்றான்.

"நான்தான் இருக்கேனே அண்ணா!" என்றான் ரவி.

தலையை அசைத்துவிட்டு வெளியே வந்தான்.

"ஐயா!"

சைதன்யா திரும்பினான். வேலைக்காரன் ஒரு கவரை அவனிடம் தந்துவிட்டு "உடைகளை மாற்றும் போது கிடைத்ததுங்க" என்றான்.

சிறிய பிளாஸ்டிக் உறை, இரண்டு பக்கமும் சீல் செய்யப்பட்டிருந்தது. அதை எடுத்துக்கொண்டு மாடிக்குப் போனான்.

காந்திமதி குழந்தையைத் தட்டிக்கொண்டே தூங்க வைத்துக் கொண்டிருந்தாள்.



படுக்கையில் படுத்துக் கொண்டு சோர்ந்து போனவன் போல் நெற்றியின் மீது கையை வைத்துக் கொண்டே கண்களை மூடிக் கொண்டான்.

அவள் குழந்தையைத் தட்டிக் கொண்டே "அவர் யார்?" என்று கேட்டாள்.

"சங்கரன் வாத்தியார்" என்றான். "பதிமூன்று வயதில் அம்மா அப்பாவின் செல்லம், பணம் எல்லாம் சேர்ந்து என்னைக் குட்டிச் சுவராக்கிக் கொண்டிருந்த போது அவர்தான் என்னைக் காப்பாற்றினார். எனக்கு எப்பொழுதாவது யாராவது உதவி செய்திருக்கிறார்கள் என்றால் அது அவர் ஒருத்தர்தான்."

அதைவிட அதிகமாகப் பேசிப் பழக்கமில்லை அவனுக்கு. காந்திமதி படுத்துக் கொண்டாள். சைதன்யா கண்களை மூடிக் கொண்டான்.

தெளிவில்லாத கடந்த காலத்து யோசனைகளுக்கு நடுவில் அவனுக்கு உறக்கம் வந்தது. பொல பொலவென்று பொழுது விடிந்துக் கொண்டிருந்த போது போன் ஒலித்த தால் அவனுக்கு விழிப்பு வந்தது.

பம்பாயிலிருந்து கால். ஐந்து நிமிஷம் பேசி வைத்து விட்டான்.

அதற்குமேல் தூக்கம் வரவில்லை. ஆறடித்தது. இருள் திரை இன்னும் விலகவில்லை. கிழக்கு வானம் கொஞ்சம் கொஞ்சமாக சிவந்து கொண்டிருந்தது. நேற்றிரவு நிகழ்ந்த இயற்கையின் பிரளயத் தாண்டவத்தின் சாயல் மறைந்து சூழ்நிலை அமைதியாக இருந்தது. காற்றில் உதிர்ந்த இலைகள் காம்பவுண்ட் முழுவதும் விழுந்து கிடந்தன.

படியிறங்கி அவன் கீழே வந்துக் கொண்டிருந்த போது, மறுபடியும் ஃபோன்.

"ஹலோ !"

"நான்தான் டாக்டர் நாயுடு."

"குட் மார்னிங் டாக்டர் !"

"தட்ஸ் குட். நான் எட்டு மணிக்கு வருகிறேன். எனிதிங் சீரியஸ்?" டாக்டரின் குரலில் பிரதிபலித்த பற்றம் சைதன்யாவுக்குச் சிரிப்பை வரவழைத்தது. பணம் கடமையை நன்றாக நினைவுப்படுத்தும்.

"நோ... நாட் அட் ஆல்."

யஜமானரின் குரலைக்கேட்டு வேலைக்காரன் வேகமாக ஓடிவந்தான். அவனைக் கேட்டுவிட்டு மௌத் பீஸிருந்து கையை எடுத்து "இரவு ஒரு தடவை விழிப்பு வந்ததாம். நீங்க தந்த காப்ஸ்யூலை கொடுத்தாங்களாம். டெம்பரேச்சர் கூட இல்லையாம். தாங்க்யூ டாக்டர்" என்று சொல்லிவிட்டு ஃபோனை வைத்துவிட்டான்.

அவன் திரும்பிய போது, காந்திமதி உள்ளேயிருந்து காபியை எடுத்துக்கொண்டு வந்துக் கொண்டிருந்தாள். தலைக்குக் குளித்திருந்தால் கேசம் காற்றில் பறந்து கொண்டிருந்தது.

வெள்ளை நிறப் புடவையில் பனியில் குளித்த மல்லிகைப் பூவைப் போல் புனிதமாக இருந்தாள். நெற்றியில் பளிச்சென்று குங்குமம், விசாலமான கண்கள். அப்பாவித்தனமும், உற்சாகமும் அவள் முகத்தில் என்றுமே மாறாது தோன்றிக் கொண்டிருக்கும். அந்த புனிதத்தைக் கண்டு



மெய் மறந்து போனவனாக" எனக்கு ஒன்றுதான் ஆச்சரியமாக இருக்கு" என்றான்.

அவள் முறுவலுடன் "என்ன?" என்றாள் காபியை தந்து கொண்டே

"நான் சில சமயம் ரொம்ப சீக்கிரமாக எழுந்து கொண்டு விட்டதாக நினைத்துக் கொள்வேன். அதற்குள் நீ எழுந்து குளித்துத் தயாராகியிருப்பாய். அதுசரி. எத்தனை மணிக்கு நீ எழுந்துக் கொள்வாய்?"

காந்திமதி இந்தப் புகழ்ச்சிக்கு கொஞ்சம் வெட்கப் பட்டாள்.

காலியான கோப்பையைக் காந்திமதியிடம் கொடுத்து விட்டு, ரவியின் அறைக்கு வந்தான். காந்திமதி அவனைப் பின் தொடர்ந்தாள்.

ரவி படுக்கையில் அலங்கோலமாய் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தான். வேலைக்காரர்கள் இருவரும் அதற்குள் எழுந்து வேலைகளை கவனிக்க போய்விட்டார்கள் போலும். அவர்களுடைய படுக்கைகளையும் காணவில்லை. சங்கரன் வாத்தியார் இன்னும் உறக்கத்திலிருந்து எழுந்திருக்கவில்லை.

கட்டிலுக்கு அருகிலிருந்த ஸ்டூலின் மீது நேற்றிரவு டாக்டர் கொடுத்த மாத்திரைகள் இருந்தன. பாதி குடித்து விட்டு வைத்திருந்த தண்ணீர் டம்ளர் இருந்தது. ஜன்னல் கண்ணாடிகளின் வழியாக வெளிச்சம் கொஞ்சம் கொஞ்சமாக வரத் தொடங்கியது. மின் விசிறியின் காற்றில் போர்வையின் விளிம்பு லேசாக அசைந்து கொண்டிருந்தது.

ஜுரம் எப்படி இருக்கிறது என்று பார்ப்பதற்காக அவர் நெற்றியில் கையை வைத்த சைதன்யா, ஷாக் அடித் தாற்போல் கையைப் பின்னால் இழுத்துக் கொண்டான்.

அவருடைய உடல் சில்லிட்டிருந்தது.

ஐஸ் கட்டியைவிட ஜில்லென்று இருந்தது.

## 2

"இன்றைக்கு நமக்குச் சாப்பாடு இல்லை" என்றாள் கிரண்மயி. சாரதா பதில் சொல்லவில்லை.

"நாளைக்குக் கூட இருக்காது. அது மட்டுமில்லை. இனி என்றைக்குமே நமக்கு சாப்பாடு இருக்காது."

சாரதா பயந்துகொண்டே அக்காவின் பக்கம் பார்த் தாள். மறுநாள் சாப்பாடு கிடையாது என்பதால் இல்லை. நாளுக்கு நாள் பர்வெர்டட் ஆக மாறிக் கொண்டேயிருந்த அவளுடைய மனநிலையை நினைத்து தான்.

"ஏன் பதில் பேச மாட்டேங்கிறாய்?"

"என்னவென்று பேசட்டும்?" சாரதாவுக்கு இந்த முறை சிரிப்பு வந்தது. அதை அக்கா பார்த்தால் திரும்ப வும் ரகளையாகிவிடும் என்று நினைத்து அடக்கிக் கொண் டாள்.

"நீ அந்த காமாட்சி மாமியின் வீட்டிற்கு இனி போகாதே."

ஏன் என்பது போல் பார்த்தாள் சாரதா.



"காலையில் நான் போனேன். மாமி இல்லை. மாமி யின் சீமந்தப் புத்திரன் இருந்தான். கொஞ்சம் அரிசி இருந் தால் கொடு என்று கேட்டேன்."

"அவனையா கேட்டாய்?"

"ஏன்? கேட்கக் கூடாதா? நமக்கு வேண்டியது அரிசி தானே. அதை கேட்பதற்கு யாராக இருந்தால் என்ன?"

சாரதாவிற்கு இந்தத் தர்க்கம் பிடிக்கவில்லை. ஆனா லும் அவள் பேசவில்லை. கிரண்மயியே மேலும் சொன் னாள்.

"தனியாக இருக்கும் பெண் உதவியைக் கேட்டால் என்றுமில்லா தைரியம் வந்துவிடும் போலும். நக்கலாக சிரித்துவிட்டு 'இப்படி அரிசியைக் கேட்டு வாங்கிக் கொள்ள வேண்டிய தலையெழுத்து எதுக்கு? ஊம் என்று சொன்னால் உத்தரவிடக் கூடிய உரிமையே கிடைத்து விடுமே' என்றான் அந்த ராஸ்கெல்! நான் என்ன பதில் சொன்னேன் தெரியுமா?"

சாரதா அக்காவையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"இப்படி ஊம் என்று சொல்ல வைக்க வேண்டிய தலையெழுத்து உனக்கெதுக்கு? ஒரு முறை மூன்று முடிச் சைப் போட்டுவிட்டால் உனக்கே உத்தரவிடக் கூடிய உரிமை கிடைத்துவிடும் இல்லையா?" என்றேன். தீய்ந்த தோசையைப் போல் அவன் முகம் கறுத்துவிட்டது. ஊம் என்று சொல்லணுமாம் ஊம்."

சாரதாவுக்கு அழுகை வந்துவிட்டது.

"அசல் திருப்பம் எப்போ வந்தது தெரியுமா? எப்பொழுது வந்தாளோ தெரியாது. காமாட்சி மாமி வந்து எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தாள் போலும். மகனை நாலு வார்த்தை கேட்டு உலுக்கி எடுப்பதை விட்டு விட்டு என்னைக் கண்டபடி திட்டினாள். என்னைப் போன்றவர்களால்தான் பெண்களின் மதிப்பே குறைந்து விட்டதாம். நன்றாக இருக்கும் குடும்பங்கள் இதனால் தான் சீரழிந்து போகின்றனவாம்" என்று சொல்லிக் கொண்டே கண்ணீர் விடத் தயாராக இருந்த தங்கையின் கண்களைப் பார்த்தாள்.

"நீ எதுக்கு அழுகிறாய்? மனதில் அவ்வளவு கல்மிஷம் இருக்கிற அவர்கள்தான் அழுது அழுது சாகணும். நாம்ப இல்லை. வயிறு காலியாக இருந்த போதிலும், கடவுள் இந்த வரத்தையாவது நமக்குத் தந்து இருப்பதற்கு நாம் சந்தோஷப்படணுமே ஒழிய...."

"உன்னைப் பார்த்தால் பயமாக இருக்கு அக்கா!"

"பயமா?" என்றாள் கிரண்மயி. "பழுக்கக் காய்ச்சிய இரும்பின் மீது ஓங்கி அடித்தாற்போல் நம் ஏழ்மையின் மீது விதி மேலும் மேலும் அடிகளை கொடுத்து வருகிறது. இப்படி கரடுத் தட்டிப் போனதை நினைத்து சந்தோஷப் படு. இந்த அளவுக்கு உறுதி இல்லையென்றால் போகப் போக இன்னும் விழும் அடிகளை எல்லாம் பொறுப்பு கஷ்டம்."

"இதை விட கஷ்டம் வருமா?"

வினாடி நேரம் கிரண்மயியின் வாக்பிரவாகம் நின்றது, தங்கையின் கேள்வி புரியாததால், பிறகு பெரி



தாகச் சிரித்துவிட்டு "இதைவிட கஷ்டமா? இப்போ என்ன நடந்து விட்டது? இன்றோ நாளையோ வீட்டுக்காரன் வந்து நம்மைத் துரத்தியடித்து விடுவான். நடுத்தெருவில் நிற்கும் நம்மை கருணை உள்ளம் கொண்ட எவனாவது விபச்சார விடுதியில் சேர்த்துவிடுவான். காலம் பாம்பாய் ஊர்ந்துக் கொண்டே இருக்கும். உடலை நோய் தின்னத் தொடங்கும். உடல் முழுவதும் கறுத்துப் போய்விடும். நம் எதிர்காலம் டெக்னிக் கலரில் தென்படுகிறது சாரதா! இன்டர்வெல்லுக்கு முன்னால் இருக்கிறோம் நாம்."

* * *

கபாலம் வெடிக்கும் வரை எரிந்து கொண்டிருந்த பிணத்தையே பார்த்துக் கொண்டிருந்தான் சைதன்யா. மனம் முழுவதும் ஏதோ சூனியம் பரவியிருந்தது.

ஏதோ வெறுமை!

தாயின் வயிற்றில் நிம்மதியாக வளையம் வந்த உயிர், மறுபடியும் மயானத்துச் சிதையின் சூட்டில் ஓய்வு பெற்று விட்டது. தலைக்கு மேல் ஆந்தை ஒன்று கத்திக் கொண்டே பறந்துபோயிற்று.

தெளிவில்லாத உணர்வுகளின் போராட்டம். அதே மனநிலையில் வீட்டிற்கு திரும்பி வந்தான். குளித்து முடிப்பதற்குள் பதினோரு மணியாகிவிட்டது. மயான வைராக்கியம் போவதற்கு ஏர் கண்டிஷன் அறையில் இரண்டு மணி நேரம் போதும். முற்றிலுமாக ரிலாக்ஸ் ஆனபொழுது பிற்பகல் மணி இரண்டாகியிருந்தது.

காந்திமதி தேநீர் கொண்டு வந்து தந்து கொண்டே சொன்னாள். "மேனேஜர் வந்திருக்கிறார்."

சைதன்யா ஆபீஸ் ரூமுக்குச் சென்றான். "எவ்வள வுக்கு செட்டில் ஆச்சு?"

"அறுபது லட்சம். இரண்டு தவணைகளில் அனுப்ப வேண்டும். ஒன்றைப் பத்தாம் தேதியிலும் இன்னொன்றை இரண்டு மாதத்திற்கு அப்புறம்."

சைதன்யா பெரிதாக மூச்சை விட்டுக்கொண்டான். பத்தாம் தேதி! அப்படி என்றால் நிறைய உழைக்க வேண்டும். எல்லா பக்கங்களிலிருந்தும் பணத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். கடற்கரைப் பிரதேசங்களி லுள்ள மீன் வில்லனும் என்றால் பத்தாம் தேதி வரைக் கும் மூச்சு விடக்கூட நேரமில்லாதபடி உழைக்க வேண்டும். உழைப்பது அவனுக்குக் கஷ்டமான விஷயம் ஒன்றுமில்லை. அவன் மனம் முழுவதும் உத்வேகத்தாலும், சந்தோஷத்தா லும் நிரம்பி வழிந்தது.

கான்ட்ராக்டில் லாபம் மிகக் குறைவாகவே இருக்க லாம். ஆனால் பிரஸ்டீஜுக்கு சம்பந்தப்பட்ட கான்ராக்ட் அது. அது முடிவடைந்ததுமே நாட்டில் உள்ள கடல் உணவுப் பொருட்களின் ஏற்றுமதியாளர்களின் பட்டிய லில் முதல் பத்து பேரில் அவன் பெயரும் சேர்ந்து விடும்.

"நான் போய் வரட்டுமா சார்?"

அந்த வார்த்தைகளால் இந்த உலகிற்கு வந்த சைதன்யா "சரி" என்றவன், சட்டென்று ஏதோ நினை விற்கு வந்தவனாய் "நம்ப குமாஸ்தா ஒன்றும் சொல்ல வில்லையா?" என்று கேட்டான்.

"எந்த விஷயம் சார்?"



"நேற்று இரவு நம் வீட்டிற்கு..."

"சொன்னார் சார்" என்றார் மேனேஜர். "கண்டு பிடிப்பது கொஞ்சம் கஷ்டமாக இருக்கும். பேப்பரில் விளம்பரம் தந்து பார்க்கலாம் சார்."

"அப்படிச் செய்தால் கொஞ்சம் தாமதமாகலாம். ரொம்ப நாட்களுக்கு முன்னால் எங்க ஊர் பள்ளியில் வாத்தியாராக வேலை பார்த்துக் கொண்டிருந்தார். சுமார் இருபது வருடங்களுக்கு முந்தைய விஷயம். ரிகார்டு களைப் புரட்டிப் பார்த்தால் ஏதாவது கிடைக்கலாமோ என்னவோ? அதிலிருந்து விசாரணையைத் தொடங்கு. பேப்பரில் கூட விளம்பரம் கொடுக்கலாம். ஆனாலும் அதற்காக இதை நிறுத்த வேண்டாம். நாளைக்கே நீ புறப் படும்."

முதலாளி எந்த முடிவை எடுத்துக்கொண்டாலும் அதைப் பற்றி எல்லாக் கோணங்களிலிருந்தும் யோசித்துப் பார்த்து விட்டுத்தான் முடிவு செய்வார் என்று மேனேஜ ருக்குத் தெரியும். உண்மையில் பேப்பரில் போடுவது ஒன்று தான் சரியான யோசனை. பத்து வருடங்களுக்கு முன்னால் ரிடையரான ஆசாமி இப்பொழுது எங்கே இருக்கிறார் என்று தெரிந்து கொள்வது அவ்வளவு சுலப மான வேலை இல்லை. ஆனாலும் அவ்வாறு செய்யச் சொன்னார் என்றால் எந்த ஒரு சின்ன வாய்ப்பையும் விட்டு விட விரும்பவில்லை என்று அர்த்தம்.

நள்ளிரவில் வீட்டிற்கு வந்து திடீரென்று இறந்து போன ஒரு அனாமத்து ஆளுக்காக இவ்வளவு செலவு எதற்காக? எம்.பி.ஏ. படித்திருந்த அவனால் புரிந்து கொள்ள முடிய வில்லை. இருந்தாலும் தலையை அசைத்து விட்டு "நாளை மாலையிலேயே கிளம்புகிறேன் சார்" என்றான்.

"மாலை வேண்டாம். காலையிலேயே கிளம்பு. வேறு வேலை ஏதாவது இருக்கா?"

"மீன்களின் லோகல் சப்ளைக்கு பிளாஸ்டிக் கவர் களுக்காக யாரோ வந்திருக்காங்க."

எஞ்சிய வார்த்தைகள் காதல் விழவில்லை சைதன்யா வுக்கு. நேற்றிரவு வேலைக்காரன் வாத்தியாரின் உடையி லிருந்து எடுத்துத் தன்னிடம் தந்த கவரைப் பற்றிய நினைவு வந்தது. சட்டென்று எழுந்து தன் அறைக்கு ஓடினான்.

* * *

அறை முறைவதும் ஒரே சந்தடியாக இருந்தது.

நான்கு காலியான பாட்டில்கள் தரையில் உருண்டுக் கிடந்தன. மேஜை மீது பாதி காலியான பீர் பாட்டில் இருந்தது. காகிதத்தில் இருக்க வேண்டிய காராபூந்தி தரை யில் சிதறிக் கிடந்தது. அடர்த்தியாக சூழ்ந்திருந்த சிகரெட் புகை அறையை விட்டு வெளியே போக முயற்சி செய்து கொண்டிருந்தது.

மூடியிருந்த கண்களை வலுக்கட்டாயமாக திறந்து "என்ன?" என்றான் சுப்புணி.

"உன்னைப் பற்றியில்லை" என்றான் சுரேஷ். பின்னா லிருந்து பார்த்தால் பெண்ணைப் போலவும், முன்னா லிருந்து பார்த்தால் இரண்டுங்கெட்டான் போலவும் இருந் தான். "பந்தயம் கட்டினால் பிரசாத் நள்ளிரவில் மயானம் வரைக்கும் போய்விட்டு திரும்பி வருவானாம்."



சுப்புணி பலவந்தமாக கண்களைத் திறந்து "இன்னும் கொஞ்சம் சரக்கை ஊற்றிக்கொண்டால் நடுக்கடல் வரை யில் கூட போய்விட்டு வரலாம்" என்றான்.

அது ஒரு பெரிய ஜோக்கைப் போல் எல்லோரும் சிரித்தார்கள், சுப்புணிதான் விருந்தினன் என்பதால். பிரசாத் மட்டும் "கடல் தேவையில்லை. ஏரிக்கரை வரைக் கும் போயிட்டு வா. பத்து ரூபாய் தரேன்" என்றான் ஏளனம் செய்வது போல்.

தட தடவென்று தட்டிய அதே சமயத்தில், சாரதா படுத்துக் கொள்வதற்காக பாயை விரித்துக் கொண்டிருந் தாள்.

கதவைத் தட்டிய சத்தம் கேட்டுவிட்டு அவள் வந்து கதவைத் திறந்தாள்.

எதிரே சுப்புணி. அவள் ஓரடி பின்னால் நகர்ந்தாள். அவன் கண்கள் சிவந்திருந்தன. இமைகள் மூடிக் கொள்ளத் தவித்துக் கொண்டிருந்தன. கதவிற்குக் குறுக்கே நின்று கொண்டு "பணம்!" என்றான்.

சாரதாவுக்கு ஒன்றுமே புரியவில்லை. "என்ன பணம்?" என்றாள்.

அவள் வார்த்தைகளை அவன் வேறு விதமாக புரிந்து கொண்டான். அதோடு நண்பர்கள் சற்று முன்னால் சொன்ன வார்த்தைகள் அவனை உள்ளூர துளைத்துக் கொண்டிருந்தன. அதனால் அவன் முற்றிலும் ஆவேச மடைந்து "ஏன்? வாடகை விஷயத்தையே மறந்து போய் சொந்தம் கொண்டாடலாம்னு எண்ணமா?" என்றான் குரலை உயர்த்தி.

அவளுக்கு விஷயம் என்னவென்று லேசாகப் புரிந்தது. ஆனால் என்ன செய்வதென்று புரியவில்லை. அவள் இயல்பிலேயே மென்மையான சுபாவம் கொண்டவள். இப்படிப்பட்ட நிலைமையை எப்படி எதிர்த்து நிற்பது இருந்தது.

"ஏன் பதில் பேச மாட்டேங்கிறாய்?" அதட்டுவது போல் சொன்னான்.

அவள் ஏதோ சொல்ல நினைத்தாள். ஆனால் வார்த்தைகள் தொண்டைக் குழியிலிருந்து வெளிவரவில்லை. கண்ணீர் அணைக்கட்டையை உடைத்துக் கொண்டு வெளி வரத் தயாராக இருந்தது.

"கொடுக்கணுங்கிற உத்தேசமாவது இருக்கா?" என்று அவன் கேட்ட கேள்விக்கு மட்டும் லேசாக தலையை அசைத்தாள். அவன் அதைப் பொருட்படுத்தாமல்" இல்லாவிட்டால் வேறு விதத்தில் தீர்த்துக்கலாம் என்ற எண்ணமா?" என்றான்.

அவள் தன் சுபாவத்திற்கு இயல்பான அப்பாவித் தனத்தோடு "எப்படி?" என்றாள்.

அந்தக் கேள்விக்கு அவன் இதழ்களில் வக்கிரமான முறுவல் நெளிந்தது. ஓரடி முன்னால் வைத்துவிட்டு "சொல்லட்டுமா?" என்றான், கண்ணை சிமிட்டிக் கொண்டே. அவளுக்கு அவன் போக்கு புரிந்துவிட்டது. முகம் களையிழந்தது. இரண்டடிகள் பின்னுக்கு நகர்ந்து கொண்டாள்.

"யாருக்கும் தெரியாது. சரியா?" என்றான்."



"என்னது? யாருக்கும் தெரியாதது?" என்ற குரல் வாசலுக்கு அருகிலிருந்து கேட்டது. அதைக் கேட்டவள் கிரண்மயி. உள்ளே வேலையாய் இருந்தவள் பேச்சுக் குரலைக் கேட்டுவிட்டு வெளியே வந்தாள்.

புடவைத் தலைப்பை இடுப்பில் சொருகிக் கொண்டு அவள்நின்று கொண்டிருந்த தோற்றத்தைப் பார்த்துவிட்டு சுப்புணி கொஞ்சம் மிரண்டுவிட்டான். அதற்குள் அவனுடைய நண்பர்கள் குழு அவ்விடத்திற்கு வந்து சேர்ந்தது. ஜன்னல் வழியாக அவர்களைப் பார்த்ததுமே போன தைரியம் திரும்பிவிட்டது.

"வாடகையைக் கொடுங்கள். இல்லாவிட்டால் வீட்டை காலி செய்துவிடுங்கள்" என்றான் பேச்சை மாற்றிக் கொண்டே.

"வாடகை கொடுக்க மாட்டோம்னு யார் சொன்னாங்க?"

"யாரும் சொல்லவில்லை. ஆனால் கொடுக்கத்தான் மாட்டீங்க. மூணுமாத வாடகை தரணும். இதென்ன தர்ம சத்திரம் என்று நினைத்தீங்களா?" கட்டையான குரலில் அவன் சொன்னது அறையில் எதிரொலித்தது.

"இன்னும் இரண்டு மூன்று நாளில்..." என்று சொல்ல வந்தவளை நடுவிலேயே இடைமறித்துவிட்டு "முடியாது" என்றான் அவன். "இன்றிரவே இந்த விஷயத்தை முடிவு கட்டிவிடணும், வாடகையைக் கொடுப்பதோ இல்லை காலி செய்வதோ."

கிரண்மயி கொஞ்சம் எரிச்சலடைந்து "இரவோடு இரவாக காலி செய்யச் சொன்னால் எப்படி?" என்றாள். உண்மையிலேயே அவன் தோரணையைப் பார்த்தால் பயமாக இருந்தது. ஆனால் சுபாவத்திலேயே தைரியசாலி என்பதால் அந்த அளவுக்காவது அவளால் பேச முடிந்தது. சாரதா வாயடைத்துப் போனவளாக நின்றிருந்தாள்.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. காலி பண்றீங்களா அல்லது பிடித்து தள்ளட்டுமா?" என்றான்.

வெளியிலிருந்து யாரோ "வெளியே தள்ளு பிரதர்!" என்றான்.

அக்கா தங்கை இருவரும் சட்டென்று ஜன்னல் வழியாக வெளியே பார்த்தார்கள். அங்கு தென்பட்ட காட்சியைப் பார்த்த பொழுது உயிரே போய்விட்டாற் போல் இருந்தது.

திண்ணை தூணில் சாய்ந்தபடி இருவர் சிகரெட் புகைத்துக் கொண்டிருந்தார்கள். இன்னும் மூன்று பேர் உள்ளே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். மேலும் இரண்டு பேர் அதற்குள் வாசல் கதவு அருகில் வந்து நின்று கொண்டிருந்தார்கள்.

கிரண்மயி முகம் நிறம் மாறிக் கொண்டிருந்ததைப் பார்த்ததுமே சுப்புணிக்கு தைரியம் வந்தது.

"நீங்க வெறுமே வாயால் சொன்னால் கேட்க மாட்டீங்க" என்று வேகமாக உள்ளே போய் பாய், துணி மணிகளை மூட்டையாய் சுற்றி வெளியே வீசி எறிந்தான். வெளியே யாரோ லபக்கென்று பந்து போல் அதை காட்சி பிடித்தார்கள்.



அவன் நடவடிக்கையைப் பார்த்து இருவரும் சிலையாகி விட்டார்கள். இவ்வளவு ஆபத்தை அவர்கள் ஊகித்திருக்கவில்லை. இந்தச் சூழ்நிலையை எப்படி எதிர்த்து நிற்பது என்று கூட அவர்களுக்குத் தெரிந்திருக்க வில்லை.

அவர்களுடைய இயலாமையைப் பார்க்கப் பார்க்க அவனுடைய வெறி மேலும் அதிகரிக்கத் தொடங்கியது.

கிரண்மயி சுதாரித்துக்கொண்டு "நில்லு! என்ன இது?" என்றாள்.

"போங்க. போய் வெளியே எங்கேயாவது படுத்துக் கொள்ளுங்கள். வீட்டை மட்டும் காலி செய்தாகணும்" என்றான் நாற்காலியை வேகமாக தள்ளிக் கொண்டே. பெருத்த ஓசையுடன் நாற்காலி கீழே விழுந்து.

"என்ன அநியாயம் இது? இந்த ராத்திரி வேளையில் எங்கே போவது?" கிரண்மயி சொன்ன போது குரலில் அழுகை கலந்திருந்தது.

"எங்கள் வீட்டுக்கு வரலாமே?" வெளியே இருந்து யாரோ சொன்னார்கள். கொல்லென்று சிரிப்பு சத்தம் கேட்டது. அதுவரை எப்படியோ அடக்கிக் கொண்டிருந்த சாரதா, அதற்கு மேல் தாங்க முடியாமல் தேம்பித் தேம்பி அழத் தொடங்கினாள்.

அந்த ஆதரவற்ற இரு பெண்களின் பரிதாபமான நிலையைக் கவனிக்க அவ்விடத்தில் யாருமே இல்லாமல் போய்விட்டார்கள். தெருவில் தம் வீட்டு திண்ணையில் நின்றபடி சில பெண்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதற்குள் அங்கு வந்து சேர்ந்த சிலர் "என்ன விஷயம்?" என்று கேட்டார்கள்.

"வீட்டை காலி செய்ய வைக்கறாங்க." யாரோ பதில் சொன்னார்கள்.

அதற்குள் சுப்புணி சின்ன டிரங்க் பெட்டியைத் தூக்கிக் கொண்டு வந்து திண்ணையில் போட்டான். பாடலாக் கழண்டு போயிருந்த பெட்டியின் மூடியை சுரேஷ் காலால் மேலே தூக்கினான். இன்னொருத்தன் குனிந்து உள்ளே இருந்த துணிகளை கலைத்து, பிராவைப் பாம்பைப் பிடித்தாற் போல் பிடித்துக் கொண்டு வெளியே எடுத்தான். யாரோ சத்தமாக விசில் அடித்தார்கள். அங்கு வந்து சேர்ந்த இரண்டு பெரிய மனிதர்களும் கூட சேர்ந்து சிரித்தார்கள்.

சாரதா கிரண்மயியின் கையைப் பிடித்துக் கொண்டு "அக்கா! போய்விடலாம்" என்றாள், தேம்பிக் கொண்டே. கிரண்மயி குழப்பத்துடன் தங்கையைப் பார்த்துவிட்டு "எங்கே?" என்றாள்.

அதற்குள் பக்கத்து வீட்டுக் கதவைத் திறந்துகொண்டு ரங்கநாதன் வெளியே வந்தார். அவர் தாலுகா ஆபீசில் குமாஸ்தாவாக வேலை செய்து ரிடையர் ஆனவர். நிலைமையைப் பார்த்ததும் அவர் கண்கள் கலங்கி விட்டன.

"அர்த்த ராத்திரி வேளையில் பெண்பிள்ளைகள் எங்கே போவாங்க பாவம்" என்றார்.

"வந்துட்டாங்கடா தர்ம பிரபு!" யாரோ கமெண்ட் அடித்தார்கள்.

"தாத்தாவின் பழைய கஸ்டமரோ என்னவோ."



கொல்லென்று சிரித்தார்கள் எல்லோரும். நடப்பதை பார்ப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று புரிந்து கொண்டார் அவர். பார்வையாளர்களில் ஒருவராக இருக்க விருப்பமில்லாமல் உள்ளே போய்விட்டார்.

அதற்குள் சுப்புணி அறையை சுற்றும் சுற்றும் பார்த்தான். வேறு எந்த சாமானும் கிடைக்கவில்லை, வீசியெறிவதற்கு. அவன் பார்வை சுவரில் மாட்டியிருந்த வயதான தம்பதிகளின் ஃபோட்டோ மீது விழுந்தது. உண்மையில் அந்த வீட்டில் சாமான்கள் எதுவும் அதிகம் இல்லை.

சுப்புணி வேகமாக போய் அந்த ஃபோட்டோவை கையில் எடுத்துக்கொண்டான். கிரண்மயி அதைப் பார்த்து விட்டு சட்டென்று ஓடிந்தாள். ஆனால் அவள் அவனைத் தடுப்பதற்குள் அவன் அதை வெளியே வீசி எறிந்தான். வெளியே நின்று கொண்டிருந்த கும்பலின் தலைக்கு மேலே பறந்த ஃபோட்டோ, தெருவிற்கு நடுவில் விழுந்து சிலீரென்ற சத்தத்துடன் உடைந்தது.

கோபத்துடனும், இயலாமையுடனும், ரோஷத்துடன் அவள் வேகமாக வாசலை நோக்கி ஓடினாள். அவர்களுடைய தாய் தந்தையின் ஃபோட்டோ அது ஒன்றுதான் இருந்தது.

கிரண்மயி வெளியே வந்ததுமே பல ஜோடிக் கண்கள் அவளை விழுங்கி விடுவது போல் பார்த்தன.

உண்மையில் அங்கிருந்த எல்லோருமே, அக்கா தங்கை இருவரும் எப்பொழுது வெளியே வருவார்களோ என்று காத்துக் கொண்டிருந்தார்கள் இவ்வளவு நேரமாக. அதுவும் அவள் அபாரமான அழகி! நன்றாக குடித்து

விட்டு, அரைகுறை நினைவோடு இருந்த அவர்களுடைய மதி அவளைக் கண்டதுமே முற்றிலும் போய் விட்டது. தங்களை தடுத்து நிறுத்த யாருமில்லாமல் போய்விட்ட தால் உற்சாகம் மேலும் கூடிவிட்டது.

கிரண்மயி இதை எதுவும் பொருட்படுத்தாதவளாக நடுத்தெருவில் கிடந்த ஃபோட்டோவை நோக்கிப் போனாள். கண்ணாடி உடைந்து வெளியே வந்து விட்டிருந்த ஃபோட்டோவை கையில் எடுத்தாள்.

அதற்குள் சாரதாவும் வெளியே வந்தாள். அக்கா ஃபோட்டோவைக் கையில் எடுத்ததும், எல்லோரின் கண் களும் தம்மையே கவனித்துக் கொண்டிருந்ததைப் பார்த்து விட்டு உள்ளேபோக திரும்பினாள். டிரங்க் பெட்டியின் மேல் உட்கார்ந்திருந்த சுரேஷ், சரியாக உட்காருவது போல் நடித்துக் கொண்டே வாசலுக்கு குறுக்காக காலை நீட்டித் தடுத்தான். வேறு வழியில்லாமல் அவள் நின்றுவிட்டாள். இன்னொருத்தன் அவள் தோள் வழியாக குனிந்து "பாவம்! காலை எடு சுரேஷ்!" என்றான். குப்பென்று அவன் வாயிலிருந்து நாற்றமடித்தது.

கிரண்மயி உள்ளே போவதற்காகப் படியேறினாள். அதற்குள் உள்ளேயிருந்து வெளியே வந்த சுப்புணி வாசற் கதவிற்குக் குறுக்கே கைகளை நீட்டி தடுத்தபடி நின்று கொண்டான்.

"உள்ளே இனி உங்க சாமான்கள் எதுவும் இல்லை. பார்த்துக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை" என்றான்.



சாரதாவுக்கு தர்மசங்கடமாக இருந்தது. அவ்வளவு பேர் ஆண்கள் அவளைச் சுற்றிலும் யமகிங்கர்களாக நின்று கொண்டிருந்தார்கள். ஜன்னல் வழியாக அரிக்கேன் விளக்கின் வெளிச்சம் மங்கலாக வெளியே வந்து விழுந்து கொண்டிருந்தது. அவள் பரிதாபமாக எல்லோரையும் பார்த்தாள். கண்களில் நீர் தாரையாக வழிந்து கொண்டிருந்தது. பூமி பிளந்து போய் அதில் புதைந்து விட்டால் தேவலை என்றிருந்தது அவளுக்கு. அவளுடைய மென்மையாக சுபாவத்திற்கு இவ்வளவு மோசமான சூழ் நிலையை ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. இவ்வளவு மானம் போகும்படியான நிலையை அவள் கனவிலும் எதிர்பார்க்கவில்லை. இந்த நள்ளிரவு வேளையில் எங்கே போவது? யாரிடம் தஞ்சமடைவது? அதற்குள் கிரண்மயி அவனிடம் வேண்டுகோள் விடுப்பது போல "குறைந்த பட்சம் இன்று இரவாவது எங்களைத் தங்கவிடு. காலை யிலேயே காலி செய்து விடுகிறோம்" என்று சொல்லிக் கொண்டே உள்ளே போக முயன்றாள். சுப்புணி கையை எடுத்துவிட்டு ஏதோ சொல்வதற்குள் அவள் உள்ளே போய்விட்டாள். சாரதாவும் அக்காவைப் பின் தொடரப் போனாள்.

அவர்கள் தன் வார்த்தையைப் பொருட்படுத்தாமல் போகவே சுப்புணிக்கு ரோஷம் வந்துவிட்டது. உள்ளே போக முயன்ற சாரதாவின் ஜாக்கெட் கழுத்தைப் பின்னா லிருந்து பற்றிக் கொண்டான். குடிவெறியில் அவளை பின்னுக்கு இழுக்க முயன்றதால், ஏற்கனவே பழசாகி விட்டிருந்த ஜாக்கெட் சர்ரென்று கிழிந்து விட்டது. ஒரு வினாடி அங்கே ஊசி விழுந்தாலும் கேட்கும்படியான

நிசப்தம் ஏற்பட்டது. ஆனால் அது ஒரு வினாடி நேரம் தான்.

யாரோ விசில் அடித்தார்கள்.

"ஹாய்" என்றார்கள் யாரோ.

நடந்ததை உணர்ந்து கொண்டதுமே சாரதாவுக்கு நினைவு தப்பிவிடும் போல் இருந்தது. பண்பும், நெறி முறையும் உள்ள நல்ல குடும்பத்தில் பிறந்தவள் அவள். அவர்களுடைய பொருளாதார நிலை அவ்வளவு நன்றாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் வறுமை இவ்வளவு கொடூரமாக தம்மை பழி வாங்கும் என்று அவள் எதிர் பார்க்கவில்லை. பல ஜோடிக் கண்கள் வெறுமையாய் இருந்த தன் தோளையே பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்தும் முந்தானையைக் கூட சரியாக போர்த்திக் கொள்ள முடியாத அளவிற்கு சோர்வு திடீரென்று அவளைச் சூழ்ந்துக் கொண்டுவிட்டது. அருகில் வந்த அக்காவின் தோள் மீது தலையைச் சாய்த்துக் கொண்டு மூர்ச்சையுற்றுக் காலடியில் சரிந்து விழுந்தாள்.

கிரண்மயி அனல் கக்கும் விழிகளோடு கையை உயர்த்தி அவனை அடிக்கப் போனாள். அவன் அவள் கையை இடையிலேயே பிடித்துக் கொண்டு வேகமாக இழுத்தான். அந்த வேகத்தில் அவள் அவன் மீது விழுந்தாள். அவளுடைய தோளைச் சுற்றி அவன் கைகளைப் போட்டான். அவள் திமிறிக் கொண்டே, "சீ! விடு" என்றாள்.

அவ்வளவு நெருக்கத்தில் அவள் அழகைப் பார்த்த பிறகு அவன் மூளையே கலங்கிவிட்டது. சுற்றியிருந்த சூழ்நிலையை, மனிதர்களையும் மறந்து போய் அவளை



நோக்கிக் குனிந்தாள். நண்பர்களிடமிருந்து வந்த ஊக்கம் அவனை மேலும் உற்சாகப் படுத்திக் கொண்டிருந்தது. அவளை வெளியே பிடித்து இழுப்பது போல் நடித்துக் கொண்டே மேலும் அருகில் இழுத்துக் கொண்டான்.

அதற்குள் அவன் தோளின் மீது கை ஒன்று படிந்தது.

சுப்புணி திரும்பிப் பார்த்தான்.

திரும்பிப் பார்த்ததுமே அவன் கன்னம் அதிர்ந்தது– அந்த அடியின் வேகத்திற்கு அவன் போய் வாசற் கதவிற்கு பக்கத்தில் விழுந்தான்.

எதிர்பாராத இந்த தாக்குதலுக்கு வினாடி நேரம் விக்கித்துப் போனாலும், சட்டென்று எழுந்து நின்று "யாரடா நீ?" என்றான்.

அந்த இளைஞன் அவன் பேச்சை காதில் போட்டுக் கொள்ளாமல் சாரதாவின் அருகில் சென்று அவளைப் பற்றி எழுப்பினான்.

"வந்துட்டாண்டா பெரிய ஹீரோ எவனோ!" யாரோ கும்பலிலிருநது சொன்னார்கள்.

சுரேஷ் டிரங்க் பெட்டியின் மேலிருந்து எழுந்து அவனிடம் போய் கோட்டு காலரைப் பிடித்துக் கொண்டு "எங்க ஆளை அடிப்பதற்கு எவ்வளவு துணிச்சல் உனக்கு?" என்றான். சுற்றிலும் இருந்த நண்பர்கள் கூட்டத்தைப் பார்த்ததுமே மேலும் தைரியம் பொங்கி வந்தது. அதுவும் எதிரி ஒற்றை ஆள்தான் என்று தெரிந்ததும் இன்னும் கூடி விட்டது. பின்னால் திரும்பிய அந்த இளைஞனின் டையைப் பிடித்து இழுத்துக் கொண்டே "இது எங்கள்

வீடு. என்ன வேண்டுமானாலும் செய்து கொள்வோம். உனக்கென்ன வந்தது?" என்று சொல்லிக் கொண்டே பிடித்துத் தள்ளினான். "பார்த்துக் கொண்டே இருக்கிங்களே? நாலு அறை கொடுக்காமல்?" என்றான் யாரோ ஒருத்தன்.

அந்த இளைஞன் அதைப் பொருட்படுத்தாமல் மெதுவாக பேண்ட் ஜேபியிலிருந்து கைகுட்டையை வெளியே எடுத்து கோட்டின் மீது பட்ட அழுக்கைத் துடைத்துக் கொண்டே "யூசப்" என்று குரல் கொடுத்தான்.

கார் முன் கதவின் சத்தம் கேட்டதும் எல்லோரின் பார்வையும் அந்தப் பக்கமாக திரும்பின. டிரைவர் சீட்டிலிருந்து ஆறடி உயரமான ஆள் ஒருத்தன் இறங்கினான். பிறந்ததிலிருந்து இறைச்சியும், வெண்ணையும் தவிர வேறெதுவும் சாப்பிட்டிருக்க மாட்டான் போலிருந்தது அவனைப் பார்த்தால். அருகில் வந்து "சார்!" என்றான்.

"கொஞ்சம் இவனைப் பார்த்துக் கொள்."

உண்மையில் அந்த டிரைவர் நடந்து கொண்டிருந்ததை எல்லாம் பார்த்தபடியே எஜமானரின் உத்தரவுக்காகக் காத்துக் கொண்டிருந்தான், இவ்வளவு நேரமாக. அது கிடைத்ததும் சுரேஷின் இரண்டு தோள்களையும் பற்றி, பொம்மையைத் தூக்குவது போல் காற்றில் தூக்கிப் பிடித்துக் கொண்டான்.

அதற்குப் பிறகு அங்கே கேட்ட பொத் பொத் என்ற சத்தத்தையும், லேசான முனகல்களையும் அந்த இளைஞன் பொருட்படுத்தவில்லை.



அப்பொழுதுதான் நினைவு திரும்பிய சாரதா என்ன நடந்து கொண்டிருந்தது என்று புரியாமல் சுற்றும் முற்றும் பார்த்தாள். அவளுக்குக் கையைக் கொடுத்து எழுப்பி நிறுத்தி, கிரண்மயியைப் பார்த்து, "இங்கிருந்து எடுத்துக் கொண்டு போக வேண்டிய முக்கியமான சாமான்கள் ஏதாவது இருக்கா?" என்று கேட்டான்.

வேறு ஏதோ உலகத்தில் இருந்தாற்போல் சிலையாக நின்று கொண்டிருந்த கிரண்மயி, தன்னையறியாமலேயே இல்லை என்று தலையை அசைத்தாள்.

"அப்படி என்றால் கிளம்புங்கள்." பதிலுக்காகக் காத்திருக்காமல் சாரதாவை அணைத்துப் பிடித்துக் கொண்டேகாரை நோக்கி நடத்தி அழைத்துச் சென்றான்.

மங்கலான நிலா வெளிச்சத்தில் கருப்பு நிற ஃப்ளை மூத் கார் கம்பீரமாக நின்று கொண்டிருந்தது. கதவைத் திறந்து அவளை உட்கார வைத்தான். இந்தப் பக்கமாக சுற்றி வந்து கதவைத் திறந்து "உட்காருங்கள்" என்றான்.

கிரண்மயிக்கு எதுவும் புரியவில்லை. அவள் மூளை மரத்துப் போய் விட்டிருந்தது. அவன் குரலில் இருந்த கமாண்டிற்கு அவள் கட்டுப்பட்டுப் போய் விட்டாள். அவன் உட்கார்ந்து கொண்டு கதவை ஓங்கிச் சாத்திவிட்டு, "யூசப்! என்றான். வேலையை முடித்துக் கொணடு வந்து டிரைவிங் சீட்டில் உட்கார்ந்து கொண்டான் யூசப்.

கார் மெதுவாக புறப்பட்டது.

சிலையாக நின்று விட்டிருந்த கும்பலில் முதல் முதலில் தேறிக் கொண்டவன் சுப்புணிதான். இரத்தத்

தோடு ஜீரணித்துப் போயிருந்த வியாபார புத்தி, அவ்வளவு ரகளைக்கும் நடுவில் நிகழ்ந்த நஷ்டத்தை எச்சரித்தது. "என் பணம்?" என்று கேட்டான்.

நகரப் போன காரின் வேகம் குறைந்தது. பின் கதவு வழியாக ஒரு நோட்டுக் கட்டு அவன் முகத்தில் வந்து விழுந்தது.

மெல்ல வீசிக் கொண்டிருந்த காற்றால் அந்த அபலை களின் மனம் இளைப்பாறியது. முதலில் தேறிக் கொண்டவள் கிரண்மயிதான். வந்தவன் யார் என்றோ, எங்கே அழைத்துப் போகிறான் என்றோ ஒன்றுமே தெரியாது. அந்தச் சூழ்நிலையிலிருந்து எந்த விதத்திலாவது மீண்டால் போதும் என்ற ஒரே கவனம்தான் இருந்தது. ஆனால் இப்பொழுது வெளியே வந்து விட்ட பிறகுதான் ஆயிரம் சந்தேகங்கள் அவளைச் சூழ்ந்து கொண்டன. அதோடு பெட்டியும், துணிமணிகளும் அவ்விடத்திலேயே தங்கிவிட்டன.

ஒன்றுமே பேசாமல் உட்கார்ந்திருந்த அவனைப் பார்த்து "நாம் எங்கே போகிறோம்?" என்று கேட்டாள்.

"எங்க வீட்டுக்கு" என்றான் சுருக்கமாக.

"நீங்க யாரு?"

ஜேபியிலிருந்து சிகரெட் பாக்கெட்டை எடுத்து பற்ற வைத்துக் கொண்டே "சைதன்யா! கிருஷ்ண சைதன்யா" என்றான்.

# 3

அவ்விருவருக்கும் நடந்ததெல்லாம் ஏதோ கனவு போல் இருந்தது.

வீட்டிற்கு வந்ததுமே சைதன்யா எல்லோரையும் அறிமுகம் செய்து வைத்தான். "காந்திமதி... கௌசல்யா... ரவி"

அவர்கள் கண்களில் தென்பட்ட கேள்விக்குறியை மேலும் நீடிக்க விரும்பாமல் தனக்கும் சங்கரன் வாத்தி யாருக்கும் இருந்த பழக்கத்தை, வாத்தியார் நள்ளிரவில் தன் வீட்டிற்கு வந்ததையும், அதிகாலையிலேயே இறந்து போன விஷயத்தையும் சொன்னான்.

அந்த விஷயத்தைக் கேட்டதும் சாரதா அப்படியே தரையில் சரிந்தாள். "அப்பா... அப்பா" என்று விசும்பத் தொடங்கினாள். கிரண்மயிகூட புடவைத் தலைப்பால் வாயைப் பொத்திக்கொண்டு

மௌனமாக அழுகையை அடக்கிக் கொண்டாள். சைதன்யா மெள்ளமாக அங்கிருந்து போய்விட்டான். காந்திமதியும், சௌசல்யாவும் அவர்களை தேற்றத் தொடங்கினார்கள்.

தந்தையின் மரணம் சாரதாவை வெகுவாக பாதித்தது. அவள் தந்தை அவளுக்கு இரண்டு வேளை உணவைக்கூட சரியாக அளிக்காமல் போயிருக்கலாம். ஆனால் பண்பும், அறிவும் நிறைந்தவளாக அவள் வளருவதற்கு ஒரு தந்தை யாக அவர் ரொம்ப உறுதுணையாக இருந்தார். பன்னி

ரெண்டு வயதிலேயே அவள் ராமாயணத்தையும், மகா பாரதத்தையும் ஒப்பிப்பாள். அது மட்டுமின்றி, அவள் வீணை வாசித்தால் அவர் மணிக்கணக்காக தன்மையத் தோடு கேட்டுக்கொண்டே இருப்பார். வறுமை மட்டும் மேகத்திரையைப் போல் தடையாக இல்லாமல் இருந்திருந் தால் அவள் நட்சத்திரமாக ஒளி வீசியிருப்பாள். அதோடு அக்காவைப் போல் அவ்வளவு அழகாக இல்லாமல் போனது அவளிடம் அடக்கத்தையும், பண்பையும் மேலும் படிய வைத்திருந்தது.

அவ்விருவரும் தந்தை மரணத்தால் ஏற்பட்ட துன்பத்திலிருந்து மீளுவதற்கு இரண்டு நாட்கள் ஆயிற்று. இந்த விஷயத்தில் கௌசல்யா ரொம்ப முயற்சி எடுத்துக் கொண்டாள். நாள் முழுவதும் அவர்களுடனேயே இருந்து, அவர்கள் மெதுவாக மறந்து போகும் விதமாக செய்தாள். முதல் நாள் கொஞ்சம் ஒதுங்கியிருந்தாலும், பிறகு ரவி கூட அவர்களோடு பழகிவிட்டான். குழந்தையின் மழலை மொழியும், காந்திமதியின் பரிவும் அவர்கள் தயக்கத்தைப் போக்கடித்து விட்டன.

* * *

சைதன்யாவின் எதிரே இருந்த மேஜை மீது பிளாஸ்டிக் உறை இருந்தது.

அவர்களைத் தன் வீட்டிற்கு அழைத்து வந்த அன்றைக்கே அதைத் தந்துவிடணும் என்று நினைத்தான். தந்தையின் மரணத்தைப் பற்றிக் கேட்டதுமே அவர்கள் சோகக் கடலில் மூழ்கிவிட்டதை கவனித்து அவர்கள் பழைய நிலை திரும்பும் வரையில் காத்திருந்தான்.



அன்றைக்குப் பேச்சு வாக்கில் சாரதா "எங்கள் முகவரி எப்படித் தெரிந்தது உங்களுக்கு?" என்று கேட்ட தால் அவனுக்கு அந்த கவர் விஷயம் நினைவிற்கு வந்தது. அலமாரியில் பத்திரமாக வைத்திருந்த அதை எடுத்து வந்தான்.

எல்லோரும் ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந் தார்கள். அவன் கவரைப் பிரித்தான். அதற்குள் இரண்டு சின்ன கவர்கள் இருந்தன. ஒன்றின் மீது கிரமண்மயியின் பெயரும், இன்னொன்றின் மீது சாரதாவின் பெயரும் எழுதியிருந்தன, முகவரியுடன் சேர்த்து.

அவரவர்களின் கவர் அவரவர்களிடம் ஒப்படைக்கப் பட்டது.

"உள்ளே எடுத்துப் போய் பிரித்துப் பாருங்கள். என்ன ரகசியம் இருக்குமோ என்னவோ?" ரவி சிரித்துக் கொண்டே சொன்னான்.

உள்ளே இருந்த காகிதங்களைப் பார்த்த போது கிரண்மயியின் முகம் அவமானத்தால் சிவந்தது. தம் தந்தை இறந்து போகும் முன் தங்களுக்கு சொத்தாக விட்டுப் போயிருப்பது வித விதமான லாட்டரி டிக்கெட்டுகள்!

ஒரு வினாடி யாருமே பேசவில்லை.

அந்த நிசப்தத்தை எப்படிச் சிதறடிப்பது என்று யாருக்குமே புரியவில்லை. எல்லோருக்கும் முன்பாகத் தேறிக் கொண்டவன் சைதன்யாதான். முறுவலுடன் "யார் கண்டார்கள்? அதில் கூட லட்சங்கள் கிடைக்கலாம்" என்றான்.

"ஆமாம். அப்படி ஏன் நடக்கக் கூடாது?" என்று சொன்ன ரவி, தன் இருக்கையிலிருந்து சட்டென்று எழுந்து "அதென்னது?" என்றான். அதற்குள் லாட்டரி டிக்கெட்டுகளைக் கிழித்துப்போட்ட சாரதா அந்த துண்டு களை குப்பைக் கூடையில் போட்டுக் கொண்டே "அவற் றின் தேதிகள் முடிவடைந்து இரண்டு மாதங்கள் ஆகி விட்டன. இன்னும் எதுக்கு அவை?" என்றாள் விரக்தி யாக சிரித்துக் கொண்டே.

* * *

"கடலில் ஒரு வாரம் பத்து நாட்கள் ட்ராலர்கள் மீது இருந்து மீனவர்கள் இவற்றை பிடித்துக் கொண்டு வருவார்கள்" என்று குவியல் குவியலாய் கிடந்த இறால் களைக் காண்பித்தான் சைதன்யா.

கிரண்மயியும் சாரதாவும் கேட்டுக் கொண்டிருந் தார்கள். குழந்தை மதூ மேஜை மீது அமர்ந்து தாயின் கை வளையல்களோடு விளையாடிக் கொண்டிருந்தான்.

"இவற்றில் பெரிய சைஸ் இறால்களுக்குத்தான் டிமாண்ட் அதிகம். ஒரு கிலோவுக்கு ஆறு ஏழு மட்டுமே இருக்கக் கூடிய பெரிய இறால்கள் கூட இருக்கும். அப்படிப் பட்டவை கிடைத்து விட்டால் மீனவர்களுக்கு அன்று கொண்டாட்டம்தான்" என்று முன்னால் நகர்ந் தான்.

ஏறத்தாழ நூறு பேர் அங்கே வேலை செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் கைகள் மிக லாவகமாக தம் வேலை செய்து கொணடிருந்தன.



"சுமார் பதினைந்து வேன்கள் இருக்கின்றன இந்தக் கம்பெனியில். அவை கடற்கரைக்குப் போய் ஆயிரக் கணக்கில் இறால்களை வாங்கி இங்கே எடுத்து வரு கின்றன. வேண்டாத பகுதிகளை நீக்கிவிட்டு க்ளோரின் தண்ணீரில் சுத்தம் செய்வார்கள்." பெரிய சேம்பரின் கதவைத் திறந்தான் சைதன்யா. "இதை கோல்ட் ஸ்டோ ரேஜ் என்பார்கள்" என்று பக்கத்தில் இருந்த பிரஸ்ஸிங் மிஷினைக் காட்டினான்.

"இங்கே இறால்கள் ஐஸ் கட்டிகளுக்கிடையே பதப் படுத்தப்படுகின்றன. பிறகு இந்த பாக்கெட்டுகளை கோல்ட் ஸ்டோரேஜில் பத்திரப் படுத்துவார்கள்" என்றான்.

கோல்ட் சேம்பருக்குள் நுழைந்ததுமே குளிர்ந்த காற்று அவர்களைச் சூழ்ந்துகொண்டது. குளிர் உடலை நடுங்கச் செய்தது. அறைகளில் பாக்கெட்டுகள் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அதிக நேரம் உள்ளே இருக்க முடியாமல் வெளியே வந்துவிட்டாள் கிரண்மயி.

"உள்ளே யாராவது இருக்கும் போது தெரியாமல் கதவைச் சாத்திவிட்டால்?" கௌசல்யா அண்ணனிடம் கேட்டாள்.

சைதன்யா சிரித்தான். "அரைமணியில் இறந்து விடுவான். ஆனால் பிணம் மட்டும் எத்தனை நாட்களா னாலும் அழுகாது."

சாரதாவின் உடம்பு சிலிர்த்தது. பேச்சை மாற்றியபடி "இந்த இறால்களை என்ன செய்வார்கள்?" என்று கேட்டாள்.

"ஏற்றுமதி" என்றான் சைதன்யா வெளியே நடந்து கொண்டே, "அமெரிக்காவிலும், பிரான்சிலும் இவற்றுக்கு இருக்கும் கிராக்கி வேறு எதற்குமே இல்லை. அதோடு நம்ப நாட்டு கடற்கரையில் தவிர வேறு எங்கமே இந்த விதமான இறால்கள் கிடைக்காது."

கார் மெதுவாக நகர்ந்தது.

"நீரிலிருந்து வெளியே வந்த இறால் மிகச் சீக்கிரமாய் இறந்துவிடும். அதற்குப் பிறகு உடனே அழுகத் தொடங்கும். அதனால் வாங்கிய உடனே இவற்றை ஐஸ் வேனில் வைப்பார்கள். ஃபாக்டரியில் கூட ஐசில் வைத்தபடியே தான் அத்தனை வேலைகளும் நடக்கும். ஃபாக்டரியிலிருந்து கப்பலைப் போய்ச் சேரும் வரையிலும், இன்னும் கப்பலிலும் இதே சூழ்நிலை மெயின்டெயின் செய்யப்படும். கடைசியில் அமெரிக்காவில் கஸ்டமர்கள் வாங்கும் போது கூட ப்ரீசரிலிருந்துதான் எடுத்துக் கொடுப்பார்கள்."

கார் காம்பவுண்டிற்குள் நுழைந்தது. செம்மண் சாலை மாலை வெயிலில் அழகாக மின்னிக் கொண்டிருந்தது. இருமருங்கிலும் வெள்ளை கற்கள் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. அவற்றுக்குப் பின்னால் ரோஜா தோட்டம். தோட்டம் நடுவில் தண்ணீர் ஃபௌண்டன். போகன்வில்லா பூக்கள் காற்றுக்கு அசைந்தாடிக் கொண்டிருந்தன. உயரமான பங்களா. உள்ளே டிஸ்டம்பர் சுவற்றில் சூரிய கிரணங்கள் பட்டு பிரதிபலித்துக் கொண்டிருந்தன. ரவி வீட்டில்தான் இருந்தான் போலும். கிடார் வாத்தியத்தின் ஒலி கேட்டுக் கொண்டிருந்தது.



"கடலில் ஒரு வாரம், பத்து நாட்கள் வரை உணவு உறக்கமின்றி இவற்றைப் பிடித்து வரும் மீனவர்களுக்கு கிலோவுக்கு ஐந்தாறு ரூபாய்தான் கிடைக்கும். அந்த இறால்களின் விலை அமெரிக்காவில் கிலோ நூற்றிருபது ரூபாய்."

"என்னவாகும் இந்தப் பணமெல்லாம்?"

"இடைத் தரகர்கள் பகிர்ந்துக் கொள்வார்கள். காபிடலிஸ்ட் உலகம் இல்லயா!" காரை போர்டிகோவில் கொண்டு வந்து நிறுத்தியபடியே சொன்னான் சைதன்யா. "இந்த வியாபாரம் செய்வதற்கு எங்களுக்கு லட்சக் கணக்கில் கடன் வழங்கும் வங்கி, மீனவர்களுக்கு வீடு கட்டிக்கொள்ள கடன் கொடுக்கணும் என்றால் மட்டும் தயங்கும்."

கார் நின்றது.

"நீங்களே இப்படிப் பேசறீங்களே? நீங்களும் ஒரு காபிடலிஸ்ட்தானே?" கிரண்மயி காரை விட்டு இறங்கிக் கொண்டே கேட்டாள்.

"காபிடலிஸ்டாக இருந்தாலும் நானும் ஒரு மனிதன் தானே?" சைதன்யா சிரித்தான்.

காந்திமதியும் சிரித்துவிட்டு "அவருக்கு அவ்வப் பொழுது இது போன்ற வைராக்கியம் வரும்" என்றாள்.

கடைசியாக சாரதா இறங்கிக் கொண்டு கார் கதவைச் சாத்தினாள். அப்பொழுதுதான் டிரைவிங் சீட்டிலிருந்து இறங்கிய சைதன்யா கதவை மறுபடியும் ஓங்கி சாத்திக் கொண்டே "நீங்க ரொம்பவும் மென்மையான

வெளிப்படும். அவளை வலையில் போட்டுக் கொள்ள விரும்பிய இளைஞர்கள் எல்லோருமே அதே விதமாக நடந்து கொண்டதால் அவளுக்குக் காதல் என்றாலே ஒரு தாழ்வான அபிப்பிராயம் ஏற்பட்டு விட்டது.

"நீங்க... நீங்க இந்தப் புடவையில் ரொம்ப அழகாக இருக்கீங்க" என்றான் ரவி, காரிடாரில் டேபிள் டென்னிஸ் ஆட்டத்திற்கு நடுவில்.

"அப்படி என்றால்?" என்றாள் அவள், முகத்தில் எந்த உணர்ச்சியும் தென்பட்டு விடாமல்.

தன் காதலை மறைத்து வைத்துக் கொள்ள எந்த முயற்சியும் செய்யவில்லை அவன். 'ஐ லவ் யூ கிரண்" என்றான் மெதுவாக ஆனால் உறுதியாக.

அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள். அந்த வார்த்தைகள் அவளுக்குப் புதிது இல்லை. திருமணமானவர்கள், கிழவர்கள் ரொம்ப பேர் இதே வார்த்தையைச் சொல்லியிருக்கிறார்கள். சிலரின் கன்னங்கள் அதிர்ந்தன. சிலரை நாசூக்காகவே மறுத்துவிட்டாள். இந்தக் காதல் என்பது அழகான பெண்ணைப் பார்த்ததுமே ஆணுக்குத் தன்னை யும் அறியாமலேயே தோன்றிவிடும் சமாசாரம் என்பது அவளுடைய அபிப்பிராயம். அந்தப் பெண் சம்மதித்து விட்டால் அவளை சொந்தமாக்கிக் கொள்வான். இனிக்க இனிக்கப் பேசுவான். எல்லாவற்றையும் ரகசியமாகவே வைத்துக் கொள்வான். சந்தோஷமாக அனுபவிப்பான். சில நாட்களுக்குப் பிறகு அலுப்பு தட்டி விடும். அவளை விட்டு விட்டுப் போய் விடுவான்.



பக்கத்து வீட்டு பங்கஜம், எதிர் வீட்டு சுசிலா எல்லோருமே இவ்வாறு ஏமாந்து போனவர்கள்தான். தெரு முனையில் உள்ள டீக்கடை வாசல் பெஞ்சில் உட்கார்ந்து கொள்ளும் சுருட்டை முடி ரமேஷ், பஞ்சக் கச்சம் கட்டும் நாராயணன்... இவர்கள் எல்லோரும்தான் அந்த ஏரியா ஹீரோக்கள்.

இது போன்ற சூழ்நிலையில் வளர்ந்த பெண்ணுக்கு தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் பழக்கம் சகஜமாகவே ஏற்பட்டுவிடும். அந்தப் பெண்ணின் இதயத்தில் மென்மை யான உணர்ச்சிகளுக்கு இடமில்லை. அதனால்தான் அந்த இளைஞன் தெரிவித்த விருப்பத்தை அலட்சியமாக ஒதுக்கி விட்டு "அதனால் என்னவாம்?" என்றாள்.

"நீங்க ஒப்புக்கொண்டால் அண்ணாவிடம் சொல் கிறேன். அண்ணா கூட மறுக்க மாட்டான்னுதான் நம்பு கிறேன்."

உண்மையில் அவள் எதிர்பாராத பதில் அது. காதலின் விளைவு திருமணம் என்றும், ஆண்கள் கூட இவ்வளவு நேர்மையாக இருப்பார்கள் என்றும் அவளுக் குத் தெரியாது. இது அவளுக்கு ஒரு ஷாக். தன்னை இவ்வாறு கேட்ட இளைஞன் ஒரு நல்ல குடும்பத்தில் பிறந்தவன் என்றும், சிறுவயதிலிருந்தே நல்ல கட்டுப்பாடு களுடன் வளர்ந்து வந்தவன் என்றும் அவளுக்கு அந்த நிமிடத்தில் தோன்றவில்லை.

சகஜமாக, கொஞ்சம் கலகலப்பாக இருக்கும் அந்தப் பெண் அவ்வாறு மௌனம் வகித்ததை வேறு விதமாக புரிந்து கொண்ட ரவி, அவள் கையில் மென்மையாக முத்தம் பதித்துவிட்டு "தாங்க்ஸ்" என்றான்.

முதல் முதலாக ஒரு ஆணின் ஸ்பரிசம் அவள் இதயத் தந்திகளை எங்கேயோ மீட்டியது. ஆனால் அதைவிட பலமான உணர்ச்சி ஒன்று அவளிடம் இடம் பெற்று விட்டது. அந்த உணர்ச்சியை வார்த்தைகளில் எடுத்துச் சொல்ல முடியாது. அது என்னவென்று அவளுக்கே புரியவில்லை. அந்தக் குழப்பத்தில் தான் உறக்கம் வராமல் அவள் தன் அறையை விட்டு வெளியே வந்தாள்.

கௌசல்யா தன் அறையில் படித்துக் கொண்டிருந்தாள். ரவி வீட்டில் இல்லை. அவள் படியேறி மாடிக்குப் போனாள். அந்த வீட்டில் எல்லா அறைகளுமே அவளுக்கு அறிமுகமானவைதான்.

காரிடார் நிசப்தமாக இருந்தது. கண்ணாடிக் கதவுகளைத் தள்ளிக் கொண்டு பால்கனிக்குப் போவதற்காக குறுக்கே இருந்த திரைச் சீலையை விலக்கிய கிரண்மயி அங்கு தென்பட்ட காட்சியைப் பார்த்துவிட்டு ரொம்ப நேரம் அப்படியே நின்று விட்டாள்.

சைதன்யா சாய்வு நாற்காலியில் ஓய்வாக அமர்ந்திருந்தான். லேசாக வீசிக் கொண்டிருந்த தென்றல் காற்றில் வெண்பட்டு வேட்டி அசைந்து கொண்டிருந்தது. அவன் மடியில் மதூ விளையாடிக் கொண்டிருந்தான். பக்கத்தில் இருந்த நாற்காலியின் மீது காந்திமதி உட்கார்ந்திருந்தாள். வெற்றிலையை எடுத்து சுண்ணாம்பு தடவி கணவனின் வாயில் ஊட்டிக் கொண்டிருந்தாள். டிரான்ஸிஸ்டலிலிருந்து சித்தார் இசை லேசாக கேட்டுக் கொண்டிருந்தது. குட்டிச் சுவரின் மீது வந்து சாய்ந்த தென்னங்கீற்றுகள் கலகலவென்று அசைந்து சத்தத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தன.



69978

அன்பையும், நேசத்தையும் இவ்வளவு அழகாக வெளிப்படுத்திக் கொள்ள முடியும் என்று அவளுக்கு இப்பொழுதுதான் தெரிந்தது. தன் குடும்பம், தாய் தந்தையர் நினைவுக்கு வந்தார்கள். எவ்வளவு அருவருப்பான சூழ்நிலை அது! லாட்டரி சீட்டு பைத்தியமாக சம்பளம் முழுவதுமே செலவழித்துவிட்டு, அந்த எரிச்சலில் வீட்டுக்கு வந்து, பாதி சாப்பாட்டிலேயே தட்டை வீசி எறியும் தந்தை! கட்டிலில் படுத்தப் படுக்கையாய் இருந்து கொண்டே வாய்க்கு வந்தபடி திட்டித் தீர்க்கும் தாய்! எவ்வளவு பயங்கரமான கடந்த காலம்!

மனிதர்கள் இவ்வளவு சந்தோஷமாகக் கூட இருக்கு முடியும் போலும். எவ்வளவு அழகான, பார்க்கத் தெவிட்டாத காட்சி!

இப்படிப்பட்ட உலகம் ஒன்று இருக்கிறதென்றும், அந்த உலகில் மனிதர்கள் மிக ஆனந்தமாக, நிம்மதியாக வாழ்ந்து வருகிறார்கள் என்றும் தன்னைப் போன்றவர்களுக்குத் தெரியக் கூடிய வாய்ப்பே இல்லை.

இருபத்தி நான்கு வருடங்களாக எவ்வளவு ஹீனமான நிலையில் வாழ்ந்து வந்திருக்கிறாள்? தெரியாத வரையிலும் பரவாயில்லை. தெரிந்த பிறகு...

சட்டென்று அவளுக்கு ஒரு விஷயம் புரிந்தது. இங்கே வந்தது முதல் தன் மனதைக் குலைந்து கொண்டிருக்கும் தெளிவற்ற வேறுபாட்டிற்குக் காரணம் என்னவென்று.

கம்பாரிசன்! ஒப்பீடு!

மாவட்ட மைய நூலகம்
-628 008.

# 4

"பத்து நாட்களில் கிருஸ்துமஸ். அன்றைக்கே மதுவின் பிறந்த நாளும் வருகிறது. மாலையில் பார்ட்டி தருவோம். அன்றைக்கே நாலைந்து வீடுகளின் பார்ட்டிக்கு போக வேண்டியிருக்கும். மியூசிக், டான்ஸ் இவற்றோடு புத்தாண்டுக்கு வரவேற்பு வாசிப்பார்கள்" என்றான் ரவி.

எல்லோரும் மெயின் ஹாலில் உட்கார்ந்திருந்தார்கள். கௌசல்யா மதுவுக்காக ஸ்வெட்டர் பின்னிக் கொண்டிருந்தாள். காந்திமதியின் மடியில் மது விளையாடிக் கொண்டிருந்தான்.

"சாரதா சமையலில் கை தேர்ந்தவள். எத்தனை பேருக்கு வேண்டுமானாலும் நிமிஷத்தில் சமைத்து விடுவாள்" என்றாள் கிரமண்மயி." சாரதா வெட்கத்தால் தலை குனிந்து கொண்டாள்.

"அப்படி என்றால் அவளையே அந்த டிபார்ட்மெண்டுக்கு இன்சார்ஜாக போட்டு விடுவோம்" என்றாள் காந்திமதி.

"அப்போ நீ என்ன வேலை செய்வாய்?" சைதன்யா கேட்டான்.

"சூப்பர்வைஸ்!"

"அது என்னுடைய வேலை." சைதன்யா சிரித்தான்.

"எதுவுமே செய்யத் தெரியாதவன் தன்னுடைய வேலைக்கு வைத்துக் கொள்ளும் செல்லப் பெயர் அது



தான்" என்றாள் கௌசல்யா அண்ணனைக் கேலி செய்வது போல்.

எல்லோரும் சிரித்தார்கள். மதுவுக்கு பால் கொடுப்பதற்காக காந்திமதி உள்ளே சென்றாள்.

"எல்லா இடங்களுக்கும் வரத் தேவையில்லை. ஆனால் ராபர்ட் வீட்டுக்கு மட்டும் வாங்க. அங்கே நடக்கும் பார்ட்டியைக் கண்டிப்பாக பார்த்தாகணும்" என்றான் சைதன்யா இருவரிடமும்.

அதற்குள் ஃபோன் மணி அடித்தது. ரவி எழுந்து போனான். கௌசல்யா பின்னிக் கொண்டிருந்த ஸ்வெட்டரை சாரதா எடுத்துப் பரிசிலித்துக் கொண்டிருந்தாள்.

வெளியே இருந்து ரவி குரல் கொடுத்தான். "கௌசல்யா! ஃபோன் ப்ரம் தீபக்."

கௌசல்யா கொஞ்சம் வெட்கத்துடன் எழுந்து போனாள்.

அவள் போனதும் சைதன்யா சொன்னான். "தீபக் கோட்டயத்தில் இருக்கிறான். கௌசல்யாவின் கிளாஸ் மேட். நல்ல டென்னிஸ் ப்ளேயர். வரும் கோடை விடுமுறைக்குப் பிறகு அவளுடைய லைஃப் மேட்."

கிரண்மயி தன் மனதிலிருந்த சந்தேகத்தை மறைத்து வைப்பதற்கு எந்த முயற்சியும் செய்யாமல் "உங்களில் காதலிப்பதும், திருமணம் பண்ணிக் கொள்வதும் மிக எளிதாக நடந்து விடும் போலிருக்கிறதே?" என்றாள்.

சாரதா சட்டென்று நிமிர்ந்து அக்காவின் பக்கம் பார்த்தாள். இந்த பண்பில்லாத கேள்வி அவன் மனதை

எப்படி நோகடிக்குமோ என்ற பயம் அவள் முகத்தில் தென்பட்டது.

சைதன்யாவின் முகத்தில் மட்டும் அவன் சுபாவத்திற்கு இயல்பான புன்னகை மாறவில்லை. கிரண்மயியின் சுபாவத்தை அவன் முதல் நாளே புரிந்துகொண்டு விட்டான். சிரித்துக் கொண்டே "நானாக தேடினாலும் கௌசல்யாவுக்கு இவ்வளவு நல்ல வரனை பார்த்திருக்க முடியும் என்று தோன்றவில்லை" என்றான்.

"உங்களுக்கு இந்தக் காதல் போன்ற விஷயங்களில் நம்பிக்கை இருக்கா?"

எதிர்பாராத இந்தக் கேள்வியால் அவன் கொஞ்சம் வியப்படைந்தாலும் உடனே சுதாரித்துக் கொண்டு "எப்படியும் கல்யாணம் ஆகிவிடும் இல்லையா. ஆன பிறகு அன்பு தானாக ஏற்பட்டு விடும்" என்றான்.

சாரதா அக்காவை எச்சரிக்கப் போனாள். ஆனால் கிரண்மயியின் முகம் ஏதோ சொல்ல வேண்டுமென்ற ஆவேசத்தால் சிவந்துவிட்டிருந்தது. பல நாட்களாக அவளிடம் படிந்து போயிருந்த உணர்வுகள் இன்று எரிமலையாக வெடித்துவிட்டன.

"இல்லை. இந்தக் காதல்... அன்பு... இதெல்லாம் பணத்தோடு முடிச்சுப் போடப்பட்டவை. வயிறு நிரம்பி விட்ட பிறகு, ஏ.சி. அறையில் குளிர்ந்த காற்றில் களைப்பு நீங்கிய பிறகு காதல், அன்பு இதெல்லாம் வேண்டாம் என்றாலும் தானாகவே கிளம்பிவிடும். ஒரு பக்கம் வயிறு பசியால் சுருங்கிவிட்ட போது, பணம்தான் முக்கியப் பிரச்னையாக இருக்கும்போது, அந்த அன்பு எல்லாம் இதயத்தின் அடியில் கண்ணுக்குத் தெரியாத இடத்தில் புதையுண்டு போய்விடும். அப்பொழுது அந்த இடத்தை எரிச்சலும், வெறுப்பும் நிரப்பி விடும்."



அவளுடைய ஆவேசத்தைப் பார்த்து அவன் திகைத்துப் போனான். ஏழ்மையின் காரணமாக அவளிடம் ஏற்பட்ட பர்வர்ஷனுக்காக வருத்தப்பட்டான். "இல்லை கிரண்மயி! உன் கருத்துக்களை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. இந்த பந்த பாசங்கள் மனிதன் தன் பண்பால் ஏற்படுத்திக் கொண்டவை. கேவலம் பசியால் மனிதன் மிருகமாக மாறக் கூடிய பட்சத்தில் உலகத்தில் ஏழைகள் எல்லோரும் தம் பண்பை எல்லாம் குழி தோண்டிப் புதைத்து விட்டிருப்பார்கள்."

கிரண்மயி அவன் வார்த்தைகளை இடைமறித்து "ஏதோ சேர்ந்து வசிக்கணும் என்ற காரணத்தால் அவங்க வசிக்கிறாங்களே தவிர, உங்களுக்கு தெரியாது... தினந்தோறும் எவ்வளவு பரம விரோதிகளாக கணவன் மனைவியும், அண்ணம் தங்கையும் சண்டை போட்டுக் கொள்கிறார்களோ உங்களுக்குத் தெரியாது. அந்த இருட்டு குகையில் அன்பு என்பது எவ்வளவு தேடினாலும் இருக்காது."

"எது என்னவானாலும் பணம்தான் அன்பு தோன்றுவதற்குக் காரணம் என்று சொல்வதை என்னால் ஒப்புக் கொள்ள முடியாது." சைதன்யா சொன்னான்.

சாரதா இந்த உரையாடலைத் தடுத்து நிறுத்துவதற்கு முயன்றபடி "சரி போகட்டும். இனி இந்த விஷயத்தை விட்டு விடுங்கள்" என்றாள்.

அதற்குள் கௌசல்யா அங்கே வந்தாள். "எதைப்பற்றி அவ்வளவு தீவிரமாக டிஸ்கஷன் நடக்கிறது?" என்று கேட்டாள்.

கிரண்மயி சிரித்துவிட்டு "ஏழ்மையைப் பற்றி அவருடைய அப்பிப்பிராயம் தவறு என்று நானும், காதல் பற்றிய என் அபிப்பிராயம் தவறு என்று அவரும் வாதம் புரிகிறோம்" என்றாள்.

கௌசல்யா சிரித்துவிட்டு "அண்ணாவுக்குத் தெரியாத விஷயமே இருக்காது என்று நான் நம்புகிறேன். பணத்தால் எல்லாவற்றையும் வாங்கி விட முடியாது" என்றாள்.

"என் அபிப்பிராயம் சரின்னு நானும் நம்புகிறேன்" என்றாள் கிரண்மயி பிடிவாதமாக.

சைதன்யா இதை எதுவும் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக் கொண்டிருந்தான். தொலைவில் கடல் அலைகளின் இரைச்சல் மெலிதாகக் கேட்டுக் கொண்டிருந்தது.

அனுபவம்தான் அபிப்பிராயங்களை மாற்றவல்லது.

* * *

"ஸ்டாக் எவ்வளவு இருக்கு?" சைதன்யா கேட்டான்.

"ஆறு லட்சம் வரை இருக்கும் அய்யா!"

"இன்னும் நாலு லட்சம் வேண்டும். மாதக் கடைசியில் கொஞ்சம் விலை அதிகமாக இருந்தாலும் வாங்கி விடச் சொல்லுங்கள். முதல் வாரத்தில் பத்து லட்சத்திற்கு காண்ட்ராக்ட் இருக்கு."



ரங்கன் தலையை அசைத்தான்.

இனி அந்த விஷயத்தைப் பார்த்துக் கொள்ளத் தேவையே இல்லை. ரங்கனிடம் ஒரு வேலையை ஒப்படைத்து விட்டால் போதும். அது நடக்காமல் இருக்க வாய்ப்பே இல்லை என்று சைதன்யாவுக்குத் தெரியும். பல ஆண்டுகளாக நம்பிக்கையுடன் வேலை பார்த்து வருகிறான்.

சைதன்யா வந்து காரில் ஏறிக் கொண்டதுமே ரங்கன் கோல்ட் ஸ்டோரேஜுக்குள் போனான். ஐஸ்கட்டிகளுக்கு நடுவில் இறால்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தன.

சுமார் இரண்டாயிரம் பாக்கெட்டுகள். ஆறு லட்சம் விலை மதிப்புடைய பாக்கெட்டுகள்!

ரங்கன் கம்ப்ரெஷர் சரியாக வேலை செய்கிறதா இல்லையா என்று பார்த்தான். கதவை மூடிவிட்டு வெளியே வந்தான். விசாலமான மெயின் ஹால் வழியாக பெரிய பெரிய காலி ட்ரேக்கள். ட்ரேக்களுக்கு இடையே குறுகலாக நடபாதை. எங்கும் நிசப்தமாக இருந்தது.

க்ளோரின் நாற்றம்!

ப்ரெஸ்ஸிங் மிஷனுக்கருகில் போய் ஸ்பிரிங்கில் ஆயில் சொட்டுகளை விட்டான். உண்மையில் இதெல்லாம் பார்த்துக் கொள்வதற்கு பையன்கள் இருக்கிறார்கள். ஆனால் தான் சுயமாக பார்த்துக் கொண்டால் தவிர அவனுக்குத் திருப்தியாக இருக்காது. சைதன்யாவின் தந்தை காலத்திலிருந்தே ரங்கன் அங்கே வேலை செய்கிறான். பீல்டராக சேர்ந்து சூப்பர்வைசர் நிலைக்கு உயர்ந்திருக்கிறான்.

அவனுக்குச் சிரிப்பு வந்தது. இவ்வளவு நிசப்தமாக இருக்கும் ஹாலை, மறுநாள் பார்த்தால் அடையாளமே தெரியாது. சுமார் நூற்றைம்பது பேர் சுறுசுறுப்பாக வேலை பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

ரங்கன் மெயின் ஹாலை விட்டு வெளி அறைக்கு வந்தான். சிறிய அறை அது. மேஜை மீது ஸ்டாக் இருந்தது. எடுப்பா பார்த்தான்.

கொச்சினிலிருந்து வர வேண்டிய இயந்திர படகுகள் இன்னும் வரவில்லை. அவை மட்டும் வரவில்லை என்றால் விசாகப்பட்டணத்திலிருந்து வரவழைத்துக் கொள்ள வேண்டியிருக்கும்.

சுமார் மூன்று ஆண்டுகளில் இயந்திர படகுகளின் எண்ணிக்கை நான்கு மடங்காகி, அளவுக்கு மீறிய போட்டி ஏற்பட்டிருந்தது. இறால்களின் ஜாடை கொஞ்சம் தென்பட்டாலும் கரைக்குத் திரும்பிய படகுகள் கூட மறுபடியும் கடலுக்குள் போய்க் கொண்டிருந்தன.

இந்த யோசனையுடனேயே கதவைச் சாத்தித் தாழிட்டு விட்டு அவன் வெளியே வந்தான். மெயின் கேட் அருகில் கூர்க்கா இருக்கவில்லை. இரண்டு ஃபர்லாங்க் தொலைவில் இருக்கும் டீ கடைக்கு போயிருப்பான். முதலாளி கிளம்பிப் போனதைப் பார்த்துவிட்டு அவனும் நழுவியிருப்பான். காம்பவுண்ட் கேட்டை சாத்தி தாழ்ப்பாளைப் போட்டான். மெதுவாக ஊரை நோக்கி நடக்கத் தொடங்கினான். சுற்றிலும் அடர்ந்து வளர்ந்த புதர்கள். தொலைவில் கடலிலிருந்து வந்து வீசும் உப்புக் காற்று. சுவற்றுக் கோழிகளின் கத்தல்கள்.



சிறிய ஒற்றையடிப் பாதை வழியே நடந்து கொண்டிருந்த போது காலகளுக்கு அடியில் வழுவழுப்பாக ஏதோ ஊர்ந்து சென்றது. தொடர்ந்து "புஸ்" என்ற சத்தம் கேட்டது. மங்கலான வெளிச்சத்தில் பாம்பு ஒன்று புதர்களுக்கிடையே கண்மறைவாயிற்று. ரங்கன் அதை அவ்வளவாக பொருட்படுத்தவில்லை.

தூக்கி எறியப்படும் இறால்களின் பாகங்களை தின்பதற்காக பாம்புகள் ஃபாக்டரியைச் சுற்றிலும் திரிந்து கொண்டிருப்பது அங்கே இருப்பவர்களுக்குத் தெரிந்த விஷயம்தான். ரங்கன் முன் நோக்கி நடந்தான். பாம்புகள் ஸ்டோரேஜிற்குள் வராது என்றும், வந்தாலும் குளிருக்கு உடனே செத்து விடும் என்று அவனுக்குத் தெரியும்.

ஆனால் அவன் மிதித்தது நாகப் பாம்பு என்றும், அது அவனைப் பழி வாங்க எண்ணிவிட்டது என்றும் அவனுக்குத் தெரியாது.

* * *

விசாலமான சிமெண்ட் சாலையில் பாம்பைப் போல் கார் வழுக்கிக் கொண்டு போய்க் கொண்டிருந்தது. பத்து நிமிட பயணத்திற்குப் பிறகு மலை மீது ஏறத் தொடங்கியது.

"உங்களுக்குக் கடவுள் மீது நம்பிக்கை இருக்கா?" கிரண்மயி கேட்டாள்.

முன் சீட்டில் உட்கார்ந்திருந்த சைதன்யா பேசவில்லை. காந்திமதிதான் பதிலளித்தாள். "வருஷத்திற்கு ஒரு தடவையாவது மலைக்கு வந்து, தரிசனம் செய்து

கொள்ளவில்லை என்றால் என் மனம் சமாதானமடை யாது."

காந்திமதியின் மடியில் உடக்கார்ந்திருந்த மதூ உயரமான மலையையும், வளைந்து திரும்பும் சாலைகளையும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தான். கார் நல்ல கண்டிஷனில் இருந்ததால் மலைப் பாதையில் ஓசை எழுப்பாமல் போய்க் கொண்டிருந்தது.

"சாதாரணமாக பணக்காரர்களுக்கு கடவுள் நம்பிக்கை அதிகமாக இருக்கும்" என்றான் சைதன்யா.

"அது நான் சொல்ல வேண்டிய வார்த்தை" என்றாள் கிரண்மயி.

சாரதா சங்கடத்துடன் நெளிந்தாள். அக்கா இப்படி எடுத்தெறிவதுபோல் பேசுவது அவளுக்குப் பிடிக்காது. ஆனால் சைதன்யா பின்னால் திரும்பி "காந்திமதி! கிரண்மயியிடம் எனக்குப் பிடித்த குணம் இதுதான். மனதில் எதையும் வைத்துக் கொள்ளாமல் பட்டென்று சொல்லிவிடுவாள்" என்றான் முறுவலுடன்.

"அப்படிப் பேசக் கூடாது, அது நல்லதில்லை என்று எனக்குத் தெரியும். ஆனால் அந்த விஷயம் அப்படிப் பேசி விட்ட பிறகுதான் என் நினைவுக்கு வரும்" என்றாள் கிரண்மயி அப்பாவியாக. காரில் சிரிப்பு சத்தம் எதிரொலித்தது.

"பிசினெஸ் மேனிடம் இருக்கக் கூடாத குணம் அது" என்றாள் கௌசல்யா.

சைதன்யா தங்கையைப் பார்த்துவிட்டு "அவளுக்கும் பிசினெஸ்ஸுக்கும் என்ன சம்பந்தம்?" என்றான்.



"இப்போ பெண்கள் கூட பிசினெஸ்சில் முன்னுக்கு வந்துக்கிட்டு இருக்காங்க சார்" என்றான் டிரைவர் தன் உலக ஞானத்தை வெளிப்படுத்துவது போல்.

அதுவரை சிரித்துக் கொண்டிருந்த சைதன்யனின் முகம் சிவந்தது. மறுபடியும் காட்டேஜுக்கு முன்னால் வந்து நிற்கும் வரை அவன் பேசவில்லை.

அங்கே அவர்களுக்காக எதிர்பார்த்துக் கொண்டிருந்த வேலைக்காரன் ஓட்டமாக ஓடி வந்தான்.

சைதன்யா காரை விட்டு இறங்கினான். "டிரைவர்! கோட்டை சரி செய்து கொண்டே அழைத்தான்.

"சார்!"

"காருக்கு பின் சீட்டும், முன் சீட்டும் எதற்காக இருக்குன்னு தெரியுமா?" அவன் முகம் சீரியஸாக இருந்தது. "முன்னால் டிரைவர் உட்காருவதற்கும், பின்னால் எஜமானர்கள் உட்காருவதற்கும். மைண்ட் இட்!"

* * *

எள் விழ இடமில்லாத கூட்டம். எல்லோர் முகங்களிலும் உள்ளே போக வேண்டும் என்ற பதற்றம். ஏதோ பரபரப்பு. ஒரு மூலையில் கும்பல் ஒன்று "கோவிந்தா! கோவிந்தா!" என்று கத்தக் கொண்டிருந்தது. கிழவர்கள், குழந்தைகளை தூக்கிக் கொண்டு தாய்மார்கள், நோய் தீரும் என்று நம்பிக்கையுடன் வந்தவர்கள், புதுமணத் தம்பதிகள்... விதவிதமான மனிதர்கள்!

கார் வந்து நின்றது. கூட்டத்தைப் பார்த்துப் பெண்கள் மலைத்துவிட்டார்கள். அன்றைக்கு தரிசனம் துர்லபம் என்று சந்தேகம் இல்லாமல் புரிந்துவிட்டது.

"இன்றைக்கு ஏதோ பண்டிகை என்று நினைக் கிறேன்" என்றாள் கௌசல்யா சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டே.

"இவ்வளவு கூட்டத்தில் குழந்தையுடன் எப்படிங்க போக முடியும்?" என்றாள் காந்தமதி.

சைதன்யா பதில் பேசவில்லை.

ஸ்பெஷல் தரிசனத்திற்காகக் கூட மக்கள் கும்பல் கும்பலாக நின்றுக் கொண்டிருந்தார்கள். காற்றே இல்லாமல் அளவுக்கு அதிகமாக வியர்த்துக் கொட்டியது. அந்தச் சூழ்நிலை பழக்கம் இல்லாததால் கௌசல்யா வுக்கு களைப்பாக இருந்தது. மக்கள் வெள்ளம் போல் மேலும் மேலும் வந்து கொண்டே இருந்தார்கள்.

அதற்குள் டிரைவர் வந்தான். அவனுடன் நெற்றியில் பெரிய நாமத்துடன் ஒருத்தன் வந்து சேர்ந்தான். வரும் போதே கும்பிடு போட்டுவிட்டு, அவசர அவசரமாக மன்னிப்பு கேட்டுக் கொண்டான்.

"வாங்க சார்! உங்களுக்காகத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். கொஞ்சம் தாமதமானதால் காபி குடித்து விட்டு வரலாம்னு போனேன்" என்று வழி நடந் தான். சைதன்யா தலையை அசைத்துவிட்டு முன்னால் நடந்தான். எல்லோரும் அவனைப் பின் பற்றினார்கள். இரண்டே நிமிடங்களில் சுவாமி சன்னிதி அருகில் போய்ச் சேர்ந்தார்கள்.

பூசாரி நாமம் போட்டுக் கொண்டிருந்தவனை குசலம் விசாரித்தார்.



"நம்ப ஜெயின் சாப் அனுப்பியிருக்கிறார். ஸ்பெஷல் கெஸ்டுகள்!"

உடனே க்யூ நிறுத்தப்பட்டு விட்டது.

பூசாரி சுவாமியைப் பற்றி வருணித்துச் சொல்லத் தொடங்கினார். இன்னொரு பூசாரி தீர்த்தம் வழங்கினார்.

காந்திமதி மதுரவைக் கொண்டு சுவாமிக்கு நமஸ் காரம் செய்ய வைத்தாள். கௌசல்யா பக்தியோடு கண் களை மூடிக் கொண்டாள். சாரதா மறுபடியும் பார்ப் போமோ இல்லையோ என்பது போல கண்ணாரப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

தொலைவில் உயரமாக இடத்தில் நின்று கொண்டிருந்த சைதன்யாவுக்கு எல்லாம் தெளிவாக தென்பட்டுக் கொண்டிருந்தது. சுவாமி ஜெகஜ்ஜோதியாக ஒளி வீசிக் கொண்டிருந்தார்.

புகை நெடி தாங்க முடியாமல் வெளியே க்யூவில் யாரோ விடாமல் இருமிக் கொண்டிருந்தார்கள். பூசாரி இன்னும் சுவாமியை வருணித்துக் கொண்டிருந்தார். அவரைப் பார்த்தால் தன் சரகைக் காண்பித்து பேரம் பேசும் மீனவன் நினைவுக்கு வந்தான். சைதன்யாவுக்கு ஏனோ சிரிப்பு வந்தது. ஏன் என்று தெரியவில்லை. அலை அலையாகச் சிரிக்க வேண்டும் போலிருந்தது. தன் மனதில் என்ன இருந்தது என்று அவனுக்கே தெரியவில்லை. தான் உயரத்தில் இருப்பது போலவும், மற்றவர்கள் எல்லோரும் கீழே இருப்பது போலவும் உணர்வு! இரு கைகளையும் கட்டிக் கொண்டு சாய்ந்து நின்றபடி பார்த்துக் கொண்டிருந்தான்.

அதற்குள் அவனுக்குப் பின்னாலிருந்த க்யூவில் சலசலப்பு தொடங்கிவிட்டது.

பொறுமை இழந்த மக்கள் கூட்டத்தை கோவில் ஊழியர்கள் அடக்க முயன்று கொண்டிருந்ததால் ரகளை ஏற்பட்டது.

சைதன்யா அந்தப் பக்கமாக பார்த்தான். ஊழியர் கொஞ்சம் பலமாக தள்ளியதால் கிழவர் ஒருவர் கீழே விழுந்துவிட்டார். சிரமப்பட்டு எழுந்துகொண்டே உரத்தக் குரலில் கத்தினார். "டேய்! நேற்று இரவிலிருந்தே க்யூவில் நிற்கிறோம். இவ்வளவு தூரம் வந்த பிறகு சுவாமியைப் பார்க்க விடாமல் தள்ளுகிறாயா? நீ நாசமாகப் போவாய்!"

சைதன்யா சட்டென்று தலையைத் திருப்பிக் கொண்டு விட்டான். தன் குடும்பத்தார் எல்லோரும் அதற்குள் போய்விட்டதைப் பார்த்துத் தானும் விடு விடென்று வெளியே நடந்தான்.

* * *

"பரீட்சை எல்லாம் நன்றாக எழுதினாயா?" உள்ளே வந்த ரவியைக் கேட்டான் சைதன்யா.

மேஜைக்கு மறுபக்கம் இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டே தலையை அசைத்தான் ரவி. "செகண்ட் கிளாஸ் வரும்னு நினைக்கிறேன்."

"அப்புறமாக என்ன செய்தாக உத்தேசம்?"

"மேலே படிக்க விரும்புகிறேன்."



சைதன்யா பாரமாக மூச்சு விட்டுக் கொண்டே "சரி" என்றான். உண்மையில் அவனுக்கு தம்பி தன்னுடன் கூட இந்த வேலைகளைப் பார்த்துக் கொண்டால் பாதி பாரம் குறையும் என்ற எண்ணம் இருந்தது.

"மேலே படிக்கட்டுமா?"

சிறு குழந்தை போல் கேட்ட தம்பியைப் பார்த்தால் சிரிப்பு வந்தது. "ஏன் இப்படிக் கேட்கிறாய்?" என்றான் முறுவலுடன்.

"ஒன்றுமில்லை. நீ சரின்னு சாதாரணமாக சொன்ன தால்."

சைதன்யா நாற்காலியில் பின்னால் சாய்ந்து கொண்டே "நீ இந்த பிசினெஸ் சைதன்யா நாற்காலியில் பின்னால் சாய்ந்து கொண்டே "நீ இந்த பிசினெஸ் விவகாரங்களை எல்லாம் கொஞ்சம் பார்த்துக் கொண் டால் நன்றாக இருக்கும் என்பது என் உத்தேசம். எனக்கும் பாரம் குறையும். உனக்கும் வேலை தெரிந்து கொண்டாற் போல் இருக்கும்" என்றான்.

ரவி பயந்தாற்போல் நடித்துக் கொண்டே நாற் காலியை விட்டு எழுந்து கொண்டான். "அம்மாடியோவ்! இந்த இறால் வியாபாரம் என்னால் செய்ய முடியாது அண்ணா! இன்னும் சொல்லப் போனால் என்னால் எந்த வியாபாரமும் செய்ய முடியாது" என்றான்.

"ஏன்?"

"நான் ரொம்ப அப்பாவி. என் முகத்தைப் பார்த் தாலே தெரியவில்லையா?"

சைதன்யா சிரிப்பை அடக்கிக் கொண்டு "சரிதான் விடு" என்றான்.

அதற்குள் ரங்கன் வந்தான்.

"நான் கிளம்புகிறேன்" என்றான் ரவி எழுந்து நின்று கொண்டே. தலையை அசைத்துவிட்டு ரங்கன் நீட்டிய ஸ்டேட்மெண்டைப் பார்த்தான் சைதன்யா. சுமார் எட்டு லட்சம் ஸ்டாக் இருந்தது.

"என்னிக்கு இன்னொரு ஐம்பதாயிரம் ஸ்டாக் வரும் அய்யா! நாலு நாட்களில் பத்து லட்சங்கள் முடிந்து விடும்" என்றான் ரங்கன்.

"மாதக் கடைசிக்குள் சரக்கை அனுப்பாவிட்டால் க்ான்ட்ராக்ட் கை நழுவிவிடும். கொஞ்சம் விலை அதிக மானாலும் வாங்கி விடுங்கள். கிருஸ்துமஸ் வந்து விட்டால் மூன்று நாட்களுக்கு வேலைக்காரர்கள் கிடைக்க மாட்டார் கள்." ரங்கன் தலையை அசைத்துவிட்டுத் திரும்பினான்.

"ரங்கன்!"

"அய்யா!"

"உன் மகளுக்கு இப்போ எப்படி இருக்கு?"

அவன் முகம் வாடிவிட்டது. "அப்படியேதான் இருக்கு அய்யா! வேலூருக்கு அழைத்துப் போகச் சொல்லி யிருக்காங்க."

"பின்னே எப்போ அழைத்துப் போகிறாய்?"

ரங்கன் பதில் பேசவில்லை. சைதன்யா அவனை நெருங்கி தோளின் மீது கையை வைத்தான். "பணத்துக்கா



வெளியில் அதிக வட்டிக்குக் கடன் வாங்க முயற்சி செய்து வருகிறாயாமே?" என்று ஜேபியிலிருந்து கொஞ்சம் பணத்தை எடுத்து அவன் கையில் தந்துவிட்டு "ரங்கன் சுமார் பத்து வருடங்களாக என்னிடம் வேலை செய்து வருகிறாய். இன்னிக்கு இந்த பிசினெஸ் இவ்வளவு முன்னுக்கு வந்திருக்குன்னால் அதில் பாதி பங்கு கேட்க ஏன் தயங்குகிறாய் என்றுதான் எனக்குப் புரியவில்லை" என்று சொன்னான்.

ரங்கனின் கண்களிலிருந்து பொல பொலவென்று நீர் வழிந்தது. நன்றியால் வாயிலிருந்து வார்த்தை வர வில்லை. ஏதோ சொல்ல நினைத்தான். அதற்குள் சைதன்யா அங்கிருந்து போய்விட்டான்.

அவன் தேறிக் கொண்டு மெதுவாக உள்ளே போனான். வேலைக்காரர்கள் இறால்களை பதப்படுத்தி ஸ்டோரேஜில் பத்திரமாக வைத்துக் கொண்டிருந்தார்கள்.

மாலை ஐந்து மணி அடித்தது. ரங்கன் ஃபாக்டரியி லிருந்து வெளியே வந்து நடக்கத் தொடங்கினான். அவன் மனம் சந்தோஷத்தால் நிரம்பி வழிந்தது. மகளுக்கு முற்றி லும் குணமாகி விடும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. முதலாளிக்கு மனதிலேயே நன்றி தெரிவித்துக் கொண் டான்.

கடற்கரை சாலை நீண்டு போய்க் கொண்டிருந்தது. தொலைவிலிருந்து பார்க்கும் போது கரையை நோக்கி விரைந்து வந்து கொண்டிருந்த இயந்திர படகுகள் காகிதப் படகுகளைப் போல் காட்சி தந்தன. சூரியன் மேற்கு நோக்கிக் குறுகிப் போய்க் கொண்டிருந்தான். மெள்ள மெள்ளமாக இருள் பரவிக் கொண்டிருந்தது.

## 5

அதற்கு மறுநாள் தீபக் வந்தான். சிவப்பாக உயரமாக இருந்தான். வயது இருபத்தாறு ஆன போதிலும் முகத்தில் இன்னும் அப்பாவித்தனம் போகவில்லை.

பெரிய கம்பெனியில் உயர்ந்த பதவியில் இருந்தான். அவன் முன்னோர்கள் பல வருடங்களுக்கு முன்பே கோட்டயத்தில் ஸ்திரப்பட்டு விட்டார்கள். அவர்களுக்கு மலபார் எல்லையில் தேயிலை தோட்டங்கள் இருந்தன. பெற்றோருக்கு ஒரே மகன். அவனுக்கும் கௌசல்யா வுக்கும் அறிமுகம் ரொம்ப வேடிக்கையாக நடந்தது.

கௌசல்யாவுக்கு டென்னிஸ் ஆட்டத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாது. ரவி ஒரு நாள் தங்கையை டென்னிஸ் மேட்சுக்கு வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்றான். ஆட்டம் முடிந்த பிறகு ரவி தங்கையை அவனுக்கு அறிமுகம் செய்து வைத்தான். இருவருக்குமே கலகலப்பாக பழகும் சுபாவம் இல்லாததால் வெறுமே விஷ் செய்து விட்டு பேசாமல் இருந்துவிட்டார்கள். அன்றிலிருந்து அடிக்கடி மேட்சுக்கு வரத் தொடங்கினாள் கௌசல்யா. ஒரே கல்லூரி என்பதால் எப்பொழுதாவது சந்தித்துக் கொண்டால் முறுவலுடன் குசலம் விசாரித்துக் கொள் வார்கள்.

முதல் சந்திப்பிலேயே காதல் மலரும் என்று சொல் வது முற்றிலும் உண்மையில்லை. நல்ல குடும்பத்தில் பிறந்த படிப்பும், பண்பும் நிறைந்த எந்தப் பெண்ணும் முதல் சந்திப்பில் காதல் வயப்பட மாட்டாள், அந்த இளைஞன்



கதாநாயகனாக இருந்தாலும் சரி, போகப் போக அந்த அறிமுகம் காதலாக மாறியது. காதல் விஷயத்தில் ரொம்ப தயக்கம் காட்டிய தீபக், திருமண விஷயம் வந்ததும் துணிச்சல் காண்பித்தான். கௌசல்யாவோ வீட்டில் சொல்லவும் பயந்தாள்.

அவள் சொல்லியிருப்பாள் என்று நினைத்துக் கொண்டு தீபக் தன் பெற்றோருடன் நேராக வீட்டுக்கு வந்து விட்டான். சைதன்யாவுக்கு இந்த விஷயமே தெரியாது. வந்தவர்களைப் பார்த்து முதலில் வியப்படைந் தாலும் விஷயம் தெரிந்த பிறகு மகிழ்ச்சி அடைந்தான். கௌசல்யாவையும், சைதன்யாவின் குடும்பத்தையும் பார்த்த பிறகு தீபக்கின் பெற்றோருக்கு ஆட்சேபனை இருக்கவில்லை. பிறகு தீபக்கும் அந்தக் குடும்பத்தில் ஒருவனாகிவிட்டான்.

அவன் வருகையால் அந்த வீட்டில் சந்தடி ஏற்பட்டது. ஏற்கெனவே அதிகம் பேசாத கௌசல்யா அவன் வந்த பிறகு மௌனவிரதம் மேற்கொண்டு விட்டாள். ரவிக்கு மட்டும் தங்கையை கிண்டல் செய்ய நல்ல வாய்ப்பு கிடைத்து விட்டது. கிரண்மயி முதல் நாள் பேசாமல் இருந்தாலும் தீபக்கின் அப்பாவித் தனமும், சாது சுபாவமும் பார்த்த பிறகு ரவியுடன் சேர்ந்து அவர்களை கிண்டல் செய்யத் தொடங்கினாள்.

இந்த ரகளையில் பங்கெடுத்துக் கொள்ளாமல் இருந்தவள் சாரதா ஒருத்திதான். அவள் ரொம்பவும் அழுத்தமானவள் என்று முதல் நாளே சைதன்யா புரிந்து கொண்டுவிட்டான். தன் வேலை எதுவோ அதை

பார்ப்பது, வேலையில்லாத நேரத்தில் புத்தகங்களைப் படிப்பது... இதுதான் அவளுடைய தினசரி வேலை.

ஒருநாள் அவள் கௌசல்யாவின் அறைக்குப் போன பொழுது அவள் வீணை சாதகம் செய்து கொண்டிருந் தாள்.

"உனக்கு நன்றாக வீணை வாசிக்கத் தெரியுமா?" சாரதா கேட்டாள்.

கௌசல்யா கொஞ்சம் வெட்கத்தோடு "ஊஹூம். ஏதோ பொழுது போக்கா கற்றுக் கொண்டேன்" என்றாள். சாரதா வீணையை ஆர்வத்தோடு கவனிப்பதைப் பார்த்து விட்டு "உனக்கு வாசிக்கத் தெரியுமா?" என்று கேட்டாள் கௌசல்யா.

"ஏதோ கொஞ்சம்."

கௌசல்யா சற்று நகர்ந்துகொண்டு "எங்கே வாசித்துக் காட்டு பார்ப்போம்" என்றாள்.

சாரதா சங்கோஜத்துடன் "இப்பொழுது வேண்டாம். இன்னொரு நாள்..." என்று சொன்னதை பொருட்படுத் தாமல் கையைப் பிடித்து உட்கார வைத்தாள். அதற்கு மேல் சாரதாவால் மறுக்க முடியவில்லை. வீணைக்கு முன்னால் உட்கார்ந்ததுமே அவளுக்கு தந்தையின் ஞாபகம்தான் வந்தது.

ஏதோ வேதனை! ஒரு முறை தந்திகளை மீட்டி சுருதியை சரி பார்த்துக் கொண்டாள். பிறகு அவள் விரல்கள் தந்திகள் மீது நாட்டியமாடத் தொடங்கின. அடுத்த வினாடி அந்த கட்டிடத்தின் உயரமான சுவர்



களுக்கிடையே வீணையின் நாதம் அலை அலையாய் பரவியது.

அதுவரை சிரித்துக் கொண்டிருந்த கௌசல்யாவின் உதட்டிலிருந்து சிரிப்பு மாயமாகிவிட்டது. ஏதோ அற்புதத் தைப் பார்ப்பது போல் சிலையாக அப்படியே உட்கார்ந்து விட்டாள்.

காரிடாரில் உட்கார்ந்திருந்த சைதன்யாவின் செவி களில் இந்த வீணையின் நாதம் கேட்டதுமே, படித்துக் கொண்டிருந்த புத்தகத்தைக் கீழே வைத்துவிட்டு கண்களை மூடி அப்படியே வேறு உலகத்திற்குப் போய் விட்டான். பலவிதமான வியாபார விஷயங்களில் சோர்ந்து போயிருந்த அவன் மனம் இந்த அபூர்வ வீணை நாதத்தி னால் புத்துணர்ச்சி பெற்றது.

கீர்த்தனையை முடித்துவிட்டு சாரதா நிமிர்ந்து பார்த்த பொழுது அந்த அறையில் ரவியும், காந்திமதியும் அவளையே பார்த்தபடி நின்று கொண்டிருப்பது தென் பட்டது.

"சூப்பர்ப்!" ரவி கைதட்டினான். தங்கையைப் பார்த்துக் கொண்டே "கௌசல்யா வாசித்தால் உடைத்து அடுப்பில் போட்டு விடலாம் போல இருக்கும். வீணை யின் நாதம் இவ்வளவு நன்றாக இருக்கும் என்று எங்களுக் குத் தெரியாது" என்றான். கௌசல்யா நாக்கை நீட்டி அண்ணனுக்கு அழகு காட்டினாள். எல்லோரும் புகழ்ந்த தைப் பார்த்துவிட்டு சாரதா வெட்கத்தோடு தலை குனிந் தாள். அப்பொழுதுதான் அந்தப் பக்கமாக வந்த கிரண்மயி யைப் பார்த்து சைதன்யா கேட்டான். "யார் இவ்வளவு நேரமாக வீணை வாசித்தது?"

"சாரதா !"

அவன் முகத்தில் வினாடி நேரம் வியப்பு தென் பட்டது. "ஓஹ்!" என்றான். "உனக்கும் வருமா?" என்று கேட்டான்.

கிரண்மயி சிரித்துவிட்டு "எனக்கு எந்த கலையிலுமே தேர்ச்சி கிடையாது" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து போய்விட்டாள்.

கண்களை மூடிக் கொண்டே சைதன்யா நினைத்துக் கொண்டான். 'அக்கா தங்கைகளில் ஒருத்தர் அழகைக் கொண்டிருந்தால் இன்னொருத்தர் கண்டிப்பாக ஏதாவது ஒரு காலையில் தேர்ச்சி பெற்றுவிடுவார்கள். அவர்கள் மனதில் படிந்து போயிருக்கும் தாழ்வு மனப்பான்மையே அதற்குத் துணையாக இருக்கும் போலும்."

மறுநாள் சைதன்யா ஆபீஸ் அறையில் உட்கார்ந்து ஃபைல்களை பார்வையிட்டுக் கொண்டிருந்த போது சாரதா அங்கே வந்தாள். அவள் அங்கு வருவது அதுதான் முதல் தடவை. கிரண்மயி வீட்டில் சுற்றுவது போல் ஆபீசி லேயும் வளையம் வருவாள்.

சைதன்யா நிமிர்ந்து பார்த்துவிட்டு வியப்போடு நாற்காலியை விட்டு எழுந்து கொண்டு "வா சாரதா" என்றான் அன்புடன்.

அவள் வந்து உட்கார்ந்து கொண்டே சுற்றிலும் பார்வையிட்டாள். பார்டிஷன் மரத் தடுப்பு சுவர் அழகாக மின்னிக் கொண்டிருந்தது. ஏ.சி.யின் சத்தம் லேசாக கேட்டுக் கொண்டிருந்தது.



"சொல்லு. என்ன வேண்டும்?" என்றான் சைதன்யா பின்னால் சாய்ந்து கொண்டே.

சாரதா பதற்றமடைந்து "ஒன்றுமில்லை" என்றாள்.

அவள் சங்கோஜத்தைப்பற்றி நன்றாக அறிந்திருந்த சைதன்யா பேச்சை மாற்றியபடி "இவ்வளவு நன்றாக வீணை வாசிக்க எங்கே கற்றுக் கொண்டாய்?" என்றான்.

"அப்பாவிடமிருந்து" என்றாள். ஒரு வினாடி நிசப்த மாக கழிந்தது. தந்தையின் நினைவு வந்ததும் அவள் கண் களில் கிர்ரென்று நீர் சுழன்றது. சைதன்யா அதைப் பார்த்துவிட்டு 'இவ்வளவு மென்மையான இதயம் படைத் தவள் இந்த உலகத்தில் எப்படி வாழப் போகிறாளோ?' என்று நினைத்துக் கொண்டான். அந்த உணர்வோடு அவன் அவளிடம் "இங்கே உங்களுக்கு எல்லாம் சரியாக நடந்து வருகிறது இல்லையா?" என்று விசாரித்தான்.

எதிர்பாராத இந்தக் கேள்வியால் அவள் கொஞ்சம் தடுமாறினாள். தன் நன்றியை எப்படிச் சொல்லுவது என்று தெரியாமல் ஒரு வினாடி தயங்கி விட்டு "உண்மை யில் அன்றைக்கு நீங்க வந்து காப்பாற்றவில்லை என்றால் நாங்க எங்கே இருந்திருப்போமோ? அதைப் பற்றி நினைக் கும் போதே பயமாக இருக்கு" என்றாள்.

"அந்த விஷயத்தைப் பற்றி கேட்கவில்லை. இங்கே சௌகரியமாக இருக்கிறதா என்றுதான் கேட்டேன்."

சாரதாவின் குரலில் என்றுமே தென்படாத உத்வேகம் தென்பட்டது. "உண்மையில் இவ்வளவு அன்பையும், ஆதரவையும் எங்கள் வாழ்நாளில் நாங்கள் கண்டதே

இல்லை. உங்க எல்லோரையும் பார்த்துக் கொண்டிருந் தாலே மனம் நிறைந்து விடுகிறது."

சைதன்யா சிரித்துவிட்டு "ஆனால் கிரண்மயி என்னவோ இதெல்லாம் பணத்தால் வந்தது என்கிறாள்" என்றான்.

பல நாட்களாக தன் மனதில் இருப்பதைச் சொல்லக் கூடிய வாய்ப்பு கிடைத்ததும் அவள் தன் கூச்சத்தை தகர்ந் தெறிந்து விட்டு "அக்காவின் பேச்சை பொருட்படுத்தா திங்க ப்ளீஸ்!" என்றாள்.

"நான் அந்த வாதத்தையே ஏற்கப் போவதில்லை. பணத்தால்தான் அன்பு ஏற்படுவதாவது?" என்றான் சைதன்யா. சாரதா பதில் பேசவில்லை.

அவள் தயாராகி இருப்பதைப் பார்த்துவிட்டு "வெளியே போக தயாராகி இருந்தாற் போலிருக்கே?" என்றான் பேச்சை மாற்றியபடி.

சாரதா தயக்கத்துடன் "நேற்று வீணையின் தந்தி ஒன்று அறுத்து போய் விட்டது" என்றாள்.

"அதனால் என்ன? போய் விட்டு வா" என்று காலிங் பெல்லை அடிக்கப் போனான். பிறகு நின்று "இன்று டிரைவர் வரவில்லை போலிருக்கு. கிளம்பு, நானே வருகி றேன்" என்றான்.

அவள் பதற்றத்துடன் "நீங்க எதற்கு?" என்றாள்.

"பரவாயில்லை" என்றபடி நாற்காலியை விட்டு எழுந்து கொண்டான்.



"நீங்க வேலை பார்க்கும் போது நடுவில் வந்து பாழடித்து விட்டேனா?"

"ஒரு விஷயம் தெரியுமா?" வெளியே நடந்து கொண்டே சொன்னான். "இந்த வீட்டுக்கு வந்து இவ்வளவு நாட்களுக்கு பிறகு நீயாகவே வாயைத் திறந்து ஒரு விஷயத்தைக் கேட்டிருக்கிறாய்" என்று காரைக் கிளப்பினான். சாரதா தலையைக் குனிந்து கொண்டாள்.

கார் மெதுவாக கிளம்பியது. குளிர்ந்த காற்று அலை அலையாக வீசிக் கொண்டிருந்தது.

மேஜைக்கு மேலே இருந்த காகிதக் கட்டின் மீது இன்ஷ்யூரென்ஸ் காகிதம் காற்றுக்கு படபடத்துக் கொண்டிருந்தது.

* * *

அதற்கு மறுநாள் சைதன்யாவுக்கு எதிர்பாராத நிகழ்சசி ஒன்று வந்து சேர்ந்தது. ஜப்பானிலிருந்து ஹமா ஃபோதோஷிமா சேல்ஸ் சீஃப் வந்ததால் அவருடன் கொச்சினுக்கு போக வேண்டியிருந்தது. அங்கிருந்து சுற்றுலா பயணமாக தேக்கடிக்கு சென்றார்கள். சுற்றிலும் உயரமான மலைகள். பாய் விரித்தாற்போல் மலைச் சரிவில் பசுமையான தேயிலைத் தோட்டங்கள். மலை யைச் சுற்றிக் கொண்டு போகும் சாலைகள். தொலைவில் மலைகளுக்கு இடையே நூலிழை விழுவது போல அருவி கள். ஐந்தாறு மைல்களுக்கு ஒரு சிறிய தேயிலை எஸ்டேட். நூறு மைல்கள் ஆள் நடமாட்டமில்லாத பாதை. கார் பயணம் இவ்வாறு தொடர்ந்து கொண்டிருந்தது.

"இந்த தேயிலையில் நிறைய லாபம் வருமோ?" கேட்டார் ஜப்பானிலிருந்து வந்த சீஃப்.

"இந்த மலைப் பிரதேசத்தில் விளைச்சல் நல்ல தரமானதாக இருக்கும். எஸ்டேட் முதலாளிகளுக்கு கிடைக்கும் லாபம் லட்சக் கணக்கில் இருக்கும். இந்த மாநிலத்தில் லாபகரமான வியாபாரங்கள் இரண்டே இரண்டுதான். ஒன்று தேயிலை, இன்னொன்று இறால்கள்," சைதன்யா சொன்னான்.

"உங்க நாட்டில் வரிகள் அதிகம் இல்லையா?"

தலையை அசைத்தான் சைதன்யா.

"ஏதோ பத்திரிகையில் படித்தேன். அரசாங்கம் எவ்வளவு அதிகமாக வரி போடுகிறதோ, அவ்வளவு அதிகமாக அதை ஏய்ப்பதற்குப் புதுப் புது வழிகளை கண்டுபிடிப்பார்களாம்."

சைதன்யா முறுவலித்துவிட்டு பேசாமல் இருந்தான்.

"மிஸ்டர் சைதன்யா!" என்றார் சீஃப். "கடவுள் பக்தி அதிகமாக இருக்கும் நாடு உங்களுடையது. இப்படி அரசாங்கத்தை ஏமாற்றுவது பாவம் என்று நினைக்க மாட்டீங்களா? தயவு செய்து நான் இப்படிக் கேட்டதை தவறாக நினைக்காதீங்க."

"நோ... நோ... பரவாயில்லை" என்று சற்று யோசித்துவிட்டுப் பிறகு சொன்னான். "மிகக் குறுகிய காலத்தில் தொழிற்சாலைகள் எல்லாம் பெருகிக் கொண்டிருக்கும் நாடு இது. அதனால்தான் இங்கே இருப்பவர்கள் பழைய சம்பிரதாயங்களை விடவும் முடியாமல், புதிய முறைகளை முழுவதுமாக பின் பற்றவும் முடியாமல் நலிந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் இரட்டை மனப்பான்மையுடன் நடந்து கொள்கிறார்கள்."



"இரட்டை மனப்பான்மையா? அப்படி என்றால்?"

"தவறுகள் செய்தாலும் ஒரு முறை கோயிலுக்குப் போய்விட்டு வந்தால் சரியாகிவிடும் என்று நினைப்பது, கடவுள் இருக்கிறார் என்று கண் மூடித்தனமாக நம்புவது, புண்ணியத்தை மூட்டை கட்டிக் கொள்ளணும் என்று பார்ப்பது."

"கடவுள் இருக்கிறார் என்று நீங்கள் நம்பவில்லையா?"

இந்தக் கேள்விக்கு சைதன்யா உடனே பதில் சொல்லவில்லை. பிறகு சிரித்துவிட்டு "இந்தக் கேள்வி என்றுமே எனக்கு ஏற்பட்டதில்லை. அதற்குத் தேவை வரவில்லை என்றும் சொல்லலாம். என் வேலையை நான் செய்து கொண்டு போகிறேன். யாருக்கும் தீங்கு செய்யவில்லை. எனக்குக் கடவுளின் தேவை என்ன இருக்கு?"

"கடவுள் இருக்கிறார் என்று நம்புவதில் மனிதனுக்கு ஒரு விதமான நிம்மதி கிடைக்கிறது."

"நீங்க அதை நம்புகிறீங்களா?" சிரித்துக் கொண்டே கேட்டான் சைதன்யா.

சீஃப் சிரிக்கவில்லை. "நம்புகிறேன்" என்றார். "உங்களுக்குத் தெரிந்திருக்கும். எங்கள் நாட்டில் புத்த மதத்தினர் அதிகம். எங்களிடம் 'ஜென்' என்ற சம்பிரதாயம் உண்டு. இதை புத்தர்தான் தொடங்கி வைத்தார்

என்று நம்புகிறோம்." வளைந்து சென்ற மலைப் பாதையி லிருந்து சூனியத்தை நோக்கிச் சென்றது அவர் பார்வை. "ஒவ்வொருவரும் தம் வாழ்க்கையில் புத்தனமாக முடியும் என்ற தத்துவம். அதற்கு வழி நடத்திச் செல்லுவது தியானம்."

"உலகத்தில் மிகப் பெரிய இறால் ஏற்றுமதி கம்பெனி யில் முதலாளி இவ்வளவு ஆழமாக வேதாந்தம் பேசுவது ஆச்சரியமாக இருக்கு" என்றான் சைதன்யா.

சீஃப் சிரித்தார். "வேதாந்தம் மனிதனோடு கலந்து விட்ட விஷயம்."

கார் ஆரண்ய நிவாஸ் ஹோட்டலுக்கு முன்னால் வந்து நின்றது. சுற்றிலும் உயரமான மரங்கள். பறவை களின் கலகல சத்தம். மலைக்கு மேல் ஹோட்டல். பக்கத்தி லேயே நதி. நதிக்கு அந்தப் பக்கம் மலைகள். அற்புதமான காட்சி.

"ஆனால் வேதாந்தத்தை விட எங்கள் மதத்தின் நோக்கம் வேறு." காரை விட்டு இறங்கிக் கொண்டே சொன்னார் சீஃப். "சுகத்தில் திளைப்பதை விட்டு விட்டு அமைதியை பின்பற்றச் சொல்லி எங்கள் மதம் சொல் கிறது."

போகப் போக தன் வாழ்க்கை அந்த மார்க்கத்தில் தான் செல்லப் போகிறது என்று நினைத்துப் பார்த்திராத சைதன்யா ரூம் ரிசர்வேஷனைப் பற்றி விசாரிப்பதற்காக ரிசப்ஷனை நோக்கி நடந்தான்.

"ரியலி மார்வலெஸ்!" என்றார் சீஃப்.



சுற்றிலும் மலைகள். மலைகளுக்கு நடுவில் நதி. நதியின் ஏற்றத்தில் படகில் பயணம். இரு பக்கமும் அடர்த்தியான காடுகள்.

"இங்கே எவ்வளவு ஆழம் இருக்கும்?" சீஃப் கேட்டார்.

"நூற்றைம்பதிலிருந்து இருநூறு அடிகள் வரை."

மூச்சு விடவும் மறந்தவராக "இரு நூறடிகளா?" என்றார் தண்ணீரைப் பார்த்துக் கொண்டே. நதி அப்பாவிப் பெண்ணைப் போல் பாய்ந்து கொண்டிருந்தது.

"இங்கே அணைக்கட்டு கட்டியதால் நீர்மட்டம் திடீ ரென்று உயர்ந்துவிட்டது. உண்மையில் இந்த இடம் காட்டிற்கு நடுவில் உள்ள பள்ளதாக்கு. அதனால்தான் இவ்வளவு ஆழம் இங்கே."

படகு ஓட்டுபவன் திரும்பி "அதோ பாருங்கள்!" என்றான். எல்லோரும் அந்தப் பக்கமாக பார்த்தார்கள்.

கரையில் நின்றபடி குட்டி யானைகளின் கூட்டம் ஜலக்ரீடை செய்து கொண்டிருந்தது. பெரிய யானை துதிக்கையால் நீரை அள்ளி குட்டி யானையின் மீது இறைந்து கொண்டிருந்தது. இன்னொரு யானை புல்லைப் பிடுங்கி உடம்பைத் தேய்த்துக் கொண்டிருந்தது.

"ப்யூட்டிஃபுல்!" என்றார் சீஃப்.

"இதுதான் இயற்கையின் அழகு." சைதன்யா சொன்னான். "நாம்ப கூண்டுக்குள் இருந்து கொண்டு மிருகங்களுக்கு இடையே சுற்றி வந்து கொண்டிருக்கிறோம் என்று அர்த்தம். அடர்ந்த காட்டுக்குள் இருக்கிறோம்."

"அருகில் போய் பார்ப்போம்" என்றார் சீஃப்.

சைதன்யா மறுப்பது போல் தலையை அசைத்து விட்டு "லாபமில்லை" என்றான்.

"ஏன்?"

தண்ணீருக்கு நடுவில் சிறிய குச்சிகளைப் போல் வெளியே நீட்டிக் கொண்டிருந்தவற்றை சுட்டிக் காட்டி விட்டு "அதென்னவென்று உங்களால் ஊகிக்க முடிய கிறதா?" என்றான்.

"ஊஹும்."

"அவை மரங்கள். நதிக்கு நடுவில் மரங்கள். வெளியில் இப்படி குச்சிகளைப் போல் தென்பட்டாலும் சுமார் நூறடி உயரமுள்ள மரங்கள் அவை. படகு கொஞ்சம் அதில் முட்டிக் கொண்டாலும் போதும், நாம் எல்லோ ரும் கூண்டோடு கைலாயம் போக வேண்டியது தான்." சைதன்யா சொன்னான். "சில மரங்களை வெட்டி விட்டார்கள். இருந்தாலும் ஆபத்துதான் அதனால்தான் மரங்கள் இருக்கும் இடங்களில் குச்சிகள் வெளியே தெரியும் படியாக கட்டியிருக்கிறார்கள்."

படகு தண்ணீருக்கு நடுவில் வளைந்து வளைந்து முன்னோக்கிப் போய்க் கொண்டிருந்தது. படகு ஓட்டு பவன் கவனம் சிதறாமல் படகை செலுத்திக் கொண்டிருந் தான். மரங்களுக்கு இடையே நீர் சுழித்து ஓடிக் கொண்டிருந்தது. நூறு அடி தொலைவில் இன்னொரு யானைகளின் கூட்டம் தண்ணீர் குடித்துக் கொண்டிருந்தது.

"ஒரு முறை இப்படித்தான் படகில் இருந்தவர்கள் யானையை அருகில் போய் பார்ப்போம் என்று ஆசைப் பட்டு கரைக்கு சமீபமாக படகைக் கொண்டு போனார் களாம். மரங்களுக்கிடையே படகு சிக்கிக் கொண்டு விட்டது. எல்லோரும் பயந்து போய் கத்தத் தொடங் கினார்களாம். அதுதான் அவர்கள் செய்த தவறு. யானை ஒன்று பெரிதாகப் பிளிரிக் கொண்டே வந்து படகைக் கவிழ்த்து விட்டது."

"த்ரில்லிங்! ரியல்லி த்ரில்லிங்!" என்றார் சீஃப் பைப்பை உறிஞ்சிக் கொண்டே. அவருக்கு இந்த ட்ரிப் ரொம்ப பிடித்துப் போய்விட்டது.

சைதன்யாவுக்கு மட்டும் இங்கே வருவது இது நூறாவது முறை. ஒவ்வொரு முறையும் முதல் தடவைப் பார்ப்பது போல் உற்சாகமாக இருப்பான்.

அதுதான் பிசினெஸ்!

## 6

ஜப்பானிலிருந்து வந்த சீஃப்பை அனுப்பிவிட்டு ஏர்போர்ட்டிலிருந்து சைதன்யா வீட்டுக்கு வந்த போது ஏற்பாடுகள் தடபுடலாக நடந்து கொண்டிருந்தன.

மறுநாள்தான் மகன் மதுவின் பிறந்த நாள்.

கிருஸ்துமஸ் கூட!

எங்கு பார்த்தாலும் வீடுகளின் முன்னால் தொங்க விடப்பட்ட நட்சத்திரங்கள்! வண்ண வண்ண காகிதங்

களால் அலங்கரிக்கப்பட்ட வீடுகள்! எங்கும் கோலாகல மாக இருந்தது.

மதூவுக்கு இரண்டு வயது முடிந்து மூன்றாம் வயது வருகிறது கிருஸ்துமஸ் அன்று. ரவி அழைக்க வேண்டிய விருந்தினர்களில் லிஸ்டைத் தயாரித்தான். சைதன்யா அதில் இன்னும் சில பெயர்களை சேர்த்தான்.

ஒரு காரில் கௌசல்யா, கிரண்மயி, இன்னொரு காரில் சைதன்யா எல்லோரையும் அழைப்பதற்காகப் புறப் பட்டார்கள். வேலை முடியும் போது மதியம் இரண்டு மணி ஆகிவிட்டது. லஞ்ச் சாப்பிட்ட பிறகு சைதன்யா ஃபாக்டரிக்குக் கிளம்பினான்.

வரிசையாக மூன்று நாட்கள் லீவு விட்டதால் ஃபாக்டரி ஆளரவமில்லாமல் இருந்தது. கேட் அருகில் காரை நிறுத்திவிட்டு ஹாரனை பலமாக அடித்தான்.

ஒரு நிமிடம் வரை யாருமே வரவில்லை. அவன் இறங்கப் போனபொழுது உள்ளேயிருந்து ரங்கன் ஓடி வந்தான்.

"கூர்க்கா எங்கே?"

"பத்து நிமிஷத்துக்கு முன்னாடி கூட இங்கேதான் இருந்தான் அய்யா! டீ குடிக்கப் போயிருப்பான் போலிருக்கு."

சைதன்யா சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண் டான். "ஃபாக்டரியில் எல்லோரும் இருக்கும் போது கூர்க்கா தேவையில்லை ரங்கா! யாரும் இல்லாத பொழுது தான் வேண்டும். தான் செய்யும் வேலை மீ



மதிப்பு இல்லாதவன் எனக்குத் தேவையில்லை. இன்றைக்கே அவனை வேலையிலிருந்து நீக்கிவிடுங்கள். இரண்டு மாத சம்பளத்தைக் கொடுத்து அனுப்பி விடுங் கள்."

ரங்கன் பதில் சொல்லவில்லை. முதலாளி சீக்கிரத் தில் ஒரு முடிவுக்கு வர மாட்டார் என்றும், வந்து விட்டால் அதற்கு மறு பேச்சுக் கிடையாது என்றும் அறிவான்.

இருவரும் உள்ளே நடந்தார்கள். உயரமான ஃபாக்டரி சுவர்களுக்கிடையே நிசப்தம் மந்தமாக சூழ்ந்து கொண்டிருந்தது.

"எப்படி இருக்கு இறால் வரவு?"

"நன்றாக இருக்கு அய்யா! பெரிய சைஸ் இறால்கள் இந்த முறை அதிகமாக கிடைத்திருக்கு."

"தட்ஸ் குட்!" திருப்தியுடன் தலையை அசைத்தான். "வேலூருக்கு எப்போ போகிறாய்?"

"அடுத்த மாதம் முதல் வாரத்தில்."

வெளியே வந்து கொண்டே சைதன்யா சொன்னான். "நாளைக்கும், அதற்கு அடுத்த நாளும் லீவுதான். இங்கே இருந்து கொண்டு என்ன செய்யப் போகிறாய்? வீட்டுக்குப் போய்விட்டு வா. மூன்றாவது நாள் ஷிப்மெண்டுக்கு வேலையைத் தொடங்கலாம்."

ரங்கன் மறுப்பது போல் தலையை அசைத்துவிட்டு "நான் இங்கேயே இருக்கிறேன் அய்யா!" என்றான்.

இனி சொன்னாலும் அவன் கேட்கமாட்டான் என்று சைதன்யா அறிவான். "சரி. நான் கிளம்புகிறேன்." காரை ஸ்டார்ட் செய்து கொண்டே சொன்னான்.

ரங்கன் கைகளை ஜோடித்து வணங்கினான்.

சைதன்யா வீட்டிற்கு திரும்பி வந்த போது மணி நான்கு ஆகிவிட்டது. மதூவுக்கு புது ஆடைகளை அணிவித்து அவனிடம் அழைத்து வந்தாள் காந்திமதி. மகனை மடியில் உட்கார வைத்துக் கொண்டான். மகனுக் குத் தந்தையின் குணம்தான் வந்திருப்பதாக காந்திமதி சொல்லிக் கொண்டிருப்பாள். ரகளை செய்ய மாட்டான். தனிமையை விரும்புவான்.

முன்னால் இருந்த தோட்டத்தில் வேலைக்காரர்கள் நாற்காலிகளை போட்டுக் கொண்டிருந்தார்கள். ரவி ஸ்பீக்கர்களை ஏற்பாடு செய்தான். "நீல் டைமண்ட்" பாட்டு கிடார் வாத்தியங்களுக்கு இடையே ஒலித்துக் கொண்டிருந்தது.

கௌசல்யா மேஜை மீது கேக்கை அரேஞ்ச் செய்து கொண்டிருந்தாள். சாரதா உள்ளே சமையல் வேலை யில் ஈடுபட்டிருந்தாள். கார் நின்ற சத்தம் கேட்டு விட்டு சைதன்யா எழுந்து வெளியே வந்தான். ஒவ்வொரு விருந்தினராக வரத் தொடங்கினார்கள்.

"வாங்க- வாங்க." சைதன்யா கார் கதவைத் திறந்தான்.

ரங்கன் கோல்ட் ஸ்டோரேஜ் கதவைத் திறந்தான். உள்ளே போய் கதவை மூடிவிட்டு, பாக்கெட்டுகளை எண்ணத் தொடங்கினான். பத்து லட்சங்கள் ஜப்பான் கன்சைன்மெண்ட். நான்கு லட்சங்கள் சாதாரண ஸ்டாக். தொலைவில் சர்ச்சில் மணி ஆறு அடித்தது.



ஆறு அடிக்கும் போது விருந்தினர்கள் எல்லோரும் வந்து விட்டார்கள். தோட்டத்தில் பல வண்ணங்களில் மின் விளக்குகள் ஒளியைப் பரப்பிக் கொண்டிருந்தன. காந்திமதி மதூவின் கையால் கேக்கை கட் செய்ய வைத் தாள். எல்லோரும் கை தட்டினார்கள். கேக் துண்டை எடுத்து மதூவின் வாயில் வைத்தான் சைதன்யா. ஸ்பீக்கரி லிருந்து பாப் மியூசிக் உரக்கக் கேட்டுக் கொண்டிருந்தது. அதையும் மீறிய சிரிப்பு சத்தம்.

ஏதோ சத்தம் கேட்டு ரங்கன் கோல்ட் ஸ்டோரேஜி லிருந்து வெளியே வந்தான். விசாலமான ட்ரேக்குளுக்கு இடையே இருந்த வழி சூனியமாக இருந்தது. ட்ரேக் களுக்கு அப்பால் என்ன இருந்தது என்று தென்பட வில்லை. "யாரது?" என்றான் உரத்தக் குரலில்.

உரத்தக் குரலில் பேசிக் கொண்டிருந்தார்கள் விருந் தினர்கள். ஆனாலும் ஒருத்தர் பேச்சு இன்னொருத் தருக் குக் கேட்கவில்லை. புதுப்புது அறிமுகங்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன. யாரோ ரவியை "கல்யாணம் எப்போ செய்து கொள்ளப் போகிறாய்?" என்று கேட்டார்கள்.

ரவி ஓரக்கண்ணால் கிரண்மயி இருந்த பக்கம் பார்த் தான். என்றுமில்லாமல் இன்று கிரண்மயியின் கன்னங்கள் வெட்கத்தால் சிவந்தன. சைதன்யா தங்கையிடம் "தீபக் கும் வந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் இல்லையா?" என்றான். கௌசல்யா நாணத்தால் தலை குனிந்து கொண்டாள்.

தலை குனிந்து தரையைப் பார்த்தான் ரங்கன். கீழே எதுவும் தென்படவில்லை. மூலையில் சந்தடி கேட்டது. அங்கே இரண்டடி பரப்பளவு உள்ள பெரிய பெரிய ப்ளேட்டுகள் இருந்தன. இறால்களை சுத்தம் செய்துவிட்டு ரங்கன் ப்ளேட்டுகளை நோக்கி நடந்தான்.

சைதன்யா ப்ளேட்டுகளை நோக்கி நடந்தான். இரண்டு ப்ளேட்டுகள் நிறைய கேக்குகளை வைத்து ஃபார்மலாக விருந்தினருக்குத் தந்துவிட்டு டின்னரைத் தொடங்கி வைத்தான். எல்லோருக்கும் எல்லாம் சரிவர கிடைக்கிறதா என்று சுற்றிலும் பார்வையிட்டுக் கொண்டிருந் தான்.

சுற்றிலும் பார்வையிட்டான் ரங்கன். யாருமே தென்படவில்லை. திருப்தி அடைந்தவனாக மறுபடியும் உள்ளே போகத் திரும்பியபோது சத்தம் கேட்டது. சட்டென்று திரும்பிப் பார்த்தான். சத்தத்திற்கான காரணம் தெரிந்துவிட்டது. ஆனால் அதற்குள் நேரம் கடந்து விட்டது. படமெடுத்த பாம்பு எதிர்பார்க்காத வேகத்தோடு சீறிக் கொண்டே அவன் காலில் கொத்தி விட்டு சட்டென்று கண்மறைவாகிவிட்டது. ரங்கன் காலைப் பிடித்துக் கொண்டு அப்படியே உட்கார்ந்து விட்டான்.

உட்கார்ந்து கொண்டே "இவ்வளவு நல்ல டின்னர் சாப்பிட்டு ரொம்ப நாளாச்சு" என்றான் ஜெயின் திருப்தி யோடு. சைதன்யாவின் மனதில் சாரதாவிடம் னன்றி யுணர்ச்சி ஏற்பட்டது. ஸ்பீக்கரிலிருந்து ராகுல் தேவ பர்மன் தொண்டைக் கிழிய கத்திக் கொண்டிருந்தான்.



கத்தினாலும் யாருக்குமே கேட்காது என்று தெரியும். கத்துவதற்கும் சக்தி இல்லை. வாயிலிருந்து நுரை தள்ளிக் கொண்டிருந்தது. உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது. உடல் நீலம் பாரித்துக் கொண்டிருந்தது. விஷம் உடம் முழுவதும் பரவிவிட்டது. யாருமே இல்லாத இடத்தில், யாருமே உதவிக்கு வர முடியாத இடத்தில் ஆதரவில்லா மல் விழுந்துக் கிடந்தான். மிகப் பரிதாபமான அந்த நிலையில், உயிர் கொஞ்சம் கொஞ்சமாக போய்க் கொண்டிருந்த நேரத்தில், மூடிக் கொள்ள முயன்ற கண் களை வலுக்கட்டாயமாக திறந்தான். எதிரே கோல்ட் ஸ்டோரேஜின் திறந்திருந்த கதவைப் பார்த்ததுமே, அத்தனை வேதனையிலும் திடுக்கிட்டான். அதை மூடா விட்டால்... மூ...டா...வி...ட்...டா...ல் இறால்கள் அழுகிப் போய்விடும். அதனால் ஏற்படப்போகும் நஷ்டத்தை எண்ணிப் பார்த்த போது உடல் நடுங்கியது. வேதனைக் கும் பிரார்த்தனைக்கும் இடையே ஊசலாடியபடி பற் களைப் கடித்துக் கொண்டு வலியைப் பொறுத்துக் கொண்டான்.

கைகளை ஊன்றிக் கொண்டே எழுந்துகொள்ள முயற்சி செய்தான். திராணி இருக்கவில்லை. மெதுவாக தரையில் ஊர்ந்துகொண்டே அந்தப் பக்கம் நகரத் தொடங்கினான். ஒவ்வொரு அடி நகரும் போது வலி உயிர் போவது போல் இருந்தது. இன்னும் இரண்டு அடிகள் நகர்ந்தால் கதவு கைக்கு எட்டிவிடும். ஒரு முறை தள்ளிவிட்டால் போதும். கதவு பூட்டிக் கொண்டு விடும். அதற்குப் பிறகு தனக்கு என்னவானாலும் பரவாயில்லை. பலத்தை எல்லாம் கால்களில் வரவழைத்துக் கொண

டான். அதற்குள் தலையைச் சுற்றுவது போல் இருந்தது. சுருண்டு விழுந்தான். ஒரு அடி முன்னால் நகர்ந்து விட்டால் போதும். கதவு கைக்கு எட்டி விடும். இன்னும் ஒரே ஒரு அடி... எட்டவில்லை என்றால்... உள்ளே ஐஸ் உருகிப் போய்விட்டால்...

ஐஸ்கிரீம் எல்லோருக்கும் கிடைத்ததா இல்லை என்று சுயமாக பார்வையிட்டுக் கொண்டிருந்தான் சைதன்யா. இன்று நடந்த பார்ட்டி அவனுக்கு திருப்தியை அளித்தது. ஒவ்வொருவராக நன்றி சொல்லிவிட்டுத் திரும்பிப் போய்க் கொண்டிருந்தார்கள். காலையிலிருந்து அதிகமாக அலைந்ததாலும், பார்ட்டிக்கான ஏற்பாடு களை செய்ததாலும் அவன் கண்கள் களைப்பால் மூடிக் கொள்ளத் தொடங்கின.

மூடிக் கொள்ளவிருந்த கண்களை வலுக்கட்டாய மாக திறந்தான் ரங்கன். ஒரே ஒரு அடி தூரத்தில் இருநது கதவு. சக்தியெல்லாம் திரட்டிக் கொண்டு எழுந்து கையை நீட்டினான். இதயத்தில் சுரீரென்று வலித்தது. திடீரென்று சோர்வு ஆட் கொண்டது. கொஞ்ச நஞ்சம் ஒட்டிக் கொண்டிருந்த உயிர் உடலைவிட்டு வெளியேறியது. பெருத்த முனகல் சத்தம் ஃபாக்டரி சுவர்களுக்கிடையே ஆதரவில்லாமல் பிரதிபலித்தது. ரங்கனின் உடல் அப்படியே முன்னால் சரிந்தது.

விருந்தினர்கள் நீங்கிய பிறகு தோட்டத்திலும், உயிர் நீங்கிய பிறகு உடலிலும் நிசப்தம் எஞ்சி நின்றது.

கோல்ட் ஸ்டோரேஜில் சூழ்நிலை மெல்ல மெல்ல சூடு ஏறத் தொடங்கியது. ஐஸ் உருகி சொட்டு சொட்டாக நீர் கீழே விழுந்து கொண்டிருந்தது.



இறால்கள் கொஞ்சம் கொஞ்சமாக கறுக்கத் தொடங்கின.

* * *

ஜோராக மழை பெய்து கொண்டிருந்தது. கண்ணாடி வழியாக வெளியே பார்த்தபடி உட்கார்ந்திருந்தான் சைதன்யா. அவனுக்கு மழை என்றால் அலர்ஜி. மனதில் ஏதோ ஒரு மூலையில் பயமும் கூட.

காலை முதல் இடைவிடாமல் மழை பெய்து கொண்டிருந்தது. நேற்று மட்டும் இவ்வாறு நிகழ்ந்திருந் தால் பார்ட்டி முழுவதும் பாழாகிவிட்டிருக்கும் என்று நினைத்துக் கொண்டான்.

அவன் மனதில் திருப்தி பரவியிருந்தது. ரொம்ப ரிலீஃபாகவும் இருந்தது. காண்ட்ராக்ட் முடியப் போவதற் காக இல்லை. நேற்று ஏற்பாடுகள் எல்லாம் நன்றாக நடந்ததற்காகவும் இல்லை. கிரண்மயிக்கும் ரவிக்கும் இடையில் ஏற்பட்டிருந்த பந்தத்தைப் பற்றி நேற்று நடந்த பார்ட்டியில் அவன் நன்றாகப் புரிந்துகொண்டான். சாரதாவையும், கிரண்மயியையும் அழைத்துக் கொண்டு வந்துவிட்டானே தவிர அவர்களுடைய எதிர்காலத்தைப் பற்றி அவனுக்கு மலைப்பாகத்தான் இருந்தது. அது இவ்வளவு சுலபமாக தீர்ந்து, உறவாக மாறிவிடும் என்று அவன் நினைக்கவில்லை.

ரவிக்கும் கூட பரீட்சைகள் முடிந்து விட்டன. கண்டிப்பாக அவன் பாசாகி விடுவான். பிசிநெஸ் விஷயத் தில் பாதிப் பொறுப்பை அவன் ஏற்றுக் கொண்டு விட்டால் அதை விட தனக்கு வேறு என்ன வேண்டும்?

அவன் மகிழ்ச்சிக்கு இன்னொரு காரணமும் இருந்தது. நான்கு நாட்களுக்கு முன்னால் வந்து விட்டுப் போன தீபக் கூட திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்து விட்டுப் போயிருந்தான். இரண்டு திருமணங்களையும் ஒரே சமயத்தில் முடித்துவிடலாம்.

சைதன்யா யோசனையில் மூழ்கியிருந்த போது காந்திமதி வந்து விசாகப்பட்டிணத்திலிருந்து டிரங்கால் வந்திருப்பதாக சொன்னாள்.

"என்ன விசேஷம்?" ஃபோனில் கேட்டான் சைதன்யா.

பத்து நாட்களாக ஷ்ரிம்ஸ்களின் ஜாடையே இல்லை என்றும், மீனவர்கள் வெறும் கையோடு திரும்பி வருவதாகவும் மறுமுனையிலிருந்து பதில் வந்தது.

"நெவர் மைண்ட்! வேனை எடுத்துக் கொண்டு பாண்டிச்சேரிக்கு போங்க. அங்கே நிலைமையை பார்த்து விட்டு நேராக இங்கே வந்து விடுங்கள்."

வியாபாரியாக இருந்த சைதன்யாவுக்கு அந்தச் செய்தி மகிழ்ச்சியைத் தந்தது. அதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னால்தான் அவன் ஜப்பானிலிருந்து வந்த பிரதிநிதியுடன் தேக்கடிக்குப் போயிருந்த போது தெரிந்தது, கொச்சின் எல்லையைச் சேர்ந்த கடற்கரையில் வலையை வீசினால் போதும் ஆயிரக்கணக்கில் இறால்கள் கிடைப்பதாக.

இந்த அடியில் நடுத்தர வியாபாரிகள் பலர் நஷ்டமடைவார்கள். கடலில் உட்புறமாக இருக்கும் ஜலப் பிரவாகத்தோடு சேர்ந்து இறால்கள் கூட ஒரு கடற்கரையிலிருந்து மற்றொரு கடற்கரைக்கு இடம் மாறிக் கொண்டே இருக்கும், காலப் பிரவாகத்தில் மனிதர் களைப்போல்.



முதல் முதலாக வந்த மீனவனின் சரக்கைக் கவனித்து, வரப் போகும் மற்றவர்களுடைய சரக்கின் தரத்தை நிர்ணயிக்கத் தெரிந்தவன்தான் இந்த வியாபாரத்தில் முன்னுக்கு வருவான்.

சைதன்யா இன்னொரு ஃபோன் செய்து, எடுத்துக் கொள்ள வேண்டிய ஜாக்கிரதைகளை மேனேஜருக்கு எடுத்துச் சொன்னான். வெளியே காரிடாரில் டேபிள் டென்னிஸ் பந்தின் சத்தம் லயம் தப்பாமல் கேட்டுக் கொண்டிருந்தது. மழை நின்று விட்டது.

காந்திமதி தேநீர் கொண்டு வந்து தந்தாள்.

தேநீரை குடித்துவிட்டு உடைகளை மாற்றிக்கொண்டு சைதன்யா கிளம்ப முற்பட்ட போது "எங்கே?" என்று கேட்டாள்.

"ஃபாக்டரிக்குப் போய் வருகிறேன்."

"இந்த இரவு வேளையில் இப்போ எதுக்கு? நாளை காலையில் போகலாமே?"

சைதன்யா மறுப்பது போல் தலையை அசைத்து விட்டு "ஃபாக்டரியில் ஆட்கள் எல்லோரும் வேலை செய்து கொண்டிருக்கும் போது முதலாளி கொஞ்சம் கண்ணசைந்தாலும் பரவாயில்லை. வியாபாரத்தை சுயமாக பார்த்துக் கொள்ள முடியாதவன் முதலாளியாக இருக்க லாயக்கு இல்லை" என்று சொல்லிவிட்டு காரேஜை நோக்கி நடந்தான்.

மழையில் நனைந்த மண்சாலையிலிருந்து ஒரு விதமான வாசனை வந்து கொண்டிருந்தது. ஃபாக்டரியின் உயரமான சுவர்கள் இருட்டில் மங்கலாக தென்பட்டன.

தொலைவில் கடலின் பேரிரைச்சல் கேட்டுக் கொண்டிருந்தது. எங்கிருந்தோ சுவற்றுக் கோழிகளின் சத்தம் விட்டு விட்டுக் கேட்டுக் கொண்டிருந்தது.

மெயின் கேட் திறந்தே இருந்தது. கார் உள்ளே போய் நின்றது. இறங்கி கதவைச் சாத்தினான் சைதன்யா. ஆந்தை ஒன்று விகாரமாக கத்திக் கொண்டே தலைக்கு மேலே பறந்து சென்றது. தொடர்ந்து எங்கும் நிசப்தம்.

சுற்றிலும் பார்வையிட்டான். பாழடைந்து பல வருடங்களாக மூலையில் கிடந்த வேன் ஒன்று தொலை வில் காம்பவுண்டுச் சுவருக்குப் பக்கத்தில் இருந்தது. ஜன்னலுக்கு பக்கத்தில் இருந்த மல்லிகைக் கொடி மழைக்கு கீழே சரிந்து விழுந்திருந்தது. எதிரி நாட்டு அரசனின் தாக்குதலுக்குப் பழைய வைபவம் எல்லாம் இழந்து, சிதிலமடைந்து நிற்கும் கோட்டையைப் போல் இருந்தது அந்த ஃபாக்டரி. இரண்டு ஜேபியிலும் கைகளை நுழைத்துக் கொண்டு சைதன்யா படிகளில் ஏறினான்.

அந்தச் சத்தத்திற்கு தவம் கலைந்து போன ரிஷியைப் போல், மேல் படியிலிருந்து தவளை ஒன்று கீழே குதித்தது.

விசாலமான அறையில் ட்ரேக்கள் வரிசையாக இருந்தன. அந்தப் பெரிய பெரிய ட்ரேக்களுக்கு நடுவே இருந்த சந்து வழியாக அவன் நடந்தான். அந்த நிசப்தமும், அந்தச் சூழ்நிலையும் ஏதோ தீங்கு நடந்திருப்பதை அவன் ஆறாவது அறிவுக்கு எடுத்துச் சொல்லியது.



ட்ரேக்களைத் தாண்டி வந்து முனை திரும்பிய சைதன்யா திடீரென்று சிலையாக நின்று விட்டான். சிறிய கத்தல் தொண்டைக் குழியிலேயே நின்று விட்டது.

கோல்ட் ஸ்டோரேஜ் அறைக்குக் குறுக்காக, கதவிற் குப் பாதி அந்தப் பக்கமாகவும் பாதி இந்தப் பக்கமாகவும் விழுந்து கிடந்தான் ரங்கன்.

அந்த அதிர்ச்சியிலிருந்து தேறிக்கொள்ள அரை நிமிடம் பிடித்தது. ஒரே எட்டில் அருகில் சென்று அவன் மீது கையை வைத்துப் பார்த்தான். உயிர் போய் வெகு நேரமாகிவிட்டாற் போல் உடல் சில்லென்று இருந்தது. சட்டென்று கையைப் பின்னால் இழுத்துக் கொண்டான்.

சைதன்யாவின் மனம் பந்தம் இன்று நேற்றையது இல்லை. எல்லாமே தன்னுடைய பொறுப்பு என்பது போல் ஒவ்வொரு காரியத்தையும் சுயமாக பார்த்துக் கொள்வான். கடைசியில் வேலை பார்த்துக் கொண்டே தான் உயிரையும் விட்டான்.

மரணம் என்பது எவ்வளவு விசித்திரமானது. சைதன்யா சலனமற்று கிடந்த அவ்வுடலையே பார்த்தான். அவனிடமும் சலனமில்லை. மூளையில் ஏதோ தெளிவற்ற எண்ணங்கள். மனம் மட்டும் மரத்துப் போயிருந்தது.

மெதுவாகக் குனிந்து அவன் தலையை தூக்கிக் கொண்டான். இன்னொரு கையை காலடியில் கொடுத்து விட்டு தூக்கிச் சென்று சரியாகப் படுக்க வைத்தான். ஃபோனை நெருங்கி ஆபீசுக்கு ஃபோன் செய்தான். பிறகு இன்னும் இரண்டு மூன்று பேருக்கு ஃபோன் செய்து விட்டு மறுபடியும் திரும்பி வந்தான்.

நிசப்தம் மந்தமாக சூழ்ந்து கொண்டிருந்தது. ஃபாக்டரி சுவர்கள் வெல வெலத்துப் போனாற்போல் காட்சி அளித்தன. கோலட் ஸ்டோரேஜ் கதவைச் சாத்தப் போகும் முன் உள்ளே எட்டிப் பார்த்தவன் திடீரென்று லட்சம் வோல்ட் மின்சாரம் தாக்கினாற் போல் அப்படியே நின்று விட்டான். ஐஸ் முழுவதும் கரைந்து போய் விட்டிருந்தது. இறால்கள் எல்லாம் முற்றிலும் கறுத்துப் போயிருந்தன. மேல் அறைகளிலிருந்து நீர் ஒவ்வொரு சொட்டாக கீழே சொட்டிக் கொண்டிருந்தது. தான் பார்த்துக் கொண்டிருந்தது கனவா நினைவா என்று அவனுக்குப் புரியவில்லை.

ஓரடி முன்னோக்கி வைத்தான். தாங்க முடியாத துர் நாற்றம் மூக்கைத் துளைத்தது. சுற்றிலும் பார்த்தான். நாலா பக்கமும் பாக்கெட்டுகள் அவனை பழித்தாற்போல் இருந்தன. மொத்தம் பதினைந்து லட்சம் விலை மதிப் புள்ள பாக்கெட்டுகள். இப்பொழுது விற்றால் பிளாஸ்டிக் கவர்களின் விலை கூட தேறாத பாக்கெட்டுகள்.

சைதன்யா ரேக்குகளை நோக்கி நடந்தான். மாதிரிக்கு ஒரு பாக்கெட்டை எடுத்துப் பரிசோதித்தான். ஊஹூம்... ஒன்று கூட பயன்படாது.

பாழடைந் தசரக்கைப் பற்றி யோசிக்கவில்லை அவன். ஒரு பெரிய கம்பெனிக்குக் குறிப்பிட்ட நேரத்திற்கு சரக்கை சப்ளை செய்ய முடியவில்லையே என்ற வருத்தம். அவ்வளவுதான்.

மெதுவாக வெளியே வந்தான். கதவைச் சாத்தவில்லை. சாத்தவேண்டிய அவசியமும் இல்லை. காலியான ட்ரேக் களைத் தாண்டிக் கொண்டு அவன் வெளியே வந்தான். அவனுடைய தனிமையை இரக்கத்தோடு பகிர்ந்து கொள்வது போல் இயற்கை மௌனமாக இருந்தது.



விசாலமான காம்பவுண்டில் அவனுடைய காரைத் தவிர வேறு எதுவுமே இல்லை. கார் கண்ணாடி விழியாக "டாக்ஸ் டோக்கன்" தென்பட்டுக் கொண்டிருந்தது.

அதைப் பார்த்ததுமே அவன் மூளையில் ஏதோ பளிச்சிட்டாற்போல் இருந்தது. திடீரென்று அவன் முகத்தில் மாறுதல் ஏற்பட்டது. சிறிய சந்தேகம் நிமிடத்தில் பெரும் தீயாக மாறிவிட்டது.

ஒரே பாய்ச்சலில் காரில் ஏறி உட்கார்ந்து கொண்டு இன்ஜினை ஆன் செய்து ரிவர்ஸ் எடுத்தான். அவன் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. தாடை எலும்புகள் இறுகிக் கொண்டன. ஸ்டீரிங்கைப் பிடித்துக் கொண்டிருந்த கைகள் வியர்வையால் நனைந்துவிட்டன.

வில்லிலிருந்து விடுப்பட்ட அம்பு போல் கார் வேக மாக பறந்து கொண்டிருந்தது. அவனுக்கு எதுவுமே தென் படவில்லை. ஒரே யோசனைதான். ஒரே சந்தேகம்தான். திருப்பங்களில் கூட வேகத்தைக் குறைக்காமல் காரை ஓட்டிக் கொண்டிருந்தான்.

கேட்டைத் தாண்டி துப்பாக்கிக் குண்டைப் போல் கார் பாய்ந்து சென்றது. க்ரீச் என்ற சந்தத்துடன் பிரேக்கு கள் விழுந்தன. கதவை வேகமாக திறந்து கொண்டு வெளியே குதித்தான். விடுவிடென்று ஆபீஸ் அறையை நோக்கி நடந் தான். நெற்றியில் வியர்வை ஆறாக வழிந்து கொண்டி

ருந்தது. மேஜை மீது இருந்த காகிதங்களை எல்லாம் கலைத்துக் கொண்டே அவசர அவசரமாகத் தேடினான்.

தேவையான காகிதம் கிடைத்துவிட்டது. பதற்றத்துடன் அதைப் பிரித்துப் பார்த்தான். இரத்தம் முழுவதும் வற்றிவிட்டாற்போல் அவன் முகம் வெளிறிவிட்டது.

அவன் தன் ஸ்டாக்கின் மீது செய்திருந்த இன்ஸ்யூரென்சின் கடைசி தேதி முடிவடைந்து ஒரு வாரமாகி விட்டது.

கதவைச் சாத்தி வைப்பதற்கும், திறந்து வைப்பதற்கும் உள்ள வித்தியாசம் பதினைந்து லட்ச ரூபாய்கள்.

* * *

திடீரென்று புயலாக சீறிக் கொண்டு வந்து நின்ற காரையும், அதிலிருந்து இறங்கி ஆபீஸ் அறைக்கு ஓடின சைதன்யாவையும் பார்த்துவிட்டு "ஏன்தான் காரை அவ்வளவு வேகமாக ஓட்டனுமோ?" என்றாள் காந்திமதி.

பக்கத்தில் இருந்த கௌசல்யா பதில் பேசவில்லை. இருவரும் பால்கனியில் நின்று கொண்டிருந்தார்கள். காந்திமதி மேலும் ஏதோ சொல்வதற்குள் சைதன்யா வெளியே வருவது தென்பட்டது. போன போது இருந்ததற்கும், இப்பொழுது திரும்பி வந்ததற்கும் அவனிடம் ரொம்ப வித்தியாசம் தெரிந்தது. திடீரென்று பத்து வயது கூடி விட்டாற்போல் தோற்றமளித்தான். ஏதோ கனவில் நடப்பது போல் நடந்து வந்து காரில் உட்கார்ந்து கொண்டான். கார் புறப்பட்டது.



"இதென்ன? வீட்டிற்குள் வராமல் திரும்பிப் போகிறாரே?" தனக்குள் முணுமுணுத்துக் கொண்டாள் காந்திமதி.

புயல் வந்துவிட்டுப் போன பின் ஏற்பட்ட அமைதி. அமைதியில் எதுவுமே எஞ்சியிருக்கவில்லை.

ஒவ்வொரு அலையாக வந்து கரையைத் தாக்கிவிட்டு பின்னால் போய்க் கொண்டிருந்தது. கரையில் உட்கார்ந்திருந்தான் சைதன்யா. இரவு மணி ஒன்று.

மேகங்கள் விலகியதால் நிலவின் வெளிச்சம் கடல் தண்ணீரில் பிரதிபலித்துக் கொண்டிருந்தது. தொலைவிலிருந்து ஊதக் காற்றின் சத்தம் சங்கு ஊதுவது போல் கேட்டுக் கொண்டிருந்தது.

அவனுக்கு மணி என்னவென்று தெரியவில்லை. எவ்வளவு நேரமாக அவ்வாறு உட்கார்ந்திருந்தான் என்று கூடத் தெரியவில்லை. மனதின் கொந்தளிப்புக்கும் கடல் அலைகளின் கொந்தளிப்புக்கும் வித்தியாசம் இருக்கவில்லை. அலைகள் அவன் கால்களை தொட்டுவிட்டு சென்று கொண்டிருந்தன.

எதிரே விசாலமான கடல். சுற்றிலும் மணல்.. நடுவில் அவன். வேதாந்தம் அவன் மனதில் படியத் தொடங்கியது.

## 7

ஏதோ சத்தம் கேட்டுக் கண்களைத் திறந்து பார்த்தாள் காந்திமதி. சைதன்யா உள்ளே வந்தான்.

அவன் கண்கள் சிவந்திருந்தன. கேசங்கள் நெற்றியில் வந்து புரண்டு கொண்டிருந்தன. முகம் வாடி, பத்து நாட்கள் பட்டினி கிடந்தாற்போல் தென்பட்டன.

காந்திமதி கலவரத்தோடு கட்டிலை விட்டு எழுந்து கொண்டே "என்ன ஆச்சுங்க?" என்று கேட்டாள், கணவனின் கையைப்பிடித்துக் கொண்டு.

சைதன்யா பதில் பேசவில்லை.

அறையிலிருந்த இருட்டை விடிவிளக்கின் வெளிச்சம் விரட்டியடிக்க முயன்று கொண்டிருந்தது கடியாரம் இரண்டு மணியைக் காண்பித்தது.

காந்திமதி கூஜாவிலிருந்து தண்ணீரை டம்ளரில் ஊற்றி அவனிடம் தந்தாள். அவன் அதை வாங்கிக் கொள்ளவில்லை. ஒரே ஒரு வார்த்தையைச் சொன்னான்.

"நாம் இங்கிருந்து போய் விடணும்."

அவளுக்குப் புரியவில்லை. "எங்கே போகணும்?"

அவன் தலையை அசைத்துவிட்டு "ஊஹூம். எனக்குத் தெரியாது" என்றான்.

அவள் அவனை குழப்பத்தோடு பார்த்தாள். மாலை நேரத்தில் வெளியே போன கணவன் நள்ளிரவு தாண்டிய பிறகு வந்து, எங்கே போக வேண்டும் என்று சொல் கிறானோ அவளுக்குப் புரியவில்லை. பேச்சை மாற்ற விரும்பி "படுத்துக் கொஞ்ச நேரம் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்" என்றாள் பரிவோடு.



"ஓய்வு!" ஜீவனற்ற புன்னகை வெளி வந்தது அவன் உதட்டிலிருந்து. "இனி எல்லாமே ஓய்வுதான் காந்திமதி! அதனால்தான் போய்விடலாம் என்றேன்."

இந்த முறை எங்கே என்று அவள் கேட்கவில்லை.

கணவன் ஏதோ மனக் குழப்பத்தில் இருக்கிறான் என்று ஊகித்துக்கொண்டு "சரிதான். அப்படியே போய் விடலாம், நாளைக் காலையில்" என்றாள்.

"நாளைக் காலையில்!" மறுபடியும் சிரித்தான். "நாளைக் காலையில் நாம்ப எழுந்ததுமே தென்படப் போகும் காட்சி என்ன தெரியுமா காந்திமதி?" அவன் குரலில் ஆவேசம் தெரிந்தது. "மெயின் ஹாலில் சில கடன் காரர்கள் உட்கார்ந்திருப்பார்கள். அவர்கள் முகங்கள் எல்லாம் ஏன் தான் கடன் கொடுத்தோமோ என்று வாடி யிருக்கும். மேலும் சிலர் வாய்விட்டு திட்டிக் கொண்டும் இருப்பார்கள். வீட்டை விற்றால் எவ்வளவு கிடைக்கும் என்று சிலர் எடை போட தொடங்கி விடுவார்கள். நாம் நாளை வரையில் இருந்தால் பார்க்கப் போகும் காட்சி இதுதான்."

அவள் சட்டென்று அருகில் வந்து "என்னங்க? என்ன நடந்தது?" என்றாள் கலவரமடைந்து.

அவன் ஒரு வினாடி வரையில் பேசவில்லை. ஜன்னல் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு ரொம்ப நேரம் அப்படியே நின்றிருந்தான். அவன் குரல் மந்தரஸ்தாயில் கேட்கத் தொடங்கியது.

"ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையிலும் சில பலவீன மான தருணங்கள் இருக்கும் காந்திமதி! அது போன்ற பலவீனமான நேரத்தில் நான் கொஞ்சம் அலட்சியமாக இருந்துவிட்டேன். அந்த சில வினாடி நேர அலட்சியத் திற்கு நான் கட்ட வேண்டிய தொகை எவ்வளவு தெரியுமா? பதினைந்து லட்சங்கள்!"

ஒரு வினாடி நிறுத்திவிட்டு மீண்டும் தொடர்ந்தான். "இன்னும் ஒரு பத்து வருடங்கள் கழித்து இந்த சம்பவம் நடந்திருந்தால் என்னால் சமாளித்துக் கொண்டிருக்க முடியுமோ என்னவோ. ஆனால் இப்பொழுது மட்டும் லாபம் இல்லை. எல்லா சொத்துக்களையும் விற்றாலும் ஆறேழு லட்சங்களுக்கு மேல் தேறாது. என்ன செய்வது காந்திமதி! எல்லோருக்கும் என் முகத்தை எப்படிக் காட்டுவேன்?" திரும்பினான். அவன் முகத்தில் ஏதோ அமைதி தென்பட்டது. ஒரு முடிவுக்கு வந்துவிட்ட நிம்மதி. எதுவும் பாக்கியில்லை என்று தெரிந்த பிறகு ஏற்படும் நிம்மதி.

"அதனால்தான் போய் விடலாம் என்கிறேன். பூக்கடை வைத்த இடத்தில் விறகுக் கடையை வைக்க முடியாது காந்திமதி! இன்ஸால்வென்ஸி வைத்தாலாவது கொஞ்சம் பணம் மிச்சமாகலாம் நமக்கு. ஆனால் என்னை நம்பி எனக்குப் பணம் கொடுத்தவர்களுக்கு என்னால் துரோகம் செய்ய முடியாது. என்னுடைய கடைசி ரூபாயைக் கூட அவர்களே எடுத்துக் கொள்ளட்டும். என்னுடைய துரதிர்ஷ்டத்திற்கு அவர்கள் ஏன் நஷ்டப் படணும்? இந்தச் செய்தி காட்டுத் தீயாக பரவுவதற்கு முன்னா லேயே நாம் இங்கிருந்து போய் விடணும். புறப்படு."



89978

அவளுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக ஏதோ புரிந்தது. ஆனால் அது கூட தெளிவாக இல்லாததால் "என்னதான் நடந்தது?" என்று கேட்டாள்.

அவன் நடந்ததை எல்லாம் சொன்னான். ரங்கனின் மரணத்தைப் பற்றி அவளுக்கு முதல் நாள் இரவே தெரிந்து விட்டது. ஆனால் அந்த மரணம் தன் வாழ்க்கையின் போக்கையே மாற்றிவிடும் என்று ஊகித்திருக்கவில்லை. முற்றிலும் புரிந்த பிறகு அவளுக்குக் கைகால்கள் ஓட வில்லை. தான் கேட்டதெல்லாம் கனவா நினைவா என்ற பிரமையில் ஆழ்ந்துவிட்டாள்.

அவள் தேறிக்கொண்டு திரும்பிப் பார்த்த போது சைதன்யா மதுவைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டிருந்தான். அவள் சட்டென்று அவன் கையைப் பிடித்துக் கொண்டாள். "இந்த நள்ளிரவு வேளையிலா?" என்றாள்.

"நாளைக்குக் காலையில் என்றாலும் இது போல் கட்டிய உடைகளோடு போக வேண்டியவர்கள்தானே காந்திமதி!

அவள் துக்கம் கட்டு மீறிவிட்டது. இந்த நள்ளிரவு வேளையில், அவள் உறக்கத்தை கெடுத்துவிட்ட இவ்வளவு கசப்பான உண்மையை அவளால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. வெயில் முகத்தையே பார்த்திராத குழந்தை! கஷ்டம் என்றால் என்னவென்றே தெரியாத தான்! நாலு பேரை உத்தரவிட்டு வேலை வாங்கக் கூடிய கணவன்! எங்கே போவது? இந்த நள்ளிரவில் யாருடைய ஆதரவை நம்பி வெளியில் காலடி எடுத்து வைப்பது?

அவனைத் தடுத்துக் கொண்டே "என்ன வேண்டு மானாலும் ஆகட்டும். இங்கேயே இருந்துவிடலாங்க" என்றாள்.

சைதன்யா மனைவியை உற்றுப் பார்த்தான். அவன் கண்களில் ஏதோ வினோதமான உணர்வு அரை வினாடி நேரம் லேசாக நிழலாடியது. "நீ... நீ என் வார்த்தையை எதிர்த்துப் பேசுவது இதுதனே முதல் தடவை?" என்றான்.

அவள் அடி வாங்கியவள் போல் பார்த்துவிட்டு தலை குனிந்தபடி "ச்செ... ச்செ... இல்லைங்க. எதிர்த்துப் பேச வில்லை. உங்க விருப்பப்பட்டியே ஆகட்டும்" என்றாள். சொன்ன பிறகு உள்ளே போய் அரை நிமிடத்தில் திரும்பி வந்து "கிளம்பலாம்" என்றாள். அவன் அதற்குள் மதுவை தோளில் தூக்கிக்கொண்டிருந்தான். இருவரும் வெளியே வந்தார்கள்.

அவன் ஏதோ நினைவுக்கு வந்தவனாக நின்றான். கையில் கட்டியிருந்த ரிஸ்ட் வாட்சை எடுத்து மனைவி யிடம் தந்து "உள்ளே வைத்து விட்டு வா காந்திமதி! நமக்குக் கடன் கொடுத்தவனுக்கு ஒரு நூறு ரூபாய் அதிகம் கிடைத்தாலும் சந்தோஷம்தான்" என்றான். அவள் உள்ளே போய் வைத்து விட்டு வந்தாள்.

இருவரும் படியிறங்கினார்கள். டிராயிங்க ரூம் நிசப்தமாக இருந்தது. கதவு சத்தம் கேட்டுவிடாமல் நிசப்த மாக வெளியே வந்தார்கள். வழிக்கு இரு பக்கமும் இருந்த் பூஞ்செடிகள் இரக்கத்தோடு வழியனுப்பி வைப்பது போல் காற்றிற்கு அசைந்து கொண்டிருந்தன.



காந்திமதி புடவைத் தலைப்பால் வாயைப் பொத்திக் கொண்டு அழுகையை அடக்கியபடி கணவனைப் பின் தொடர்ந்து மௌனமாக நடந்தாள். சைதன்யாவின் தோளில் இருந்த மது, நடந்தது எதுவுமே தனக்கு சம்பந்தம் இல்லாதது போல் உறங்கிக் கொண்டிருந்தான்.

வானத்தில் மின்னல் மின்னிக் கொண்டிருந்தது. காற்றுக்கு இலைகள் அசைந்த போதெல்லாம் அசோக மரத்திலிருந்து தண்ணீர் துளிகள் கீழே விழுந்து சத்தத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தன. தொலைவில் தெரு விளக் கின் வெளிச்சத்தில் அந்தக் கட்டடத்தின் மீது படிந்த நீர்த் திரை, பெண் ஒருத்தியின் கன்னங்களின் மீது உலர்ந்து போன கண்ணீர்க் கறையைப் போல் இருந்தன.

தாம் வளர்த்த ரோஜாச் செடிகளையும், தானாக வளர்ந்த அரளிச் செடிகளையும் தாண்டினார்கள். தான் உருவாக்கிய பங்களாவை விட்டு விட்டு பர்ணசாலையை ஏற்படுத்திக் கொள்வதற்காக அவன் புறப்பட்டுக் கொண்டிருந்தான். இருமருங்கிலும் நடப்பட்டிருந்த சுண்ணாம்பு கற்கள், இறந்து போன ராணுவ வீரனுக்கு அணிவகுப்பு மரியாதை செலுத்தும் சிப்பாய்களைப் போல் இருந்தன.

நின்று கடைசி முறையாக தன் பங்களாவைப் பார்த்துக் கொண்டான். அடர்ந்த இருளில் சிதிலமடைந்த கோட்டையைப் போல் நிசப்தமாக காட்சி தந்தது. போர் களத்தில் ராஜ்ஜியத்தை இழந்து, தங்களை விட்டுப் பிரிந்து போய்க் கொண்டிருந்த அரசனைப் பார்த்து மக்கள் கண்ணீர் மல்க விடை கொடுப்பது போல் மரங்கள் அசைந்து கொண்டிருந்தன.

# 8

காலை ஆறரை மணி. சமையலறையில் காப்பிக்குத் தண்ணீர் கொதித்துக் கொண்டிருந்தது. மாடியில் எந்த சத்தமும் இல்லை. அதற்கு மேல் பொறுத்திருக்க முடியா மல் கௌசல்யா மாடிக்குப் போனாள்.

கதவுகள் திறந்து கிடந்தன. அந்தந்த சாமான்கள் அந்தந்த இடத்தில் இருந்தன. ஆனால் ஆள் நடமாட்டம் இருக்கவில்லை. பதற்றத்தோடு கீழே இறங்கி வந்து ரவியிடம் சொன்னாள்.

ரவி முதலில் நம்பவில்லை. ஆனால் சுயமாக பார்த்தப் பிறகு நம்பாமல் இருக்க முடியவில்லை. என்ன நடந்ததென்று புரியவில்லை.

அதற்குள் கூர்க்கா வந்து முதல் நாள் இரவு அவர்கள் வெளியே போன விஷயத்தைச் சொன்னான். இப்படி நள்ளிரவு வேளையில் யாரையும் எழுப்பாமல், யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் போகவேண்டிய காரணம்தான் என்ன? எங்கே போயிருப்பார்கள்?

அன்று காலையில்தான் ரங்கனின் இறுதிச் சடங்கு கள் நடக்கப் போகின்றன. அதற்குக் கூட அண்ணன் ஆஜராக மாட்டானா? அத்தனை கேள்விகளுக்கும் பதில் அரைமணிக்குப் பிறகு தெரிந்தது அவனுக்கு.

சுமார் பதினைந்து லட்சம் விலை மதிப்புள்ள ஸ்டாக் முற்றிலுமாக நாசமாகி விட்டது என்றும், லட்சாதிகாரி யான அண்ணன் நள்ளிரவு வேளையில் உடுத்திய ஆடை யுடன் வெளியேற வேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்ட தென்றும்.



நடுங்கிவிட்டான் அவன். எவ்வளவு கசப்பான உண்மையை வாழ்நாளில் என்றுமே அவன் சந்தித்ததில்லை. அண்ணனின் நிழலிலேயே வளர்ந்து பெரிய வனாகி யிருக்கிறான் இது வரை.

இப்பொழுது என்ன செய்வதென்று ரவிக்குப் புரிய வில்லை. சொத்தைப் பிடுங்கிக் கொண்டு போவதற்கு எல்லோரும் வந்து விடுவாங்கள் என்று தெரியும். என்ன வேண்டுமானாலும் ஆகட்டும் என்ற முடிவுக்கு வந்தான் அவன். அதற்குள் அண்ணனைத் தேட வேண்டும். சொத்து இல்லாவிட்டாலும் பரவாயில்லை. அண்ணனின் பக்க பலம் இருந்தாலே பெரிய தைரியம் என்றெண்ணினான். ஆனால் இருந்த இந்த ஒரே ஒரு ஆதாரத்தையும் விட்டு விட்டு எப்படிப்போவது? எங்கே போய்த் தங்குவது? எப்பொழுதோ நடக்கப் போவதை நினைத்து இப்பொழுது ஏன் பயப்பட வேண்டும்? அவ்வளவு தூரத்திற்கு வந்தால் அப்பொழுது பார்த்துக் கொள்ளலாம் என்று நினைத்துக் கொண்டான்.

ரவி எடுத்துக் கொண்ட இந்த முடிவு வெகு சீக்கிரத்தி லேயே நல்ல பலனைக் கொடுத்தது.

* * *

இருளில் ரயில் வேகமாக போய்க் கொண்டிருந்தது. கம்பார்ட்மெண்டில் எள் விழ இடமில்லாமல் கூட்டம் நிரம்பி வழிந்தது. டாயிலெட்டிற்கு பக்கத்தில் இருந்த நடை பாதையில் ஒரு மூலையில் சற்று ஒதுங்கி உட்கார்ந்து கொண்டான் சைதன்யா. அவன் மடியில் மதூ உறங்கிக் கொண்டிருந்தான். காந்திமதி அவன் தோளில் சாய்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள்.

அவனுக்கு உறக்கம் வரவில்லை. உடலைக் குறுக்கிக் கொண்டு உட்கார்ந்ததில் முழங்கால் வலியெடுத்தது. அவனுக்குச் சற்று தொலைவில் குடியானவன் ஒருத்தன் உட்கார்ந்து சுருட்டு புகைத்துக் கொண்டிருந்தான். அந்தப் புகை நாற்றம் அவனுக்கு வயிற்றை குமட்டிக் கொண்டிருந்தது. இன்னொரு பக்கத்தில் காய்கறி விற்பவள் ஒரு கூடையை பரப்பிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

கம்பார்ட்மெண்ட்லிருந்து உள்ளேயோ வெளியேயோ போவதற்கு வழியில்லை. சீட்டில் உட்கார்ந்திருந்தவர்கள் தூங்கி வழிந்து கொண்டிருந்தார்கள். ரயில் மட்டும் வேகமாக போய்க் கொண்டே இருந்தது.

தொலைவில் சந்தடி கேட்டதும் திரும்பிப் பார்த்தான் சைதன்யா. டிக்கெட் கலெக்டர் செக்கிங் செய்து கொண்டே வந்துகொண்டிருந்தார்.

"டிக்கெட் ப்ளீஸ்!"

சைதன்யா தன் இயல்பான குரலில் "இல்லை" என்றான். அந்தக் குரலில் தென்பட்ட அதிகாரத்திற்கு டிக்கெட் கலெக்டருக்குக் கோபம் பற்றிக் கொண்டு வந்தது.

அவன் தோளை அழுத்திப் பிடித்து "எவ்வளவு திமிராக சொல்கிறாய் டிக்கெட் இல்லைன்னு? கேட்கிறவன் உன் வேலைக்காரன்னு நினைச்சுக்கிட்டாயோ?" என்று வேகமாக அள்ளினார். சைதன்யாவின் தலை கதவில் போய் மோதிக் கொண்டது. ஆத்திரத்துடன் "யூ பாஸ்டர்ட்!" என்று கத்தப் போனான். ஆனால் அந்த வார்த்தைகள் வெளியே வருவதற்குள் "திருட்டுப் பசங்க



எல்லோரும் டிக்கெட் வாங்காமல் ஏறுவதால் தான் எங்களைப் போன்றவங்களுக்கு உட்காருவதற்குக் கூட இடம் கிடைக்காமல் போகுது" என்றாள் காய்கறிக்காரி.

அவமானத்தால் சைதன்யா குன்றிப் போய் விட்டான். யாருக்குமே அப்படிப்பட்ட அபிப்பிராயம் ஏற்படுவது சகஜம்தான். கூட்டத்தில் ஏறியதால் அவன் உடைகள் கிழிந்துவிட்டன. தாடி வளர்ந்திருந்தது. ரயில் கரிக்கு சட்டை கருப்பாக மாறி விகாரமாக இருந்தது. தூக்கமின்மையால் கண்கள் சிவந்திருந்தன.

"பக்கத்து ஸ்டேஷனில் இறங்கிவிடணும். தெரிந்ததா?" என்று சொல்லிவிட்டு டிக்கெட் கலெக்டர் முன்னுக்கு போய் விட்டார். முகத்தில் எந்த உணர்ச்சியும் இல்லாமல் சைதன்யா உட்கார்ந்திருந்தான்.

அவனுக்கு இது முதல் அடி. அந்தஸ்து மாறிய விஷயம் அவனுக்கு முதல் அனுபவம் கற்றுத் தந்தது. பழைய பழக்க வழக்கங்களை இனி மறந்து போய் விட வேண்டும்.

அவன் அந்த யோசனையில் ஆழ்ந்திருக்கும் போதே காந்திமதி "என்னங்க?" என்றாள். அவன் திடுக்கிட்டு மனைவியைப் பார்த்தான். அவள் உறக்கத்திலிருந்து விழித்துக் கொண்டு ரொம்ப நேரமாயிருக்கும் போல் இருந்தது.

அவள் தன்னுடன் கொண்டு வந்த சிறிய துணிப் பையிற்காக தேடிக் கொண்டே "ஐயோ!" என்றாள்.

"என்ன ஆச்சு?" என்று கேட்டான்.

தொய்ந்து போன தன் முகத்தை அவன் பாராமல் இருப்பதற்காக தலை குனிந்து கொண்டு "கொஞ்சம் பண

மும், சில நகைகளும் கொண்டு வந்தேன். கூட்டத்தில் துணிப்பை எங்கேயோ விழுந்து விட்டது போலிருக்கு" என்றாள்.

அவள் சொல்லிக் கொண்டிருந்த போது சைதன்யா பின்னால் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டிருந்தான். இதைக் கேட்டு அவன் முகத்தில் எந்த உணர்ச்சியும் தென் படவில்லை. மூடிய கண்களைத் திறக்காமலேயே "நமக்கு எதுவுமே தரிக்காதுன்னு நான்கு மணி நேரத்திற்கு முன்பே தெரிந்திருந்தும் இன்னும் எதற்காகவோ ஏன் போராடிக் கொண்டிருக்கிறாய் காந்திமதி!" என்றான் பற்றற்ற குரலில்.

"அப்படிப் பேசாதீங்க" என்றாள் அவள் கம்பிய குரலில்.

"இதில் தவறென்ன இருக்கு காந்திமதி! இந்த ஜென்மத்தில் கடன் பட்டவர்களுக்காக நான் கொஞ்சம் இழந்தால், போன ஜென்மத்தில் கடன் பட்டவர்களுக்காக நீ கொஞ்சம் இழந்துவிட்டாய். அவ்வளவுதானே" என்றான்.

ரயில் பெரிதாக கூவிக்கொண்டே நின்றது. ஏதோ சிறிய ஸ்டேஷன்.

சைதன்யா மதுரவை தோளில் சார்த்திக் கொண்டு "வா காந்திமதி! இறங்கிவிடுவோம்" என்றான். ஊர் பெயர் தெரியாத அந்தச் சிறிய பட்டிக்காட்டில் இறங்குவது அவளுக்குப் பிடிக்கவில்லை. ஒரு வினாடி தயங்கினாள்.

பக்கத்திலிருந்த குடியானவன் அதை வேறு விதமாகப் புரிந்து கொண்டு சைதன்யாவிடம் "டிக்கெட் கலெக்டர் அப்படித்தான் சொல்லுவார். அதைப் பிடித்துக் கொண்டு இறங்கி போக வேண்டியதில்லை. இறங்க வேண்டிய ஊர் வரும் வரையில் உட்கார்ந்திருங்க. பரவாயில்லை" என்றான்.



"இறங்க வேண்டிய ஊர் எதுன்னு தீர்மானிக்க வேண்டியது நாம்ப இல்லை." இறங்கிக் கொண்டே சொன்னான் சைதன்யா. காந்திமதியும் இறங்க வேண்டிய தாயிற்று.

ரயில் மெதுவாக நகர்ந்து இருளில் கண் மறைவாகி விட்டது. பிளாட்ஃபாரம் முழுவதும் ஆளரவமில்லாமல் இருந்தது.

சுற்றும் முற்றும் பார்த்தான். சிறிய விளக்கு மினுக் மினுக்கென்று எரிந்து கொண்டிருந்தது. ஸ்டேஷன் மாஸ்டர் விளக்கைப் பிடித்துக் கொண்டு போய்க் கொண்டிருந்தார்.

தொலைவில் ஏதோ பறவை விகாரமாக கத்தக் கொண்டிருந்தது. ஸ்டேஷனுக்கு வெளியே பெரிய பெரிய மரங்கள் தலையை விரித்துக் கொண்டு ஆடும் பேயைப் போல் காட்சி அளித்தன. சைதன்யா ஸ்டேஷன் மாஸ்டரின் அறையை நோக்கி நடந்தான். அறைக் கதவு சாத்தியிருந்தது. உள்ளேயிருந்து குறட்டைச் சத்தம் கேட்டது.

சைதன்யா திரும்பி மனைவியிடம் வந்தான். இருவரும் ஸ்டேஷனிலிருந்து வெளியே வநதார்கள்.

லேசாக மழை தூறிக் கொண்டிருந்தது. உண்மையில் அது ஊர் இல்லை. ரயில் மலை குகை வழியாக போக

வேண்டியிருந்ததால், அந்த இடத்தில் ஒரு நிறுத்தத்தை வைத்திருந்தார்கள். அவ்விடமெல்லாம் சிறிய காடு. வரிசை யாக மலைகள். அந்த இடத்திலிருந்து நான்கு மைல் தொலைவில் சிறிய பட்டிக்காடு இருந்தது.

மழைக்கு தரை முழுவதும் சேறாக இருந்தது. ஸ்டேஷக்கு வெளியே பத்தடி தூரத்திலிருந்தே அடர்ந்த மரங்கள் வரிசையாக இருந்தன. நீர்க் குட்டைகளில் தவளை சத்தத்துடன் சுவற்றுக் கோழிகளின் சத்தமும் சேர்ந்து கொண்டு உடலை சிலிர்க்கச் செய்தது.

சைதன்யா சுற்றும் முற்றும் பார்த்தான். இயற்கை மனிதனை சவால் செய்வது போல் இருந்தது. மரங்களுக்கு இடையே ஒற்றையடி பாதை கூட இருக்கவில்லை. அந்தச் சமயத்தில் வெளியே அடியெடுத்து வைப்பது நல்லது இல்லை என்று நினைத்தான்.

ஸ்டேஷன் மாஸ்டரின் அறைக்குப் பக்கத்திலேயே தகர கொட்டகை அடியில் உட்கார இடம் கிடைத்தது. மனைவியின் கையிலிருந்து மகனை வாங்கிக் கொண்டு "நீ கொஞ்சம் நேரம் படுத்துக் கொள் காந்திமதி!" என்றான்.

காந்திமதி கைப் பையிலிருந்து புடவையை எடுத்து கீழே விரித்தாள். படுத்த அடுத்த நிமிடமே ஆழ்ந்த உறக்கம் அவளை ஆட்கொண்டுவிட்டது.

மதுரவின் உடல் கொஞ்சம் கதகதப்பாக இருப்பது போல் அவனுக்குத் தோன்றியது. வெளியே வீசிய குளிர்ந்த காற்றினால் அவ்வாறு இருப்பதாக மனதைச் சமாதானப் படுத்திக் கொண்டான்.



நேரம் மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தது. மழை விட்டு விட்டு பெய்து கொண்டிருந்தது. அவனுக்கு தூக்கம் வரவில்லை. சுவரில் சாய்ந்துகொண்டு இருளை வெறித்த படி பார்த்துக் கொண்டிருந்தான். தொலைவில் எங்கேயோ பெரிதாக இடி முழங்கியது. அந்தச் சத்தத்திற்கு மதூ விழித்துக் கொண்டு அழத் தொடங்கினான்.

காந்திமதி சற்று புரண்டு படுத்துக் கொண்டே "பிரிஜ்ஜில் காட்பரீஸ் சாக்லேட் இருக்கும். எடுத்துக் கொடுங்கள்" என்றாள் தூக்கத்திலேயே.

அவனுக்கு அலை அலையாக சிரிப்பு வந்தது. மதூவை மடியிலிருந்து எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு தட்டிக் கொடுக்கத் தொடங்கினான். இதுவரை நடந்தவை கனவு இல்லை என்றும், உண்மைதான் என்றும் அவனுக்கு இப்பொழுதுதான் கொஞ்சம் கொஞ்சமாக நம்பிக்கை ஏற்படத் தொடங்கியது.

கிழக்கே ஒளிக் கதிர்கள் லேசாக விரியத் தொடங்கிய போது காந்திமதி எழுந்து கொண்டாள். அவளுக்கு எது வுமே புரியவில்லை. சைதன்யா மனைவியைப் பார்த்துச் சிரித்தான்.

அவள் சிரிக்கவில்லை. அவனையே கூர்ந்து பார்த்த படி "நீங்க எப்படி இருக்கீங்க தெரியுமா?" என்றாள்.

அவன் சிரித்துக்கொண்டே "எப்படி இருக்கிறேன்?" என்றான்.

"பத்து நாட்கள் கடலில் இருந்துவிட்டு வீடு திரும்பிய மீனவனைப் போல்."

மதூவை அவளிடம் தந்துவிட்டு "இனி மேல் போகப் போக அந்தக் காரியத்தைத்தான் செய்யணுமோ என்னவோ?" என்றான்.

இந்தப் பரிகாசத்தைக் கேட்டு ரசிக்கக் கூடிய நிலையில் அவள் இருக்கவில்லை. கணவன் செய்த சிறிய தவறின் விளைவுகள் ஒவ்வொன்றாக தென்படத் தென்பட அவளுக்கு கோபமும், எரிச்சலும் ஏற்படத் தொடங்கின. அதற்குத் துணையாக இருளடைந்து விட்ட எதிர்காலம்!

சைதன்யா மரத்திலிருந்து ஒரு குச்சியை உடைத்து "இதுதான் பிரஷ். பேஸ்ட் இல்லை. சாரி" என்றான். அவன் இந்தச் சூழ்நிலையை எளிதாக எடுத்துக் கொள்வதற்காக மானசிகமாக தன்னைத் தயார் படுத்திக் கொண்டு, அவளையும் தயார் படுத்திக் கொண்டிருந்தான். பிளாட் ஃபாரம் முழுவதும் காலியாக இருந்தது.

மதூ எழுந்து இராகம் போட்டு அழத் தொடங்கினான். சைதன்யா சட்டென்று போய் மகனை கையில் எடுத்துக் கொண்டான். மதூ விடாமல் அழுது கொண்டே இருந்தான். குழந்தையைச் சமாதானப்படுத்த அவனுக்குத் தெரியவில்லை. மனைவியை இயலாமையுடன் பார்த்து விட்டு" என்ன வேண்டுமாம் இவனுக்கு?" என்றான்.

அவள் தாழ்ந்த குரலில் பதிலளித்தாள். "பால்!"

அவனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. "இப்போ என்ன செய்வது?" என்றான். அவள் பதில் பேசவில்லை.

மதூவைத் தூக்கி சமாதானப்படுத்திக் கொண்டே ஸ்டேஷனுக்கு வெளியே வந்தான். ஸ்டேஷனுக்கு சற்று



தொலைவில் சின்ன கொட்டகை ஒன்று தென்பட்டது. அதை நோக்கி நடந்தான். கொஞ்சம் அருகில் சென்ற பிறகு தான் தெரிந்தது அது ஒரு டீக்கடை என்று. போன உயிர் திரும்பி வந்தது. அந்த ஆளரவமில்லாத காட்டில் அதாவது இருந்ததே என்று சந்தோஷப்பட்டான்.

கடையில் நடுத்தர வயதில் இருக்கும் ஆள் ஒருத்தன் டீயை போட்டுக் கொண்டிருந்தான். சாதாரணமாக அங்கே விற்பனை எதுவும் இருக்காது. ஸ்டேஷனில் இறங்குபவர்கள் கூட யாருமே கிடையாது. காட்டிலுள்ள நாலைந்து கிராமங்களுக்கிடையே ரயில் பயணம் செய்பவர்கள் யாருமே இல்லை. அவ்வளவு அதிகாலை வேளையில் தன் கடைக்கு வந்தவர்களைப் பார்த்து உற்சாகத்துடன் "வாங்க. பன் இருக்கு, சூடான தேநீர் இருக்கு" என்றான்.

உண்மையில் சைதன்யா அதற்கு முதல்நாள் பிற்பகலிலிருந்து எதுவுமே சாப்பிடவில்லை. ஆனாலும் தன்னிடம் பணம் இல்லை என்ற விஷயத்தை அவன் மறந்து விடவில்லை. அதனால் மிகத் தாழ்ந்த குரலில் "கொஞ்சம் பால் வேண்டும் குழந்தைக்கு" என்றான்.

கடைக்காரன் அடுப்பிலிருந்து பாலை கரண்டியால் எடுத்து கண்ணாடி டம்ளரில் ஊற்றிவிட்டு "பால் வேண்டுமென்றால் ஐம்பது பைசா" என்றான்.

சைதன்யாவின் தலை வெட்கத்தால் குனிந்து விட்டது. "பாருப்பா, எங்களிடம் பணம் இல்லை" என்றான் கெஞ்சும் தோரணையில்.

சட்டென்று கையைப் பின்னால் இழுத்துக் கொண்டே "காலையிலேயே கடன் கிராக்கியா?" என்றான் எரிச்சலுடன்.

சைதன்யா பதில் பேசவில்லை. காந்திமதி பார்வையாளராக பார்த்துக் கொண்டிருந்தாள். டீ கடைக்காரன் ஏதோ வேலை இருப்பது போல் அந்தப் பக்கம் திரும்பி, பாட்டில்களை சரியாக அடுக்கிவிட்டு மறுபடியும் இந்தப் பக்கம் திரும்பினான். இன்னும் அவர்கள் அங்கேயே நின்று கொண்டிருந்ததைப் பார்த்துவிட்டு முகத்தைச் சுளித்துவிட்டு "போயிட்டு வாங்கய்யா" என்றான்.

சைதன்யா தயங்கிக் கொண்டே "குழந்தை அழுகிறான்" என்றான்.

அர்த்தமற்ற இந்த சால்ஜாப்பைக் கேட்டு கடைக்காரன் வினோதமாக பார்த்தான். "அதற்காக என்னை என்ன செய்யச் சொல்கிறாய்? முதல் போணியே கடன் தரச் சொல்கிறாயா? இனி நான் கடையை நடத்தினாற் போல்தான்" என்றான்.

போணி என்றதுமே சைதன்யாவுக்கு தன் பிசினெஸ் நினைவுக்கு வந்தது. வருடப் பிறப்பன்று ஒவ்வொரு வருடமும் ஒரு லட்ச ரூபாய்க்குக் குறையாமல் புது காண்ட்ராக்டில் கையெழுத்துப் போடுவது அவன் வழக்கம். பிசினெஸில் செண்டிமெண்டின் மதிப்பை உணர்ந்திருந்த சைதன்யா, மகனின் பசியைப் போக்குவதற்காக கடைக்காரனிடம் பாலை கடனாக கேட்க விரும்பவில்லை.



மதுவின் அழுகை அதிகமாகிவிட்டது. இருப்பு கொள்ளாமல் தாயின் கைகளில் திமிறினான். காந்திமதி மகனைச் சமாதானப் படுத்துவதற்காக அப்படியும் இப்படியுமாக கைகளில் மாற்றி வைத்துக்கொண்டே அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தாள். அந்த வேகத்தில் கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்த திருமாங்கல்யம் அப்படியும் இப்படியும் அசைந்து கொண்டிருந்தது.

"பால் ஒரு டம்ளர் என்ன விலை?" சைதன்யா கேட்டான்.

"ஐம்பது பைசா."

"ஒரு டம்ளர் பால், இரண்டு பன்னும் கொடு."

"பணம்?" சந்தேகத்துடன் கேட்டான்.

"பணத்தை முதலில் காண்பித்தால் தவிர தரமாட்டாயா?"

அந்தக் குரலில் வெளிப்பட்ட ஆணை கடைக்காரனைக் கட்டிப் போட்டது. சட்டென்று பாலை எடுத்து தந்தான். குழந்தை மடக் மடக்கென்று குடிக்கத் தொடங்கினான் காலியான டம்ளரை கடைக்காரனிடம் திருப்பிக் கொடுத்துவிட்டு, மதுவின் முகத்தை புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டிருந்த மனைவியிடம் சைதன்யா தாழ்ந்த குரலில், தெளிவாகச் சொன்னான்.

"உன் தாலிச் சரட்டை கழற்றிக் கொடு காந்திமதீ, பால் விலைக்கு ஈடாக."

வானமே இடிந்து தலை மீது விழுந்தாற் போல் அவள் நடுங்கிவிட்டாள். சரேலென்று நிமிர்ந்து ஏதோ சொல்லப்

போனாள். சைதன்யா அவளையே பார்த்துக் கொண்டிருந் தான். அந்தக் கண்களில் ஏதோ சக்தி! ஆணையிடும் சக்தி!

அவள் மெதுவாக கழுத்திலிருந்து தாலியை எடுத்து மேஜை மீது வைத்தாள்.

ஏதோ கனவு காண்பது போல் சிலையாக நின்று கொண்டிருந்த கடைக்காரன், சுதாரித்துக் கொண்டு "என்ன இது?" என்றான் பதறிப் போய்.

"இதுதான் எங்களிடம் உள்ள பணம்."

மனைவியோடு சேர்ந்து திரும்பியவன் "அன்றைக்கு திருப்பதியில் கடவுளுக்கு அர்ப்பணித்துக் கொண்ட நகை களில் எஞ்சியிருந்த தாலிச் சரட்டை இன்று நம் குல விளக் கைக் காப்பாற்றிக் கொள்வதற்குக் கொடுத்து விட்டதாக நினைத்துக் கொள் காந்திமதி! வருத்தப்படாதே" என்றான். அதற்குள் பின்னாலிருந்து டீக்கரைக்காரனின் அழைப்பு கேட்டது. என்னவென்பது போல் திரும்பிப் பார்த்தான்.

"நானும் மனுஷன்தான்யா. தாலியை எடுத்துக் கொண்டு பெண் பிள்ளையின் சாபத்தை வாங்கிக் கொள்ளச் சொல்கிறாயா?"

"உன்னுடைய போணியை பாழடிக்க எனக்கு விருப்ப மில்லை."

"போணி இல்லாட்டா போகட்டும். ஒழிஞ்சுப் போ."

"உனக்குக் கடன் படுவதை நான் விரும்பவில்லை."

"போதும்பா, நிறுத்து. பெரிதாக சொல்ல வந்து விட்டான். எனக்கும் பிள்ளை குட்டி இருக்கு. ஒரு டம்ளர் பாலுக்காக தாலியை எடுத்துக் கொள்ளச் சொல் கிறாயா?"



"தாலியைத் தவிர வேறெதுவும் இல்லையே பின்னே?"

பிடிவாதத்தில் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்கள் இல்லை.

"வா காந்திமதி!" என்றான் சைதன்யா.

பத்தடி நடந்தார்கள். திரும்பவும் பின்னாலிருந்து கடைக்காரனின் அழைப்புக் குரல்."

டீக் கடைக்காரன் கல்லாவைத் திறந்து, இருந்ததை எல்லாம் அள்ளிக் கொண்டு அவர்களை நோக்கி ஓட்ட மாக ஓடி வந்தான்.

இரண்டு ஐந்து ரூபாய் நோட்டுகள், பழைய இருபது ரூபாய் நோட்டு ஒன்று, மீதி சில்லரை எல்லாவற்றையும் சைதன்யாவின் கையில் வைத்தான்.

வியப்புடன் பார்த்தான் சைதன்யா.

"ஒரு டம்ளர் பாலைத் தந்துவிட்டு பொம்பளையின் தாலியைக் கொள்ளை அடித்துக் கொண்டுவிட்டான் என்ற பெயர் எனக்கு எதுக்குப்பா? இவ்வளவுதான் இருக்கு பணம். எடுத்துக் கொண்டு போ."

அவன் வார்த்தைகளில் இருந்த நேர்மைக்கு சைதன்யா உருகிப்போய்விட்டான். கண்களில் கண்ணீர் திரை யிட்டது. அங்கிருந்து அகன்றவன் மனைவியிடம் சொன்னான். "வியாபாரத்தில் மூழ்கிப் போய் வெளி உலகத்தைப் பற்றியே தெரிந்து கொள்ளாமல் இருந்து விட்டேன் இவ்வளவு நாளும்."

"அப்படி என்றால்?"

"சக மனிதனின் தேவையை பயன்படுத்திக் கொள்ளாமல் நேர்மையாக வாழக் கூடிய மனிதர்கள்கூட இன்னும் இருக்கிறார்கள்."

* * *

"நேர்மை!" சேட் சமன்லால் சொன்னான். "நேர்மை என்ன சார்! அப்படி சொத்தை எல்லாம் விட்டு விட்டு இரவோடு இரவாக ஓடிப் போக வேண்டிய அவசியம் தான் என்ன? கொஞ்ச நாள் பொறுத்துக் கொள்ளச் சொன்னால் பொறுத்துக் கொள்ள மாட்டோமா? அப்புறமாக தானே காலை ஊன்றிக் கொள்ள மாட்டானா என்ன?"

ஆமாம் என்பது போல் ரவி தலையை அசைத்தான்.

டிராயிங் ரூமில் சேட்டுகள் எல்லோரும் உட்கார்ந்திருந்தார்கள். சமன்லாலின் வார்த்தைகளைக் கேட்ட போது அண்ணன் எவ்வளவு பெரிய தவறு செய்து விட்டான் என்று ரவிக்குப் புரிந்தது.

அவனுக்குப் புரியாதது, தனக்கு முன்னால் உட்கார்ந்திருந்தவை எல்லாம் விஷப் பாம்புகள் என்றும், அதில் ஒரு பாம்பு வீட்டையெல்லாம் பரிசீலிக்கிறது என்றும், இன்னொரு பாம்பு மொத்தம் கடன் கொடுத்தவர்களின் லிஸ்ட்டையும், சொத்துக்களின் மதிப்பையும் கணக்கிட்டு எவ்வளவு தேறும் என்று எடை போட்டுக் கொண்டிருக்கிறது என்றும். சந்தேகம் அதிகமாகி சுருட்டிக் கொண்டு போயிருப்பான் என்றும் சந்தேகப்பட்டுக் கொண்டிருந்தது



அதற்குள் சைதன்யா அந்த வீட்டை விட்டுப் போய் பன்னிரெண்டு மணி ஆகியிருந்தது. பிசினெஸ் வட்டாரத்தில் எந்தச் செய்திக்குமே அவ்வளவு நேரம் போதும்.

"அண்ணாவுக்கு உங்களை எல்லாம் நன்றாகத் தெரியுமே லால்சாப்!" கேட்டான் ரவி. "ஆனாலும் இப்படி வீட்டை விட்டு ஏன் போனான்?"

"தெரியும். அதனால்தான் ஓடிவிட்டான்" என்றெண்ணிக் கொண்டது கொஞ்சம் நேர்மை பாக்கியிருந்த பாம்பு.

சேட் சமன்லால் தொண்டைச் செருமிக் கொண்டான். "ரவி சாப்! சைதன்யா இருந்திருந்தால் வேறு விதமாக நடந்திருக்கும். உங்களுக்கு பிசினெஸ் பற்றி எதுவும் தெரியாது. எங்கள் பக்கத்திலிருந்து கூட யோசித்துப் பாருங்கள். இந்தச் சூழ்நிலை இதே போல் இன்னும் கொஞ்ச நாள் நீடித்தால் உள்ள விலையும் கிடைக்காமல் போய்விடும். சீக்கிரத்தில் எல்லாவற்றையும் விற்பனைக்கு வைத்து விடணும். என்ன சொல்றீங்கநீங்க?"

"எல்லாவற்றையும் என்றால்?"

"உங்களுக்குத் தெரியாதது என்ன சாப்? இருக்கும் ஸ்திர சராஸ்திகள் எல்லாம்." பணிவுடன் பதிலளித்தான் சேட்.

ரவியின் தொண்டை வரண்டுவிட்டது. இது வரை என்னவோ ஆகப் போகிறது என்று தெரியும். ஆனால் இவ்வளவு சீக்கிரத்தில் ஆகிவிடும் என்று நினைத்திருக்கவில்லை. வீடு ஏலம் போடப்படும் காட்சி கண் முன்னால் நிழலாடியது.

"எங்களுக்கு எவ்வளவு மிச்சம் இருக்கும் சேட் ஜீ?" ரவி கேட்டான்.

சமன்லால் சிரித்தான். நதியில் மூழ்கிக் கொண்டிருப்பவன் புல்லைப் பிடித்துக் கொண்டு இது என்று கேட்ட போது, கரையில் நிற்பவன் சிரிப்பது போல் சிரித்தான்.

"இங்கே இருக்கிறவங்க எல்லோருக்குமே அவங்கவங்க கொடுத்த கடனில் பாதியாவது திரும்பி வருமான்னு சந்தேகமாக இருக்கு ரவி சாப்! எல்லோருக்கும் பங்கிட்டு தந்த பிறகு மீதம் ஏதாவது இருந்தால் அது உங்களுக்குத்தான்."

அண்ணன் இரவோடு இரவாக எல்லாவற்றையும் விட்டு விட்டு ஏன் ஓடி நான் என்று ரவிக்குப் புரிந்து விட்டது. வியாபாரம் என்றால் பூக்கள் விரித்தப் படுக்கை இல்லை என்றும் புரிந்தது. ஒரே நாளில் பிச்சைக்காரன் ஆவது என்றால் என்னவென்று கண்ணெதிரே தென்பட்டுக் கொண்டிருந்தது.

அவர்களிடம் நயமாக எடுத்துச் சொல்ல நினைத்தான். ஆனால் எதிரே உட்கார்ந்திருப்பவர்கள் இது போன்ற விஷயங்களில் பழம் தின்று கொட்டையைப் போட்டவர்கள் என்றும், தன்னைப் போல் நிறைய பேரைப் பார்த்திருப்பார்கள் என்று அவனுக்குத் தெரியாது. சொத்துக்களை விற்பதைத் தடுக்க அவன் செய்த முயற்சி எதுவும் பலிக்கவில்லை. வேறு விதமாக பலித்தது.

அன்றைக்கு யாருக்குமே வீட்டில் சாப்பாடு இல்லை. எல்லோர் மனதிலும் வருத்தம் குடிகொண்டிருந்தது.



கௌசல்யாவைச் சமாதானப்படுத்த யாராலுமே முடியவில்லை. அதுவும் அவளுக்கு பெரிய அண்ணாவிடம் இருந்த பற்றுதல் வேறு யாரிடமும் இருந்ததில்லை.

சாரதாவைப் பற்றியோ கேட்கவே வேண்டாம். எல்லோரையும் விட கொஞ்சம் தைரியமாக இருந்து கிரண்மயி ஒருத்திதான்.

ஏழ்மையைக் கண்டு அவளுக்கு பயமில்லை. ஆண் துணையின்றி அவள் கஷ்டங்களை எதிர்த்து நின்றிருக்கிறாள். இப்பொழுது புதிதாக அவளுக்கு வரப் போகிற பிரச்னை எதுவும் இல்லை. அதோடு கூட இப்பொழுது அவளுக்கு உறுதுணையாக ரவி இருக்கிறான்.

கௌசல்யாவின் அறையில் உட்கார்ந்திருந்தாள் அவள். கௌசல்யா தலையணையில் முகம் புதைத்து சோர்வுடன் படுத்திருந்தாள். பக்கத்திலிருந்த பேப்பரைப் புரட்டத் தொடங்கினாள் கிரண்மயி. டிராயிங் ரூமில் ரவி பேசிக் கொண்டிருந்தான். கிரண்மயியின் உதட்டில் ஏனோ முறுவல் மலர்ந்தது. எழுந்து தன் அறைக்குப் போனாள்.

சாரதா ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் முகம் வாடியிருந்தது. கண்கள் குழி விழிந்திருந்தன. கிரண்மயி உள்ளே வந்ததைப் பார்த்து விட்டு அந்தப் பக்கம் திரும்பினாள். கிரண்மயி மட்டும் சாரதாவைக் கவனிக்காமல், தன் பெட்டியை நெருங்கி அதிலிருந்து சிறிய டப்பாவை எடுத்துக் கொண்டு அந்த அறையை விட்டுப் போய்விட்டாள்.

இரண்டு நிமிடங்களுக்குப் பிறகு அவள் கத்திய கத்தல் அந்த பங்களாவின் சுவர்களில் எதிரொலித்தது. ரவிஓடி வந்தான். டப்பாவில் இருந்த டிக்கெட் நம்பரை பெப்பரில் தேடிப்பார்த்துக் கொள்ள அவளுக்கு அதிக நேரம் பிடிக்க வில்லை.

முதல் இடத்தில் வெளியாகியிருந்த நம்பர்தான் அது!

ஒரு ஏழை வாத்தியாரின் வயிற்றில் பிறந்து, கஷ்டங் களை கடைசி வரை அனுபவித்து, பணக்காரர்களைப் பற்றித் தாழ்வான அபிப்பிராயத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்த அந்தப் பெண், அவள் தந்தையிடமிருந்து ஒரே ஒரு கெட்ட பழக்கத்தின் மூலமாக ஒரே நொடியில் பத்து லட்சங்களுக்கு சொந்தக்காரியாகி விட்டாள்.

"என்ன ஆச்சு? யாரு கத்தியது?" சேட் உள்ளே எட்டிப் பார்த்துக் கொண்டே கேட்டான். "ரவி சாப்!" உரத்தக் குரலில் கத்தினான் சேட் சமன்லால். யாருமே குரல் கொடுக்கவில்லை. சமன்லால் சோபாவிலிருந்து எழுந்து கொள்ள போனபோது உள்ளேயிருந்து ரவி வந்தான். அவன் முகத்தில் வினோதமான ஒளி தென்பட்டது.

"என்ன நடந்தது?" எல்லோரும் பதற்றத்துடன் கேட்டார்கள். அவன் வந்து சோபாவில் உட்கார்ந்து கொண்டு மூச்சை இழுத்து விட்டுக் கொண்டான். ஒரு வினாடி நிசப்தமாக இருந்து விட்டு பிறகு சொன்னான்.

"நீங்க எங்க சொத்துக்களை விற்று பங்கிட்டுக் கொள்ளணும் என்று நினைத்தால் எங்களுக்கு ஆட்சே பணை இல்லை. ஆனால் இதையெல்லாம் என் கையில் ஒப்படைத்தால் கொஞ்ச நாளிலேயே இந்தக் கடன்களை



எல்லாம் தீர்த்து விடுவோம்னு உத்தரவாதம் தருகிறேன்" என்றான். அவன் குரலில் மிடுக்கு பிரதிபலித்தது.

"கொஞ்ச நாட்களிலேயா? எப்படி" சந்தேகத்தோடு கேட்டார்கள் யாரோ.

"இந்தப் பிசிநெஸ்ஸைப் புதிதாக ஒரு நபரின் தலைமை யில் கொண்டு வருவதன் மூலமாக" என்றான் ரவி. "அந்தப் புது நபர் யாரோ இல்லை. எனக்கு மனைவியாகப் போகும் கிரண்மயிதான். இந்த பிசிநெஸ்ஸை எப்படி வாங்குவாள் என்ற சந்தேகம் ஏற்பட்டால், இதோ இந்த லாட்டரி சீட்டையும், இன்றைய பேப்பரையும் பரிசோதித் துப் பார்த்துக் கொள்ளலாம்."

ஐந்து நிமிடங்கள் பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகு அவர்கள் எல்லோரும் அந்த அறையை விட்டு வெளியேறி னார்கள்.

## 9

கடலுக்கு அடியில் மறைவாக ஜலப்பிரவாகம் இருக்கும். கடல் வாழ் உயிரினங்கள் கும்பல் கும்பலாக ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு குடி பெயர்ந்து கொண்டே இருக்கும். ஒரு காலத்தில் இறால் ஏற்றுமதி யாளராக இருந்த சைதன்யாவும் காலப் பிரவாகத்தில் அதே போல் பயணம் செய்து கொண்டிருந்தான்.

நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு வேலைகளை மேற்பார்வையிடுவது வேறு. நின்று கொண்டு வேலை செய்வது வேறு என்ற விஷயம் அவனுக்குத் தெரியாமல்

இல்லை. ஆனால் அதைப்பற்றி தற்சமயம் யோசித்துப் பார்க்கும் நிலையில் அவன் இல்லை. வீடு பற்றி எரிந்து கொண்டிருக்கும் போது சர்வமும் நாசமாகிவிட்டது என்று திட்டவட்டமாக தெரிந்த பிறகு நடப்பதை சலனமில்லாமல் நின்றபடி பார்க்கக் கூடிய நிலையில் இருந்தான் அவன். வேறு எந்த யோசனையும் இல்லை. ஒரு விதமான ஜடத்தன்மை அவ்வளவுதான்.

கண்ணாடி மாளிகையைப் போன்ற அபூர்வமான சூழ்நிலையில் வளர்ந்தவன் அவன். திடீரென்று அது உடைந்துவிட்டது. ஆச்சரியம் என்னவென்றால் அங்கிருந்து கீழே விழுந்த போதும் அவனுக்கு வருத்தம் ஏற்படவில்லை. வருத்தமெல்லாம் அவனுடன் சேர்ந்து ஏழடிகள் எடுத்து வைத்த பாபத்திற்காக அவனுடன் சேர்ந்து கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டு இருக்கும் காந்திமதியைப் பற்றிதான்.

கணவன் பலவீனமான தருணத்தில் அலட்சியமாக நடந்து கொண்டதே இந்த நிலைக்குக் காரணம் என்று அவளுக்குத் தெரியும். ஆனால் அவளால் அதை ஏனோ மன்னிக்க முடியவில்லை. தவறு சிறியதா பெரியதா என்ற விஷயம் தவறைப் பொறுத்து இல்லாமல், அந்தத் தவறால் ஏற்படும் விளைவுகளைப் பொறுத்துதான் இருக்கும் போலும். கஷ்டங்களை அனுபவிக்க அனுபவிக்க, கணவன் செய்த தவறு வளர்ந்து பெரிதாக கண் முன்னால் விஸ்வரூபம் எடுத்துக் கொண்டிருந்தது. என்றாவது ஒருநாள் அது எரிமலையாக வெடித்து விடலாம். கஷ்டங்கள் தான் மனிதனை பட்டை தீட்டுகின்றன.



கஷ்டங்களின் பால் காந்திமதியின் மனநிலை இவ்வாறு இருந்தால், மதுவின் உடல் நிலையோ வேறு விதமாக இருந்தது. சீதோஷ்ண மாறுபாட்டை தாக்குப் பிடிக்க முடியாமல் உடல் எப்படி தடுமாறுமோ. அது போலவே பொருளாதார மாறுபாட்டையும் தாக்குப் பிடிக்க முடியாமல் தத்தளிக்கும் கோடையில் ஏ.சி.யுடனும், குளிர் காலத்தில் ரஜாய்க்கு அடியிலும் பருவ மாறுதலை எதிர்த்து நின்ற அவ்வுடலால் திடீரென்று வெளியே வந்ததை தாங்கிக் கொள்ள முடியவில்லை.

பணம் இல்லாதது சில சமயம் நல்லதுதானோ! தர்மா மீட்டர் இருந்திருந்தால் மதுவின் உடல் நூற்றி நாலு டிகிரி உஷ்ணத்தைக் காண்பித்து, ஏற்கெனவே துரதிர்ஷ்டத்தினால் பாதிக்கப்பட்டிருந்த அந்தத் தம்பதிகளை மேலும் கலங்கடித்திருக்கும்.

"கையும் காலும் நன்றாகத்தானே இருக்கு. ஏதாவது வேலை பார்க்கக் கூடாதா?"

சைதன்யா சிரித்தான். "நான் கேட்டது தர்மம் இல்லைங்க. வேலைதான்."

எதிரே இருப்பவன் கடுப்பாகி. "எங்களுக்கே வேலை இல்லாமல் திண்டாடிக் கொண்டு இருக்கிறோம். உன் தொந்தரவு வேறு. போ... போ" என்று எரிந்து விழுந்தான்.

"என் மகனின் உடம்பு ஜுரத்தால் கொதிக்கிறது."

எதிரே இருந்தவன் நெற்றியை சுளித்துவிட்டு "பிச்சை கேட்பதில் இது ஒரு வகையாகிவிட்டது. சின்னப் பசங்களின் பெயரைச் சொல்லி வயிற்றைக் கழுவிக்கறது" என்றான்.

சைதன்யாவின் முகம் அவமானத்தால் குன்றி விட்டது. ஏமாற்றத்தோடு அங்கிருந்து நகர்ந்தான். யோசித்துப் பார்த்த போது எதிராளியின் மீது தவறு எதுவும் இருப்பதாக தோன்றவில்லை.

இப்படிப்பட்ட மறுப்புக்களை தான்தான் பழகிக் கொள்ளவேண்டும்.

தள்ளாடிய நடையுடன் ஊர் எல்லைக்கு வந்து சேர்ந்தான். இடிந்து விழத் தயாராக இருந்த சத்திரத்து கூரையின் கீழே திண்ணையின் மீது உட்கார்ந்துகொண்டு காந்திமதி கணவனுக்காகக் காத்துக் கொண்டிருந்தாள்.

"எப்படி இருக்கு?" அவன் கேட்டான்.

அவள் பதில் அசைத்தாள். சைதன்யா சுற்றிலும் பார்த்தான். ஒரு மூலையில் யாரோ போர்த்திக் கொண்டு படுத்திருந்தார்கள். இன்னொரு மூலையில் இரண்டு பிச்சைக்காரர்கள் சமைத்துக் கொண்டிருந்தார்கள். சுவற்றில் கரியால் தாறுமாறாக படங்கள் வரையப் பட்டிருந்தன. திண்ணைக்கு அடியில் புதர்கள் மண்டியிருந்தன.

"காலையிலிருந்து செய்யாத முயற்சி பாக்கியில்லை. எந்த வேலையும் கிடைக்கவில்லை" என்றான்.

அவள் பதில் பேசவில்லை.

"மறுபடியும் மழை வரும் போலிருக்கு" தெற்கு திசையில் திரண்டு கொண்டிருந்த கார் மேகங்களைப் பார்த்துக் கொண்டே சொன்னான். "இரண்டு நாட்களாக இந்தக் குளிர்காற்றுக்கும் மழைக்கும் ஜுரம் வந்திருக்கும்."



அப்போதும் அவள் பேசவில்லை. அந்த மௌனம் அவனுக்கு வேதனையை ஏற்படுத்தியது. விதி செய்த சதிக்கு தான் எப்படி குற்றவாளி ஆவான் என்றுதான் புரியவில்லை. இப்படி வந்துவிட்டது தவறு இல்லை என்று அவனுக்குத் தெரியும் வராமல் இருந்துகொண்டு செய்யும் காரியம் எதுவும் இல்லை என்றும் தெரியும். ஆனால் அந்த உண்மையை அவளிடம் எப்படி நயமாக எடுத்துச் சொல்லுவது என்றுதான் புரியவில்லை.

அந்த யோசனையில் ஆழ்ந்திருந்த போதே அவன் பார்வை மதுவின் மீது விழுந்தது. மதுவின் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. சட்டென்று எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டான்.

டீ கடைக்காரனுக்கு மனைவியின் தாலியை வலுக் கட்டாயமாக கொடுக்கச் செய்த போது இருந்த நேர்மையும், உறுதியும் மகனின் உடல்நல விஷயத்திற்கு வந்த போது கொடுப்பதற்கு எதுவும் இல்லை என்பதால் தளர்ந்து விட்டது.

டாக்டர் வீட்டிற்கு முன்னால் நின்று கதவைத் தட்டினான். நன்றாக இருட்டிவிட்டது. தெரு விளக்குகள் அப்பொழுதுதான் எரியத் தொடங்கின.

"இது விசிட்டிங் நேரம் இல்லை" கதவைத் திறந்து டாக்டர் சொன்னார். அவர் வெளியே போவதற்குத் தயாராக இருந்தார்.

"ரொம்ப ஜுரமாக இருக்கு டாக்டர்." அவன் குரலில் கலக்கம் தொனித்தது. தோளில் மது கீரைத் தண்டாக துவண்டு போயிருந்தான்.

டாக்டர் நிலைமையைக் கவனித்துவிட்டு கன்சல்டிங் ரூமுக்குள் அடியெடுத்து வைத்தார். ஐந்து நிமிடங்கள் பரிசோதித்து விட்டுச் சொன்னார். "நிமோனியா."

சைதன்யாவின் முகத்தில் எந்த உணர்ச்சியும் இருக்க வில்லை. டாக்டர் பிரிஸ்கிரிப்ஷன் காகிதத்தில் இரண்டு மூன்று மருந்துகளின் பெயர்களை எழுதிவிட்டு "இந்த இஞ் ஜெக்ஷனையும், மாத்திரைகளையும் வாங்கிட்டு வாங்க. அர்ஜெண்ட்!" என்றார்.

சைதன்யா அந்தக் காகிதத்தை வினாடி நேரம் பார்த்துவிட்டு மெதுவாக நிமிர்ந்தான். "எங்களிடம் பணம் இல்லை டாக்டர்!"

டாக்டரின் முகம் உடனே மாறியது. "அப்படி என்றால் – கன்சல்டிங் பீஸ் கூட இல்லையா"

"மன்னியுங்கள் டாக்டர்!"

சைதன்யா வார்த்தைகளை முடிப்பதற்குள்ளாகவே "இடியட்!" என்று கத்தினார். "பெரிதாக பணம் தருபவன் போல் வெளியே போய்க் கொண்டிருந்தவனை உள்ளே கூட்டிக் கொண்டு வந்தாயா? பிச்சைக்காரர்களுக்கும், வக்கு இல்லாதவர்களுக்கும் சேவை பண்ணுவதற்கு இதென்ன தர்ம ஆஸ்பத்திரின்னு நினைத்துவிட்டாயா? கெட் அவுட்!" கோபத்தால் அவர் முகம் சிவந்தது. வெளியே போக வேண்டும் என்று அவசரப்பட்டுக் கொண்டிருந்தார்.

"உங்கள் நன்றிக் கடனை கண்டிப்பாக தீர்த்து விடு வேன் டாக்டர்! இப்போ உங்களிடம் இருக்கும் மருந்து களை கொடுத்து என் மகனைக் காப்பாற்றுங்கள்." கை



களை ஜோடித்துக் கொண்டே மன்றாடினான். குனிந்து கால்களைத் தொடக் கூட தயாராக இருந்தான்.

இப்படிப்பட்டவர்களை நிறைய பேர்களை பார்த் திருக்கிறார் அந்த டாக்டர். அவன் நகராமல் இருந்ததைப் பார்த்துவிட்டு மிரட்டினார். "பேசிறாயா? எங்க டைக்ட ரைக் கூப்பிடட்டுமா?"

சைதன்யாவின் இதயத்தில் ஏதோ ஒரு மூலையில் அந்த வார்த்தைகள் தாக்கிவிட்டன. குனிந்து மதுவை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டான்.

இந்த ரகளைக்கு உள்ளேயிருந்து டாக்டரின் மனைவி வந்தாள்." என்ன ஆச்சு? ஏன் தாமதம்?"

டாக்டர் அவளுக்கு ஆங்கிலத்தில் விவரித்தார். "மகனைக் கூட்டிக் கொண்டு வந்து வைத்தியம் பார்க்கச் சொன்னான். ராஜ பரம்பரையைப் போல் தோரணை! மருந்து வாங்கவே பணம் இல்லையாம். எந்த துணிச்ச லுடன் அவ்வளவு மிடுக்காக உள்ளே வந்தானோ?"

போகத் திரும்பிய சைதன்யா ஒரு வினாடி நின்று பின்னால் திரும்பாமலேயே பதிலளித்தான். "மிடுக்குதான் டாக்டர்! குறைந்தபட்சம் டாக்டர்களிடமாவது மனித நேயம் இருக்கும் என்ற எதிர்பார்ப்பு பட் யு ஹேவ் டிஸ்ட்ராய்ட் மை ஃபெய்த் இன் டோட்டல்."

தொலைவில் எட்டு மணி அடித்தது. தூறல் இன்னும் விடவில்லை.

காந்திமதியின் மடியில் மதூ முனகியபடியே இருந்தான். சைதன்யா கலக்கத்துடன் அவனையே

பார்த்துக் கொண்டிருந்தான். ஜுரம் எவ்வளவு இருக்கு என்று தெரியவில்லை. தொலைவில் பிச்சைக்காரர்கள் சமைத்துக் கொண்டிருந்தார்கள். அடுப்பின் வெளிச்சம் கொஞ்சம் இந்தப் பக்கமாகவும் விழுந்து கொண்டிருந்தது.

தூணில் சாய்ந்து கொண்டு சாது ஒருத்தன் தத்துவப் பாடலை பாடிக் கொண்டிருந்தான். சைதன்யா சுவரில் சாய்ந்தபடி சூனியத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

சமைத்துக் கொண்டிருந்த இருவரில் ஒருவன் எழுந்து சைதன்யாவிடம் வந்தான். "சாதம் வடிச்சுக் கலையா?"

சைதன்யா நிமிர்ந்தவன் சட்டென்று குனிந்து "ஊஹூம். இல்லை" என்றான்.

"இரண்டு பேருக்கு வேண்டிய அரிசி இருக்கு. வேணுமா? ஒரு ரூபாய் கொடுத்தால் போதும்."

அவ்வளவு வேதனையிலும் சைதன்யாவுக்கு சிரிப்பு வந்தது. அவன் அரிசி விற்பதற்காக இல்லை. பிச்சைக்கார னிடம் இருந்த அளவுக்குக் கூட தன்னிடம் இல்லாமல் போனதற்கு.

"என்னிடம் பணம் இல்லை" என்றான்.

"அரிசியும் இல்லை. பணமும் இல்லை. காலையி லிருந்து எங்கே உட்கார்ந்திருந்தீங்க?"

சைதன்யாவுக்கு அந்த கேள்வி புரியவில்லை. நிமிர்ந்து பார்த்தான். பிச்சைக்காரன் அதை வேறு விதமாக புரிந்து கொண்டு "பிள்ளையார் கோவில் வாசலில் உட்கார்ந்தால் சில்லறை காசுகளும், தேங்காய் மூடியும் கிடைக்கும். வீடு



வீடாக அலைந்தால் சாதமும் அரிசியும் கிடைக்கும். இரண்டு பேர்தான் இருக்கீங்களே? ஒருத்தர் அதையும் இன்னொருத்தர் இதையும் பார்த்துக் கொள்ளலாம்" என்று யோசனையை சொன்னான்.

சைதன்யாவின் உள்ளங்கைக்குள் காந்திமதியின் கை நடுங்கியது. அவன் தன் உடைகளைப் பார்த்துக் கொண டான். கிழிந்து மாசடைந்திருந்தன. எந்த வேலையும் கிடைக்காவிட்டால் பிச்சை எடுத்துச் சாப்பிடலாம் போலும். குறைந்தபட்சம் அதற்கு அருகதையான தோற்ற மாவது வந்துவிட்டது என்று நினைத்துக் கொண்டான்.

"இப்போ என்ன செய்யப் போறீங்க? பட்டினி கிடக்கப் போறீங்களா?"

சைதன்யா பதில் பேசவில்லை.

"நான் அரிசி தருகிறேன். சமைத்துக் கொள்ளுங்கள். நாளைக்கு அரிசியோ, ரூபாயோ கொடுத்து விடுங்கள்" என்றான்.

"நாளைக் காலையில் இங்கே இருக்க மாட்டோம்."

பிச்சைக்காரன் இந்த பதிலைக் கேட்டுவிட்டு தலை யைச் சொரிந்து கொண்டான். "உன்னோடு பெரிய ரோதனை வந்து விட்டது போ" என்று போய் விட்டான்.

ஒரு நிமிஷம் கழித்து, சிறிய மூட்டை ஒன்று சைதன்யாவின் மடியில் வந்து விழுந்தது.

நிமிர்ந்து பார்த்தான்.

அதே பிச்சைக்காரன். "எடுத்துக்கோ தம்பி! திருப்பித் தர வேண்டியதில்லை."

"என்ன இது?" வியப்புடன் கேட்டான்.

"பெண்பிள்ளையை பட்டினி போடலாமா? போ... போ. அந்த மூலையில் பானை இருக்கு. சமைத்துக் கொள்ளுங்கள்."

கண்களில் கிர்ரென்று நீர் சுழன்றது சைதன்யாவுக்கு. அந்த அன்புக்குக் கரைந்துபோய் விட்டான் அவன். இரண்டு கைகளாலேயும் அந்த இருபிடி அரிசியை பத்திர மாக பிடித்துக்கொண்டு மனைவியிடம் கொடுத்தான். அவள் வாங்கிக் கொள்ளவில்லை. விரக்தியுடன் சிரித்தாள்.

"என்ன யோசிக்கிறாய் காந்திமதி! பிச்சைக்கார னிடம் பிச்சை எடுக்கிற நிலைக்குத் தாழ்ந்துவிட்ட உன் கணவனின் நிலையைப் பார்த்தா? டாக்டரிடம் தென் படாத மனிதத்தன்மை இங்கே பிச்சைக்காரனிடம் தென் படுகிறதே என்றா? எழுந்திரு. போய் கொஞ்சம் சமையல் செய்" என்றான்.

அது வரையில் அடக்கிவைத்துக் கொண்டிருந்த அழுகையை இனி அடக்க முடியாமல் போய்விட்டது அவளால். ஹோவென்று கதறிக்கொண்டே "குழந்தைக்கு இப்படி இருக்கும் போது சாப்பாடு எப்படிங்க இறங்கும்?" என்று முகத்தை மூடிக் கொண்டாள். அவள் கையிலிருந்த மூட்டையிலிருந்து அரிசி பொல பொலவென்று மதுவின் மேல் சிந்திற்று. கண்ணீர்த் துளிகளோடு கலந்து ஈரமாய்.

* * *



டைனிங் டேபிள் மீது விழுந்த நீர்த் துளியை ஆள் காட்டி விரலால் கிறுக்கிக் கொண்டிருந்தாள் கிரண்மயி. மேஜை மீது வித விதமான உணவு வகைகள் சுடச் சுட ஆவியைக் கக்கிக் கொண்டிருந்தன. சமையல்காரன் "பிரிஜ் ஜைத் திறந்து தயிர் கிண்ணத்தை எடுத்து வந்தான்.

அவள் எதையும் கவனிக்கும் நிலையில் இல்லை. அதற்குள் ரவி அங்கே வந்தான். "குட் ஈவினிங் டியர்! இன்னிக்கு என்ன ஸ்பெஷல்?" என்றான் நாப்கின்னை எடுத்துக் கொண்டு. அவள் பதில் பேசவில்லை.

அந்த மௌனத்தை அவன் உணர்ந்து கொள்ளாமல் சாதத்தைப் பரிமாறிக் கொள்ளத் தொடங்கினான்.

"ஏதாவது தெரிந்ததா ரவி!" அவள் மெதுவாக கேட்டாள். அவன் கூர்ந்து கவனித்திருந்தானால் அவள் மனதில் பொங்கிக் கொண்டிருந்த ஆவேசத்தையும் உத்வேகத்தையும் அடக்க அரும்பாடு பட்டுக்கொண்டே சாதாரணமாக பேச முயன்று கொண்டிருந்தாள் என்று புரிந்திருக்கும். அவன் அதையொன்றும் கவனிக்காமல் "இல்லை. இன்றைக்கு கூடக் கடிதம் எதுவும் வரவில்லை" என்றான்.

"வேறென்ன செய்வதா? எங்களைத் தேடிப் பிடிக்க உங்கள் அண்ணா அப்படித்தான் செய்தாரா?" என்றாள் ஏறக்குறைய கத்தினாற்போல்.

ரவி கொஞ்சம் எரிச்சலுடன் "என் இடத்தில் நீ இருந்தால் என்ன செய்திருப்பாய்?" என்றான்.

"என்ன செய்திருப்பானோ? இந்த வீட்டிலேயே இருக்கும் கிரண்மயி என்ற பாவியிடம் போயிருப்பேன். 'அடியே! ஒரு வேளை சாப்பாட்டுக்குக் கூட வக்கு இல்லாத நிலையில் நீ இருந்த போது உன்னைக் காப்பாற்றிய புண்ணியவான் சைதன்யா இப்பொழுது ஊரை விட்டு போய்விட்டான். உன்னிடமுள்ள பத்து லட்சத்தில் ஒரு லட்சத்தை தா. ஆட்களை ஏற்பாடு செய்து தேடச் செய்கிறேன். அவர்கள் கிடைக்கும் வரையில் ஒவ்வொரு பேப்பரிலும் விளம்பரம் கொடுக்கிறேன்' என்று சொல்லியிருப்பேன். அவ்வளவுதானே தவிர இப்படி சுகங்களை அனுபவித்துக் கொண்டு உட்கார்ந்திருக்க மாட்டேன்." துக்கத்தால் அவள் குரல் கம்மியது.

ரவியின் முகம் அவமானத்தால் சிவந்தது. "அண்ணன் மீது எனக்கும் அன்பு இருக்கு. நான் ஒன்றும் கையைக் கட்டிக் கொண்டு உட்காரவில்லை."

அவள் சிவந்த முகத்துடன் அவனை நேராக பார்த்துக் கொண்டே "செய்தது போறாது" என்றாள்.

"எப்படிச் சொல்கிறாய்?"

அவள் விருட்டென்ற நாற்காலியை விட்டு எழுந்து கொண்டு "எப்படிச் சொல்கிறேனா?" என்றாள். அவள் இதழ்கள் ஆவேசத்தால் துடித்துக் கொண்டிருந்தன. கையிலிருந்த காகிதத்தை அவன் மீது விட்டெறிந்தாள். அதற்குப் பிறகு அவளால் துக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. முகத்தைக் கைகளால் பொத்திக் கொண்டே அழுதபடி "எல்லோரும் என்னைத்தான் சொல்வார்கள். இதில் நான் செய்த தவறு என்ன இருக்கு?"



என்று தலையை மேஜை மீது மோதிக் கொள்ளத் தொடங்கினாள். ரவி அந்தக் காகிதத்தை கையிலெடுத்துக் கொண்டு பிரித்தான். கௌசல்யாவின் கையெழுத்தை சுலபமாகவே புரிந்துகொள்ள முடிந்தது அவனால்.

*ரவி அண்ணா!*

*பெரிய அண்ணன் கிளம்பிப் போய் ஒரு வாரமாகப் போகிறது. என்ன செய்கிறானோ? வேளைக்கு சாப்பிடுகிறானோ இல்லை பட்டினி கிடக்கிறானோ? ஒன்றுமே தெரியவில்லை. அவர்கள் கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் போது இங்கே சந்தோஷமாக இருப்பதற்கு என் மனம் ஒப்புக் கொள்ள மாட்டேன் என்கிறது. நீயோ எதிர்பாராமல் வந்த சொத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் வேலையில் மூழ்கி விட்டாய்.*

*அண்ணா! பெரிய அண்ணனே இல்லாத போது இந்தச் சொத்து. பணம் இதெல்லாம் நமக்கு எதுக்கு? நீ செய்யும் முயற்சியில் குறை இருப்பதாக நான் சொல்லவில்லை. ஆனால் நானும் என் முயற்சியை செய்யலாம் என்று நினைக்கிறேன். அதனால்தான் கிளம்பிப் போகிறேன். தீபக்கைச் சந்தித்து பெரிய அண்ணனைத் தேட முயற்சி செய்யப் போகிறேன். நான் கேட்டால் ஆட்களை வைத்து தேடுவதற்கு பணம் செலவழிப்பதற்கு தீபக் பின்வாங்க மாட்டான் என்று நம்புகிறேன்.*

ஒரு நூறு ரூபாய் மட்டும் உன் பர்ஸி லிருந்து எடுத்துக் கொண்டு போகிறேன். அங்கே போனதும் அனுப்பி வைத்து விடுகிறேன்.

உன் தங்கை,
கௌசல்யா.

கடிதத்தைப் படித்துவிட்டு சிலையாக உட்கார்ந்து விட்டான் ரவி. கௌசல்யா கோபத்தை வெறுப்பை அடக்கி வைத்துக்கொண்டு கடிதம் எழுதியிருக்கிறாள் என்று படித்த மாத்திரத்திலேயே தெரிந்துவிட்டது.

யார் மீது என்றே தெரியாத வெறுப்பு அவன் இதயத்திலிருந்து கட்டு மீறிக்கொண்டு வெளிப்பட்டது. ஆம். நான் சுயநலக்காரன்தான். வரப்போகும் மனைவி யின் சொத்தை பாதுகாப்பதற்காக சொந்த அண்ணனை மறந்துவிட்டவன். நான் கையாலாகாத கோழைதான். ஆனால் நீங்கள் எல்லோரும் மேதாவிகள் இல்லையா. லட்சம் ரூபாயை செலவழிப்பவர்கள் ஒருத்தர்! சொந்த மாக தேடிக் கண்டுபிடித்துக் கொண்டு வருவதற்காக கிளம்புவதற்கு ஒருத்தர்! நீங்க யாருமே எனக்கு முன்பே ஏன் யோசனை தரவில்லை? நான் எவ்வளவு மோச மானவன் என்று உணர்த்துவதற்காக பார்த்துக் கொண்டே சும்மாயிருந்தீங்களா?" என்று வெறிப் பிடித்தவன் போல் கத்திக் கொண்டே டெலிஃபோனை நெருங்கி தீபக்கிற்கு டிரங்கால் செய்யத் தொடங்கினான்.

# 10

ரயில் மெதுவாகப் போய்க் கொண்டிருந்தது. ஜன்னல் வழியாக வெளியே பார்த்தபடி உட்கார்ந்திருந் தாள் கௌசல்யா. அவள் மனம் முழுவது வேதனையால் நிரம்பியிருந்தது. அடிக்கடி கண்கள் குளமாகிக் கொண்டிருந்தன.

கம்பார்ட்மெண்ட் ஏறக்குறைய காலியாக இருந்தது. ஒரு மூலையில் வயோதிக தம்பதிகள் உட்கார்ந்திருந் தார்கள். ஒரு சீட் முழுவதும் யாரோ முக்காடிட்டுக் கொண்டு படுத்திருந்தார்கள்.

கௌசல்யா இதை எதையும் கவனிக்கும் நிலையில் இல்லை. தான் போய்ச் சேர வேண்டிய இடம் எப்பொழுது வருமோ என்று தவித்துக் கொண்டிருந்தாள். ரயில் பயணமும் அவளுக்கு புதிது. எப்பொழுது பயணம் செய்ய நேர்ந்தாலும் அண்ணனின் காரில்தான் போவாள். ஒரே ஒரு முறை மட்டும் முதல் வகுப்பில் பயணம் செய் திருக்கிறாள். அவ்வளவுதான்.

"எங்கே போகணும் நீங்க?" என்ற கேள்விக்கு திடுக் கிட்டு நிமிர்ந்தாள். எதிரே உட்கார்ந்திருந்த இளைஞன் கேட்டுக் கொண்டிருந்தான். தாழ்ந்த குரலில் அவள் பதிலளித்தாள். பிற ஆண்களுடன் பேசி அவளுக்கு பழக்க மில்லை.

விதி இவ்வாறு விளையாடியிருக்காவிட்டால், மெத் தென்று ஃபோம் படுக்கையின் மீது ரோஜா மலரைப்

போல் படுத்துத் தூங்க வேண்டிய சமயம் இது. புடவைத் தலைப்பால் முக்காடிட்டுக் கொண்டு ரயில் பெஞ்சில் உட்கார்ந்து வருந்த வேண்டிய சமயம் இல்லை.

"உறவுக்காரங்க வீட்டுக்கா?" அவன் கேட்டான்.

இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று அவளுக்குப் புரியவில்லை.

அவள் மௌனத்தை அவன் வேறு விதமாக புரிந்து கொண்டு "வீட்டில் சண்டை போட்டுக் கொண்டு வந்துட்டீங்களா?" என்றான்.

அவள் மிரண்டு போனவளாக பார்த்தாள்.

அவன் லேசாக சிரித்துவிட்டு "நான் உங்களுடைய நண்பன் என்று நினைத்துக் கொண்டு சொல்லுங்கள்" என்றான்.

அவளுக்குத் தெரிந்த உலகத்தில் எல்லோருமே நல்லவர்கள்தான். இந்த பரிவான பேச்சுக்கு உருகிப் போய் எல்லாவற்றையும் சொல்லிவிட்டாள். ரயில் ஏதோ ஸ்டேஷனில் நின்று மறுபடியும் புறப்பட்டது.

"சைதன்யா என்றால் தாடி இருக்கும் இல்லையா?" கேட்டான்.

"ஊஹூம்." மறுப்பது போல் தலை அசைத்தாள்.

"அப்புறமாக வளர்ந்திருக்கும். கூடவே பெண் ஒருத்தி, குழந்தை ஒன்று, மொத்தம் மூன்றுபேர் இல்லையா."

ஆமாம் என்பது போல் தலை அசைத்தாள்.



"அவள் பெயர்?"

"காந்திமதி."

"ஓஹ்!" கத்தினான் அவன். "உங்க அண்ணா காந்தி மதி என்று அழைக்கும் போது கேட்டிருக்கிறேன்."

அவள் முகத்தில் திடீரென்று களை வந்தது. "நீங்க பார்த்தீங்களா?" உற்சாகத்தோடு முன்னால் நகர்ந்து "எங்கே?" என்றாள்.

அவன் சிரித்தான். "பார்த்தேன். எங்க ஊரில்தான். கோவிலுக்கு பக்கத்தில் தான் எங்கள் வீடு. நேற்று இரவு கோவில் வாசலில் பார்த்தேன். எனக்கு நன்றாக நினைவு இருக்கு. ஒரு குழந்தை கூட இருந்தது அவர்களோடு."

அவள் பரபரப்புடன் "உங்க ஊர் எங்கே?" என்று கேட்டாள். ரயில் மெதுவாக நின்றது.

அவன் எழுந்துகொண்டு "இதுதான் எங்க ஊர். வாங்க அண்ணாவைச் சந்திக்கலாம்" என்றான்.

அவள் அப்பாவியாக "அவர்கள் இன்னும் அங்கேயே இருப்பாங்க இல்லையா?" என்றாள்.

"இல்லாவிட்டால் அந்த சுற்றுவட்டாரத்தில் எங்கே யாவதுதான் இருப்பாங்க. நீங்க ஒன்றும் கவலைப்பட வேண்டியது இல்லை. எனக்குக் கீழே நிறைய ஆட்கள் இருக்காங்க. பத்து நிமிடங்களில் உங்க அண்ணா உங்க முன்னால் இருப்பார். இறங்குங்கள்" என்றான்.

அவள் அவனுக்குப் பின்னாலேயே ரயிலை விட்டு இறங்கினாள். அவனோடு கூட நடந்தபடியே ஸ்டேஷ

னுக்கு வெளியே அடர்ந்த இருளில் மறைந்தாள். அவ்வளவு தான்.

பிரியமான வாசர்கர்களே! அதற்குப் பிறகு அவள் என்னவானாள் என்று எனக்குத் தெரியாது.

நளினத்தை, பண்பை ஆபரணங்களாக கொண்டு, சகல வசதிகளுடன் வளர்ந்த அந்த அப்பாவிப் பொண். ஒரு தடவை வெளி உலகத்தில் அடியெடுத்து வைத்து விட்ட பிறகு மறைந்திருந்த பாம்பு கொத்திவிட்டது. அந்தப் பணக்கார உலகத்திலேயே அவள் தொடர்ந்து இருந்திருந்தால், அந்த நளினம் அவளை விட்டு நீங்கியிருக் காது. உயர்வான பங்களாவில், உள்புறத்தில் எங்கேயோ, வெயில் முகம் பாராமல் கணவனுக்கு முன்னால் அமர்ந்து, நாசூக்காக வெற்றிலையை மடித்துத் தர வேண்டிய அந்தக் கைகள் இனி கரடுத்தட்டி போய் விடலாம். ரோஜாப் பூவைப் பழிக்கும் அந்த சொகுசான உடலில் இனி சாட்டையின் தழும்புகள் ஏற்படலாம்.

பொழுது விடிந்ததுமே எழுந்து குளித்துவிட்டு கடவுளைத் தொழும் பழக்கம் இனி விடியும் வரை விழித் திருக்கும் பழக்கமாக அவள் மாற்றிக் கொள்ளும்படி நேரிடலாம்.

அவள் படிப்பு, அறிவு நல்ல குடும்பத்திலிருந்து வந்த சம்பிரதாயம். அவள் கற்றுக் கொண்ட பண்பாடு. அடக்கம் இவையெல்லாம் பணம் இல்லை என்ற ஒரே காணரத்தினால் அவளுக்கு இனி எதற்குமே பயன்படாமல் போய் விடலாம்.

வைரம் கூட தங்கத்தின் நடுவில்தான் ஜொலிக்கும் விதி அதைப் பெயர்த்து வெளியே எடுத்துவிட்டது. இப்பொழுது அவளுடைய எதிர்காலம் கேள்விக்குறி. அவள் சென்ற வழியோ ஆழமான புதைக்குழி.



* * *

மழை இன்னும் தூறிக் கொண்டே இருந்தது. சத்திரத் தின் சுவர்கள் மழையில் நனைந்து ஊறிக் கொண்டிருந் தன. இடிந்து விழத் தயாராக இருந்த கூரையிலிருந்து சொட்டு சொட்டாக மழைநீர் சொட்டிக் கொண்டிருந் தது.

அங்கிருந்த நான்கு பேரும் நிசப்தமாக பார்த்துக் கொண்டிருந்தார்கள். பார்ப்பதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியாமல் சைதன்யாவும் அவர்களுக்குள் ஒருத்தனாகி விட்டான். மதுவின் உடல் தூக்கித் தூக்கிப் போட்டுக் கொண்டிருந்தது. அழக்கூட திராணியற்றவளாக காந்திமதி தளர்ந்துபோய் தூணில் சாய்ந்திருந்தாள்.

"பாழாய் போனடாக்டருங்க. இவங்களை எல்லாம் சுட்டுத் தள்ளணும். பச்சைப் பிள்ளைக்கு வைத்தியம் பார்க்கக்கூட துட்டு வேணுமா? த்தூ." துப்பினான் ஒருத்தன். அவன் தாடி வளர்ந்து நீண்டு இருந்தது. ஆடை கள் கிழிந்து தொங்கிக் கொண்டிருந்தன. மடியில் திரு வோடும், இதயத்தில் மனிதநேயமும் இருந்தன. அதனால் தான் சொன்னான். "சீக்கிரமாக விடிந்தால் நன்றாக இருக்கும்."

"விடிந்தால் என்ன நடக்கும்?" இன்னொரு பிச்சைக் காரன் கேட்டான். சைதன்யாவுக்கு அரிசி கொடுத்தவன்.

"எல்லோரிடமும் உள்ள துட்டை சேர்த்து, அதோடு அரிசியையும் விற்றால் அந்த துட்டுக்கு புள்ளைக்கு மருந்து கிடைக்காதா?"

சைதன்யாவின் கண்கள் பனித்தன. ஊர் எல்லையில் பாழடைந்த சத்திரத்தில் தன்னைச் சுற்றிலும் உட்கார்ந் திருந்த பிச்சைக்காரர்களிடம் மனிதநேயத்தைக் கண்டான் அவன். தொலைவில் மின்னல் மின்னியது.

விடிவதற்கு இன்னும் இரண்டு மணி நேரம் இருந்தது.

"இரண்டு மணிநேரம்" என்றெண்ணின் கொண்டான் சைதன்யா. இரண்டு மணி நேரம் தாண்டிவிட்டால்...

ஆனால் இன்னும் இரண்டு மணி நேரம் காத்திருக்க வேண்டிய தேவை இல்லாமல் போய்விட்டது.

மினுக் மினுக்கென்று எரிந்து கொண்டிருந்த விளக்கு அணைந்துவிட்டது. அந்த சின்ன உடலில் இருப்பதற் காகக் கடைசிவரை போராடிய உயிர் துடிதுடித்தது. தோற்றுப் போய் அண்டத்தின் சகல சராசரங்களின் ஆக்கல் அழித்தலுக்கும் காரணகர்த்தாவான இறைவனுடன் ஐக்கியமாவதற்கு போய்விட்டது.

அதை முதலில் கவனித்தவன் அங்கிருந்த கிழவன் தான். அவன் கேசம் நரைத்து விட்டிருந்தது. வயோதிகத் தினால் உடலில் சுருக்கங்கள் விழுந்திருந்தன. சாவுக்காக காத்துக் கொண்டிருந்தான். எத்தனையோ சாவுகளைப் பார்த்திருக்கிறான்.

ஜுரத்தால் தூக்கித் தூக்கிப் போட்டுக் கொண்டிருந்த உடலின் வேகம் தணிந்ததுமே சைதன்யா நிம்மதியாக



மூச்சு விட்டுக் கொண்டான். உடல் மீது கையை வைத்துப் பார்த்து ஜுரம் குறைந்துவிட்டதாக நினைத்தான். ஆனால் அவன் திருப்தி அதிக நேரம் நிலைக்கவில்லை.

பக்கத்தில் இருந்த கிழவன் வெள்ளைத் துணியை எடுத்து முகத்தின் மீது போர்த்தினான்.

சைதன்யா சிலையாகிவிட்டான்.

அதுவரை ஓடியாடிக் கொண்டு தங்களுக்கிடையே புவளைய வந்து கொண்டிருந்த சிறுவன். கண்களுக்கு ஒளியாக இருந்தவன், தங்களுக்கு சந்தோஷத்தை அள்ளித் தந்தவன் இனி இல்லை என்ற உண்மையை அவனால் நம்ப முடியவில்லை. மரணம் இவ்வளவு நிசப்தமாக வந்து மனிதனை அழைத்துச் சென்று விடும் என்று நினைக்க வில்லை.

அழுகையும் வரவில்லை. அதையும் விட மோசமான நிலை. விரக்தி! அவன் மனம் முழுவதும் சூனியமாக இருந்தது. விஷயம் அப்பொழுதுதான் புரிந்தது போலும். காந்திமதி ஹோவென்று கதறிக் கொண்டிருந்தாள்.

"மதூ—மதூ!" என்று அந்த ஜீவனற்ற உடலை உலுக்கிக் கொண்டிருந்தாள். மகனின் தலையை மடியில் ஏந்திக் கொண்டு கண்ணீரால் குளிப்பாட்டிக் கொண்டிருந்தாள். "மதூ! ஒரு தடவை கண்ணைத் திறந்து பாரு கண்ணா!" என்று கதறிக் கொண்டிருந்தாள்.

சைதன்யா கண்களை மூடிக்கொண்டான். மேகங்களுக் கிடையே பூக்களால் அலங்கரிக்கப்பட்ட தேரில் மதூ போய்க் கொண்டிருந்தான். தந்தையைப் பார்த்துப் புன்

முறுவலுடன் கையை ஆட்டிக் கொண்டிருந்தான். தளிர் நடை போட்டுக் கொண்டே நேற்று வரையில் வீட்டுக்குள் வளைய வந்த மகன்! வீட்டிற்குத் திரும்பியதுமே ஓடி வந்து கட்டிக் கொள்ளும் மகன்!

"வருத்தப்படாதே" தேற்றிக் கொண்டிருந்தான் கிழவன்.

சைதன்யா நிமிர்ந்து பார்த்தான். அவன் கண்களில் ஜீவன் இருக்கவில்லை. எதையுமே பார்க்கவில்லை. வேதனையும் இல்லை.

கிழக்கே வெளிச்சம் தெரியத் தொடங்கியது. "இப்படி இருக்க வேதனை அதிகம்தான் ஆகும்" என்றான் ஒருவன்.

கிழவன் அவன் தோள் மீது கையை வைத்து "எடுத்துக் கொள்" என்றான்.

மகனை விட்டுப் பிரிவதற்கு அந்த தாய் ஒப்புக் கொள்ளவில்லை. அவள் கைகளை பலவந்தமாக பிரித்தார் கள்.

குழந்தையின் உடலை கிழிந்த பாயில் சுற்றினார்கள். சைதன்யா அந்தப் பாயை தன் கைகளில் எடுத்துக் கொண்டான். மெதுவாக மயானத்தை நோக்கி நடந்தான். பின்னாலேயே நான்கு பிச்சைக்காரர்களும் அந்தக் காட்சியைக் காண சகிக்காதது போல் இயற்கை கூட ஸ்தம்பித்து விட்டது. மழை நின்று விட்டது.

காட்டுச் செடிகளுடனும், சின்னச் சின்ன புதர்களுடனும் மயானம் வரவேற்பு அளிப்பது போல் தென்பட்டது. இலை உதிர்ந்த அரச மரத்தடியில் சைதன்யா உட்கார்ந்து கொண்டான்.



இருவர் குழியைத் தோண்டிக் கொண்டிருந்தார்கள். சைதன்யாவுக்கு பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டான் கிழவன். மண்ணை வாரிப் போட்டுக் கொண்டிருந்த சக பிச்சைக்காரர்களைப் பார்த்துக் கொண்டே சைதன்யாவை அவன் தேற்றினான். "வருத்தப் படாதே தம்பி! சாவுக்கும் வாழ்வுக்கும் வித்தியாசம் ரொம்ப சின்னது. என் பெஞ்சாதி பெத்த எட்டு புள்ளைகளையும் நான் இதே போல்தான் புதைத்தேன். சிலது செத்தே பிறந்தது. பிறந்து கண்களைத் திறந்து, பிறகு கண்களை மூடிய குழந்தைகள் சிலது. மொத்தம் எட்டு அவ பெத்துப் போடுவா. அதுங்க செத்துத் தொலைக்கும். நானோ வீட்டிலிருந்து மயானத்திற்கும், மயானத்திலிருந்து வீட்டிற்குமாக நடையாய் நடந்துகிட்டே இருப்பேன். காலம் ஊர்ந்துகொண்டே இருக்கும். அவ்வளவுதான். கடைசியில் அவளையும் புதைக்க வேண்டியதாயிற்று. மயானத்துக்கும் எனக்கும் கடன் தீர்ந்து விட்டது. நான் செத்துப் போனால் நானே வர வேண்டியதில்லையே. யாராவது தூக்கிக் கொண்டு வருவார்கள். இதில் என்னப்பா இருக்கு? வாழ்ந்தால் நமக்கு துக்கம். செத்தால் நம்ப ஆட்களுக்கு துக்கம். வாழ்ந்தாலும் செத்தாலும் துக்கம்தான்."

தோண்டி முடித்தார்கள். சைதன்யா மதுவைக் குழியில் படுக்க வைத்தான். மூடியிருந்த அந்தக் கண்களையும், பால் வடியும் அம்முகத்தையும் பார்த்துக் கொண்டிருந்தான்.

"தம்பி!" என்றான் கிழவன்." சொக்கலோகம் இருக்கா இல்லையா என்று நமக்குத் தெரியாது. இந்த ஜீவனை

அங்கே அனுப்பச் சொல்லி சடங்குகளை நடத்த நம் பக்கம் புரோகிதர்கள் யாரும் இல்லை. காரியங்களை நடத்த நம்பகிட்டே துட்டும் இல்லை. உன் மகன் அதிர்ஷ்டசாலி தம்பீ! அவனுக்காக வேண்டிக்கொள்ள நீ இருக்கிறாய். உன் மகன் ஆத்மாவுக்காக நீ வேண்டிக் கொள்."

சைதன்யா சிரித்தான். அந்தச் சிரிப்பில் வேதாந்தம் இருந்தது. வேதனை இருந்தது.

"எங்களை விட்டு விட்டுப் போய்விட்ட கடவுளின் ஆத்ம சாந்திக்காக, என் மகனின் உடலை விட்டுப்போன கடவுளை என்னவென்று வேண்டிக் கொள்ளட்டும் தாத்தா!"

குனிந்து மண்ணை எடுத்துக் கொண்டான். "மகனே! நம் நிலைமை நன்றாக இருந்திருந்தால் ஏ.சி. அறையில் வளர்ந்து ஆளாக வேண்டியவன் நீ. அது தெரிந்துதானோ என்னவோ உன்னை தன்மடியில் புதைத்துக் கொண்டிருக் கும் பூமித்தாயை மழைநீர் குளிர்வித்துக் கொண்டிருக் கிறது." உள்ளங்கையைப் பிரித்தான். தன்னிடமிருந்து பிறந்ததை தன்னோடு ஒன்று சேர்த்துக் கொள்வதற்காக மண் பாளம் பாளமாக குழியில் விழுந்து கொண்டிருந்தது.

* * *

ஜார்ஜ். டிரம்ஸ், கிடார் சத்தங்களுக்கிடையே எல்வின் ப்ரிஸ்லீயின் குரல் உரக்கக் கேட்டது. அங்கு இரவுக்கும் பகலுக்கும் வித்தியாசம் இல்லாதது போல் விளக்குகளின் வெளிச்சம் பரவியிருந்தது. கலர் கலராக விளக்குகளின் வெளிச்சம். விதவிதமான திரவங்களின் மீது பட்டு பிரதிபலித்துக் கொண்டிருந்தது.



அங்கே குடிமயக்கத்தில் கஸ்டமர்கள் தரைக்கும் சோபாவுக்கும் இடையே திரிசங்கு நிலையில் கிடந்தார் கள். வெள்ளை உடையில் வெயிட்டர்கள் அமைதியின் தூதர்களாக நடமாடிக் கொண்டிருந்தார்கள்.

"பேரர்!" ரவி அழைத்தான்.

"எஸ் சார்!" பேரர் அருகில் வந்தான்.

"இன்னும் இரண்டு பேரைக் கூப்பிடு."

அவனுக்குப் புரியவில்லை. அப்படியே நின்று கொண்டிருந்தான்.

"யாருடா அது? எனக்கு முன் யோசனை இல்லைன்னு சொன்னது?" எழுந்து நின்ற முயன்று, கால்கள் தள்ளாட சோபாவில் சரிந்தான். "அதனால்தான் மூன்று பேரை கூப்பிட்டேன். என்னைக் கொண்டு போய் டாக்சியில் போடுங்க."

மூவரும் கைத்தாங்கலாக அழைத்துக் கொண்டு போய் டாக்சியில் உட்கார வைத்தார்கள்.

"எங்கே போகனும்?" டிரைவர் கேட்டான்.

பேரர் விலாசத்தைச் சொன்னான்.

"எனக்கு மனைவியாக வரப் போகிறவள் வாங்கி யிருக்கிற எங்க அண்ணாவின் வீட்டுக்கு." ரவி தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான்.

டாக்சி புறப்பட்டு ஐந்து நிமிடங்கள் பயணம் செய்த பிறகு வீட்டின் முன்னால் வந்து நின்றது. ரவி கீழே இறங்கி தள்ளாடி விழப்போய் சமாளித்துக் கொண்டான். ஜேபியி

விருந்து நோட்டை எடுத்துத் தந்துவிட்டு "பாரு, ரூபாய் தானே?" என்றான்.

அவன் நீட்டிய நூறு ரூபாய் நோட்டை சட்டென்று வாங்கி ஜேபியில் வைத்துக் கொண்டு "பத்துதான் சார்!" என்றான் டிரைவர்.

"பாரு பிரதர்! என் மீது உனக்கு இருக்கும் நம்பிக் கைக் கூட என் தங்கைக்கு என் மீது இல்லாமல் போய் விட்டது. வீட்டை விட்டு எங்கேயோ போய்விட்டாள்." வாய்விட்டு அழுதிருப்பான். அதற்குள் கூர்க்கா வந்து உள்ளே அழைத்துச் சென்றான்.

மாடி ஜன்னல் வழியாக கிரண்மயி இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் உள்ளே வந்ததுமே, கீழே இறங்கி வந்தாள்.

"மறுபடியும் பாரிலிருந்துதானே?"

மூடிக் கொள்ளப் போன கண்களை வலுக்கட்டாய மாக திறந்து "மறுபடியும் என்ன? அங்கிருந்தேதான்" என்றான்.

எரிச்சலுடன் பார்த்தாள். "இந்தக் குடி மனிதனை எங்கே இட்டுச் செல்லும் என்று தெரியுமா?"

"சுவர்க்கத்திற்கு."

"ஆமாம் இப்படி உடம்பை பாழாக்கிக் கொண்டால் போய்ச் சேர வேண்டியது அங்கேதான்."

"என்ன செய்யட்டும்?" முகத்தை கைகளால் பொத்திக் கொண்டான். "துன்பத்தை மறக்கத்தான் குடிக்கிறேன். ஆனால் குடிக்கக் குடிக்க அந்த துன்பம் அதிகமாகிறதே"



அவள் அவனருகில் வந்து உட்கார்ந்து கொண்டு அவன் கைகளை தன் கைகளில் எடுத்துக் கொண்டாள். "எல்லோருக்கும் துன்பம் இருக்கத்தான் செய்யும். ஆனால் அதற்கு பரிகாரம் இது இல்லை" என்றாள்.

"பின்னே என்ன செய்யணும்?" குடிமயக்கத்திலேயே கேட்டான்.

"உங்க அண்ணன் கட்டாயம் கிடைத்துவிடுவார் என்று ஏனோ என் மனதில் தோன்றுகிறது. அது வரை யிலுமாவது நம் கடமைகளை நாம் கடைபிடிக்கணும்."

"அப்படி என்றால்?"

"அப்படி என்றால்," என்று அவள் ஏதோ சொல்லப் போனாள். அவன் இடைமறித்து "அப்படி என்றால் உன் பத்து லட்சத்தை இருபது லட்சமாக்கணும். அப்படித் தானே" என்றான்.

அந்த வார்த்தைகள் அம்பு போல் கூர்மையாக அவளைத் தாக்கின. அதுவரை பொறுமையாக இருந்து அவன் நடவடிக்கைகளை சகித்துக் கொண்டு வந்தாள். அவள் சாரதாவைப் போல் சாதுவான சுபாவமுடைய வள் அல்ல. அவன் அனாவசியமாக சுமத்திய இந்தக் குற்றச்சாட்டைக் கேட்டு அவள் அடியுண்ட புலியாக மாறினாள். அவன் மயக்க மெல்லாம் விடுபடுமாறு இழுத்து கன்னத்தில் ஒரு அறை விட்டாள்.

* * *

சைதன்யா தெருவில் நடந்து கொண்டிருந்தான். அவன் பக்கத்தில் எத்தனையோ ரிஷாக்களும், கார்களும்

போய்க் கொண்டிருந்த போதிலும் அவன் பொருட் படுத்தியதாக தெரியவில்லை.

அவன் என்ன யோசித்துக் கொண்டிருந்தான் என்று அவனுக்கே தெரியவில்லை. இப்பொழுது அவனை யாரா வது பார்த்தாலும் அடையாளம் தெரிந்து கொள்ள முடியாது.

இரண்டு நாட்களாக உணவு இல்லாததால் கால்கள் தள்ளாடிக் கொண்டிருந்தன. ஆனாலும் அவன் அதை லட்சியப்படுத்தவில்லை. மனைவியின் விஷயம் தான் பிரச்னையாகிவிட்டது. அவளும் நேற்றிலிருந்து ஒன்றுமே சாப்பிடவில்லை.

அதற்கு முதல் நாள்தான் பஸ் ஸ்டாண்டில் சாமான் களை சுமந்ததற்கு ஐந்து ரூபாய் கிடைத்தது. ஆனால் அங்கிருந்த கூலிகள் வெளி ஆளை அடையாளம் தெரிந்து கொண்டு துரத்திவிட்டார்கள்.

பிச்சை எடுக்க பிடிக்கவில்லை. ஆனால் மனைவி யின் பசி அவன் உறுதியைத் தளர்த்திக் கொண்டிருந்தது. இனி எந்த வேலையும் கிடைக்காவிட்டால் அதைத்தான் செய்ய வேண்டுமென்ற முடிவுக்கு மெல்ல மெல்ல வந்து கொண்டிருந்தான்.

இந்த யோசனையில் இருந்த போதே ஒரு கார் நேராக அவன் மீது மோதப் போனதும், பக்கத்தில் இருந்த யாரோ கையைப் பிடித்து இழுத்ததும் நிமிடத்தில் நடந்து முடிந்து விட்டது.

கார் வேகமாக போய்விட்டது. ஒரு வினாடி இந்தப் பக்கமாக பார்த்த மக்கள் திரும்பவும் தங்களுடைய வேலை



களில் மூழ்கிவிட்டார்கள். கீழே விழுந்த சைதன்யாவுக்கு கை கொடுத்துவிட்டு "சாகணும்னு இருக்கா?" என்று கேட்டான் அவன்.

"செத்தாலும் நன்றாக இருந்திருக்கும்" என்றான் சைதன்யா. உடைகளைத் தட்டிக் கொண்டே.

சைதன்யாவைக் காப்பாற்றிய அந்த நபருக்கு எழுபது வயது இருக்கலாம். ஆனாலும் திடமாகவே இருந்தார். வட இந்தியரைப் போல் தென்பட்டார்.

"உயிர் வாழ்வது சாவதற்காக இல்லை."

கீழே விழுந்ததால் சுளுக்கிக் கொண்ட காலை நீவிக் கொண்டே "ஒவ்வொரு வினாடியும் செத்துக் கொண்டி ருப்பதைவிட அதுவே மேல் இல்லையா?" என்றான் சைதன்யா.

உரையாடல் முழுவதும் இந்தி மொழியில் நடந்து கொண்டிருந்தது.

"யார் நீ?" கேட்டார் அவர்.

சைதன்யா சிரித்து விட்டான். "எனக்குக் கூட இந்தக் கேள்வி சமீபத்தில்தான் தோன்றியது. அதைப்பற்றித்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்."

தனக்கு முன்னால் பிச்சைக்காரனைப் போல் தோற்றமளித்துக் கொண்டிருந்த ஆள். உண்மையில் மேலுக்கு தென்படுவது போல் சாதாரணமானவன் இல்லை என்று அவருக்குத் தோன்றியது. உடைகள் எவ்வளவு மாசடைந்து இருந்தாலும், என்னதான் தாடி வளர்ந்

திருந்தாலும் கண்களில் இருந்த அறிவுச் சுடர் மனிதனை காட்டிக் கொடுத்துவிடும்.

"உனக்கு இங்கே பிழைப்பது கஷ்டமாக இருந்தால் என்னோடு வா. என்ன வேலை செய்யத் தெரியும் உனக்கு?"

சைதன்யா பதில் பேசவில்லை. என்ன வேலை தெரியும் அவனுக்கு? உண்மையில் அவனுக்கு எதுவுமே தெரியாது. எவ்வளவு கசப்பான உண்மை?

"எங்க வீட்டிலேயே வேலை செய்யலாம். என் பேரன் களை ஸ்கூலுக்கு அழைத்துக் கொண்டு போகலாம். என் கார் டிரைவராக இருக்கலாம். என்..." அவர் பேச்சை இடையிலேயே கத்தரித்துவிட்டு "டிரைவிங் தெரியும் எனக்கு" என்றான்.

"பின்னே என்ன? அது போதும்" என்றார். எதிர் பாராத இந்த சம்பவம் அவனது வாழ்க்கையை இன்னொரு திருப்பத்திற்குக் கொண்டு வந்தது.

* * *

சைதன்யாவை தன்னோடு பாட்னாவுக்கு அழைத்துச் சென்ற அந்த நபரின் பெயர் சங்கர்லால். சமையல் எண்ணெ வியாபாரத்தில் ஃபார்வார்ட் காண்ட்ராக்ட் செய்து கொண்டிருந்தார். அந்த வேலை யாகத்தான் அவர் தமிழ்நாட்டிற்கு வர நேர்ந்தது.

ஸ்டேஷனுக்கு அவரை அழைத்துப் போவதற்காக கார் வந்தது. அவருடன் சைதன்யாவும், காந்திமதியும் இறங்கினார்கள். ஷா அலி சாலையில் ஒரு நவீன பங்களா வின் முன்னால் கார் வந்து நின்றது.



"இதுதான் எங்கள் வீடு" என்றார் சங்கர்லால்.

வேலைக்காரன் ஓடிவந்தான். "இவர்களுக்கு நம்ப பழைய டிரைவர் வீட்டைக் காட்டு" என்றார். பங்களா வுக்குக் கொஞ்ச தூரத்தில் சர்வென்ட் குவார்டர்ஸ் கட்டப்பட்டிருந்தன. குவார்டர்ஸ் என்றால் பெரிதாக ஒன்றுமில்லை. ஒரு பெரிய அறை. பக்கத்திலேயே சமையலறை அவ்வளவுதான்.

"போதும்" என்றான் சைதன்யா. வீட்டைப் பார்த்து விட்டு. "சத்திரத்து திண்ணையை விட இது மேல். நம்ப ஸ்டேட்டஸ் கொஞ்சம் உயர்ந்திருக்கிறது என்று அர்த்தம்." வாய்விட்டுச் சிரித்தான்.

வேடிக்கை என்னவென்றால் அவன் ஒரு பிசினெஸ் மேக்னெட்டாக இருந்த போது எப்போதும் சீரியசாகவும் கம்பீரமாகவும் இருப்பான். எல்லாவற்றையும் இழந்து விட்டதுமே அவனுக்கு அத்தனையும் தலை முழுகி விட்டாற்போல் அக்காடா என்றிருந்தது. எந்தத் தொந்தர வும் கிடையாது. வாய்விட்டு சிரிக்க முடிந்தது. ஆனால் அநதச் சிரிப்புக்குப் பின்னால் வாழ்க்கை கற்றுத் தந்த பாடம் இருந்தது.

இருவரும் குளித்து முடித்ததுமே வேலைக்காரன் வந்து முதலாளி அழைப்பதாகச் சொன்னான்.

சங்கர்லால் முன தோட்டத்தில் உட்கார்ந்திருந்தார். மாலை நேரம் என்பதால் மரங்களிலிருந்து வந்து வீசிய காற்று மனதை இளைப்பாறச் செய்து கொண்டிருந்தது. பௌன்டெனுக்குப் பக்கத்திலேயே இரண்டு சிறுவர்கள் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

காந்திமதியும், சைதன்யாவும் வருவதைப் பார்த்து விட்டுப் தாத்தாவிடம் ஓடி வந்தார்கள்.

"என் பேரன்கள்" என்றார். சங்கர்லால்.

"நமஸ்தே" என்றான் சைதன்யா கைகளை ஜோடித்து.

ஹலோ என்பது போல் ஸ்டைலாக தலையை அசைத்தான் பெரியவன். திரும்பவும் இருவரும் விளை யாடப் போய்விட்டார்கள்.

டீப்பாய் மீது இருந்த டூப்ளிகேட் கார் சாவியை எடுத்துக் கொடுத்துவிட்டு "காரை ரொம்ப சுத்தமாக வைத்திருக்கணும். இது போன்ற விஷயங்களில் நான் ரொம்ப ஸ்ட்ரிக்டாக இருப்பேன்" என்றார்.

சைதன்யா தலையை அசைத்தான். காந்திமதி பங்களாவையும், தோட்டத்தில் விளையாடிக் கொண்டி ருந்த சிறுவர்களையும் பார்த்துக் கொண்டிருந்தாள். "காரை என் மகன் எடுத்துக் கொண்டு போயிருக்கிறான் போலிருக்கு. வந்து விடுவான்." வார்த்தைகள் முடிவதற் குள்ளாகவே காண்டெசா கார் கேட்டைத் தாண்டி வேகமாக வந்தது.

அதிலிருந்து முப்பது வயது மதிக்கத்தக்க இளைஞன் ஒருவன் இறங்கினான். விரலில் வைர மோதிரமும், முகத் தில் மிடுக்கும் இருந்தன.

"என் மகன் சம்பாலால்" என்றார்.

அதற்குள் அவன் அருகில் வந்தான். "யார் இவங்க?" ஆங்கிலத்தில் கேட்டான்.



"நான்தான் அழைத்து வந்தேன். தமிழ்க்காரங்க. எந்த வேலையும் இல்லையாம். நமக்கு எப்படியும் டிரைவர் வேண்டுமில்லையா. அதனால்."

உரையாடல் முழுவதும் ஆங்கிலத்தில் நடந்து கொண்டிருந்தது.

"இப்படிக் கண்டவர்களை எல்லாம் கொண்டு வந்து வைத்தால், வீட்டை கொள்ளையடிப்பாங்க."

"இல்லை. நம்பிக்கையானவர்களாகத்தான் இருக் காங்க."

"மொதலில் எல்லோரும் அப்படித்தான் தென்படு வாங்க" என்று சொல்லிவிட்டு உள்ளே போய்விட்டான்.

சங்கர்லால் திரும்பி "காரை எடுத்துக்கொண்டு போய் சுத்தமாக துடைத்து வை. இன்றிலிருந்தே நீ வேலையில் சேர்ந்து விட்டதாக கணக்கு" என்றார். சைதன்யா தலையை சைத்துவிட்டு சாவியை வாங்கிக் கொள்ளப் போன பொழுது ஏதோ சந்தேகம் வந்தவராக "எது வரை யில் படித்திருக்கிறாய்?" என்று கேட்டார்.

"கம்மி. ரொம்பவும் கம்மி" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து நகர்ந்தான் சைதன்யா. காந்திமதி அவனைத் தொடர்ந்தாள்.

பால்கனியிலிருந்து சம்பாலால் அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தான்.

# 11

ஜாயினிங் ரிப்போர்ட் எழுதித் தந்தாள் சாரதா. அவள் செய்ய வேண்டிய வேலைகளை விவரித்தார் ஹெட்கிளார்க்.

தபால் வந்ததுமே லெட்ஜரில் எழுதுவது, நம்பர் கொடுப்பது அவள் வேலை. அதற்குச் சம்பளம் ஐநூறு ரபாய். ஒரு ஆள் சாதாரணமாக வாழ்க்கை நடத்துவதற்கு அது போதும். அவளுக்கு கூண்டிலிருந்து தப்பித்துக் கொண்டு வெளியில் வந்தாற்போல் இருந்தது.

யோசனையில் ஆழ்ந்தவாறே வேலை செய்தாள். மதிய நேரத்தில், கூட வேலை பார்க்கும் கிளார்க் ஒருத்தன் அருகில் வந்தான். இளைஞன். சுமார் இருபத்தைந்து வயது இருக்கும்.

"லஞ்ச் நேரத்தில் போய் வேலை பார்க்கிறீங்களே?"

அவள் நிமிர்ந்து பார்த்தாள்.

"வாங்க. காபி குடிப்போம்."

"காண்டீன் எங்கே இருக்கு?"

அவன்முகம் சந்தோஷத்தால் மலர்ந்துவிட்டது. "ஆபீஸ் காம்பவுண்டிற்கு உள்ளேயேதான் இருக்கு. வாங்க" என்றான்.

"உங்களுடன் வருவதற்காக கேட்கவில்லை. நானே போய்க் கொள்கிறேன்" என்று சொல்லிவிட்டு மறுபடியும் வேலையில் ஆழ்ந்து போய்விட்டாள்.



ப்யூஸ் போன பல்பு போல் அவன் முகம் கருத்து விட்டது. அங்கிருந்து போய்விட்டான்.

சாரதாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவள்தானா இவ்வளவு பேசியிருக்கிறாள்? ஆண்களைப் பார்த்தால் வெட்கத்தால் கூனிக் குறுகும் அவளுக்கு எப்படி இவ்வளவு தைரியம் வந்தது?

தியரி ஆஃப் ரெவல்யூஷனைப் பற்றியும், ஸ்ட்ரக்கிள் ஃபர் எக்ஸிஸ்டென்ஸ்க்காக இயற்கை அளித்த வரங் களைப் பற்றியும் அவளுக்குத் தெரியாது.

* * *

சைதன்யா பனாரஸ்க்குப் போய் இரண்டு நாட் களாகி விட்டன. பிசினெஸ் விஷயமாக சங்கர்லால் அவ்வாறு வெளி ஊர்களுக்கு போவது வழக்கம். ஆபீஸ் விஷயங்களை எல்லாம் மகன் பார்த்துக் கொள்வான்.

அவர்கள் திரும்பி வருவதற்கு இன்னும் இரண்டு நாட்கள் இருந்தன. காந்திமதி சமையல் செய்து முடித் தாள். தான் ஒருத்திதான் என்பதால் அதிக நேரம் பிடிக்க வில்லை.

மாலை ஐந்து மணி அடித்ததும் அவுட்ஹவுஸ் வாசலில் நின்று கொண்டு தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்த சங்கர்லாலின் பேரன்களையே பார்த்துக் கொண்டிருந்தாள். சைதன்யா வேலையில் சேர்ந்து இரண்டு மாதம் ஆகிவிட்டது. சங்கர்லால் ஐநூறு ரூபாய் கொடுத்து வந்தார். சரியாக் முதல் தேதி மாலையில் சம்பளம் கைக்கு வந்துவிடும்.

அவளது பழைய அழகு திரும்பி வந்தது. எந்த ஆபரணமும் இல்லாத போதிலும் அவளிடம் ஏதோ கம்பீரம் அவள் அழகை மேலும் கூட்டியது. சிவந்த மேனி. அத்துடன் பெரிய கண்கள் வேறு.

சிறுவர்கள் அடித்த பந்து அவள் காலடியில் வந்து விழுந்தது. குனிந்து எடுத்துத் தரப்போனாள்.

"நீங்க எதுக்கு? அவர்களே எடுத்துக் கொள்வார்கள்." ஹிந்தியில் குரல் கேட்டதும் நிமிர்ந்துப் பார்த்தாள். எதிரே சம்பாலால்!

அவள் ஓரடி பின்னால் வைத்தாள்.

"உங்களுக்கு ஹிந்தி தெரியுமா?" கேட்டான்.

தெரியாது என்பது போல தலையை அசைத்தாள்.

"அப்போ எப்படி?" தனக்குள் சொல்லிக் கொள்வது போல முணுமுணுத்தான்.

"பரவாயில்லை. ஆங்கிலத்தில் சொல்லுங்கள்" என்றாள் அவள் ஆங்கிலத்தில்.

"உங்களுக்கு உள்ளூர கொஞ்சம் பெருமையாக இருந்தது. என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான் இவன் தன்னைப் பற்றி? ஆனால் அது அதிக நேரம் நிலைக்க வில்லை.

"பின்னே உங்கள் கணவர் ஆங்கிலம் தெரியாதுன்னு சொன்னாரே?"

திடுக்கிட்டாள். ஒரு பொய்யை மறைக்க இன்னொரு பொய். "அவருக்குத் தெரியாது" என்றாள்.



"ஓ... லவ் மேரேஜ்!" என்றான்.

அவள் பதில் பேசவில்லை.

"உங்களைப் பார்த்தால் பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவங்க போலிருக்கு. படித்தும் இருக்கீங்க. டிரைவிங் கைத் தவிர வேறு எந்தத் தகுதியுமே இல்லாத இவனை எப்படிக் காதலித்தீங்க?"

அவள் மௌனமாக இருந்தாள்.

"நீங்க இவனோடு இப்படி வந்துவிட்டதற்கு உங்க பெற்றோர் ரொம்பவும் வருத்தப்பட்டுக் கொண்டு இருப்பாங்க இல்லையா?"

அதற்குள் சிறுவர்கள் இருவரும் தந்தையிடம் வந்து வெளியே போகலாம் என்று நச்சரித்தார்கள்.

"குழந்தைகளுக்குக் கொஞ்சம் தலைவாரி விடுங்கள். அவங்க அம்மா நாளைக்குத்தான் வருவாள்" என்றான்.

அவள் தன் வீட்டிலிருந்து சீப்பை எடுத்து வந்து வாருவதற்குள்ளாகவே அவன் காரை காரேஜிலிருந்து எடுத்தான். சிறுவர்கள் இருவரும் தந்தையின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டார்கள்.

"நீங்களும் வாங்க" என்று அழைத்தான்.

"நானா!" என்றாள் அவள் வியப்புடன்.

"ஆமாம். பத்து நிமிஷத்தில் திரும்பி வந்து விடலாம். அதற்குள் பசங்களுக்கு ஏதாவது தேவை இருந்தால் ரொம்பக் கஷ்டமாகிவிடும்.

வேறு வழியின்றி அவள் காரில் ஏறிக் கொண்டாள். ஏசிசி. ரெஸ்டாரென்டிற்கு முன்னால் வந்து நின்றது கார். அவள் கண்ணாடியை உயர்த்தி, உள் பக்கம் லாக் செய்து விட்டு கதவை மூடினாள்.

எல்லோரும் உள்ளே சென்றார்கள். அவன் டின்னருக்கு ஆர்டர் கொடுத்தான். பியானோ இசை மெலிதாக கேட்டுக் கொண்டிருந்தது. ஹால் முழுவதும் மங்கலான வெளிச்சம் பரவியிருந்தது. எல்லோரும் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். சந்தோஷம் முழுவதும் தமக்கே சொந்தம் என்பது போல் ஆனந்தமாக இருந்தார்கள். இவர்கள் உலகத்தில் பணம் ஒரு பிரச்னை இல்லை. உடல் நலக் கோளாறுகள் இல்லை. எரிந்து விழுவதோ திட்டிக் கொள்வதோ கிடையாது. எல்லாமே சந்தோஷம்தான்.

"என்ன யோசிக்கிறீங்க? டின்னர் வந்து ஐந்து நிமிடங்கள் ஆகிறது" என்றான். அவள் திடுக்கிட்டு நாப்கினை எடுத்துக் கொண்டாள்.

"ஷெல் ஐ ஆஸ்க் ஃபார் கஸாட்டா?"

"நோ, ஐ பிரிஃபர் புட்டிங்."

அவனுக்கு சந்தோஷமாக இருந்தது. அவளைப் பார்த்தால் பணக்காரக் குடும்பத்திலிருந்து வந்தவளைப் போலிருந்தது. ஏதோ ஒரு மயக்கத்தில் தன் வீட்டாரை விட்டு விட்டு இவனுடன் ஓடி வந்துவிட்டாள் போலும். அந்த காதல் மயக்கம் எல்லாம் இதற்குள் முற்றிலுமாக விடுபட்டுப் போயிருக்கும். எதை இழந்துவிட்டாள் என்று காட்ட வேண்டும்.



டின்னர் முடியும் போது ஒன்பது மணி ஆகிவிட்டது. கார் மெதுவாக போய்க் கொண்டிருந்தது. ஜன்னல் வழியாக காற்று அலை அலையாக வந்து வீசிக் கொண்டிருந்தது. சீட்டுகள் மெத்தென்று இருந்தன. காற்றுக்கு புடவைத் தலைப்பு படபடத்துக் கொண்டிருந்தது. பல நாட்கள் கழித்து சிறுவர்களுடன் சேர்ந்து இவ்வாறு வெளியில் போனது மிக நன்றாக இருந்தது.

மறுநாள் சிறுவர்கள் இல்லாமல் தான் மட்டும் அவனுடன் போனதும் நன்றாகத்தான் இருந்தது.

* * *

"அப்படி என்றால் ஒரு மாதத்திற்குள் அவ்வளவு ஸ்டாக்கை எங்களுக்கு அனுப்புகிறேன் என்று சொல்றீங்களா?" ஜப்பானிலிருந்து வந்த பிரதிநிதி கேட்டார்.

"கண்டிப்பாக." ஷிவாஸ் ரீகலை இரு கண்ணாடி டம்ளர்களிலும் ஊற்றினான் ரவி.

"மிஸ்டர் ரவி! நீங்கள் இந்த காண்ட்ராக்டை ஒப்புக் கொண்டதற்கு மகிழ்ச்சி. வழக்கத்தைவிட பத்து சதவீதம் அதிகமாக தருவதற்கு எங்கள் கம்பெனி ஒப்புக் கொண்டு விட்டது."

"தட்ஸ் ரியலி நைஸ் ஆஃப் யூ"

"இதோ காண்ட்ராக்ட் ஃபாரம். ஃபெயில்யூர் கிளாஸ் நாற்பது சதவீதம். ஃபார்ட்டி பர்செண்ட் ஆஃப் தி டோட்டல் வேல்யூ."

"நோ பிராப்ளம்."

இருவரும் கையொப்பமிட்டார்கள்.

இரவு ஒன்பது மணிக்கு அவன் வீட்டிற்கு வந்து சேரும் போது மேனேஜர் அப்பொழுதுதான் கிரண்மயி யுடன் பேசிவிட்டுப் போய்க் கொண்டிருந்தார். எதிரி நாட்டு உளவாளியைப் பார்ப்பது போல் அவரைப் பார்த்துக் கொண்டே ரவி உள்ளே நுழைந்தான்.

கிரண்மயி சோபாவில் உட்கார்ந்திருந்தாள். அவன் ஆர்வத்தோடு "கிரண்!" என்றான். "ஐந்து லட்சத்திற்கு காண்ட்ராக்ட் சம்பாதித்து விட்டேன்."

அவள் முகத்தில் மகிழ்ச்சி இல்லை. "தெரியும்" என்றாள் நிதானமாக குரலில்.

"நாளையிலிருந்து வேலை தொடங்கிவிடணும்." உற்சாகத்தோடு சொன்னான் அவன்.

"தேவையில்லை ரவி! மேனேஜரிடம் இப்பொழுது தான் சொன்னேன், கணக்கில் இருபத்தையாயிரம் நஷ்டம் என்று எழுதிக் கொள்ளச் சொல்லி.

ரவி தளர்ந்து போனவனாக "ஏன்?" என்றான்.

"நீ இந்த நிறுவனத்திற்கு எந்த விதத்திலேயும் பிரதிநிதி இல்லை என்று அறிவித்து, இந்த நஷ்டம் வராமல் செய்யலாம். ஆனால் அதில் எனக்கு விருப்பம் இல்லை அதனால் நஷ்டமடைவதற்கே தயாராகிவிட்டேன்."

"நான் செய்யும் ஒவ்வொரு காரியமும் நஷ்டத்திற்குத் தான் வழி வகுக்கும் என்ற நம்பிக்கை உங்களுக்கு எதனால் வந்ததுன்னு கொஞ்சம் சொல்கிறாயா?" சிவந்து போன முகத்துடன் கேட்டான்.



"கட்டாயம்! சீசன் இல்லாத சமயத்தில் ஒரு மாதத்திற்குள் ஐந்து லட்சம் மதிப்புடைய இறால்களை சம்பாதிக்க முடியும்னு எப்படி நினைத்தீங்களோ அதே நிம்பிக்கையில் தான்."

* * *

"இன்னிக்கு சினிமாவுக்குப் போகலாம்" என்றாள் காந்திமதி.

"சரி" என்றான் சைதன்யா சாப்பிட்டுக் கொண்டே.

"முதலாளியிடம் கார் வேணும்னு கேட்டு வாங்கிக் கொள்ளுங்கள்."

சாப்பிட்டுக் கொண்டிருந்த கவளத்தை நிறுத்திவிட்டு சைதன்யா நிமிர்ந்து பார்த்தான்.

அவள் சொல்லிக் கொண்டே போனாள். "அப்படியே ஏதாவது ஹோட்டலில் சாப்பிடுவோம். கொஞ்ச நேரம் சுற்றிவிட்டு வரலாம். மாறுதலாக இருக்கும்."

சைதன்யா சிரித்தான். "நான் சங்கர்லாலின் டிரைவர். அவருடைய நண்பன் இல்லை."

"பரவாயில்லை. கேட்டால் மறுக்க மாட்டார்."

"சாரி. நான் கேட்க மாட்டேன்.

"ஏன்? எதனால்?" பட்டென்று கேட்டாள்.

"எனக்குச் சில கொள்கைகள் இருக்கு."

"அதில் ஒன்று மனைவியைக் கஷ்டப்படுத்துவா?" பழிப்பதுபோல் கேட்டாள்.

"நான் உன்னை எந்த கஷ்டமும் படுத்தவில்லை காந்திமதி! நீ என் கஷ்டங்களில் பங்கு எடுத்துக் கொள்கிறாய். அவ்வளவுதான்."

"ஆமாம். நீங்க செய்த முட்டாள் தனத்தினால் வந்த கஷ்டங்கள்."

"காந்திமதி!" அடியுண்டவன் போல் பார்த்தான். "நான் செய்த முட்டாள்தனம் என்ன?" நிதானமான குரலில் கேட்டான்.

அந்தக் கேள்வியால் அவள் மனதில் இவ்வளவு நாளாக அடங்கியிருந்த எரிமலை வெடித்துவிட்டது. "என்னையே சொல்லச் சொல்லறீங்களா? உங்களுக்குத் தெரியாதா அது என்னவென்று? அப்படி யென்றால் சொல்கிறேன் கேட்டுக்கொள்ளுங்கள் என்றாள். "ஏதோ குடி மூழ்கிப் போய்விட்டாற் போல் நன்றாக இருந்தவளை இழுத்துக் கொண்டு வந்தீங்க. கையில் சல்லிக்காசு கூட இல்லாமல் நடுத்தெருவில் நிறுத்தினீங்க. உங்க கொள்கைகளுக்கு மகனை பலி கொடுத்தீங்க. கட்டிய மனைவியைச் சொல்ல முடியாத கஷ்டங்களுக்கு உள்ளாக்குறீங்க. இதை எல்லாம் நீங்க என்னவோ பெரிய மனுஷனைப் போல் செய்து விட்டதாக எண்ணி பெருமைப்பட்டுக் கொள்ளாதீங்க. எதுவுமே கையாலாகாதவன் செய்கிற காரியம் இது. ஆமாம். ஒரு முறை சொத்து முழுவதும் போய்விட்ட பிறகு உங்களுக்கு எதுவுமே செய்யத் தெரியாதுன்னு இப்பொழுது புரிந்துவிட்டது. இப்போ நான் என்ன செய்வது, தலையில் அடித்துக் கொண்டு அழுவதைத் தவிர?" என்று கத்திக் கொண்டே அழுதாள்.



ஹிஸ்டீரியா வந்தவள் போல் அவள் அழுதது அவனை நெகிழ்த்தவில்லை. அவள் சாந்தமடைந்த பிறகு சொன்னான். "நீ சொன்னது எல்லாம் உன்னிடம் தொடக்கத்திலிருந்து வந்த உணர்வுகள் என்று சொன்னால் என்னால் நம்ப முடியவில்லை காந்திமதி! வீட்டை வீட்டை விட்டு வந்து விட்டோம் என்றால், வர வேண்டிய நிலையை ஏற்பட்டு விட்டது. வியாபாரம் என்றால் அப்படித்தான். மதுவின் மரணம் உன்னைவிட என்னைத்தான் அதிகம் தளர்த்திவிட்டது. ஆனால் நம்மால் செய்யக் கூடியது எதுவுமே இல்லை. நான் செய்தது எல்லாம் 'தவறு' என்ற உணர்வு இவ்வளவு நாளாக இல்லாமல் இப்பொழுது புதிதாக ஏற்பட்டிருக்கிறது என்றால், நாம் இருந்த சூழ்நிலைக்கு நேர்மாறான உலகம் உனக்கெதிராக தென்படுவதுதான் அதற்குக் காரணமாக இருக்கலாம் என்று நினைக்கிறேன். விளக்கின் அருகில் போகாதே காந்திமதி! எரிந்து போய் விடுவாய்."

அவன் சொன்ன வார்த்தைகளுக்கு அர்த்தம் அவளுக்கு மேலும் இரண்டு வருடங்களுக்குப் பிறகுதான் புரிந்தது. ஆனால் அவன் மட்டும் அந்த வெள்ளத்தின் தாக்கத்தை விரைவிலேயே சந்திக்க வேண்டியிருந்தது.

அன்று சனிக்கிழமை.

சேம்பர் ஆஃப் காமர்சிலிருந்து வீட்டை நோக்கி காரை ஓட்டி வந்து கொண்டிருந்தான் சைதன்யா. பின் சீட்டில் சாம்பாலாலும் இன்னொரு வியாபாரிந்து உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். ஸ்டாக் எக்ஸ்சேஞ்சைப் பற்றியும், ஷேர்களைப் பற்றியும் உரையாடிக் கொண்டிருந்தார்கள். இருவருக்கும் அந்த விஷயங்களில்

அவ்வளவு அனுபவம் இல்லையென்றும், கேவலம் அரை குறை ஞானத்தால் எதிராளியை விட தனக்கு நன்றாகத் தெரியும் என்ற நம்பிக்கையை அடுத்தவரிடம் ஏற்படுத்து வதற்காக முயன்று கொண்டிருக்கிறார்கள் என்றும், அவர்கள் பேசத் தொடங்கிய இரண்டாவது நிமிடமே தெரிந்து போய் விட்டது.

"புல்ஸ் மார்க்கெட் இல்லையா, ஒரு பத்தாயிரம் ஷேர்களை வாங்கலாம்னு இருக்கிறேன்."

"அதைவிட பார்ட்னர்ஷிப்பில் சேருங்கள். வருமான வரி தொல்லை குறையும்."

அவர்களுடைய பேச்சைக் கேட்டபோது சைதன்யா வுக்கு சிரிப்பு வந்தது.

"இந்த டிவால்யுவேஷன் வந்ததால் போஸ்டன் கம்பெனியின் ஷேர்கள் படுத்துவிடும்." அந்த வியாபாரி சொல்லிக் கொண்டிருந்தார்.

சைதன்யா சாதாரணமாக அதிகம் பேச மாட்டான். ஆனால் அந்த பலவீனமான தருணம் அவனை பேச வைத்து விட்டது. அதுவரை மௌனமாக கேட்டுக் கொண்டிருந்த வனால் அதற்கு மேல் பொறுத்துக் கொள்ள முடியாமல் போய்விட்டது.

"நம் நாட்டில் நடந்த டிவால்யுவேஷனுக்கும், எங்கேயோ இருக்கும் போஸ்டன் கம்பெனிக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை" என்றான் பின்னால் திரும்பாம லேயே.

காருக்குள் ஒரு வினாடி ஆழ்ந்த நிசப்தம் நிலவியது. அந்த வியாபாரியின் முகத்தில் ரத்தம் வற்றிவிட்டது. வெகு



நேரம் மௌனமாக இருந்து விட்டு தன் வீட்டின் அருகில் இறங்கிக் கொண்டான்.

வீட்டிற்குத் திரும்பி வந்ததுமே காரை விட்டு இறங்கிய சம்பாலால் கதவை ஓங்கிச் சாத்திக் கொண்டே "காருக்கு முன் சீட், பின் சீட் எதுக்காக வைத்திருக்காங்க தெரியுமா? முன் சீட்டில் டிரைவர் உட்காருவதற்கும், பின் சீட்டில் முதலாளி உட்காருவதற்கும்" என்றான்.

சைதன்யா அவனை நிமிர்ந்து பார்த்தான். உதடு களில் அதே சகஜமான புன்னகையுடன் "கால வெள்ளத் தில் பின்னால் இருப்பவன் முன்னுக்கு அடித்துக் கொண்டு வரப்படலாம். அதுதான் விதி" என்றான்.

அப்பொழுதுதான் அங்கே வந்த வேலைக்காரன் இந்த வார்த்தைகளைக் கேட்டுவிட்டு களுக்கென்று சிரித்து விட்டான். சம்பாலால் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் "வார்த்தைக்கு வார்த்தை எதிர்த்துப் பேசுகிறாயா? இடியட்!" என்று கன்னத்தில் பளீர் என்று அறைந்தான்.

அடுத்த வினாடி சம்பாலால் ரோஜா புதருக்கிடையே கிடந்தான். அதற்குப் பிறகு அவன் உடல் பந்து போல் காற்றில் எழும்பி மல்லிகை கொடி பக்கத்தில் கால் வாய்க் குள் விழுந்தது.

"பாஸ்டர்ட்! அப்பா வந்ததுமே உன்னை வேலையி லிருந்து நீக்கிவிடுகிறேன் பார்." வேலைக்காரர்கள் வந்து கைத்தாங்கலாக சம்பாலாலை தூக்கி நிறுத்திக் கொண்டிருந்தார்கள்.

தன்மானத்தை குழி தோண்டிப் புதைக்க முடியாத சைதன்யா சொன்னான். "மைண்ட் யுவர் டங்! நானே விட்டுடு விடுகிறேன் இந்த வேலையை."

வினாடி நேரம் சம்பாலாலின் முகம் மலர்ந்தது.

அது ஏன் என்று ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு சைதன்யாவுக்குப் புரிந்தது.

அவுட் ஹவுஸுக்கு வந்தான் சைதன்யா. காந்திமதி விளக்கை ஏற்றிக்கொண்டிருந்தாள்.

"காந்திமதி!" என்றான் தாழ்ந்த குரலில். "இங்கே கூட நம் கணக்கு தீர்ந்துவிட்டது. வா போகலாம்."

அவளுக்கு ஒரு வினாடி அவன் சொன்னது புரிய வில்லை. புரிந்ததுமே சட்டென்று எழுந்து நின்று "என்ன நடந்தது?" என்றாள்.

"வேலையை விட்டு விட்டேன்."

"ஏன்? என்ன நடந்தது?" அவள் முகம் வாடிப் போய் விட்டது.

"என்னவானால் என்ன? வேலையைவிட்டு விட்டேன். இங்கிருந்து போய் விடலாம்."

"எங்கே போவது?" என்றாள். "ஏதோ சின்னவீடு. வேளைக்குக் கொஞ்சம் உணவு கிடைக்கிறது இங்கே. இதையும் விட்டு விட்டுப் போய் விட்டால்? ஒரு தடவை அந்த பழைய நாட்களை நினைத்துப் பாருங்கள்."

"எதுவும் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. தன் மானத்தை இழக்க முடியாது என்னால்."



"இப்படிப்பட்ட அர்த்தமில்லாத பிடிவாதத்தால் தான் இவ்வளவு தூரத்திற்குக் கொண்டு வந்துட்டீங்க. இன்னும் எதுக்கு?" எரிந்து விழுந்தாள்.

ஒரு வினாடி நிசப்தம். "காந்திமதி!" அவன் மெதுவாக அழைத்தான். "அன்றிரவு சகலத்தையும் இழந்துவிட்டோம் என்று தெரிந்த பிறகு எங்கேயாவது போய்விடலாம் என்றேன். வேண்டாம் என்று நீ தடுத்தாய். அப்பொழுது நான் என்ன சொன்னேன் என்று நினைவு இருக்கா? என்றுமில்லாத விதமாக இன்று முதல் தடவையாக என் வார்த்தையை எதிர்த்துப் பேசுகிறாயே' என்று கேட்டேன். நினைவு இருக்கா?"

"இருக்கு. அது முதல் தடவை. ஆனால் இதுதான் கடைசி தடவை."

அவனுக்கு ஆயிரம் வோல்ட் மின்சாரம் ஷாக் அடித்தாற் போல் இருந்தது. முதலில் இந்த வார்த்தைகளை அவள் எந்த அர்த்தத்தில் சொன்னாள் என்று அவனுக்குப் புரியவில்லை. ஆனால் அவளோ இந்த வார்த்தைகளைச் சொல்லுவதற்குத் தன் சக்தியெல்லாம் திரட்டிக் கொள்ள வேண்டியிருந்தது. வழிவழியாக வந்த சம்பிரதாயங்களையும், இரத்தத்தோடு ஜீரணித்துவிட்ட பண்பாட்டையும் மீறுவது அவ்வளவு சுலபம் இல்லை. ஆனால் மீற வேண்டும். வேறு வழியில்லை. தேவை பந்தத்தைவிடச் செய்தது.

காட்டிற்கு நடுவில் ஏற்படுத்திக் கொண்ட பர்ண சாலையில் இருக்கும் திருப்திக்காகத்தானா ராவணனை மறுத்தாய் நீ? சொல்லு சிதா சொல்லு. ராமனுடன் காட்டில் என்ன இருந்ததென்று அவ்வாறு செய்தாய்? காதலா? களைப்பால் தளர்ந்து போன உடல், உலர்ந்து

போன வயிறு, நட்பும் பிரிவும்... கடைசியில் மிஞ்சியது எது? ஒரு பெண்ணுக்காக அத்தனை பேர் வானரங்களை பலி கொடுக்கும் உரிமையை ராமனுக்கு யார் தந்தார்கள்? நளன் மீது தமயந்திக்கு உள்ள அன்பு உயர்ந்ததா? ராமர் மீது சீதைக்கு இருந்த அன்பு உயர்ந்ததா? உணர்வுகளுக்கும் மனதிற்கும் சம்பந்தமே இல்லாத யோசனைகள்!

சம்பாலால் ஆசை காட்டிய சுவர்க்கத்திற்கும், சைதன்யாவுடன் வாழ்ந்து கொண்டிருந்த நரகத்திற்கும் இடையே திரிசங்கு நிலையில் தொங்கிக் கொண்டிருந்த அவள், சுவர்க்கம் என்று எண்ணிக்கொண்டு அந்தப் பக்கமாக சாய்ந்துவிட்டாள். ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்க்கையில் சில பலவீனமான தருணங்கள் இருக்கும். சைதன்யா இன்ஷ்யூரன்ஸ் பேப்பரைப் பற்றி மறந்து போய் விட்ட தருணம். கௌசல்யா ரயிலைவிட்டு இறங்கத் தீர்மானித்துக் கொண்ட தருணம். ஆனால் அவற்றின் விளைவு மனிதனின் அதிர்ஷ்டத்தின் மீதும், துரதிர்ஷ்டத்தின் மீதும் ஆதாரப்பட்டிருக்கிறது. யாருமே இரண்டாவதைப் பற்றி நினைத்துப் பார்க்க மாட்டார்கள். அந்த அவசரத்தில் தான் அவள் ஒரு முடிவுக்கு வந்து கணவனிடம் "இதுதான் கடைசி தடவை" என்று சொல்லி விட்டாள்.

அவனுக்குப் புரியவில்லை. "அப்படி என்றால்?" என்றான். அதற்குள் கதவு அருகில் சந்தடி கேட்டது. திரும்பிப் பார்த்தான்.

அங்கே சம்பாலால் நின்று கொண்டிருந்தான். சைதன்யாவைப் பார்த்து பரிகாசமாகச் சிரித்தான். தன் மனைவியின் பக்கம் பார்த்தான் சைதன்யா. முகத்தைத் திருப்பிக் கொண்டு நின்றிருந்தாள் அவள்.



திரும்பவும் சம்பாலாலைப் பார்த்தான். அவன் சிரித்துக் கொண்டே இருந்தான். 'அவளுக்கு இனி உன் தேவை அவசியம் இல்லை' என்பது போல் இருந்தது அந்தச் சிரிப்பு. மொராலிடியை விட ரியாலிடி உயர்ந்ததாக இருக்கலாம். ஆனால் எது ரியாலிடி என்பதுதான் பிரச்சனை. ஒழுக்கத்தின் மதிப்பீடுகளை யதார்த்தம் வெற்றிக் கொண்டு விடுகிறது என்று சைதன்யாவுக்குப் புரிந்தது. எது உண்மை நிலை என்றும் புரியத் தொடங்கியது.

"நாதி சராமி" இவ்வளவு பேர் தம்பதிகள் பங்களாக்களில் இருந்தால் என்ன? சாக்கடை நிறைந்த சேரிகளில் இருந்தால்தான் என்ன? ஏதோ ஒரு நரகத்தில் ஒருத்தருக்கொருத்தர் துணையாய் காலத்தைக் கடத்தி வருகிறார்கள் என்று பெயர்தானே ஒழிய மனப்பூர்வமாக எத்தனை பேர் பரஸ்பரம் அன்பு செலுத்திக் கொண்டு குடும்பத்தை நடத்தி வருகிறார்கள்?

அன்பார்ந்த வாசகர்களே!

குடும்பம் என்பது பரஸ்பர தேவைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு மட்டுமே என்று இருந்தால் இந்த உணர்வுகள் எல்லாம் வரட்டு சித்தாந்தமாகத்தான் தென்படும். வேறொரு கோணத்திலிருந்து பரிசீலித்தால் பந்தம் வளர வேண்டியது தேவைக்காக மட்டுமே இல்லை என்று தெரியக் கூடுமோ என்னவோ.

விதியின் கையிலிருந்து பகடைக் காய்கள் ஒவ்வொன்றாக உதிர்ந்து விழுந்து கொண்டிருந்தன. சைதன்யா மட்டும் எஞ்சி நின்றான். சாவதானமாக அந்த பங்களாவிலிருந்து வெளியே வந்தான். வழியில் இரு பக்கங்களிலும்

இருந்த செடிகள் வழியனுப்பி வைத்தன. தெருவுக்கு அப்பால் இருந்த குப்பைத் தொட்டிக்கு அருகில் இருந்த நாய் ஒன்று அவனை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தது.

அவன் தெருவுக்கு நடுவில் நின்று கைகள் இரண்டையும் காற்றில் தூக்கி அண்ணாந்து வானத்தைப் பார்த்துக் கொண்டே பெரிதாக "இப்பொழுது நான் எல்லா பந்தங்களையும் அறுத்தெறிந்து விட்ட சுதந்திர மனிதன்!" என்று கத்தினான்.

## 12

*சாரதா!*

*இவ்வளவு நாட்களாக கடிதம் எழுதவில்லையே என்று உனக்குக் கோபம் வந்து விட்டதா? வராது. உன் விஷயம் எனக்குத் தெரியாதா என்ன? நீ போன பிறகு இங்கே நிலைமை ரொம்ப மோசமாகிவிட்டது. இந்த ரவி என்ற மேதாவியை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. அப்பாவியா இல்லை பலவீன மனம் படைத்தவனா என்று தெரியவில்லை. ஒருக்கால் இரண்டுமே சரியானதாக இருக்கலாம். இல்லாவிட்டால் வியாபாரத்தில் நஷ்டம் வந்த விட்டதென்று தெரிந்து குடித்துவிட்டு வீட்டிற்கு வந்து உன் கைகளைப் பிடித்துக் கொண்டு அழுவானேன்? நன்றாக அழட்டும். யார் வேண்டாம்னு சொன்னது? ஆனால் என்னுடைய கைகளைப் பிடித்துக் கொண்டு அழலாம் இல்லையா?*



*ஆனாலும் நீ ஒரு முட்டாள். சென்டிமென்டைத் தவிர உனக்கு எதுவும் தெரியாது. உங்கள் எல்லோருக்கும் நான் ஒரு அரக்கியாக தென்பட்டால், பட்டுவிட்டு போகிறேன். உன்னைப் போல் தானும் வருத்தப்பட்டுக் கொண்டு மற்றவர்களையும் வருத்தப் படுத்துவதைவிட என்னைப் போல் இருந்தால் நல்லது இலலையா.*

*பின்னே என்னவாம்?*

*நீ சாதுவாகவும், வேதனையைப் புரிந்து கொள்ளக் கூடியவளாகவும் அவனுக்குத் தோன்றியிருக்கலாம். அதற்காக நீ மிரண்டு போய், சினிமாக்களில் வருவது போல ஒரு ஹீரோ, இரண்டு ஹீரோயின் என்றெல்லாம் ஊகித்துக் கொண்டு ஓடிப் போனது எனக்கு சரியென்று படவில்லை.*

*ரவி என்னை விட்டு எங்கேயும் போகமாட்டான் என்று எனக்குத் தெரியும். எனக்குத் தெரியாததெல்லாம் இவ்வளவு பணம் வந்தும் கூட எனக்கு ஏன் சந்தோஷம் இல்லை என்றுதான். பின்னே என்ன சொல்லு?*

*நான்கு லட்சம் சொத்துக்கு (ஆறுலட்சம் செலவாகி விட்டது) சொந்தக் காரியாக இருந்தும், என் தங்கை குமாஸ்தாவாக வேலை பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருப்பதாவது? என் சொத்து உன் சொத்து இல்லையா என்று இரண்டு அடி கொடுத்து வீட்டிற்கு இழுத்துக் கொண்டு வராமல்.*

*ஆனால் நான் அப்படிச் செய்ய மாட்டேன் சாரதா! உனக்குத்தான் அந்த புத்தி இருக்கவேண்டும். நான் உன்னை கெஞ்ச வேண்டுமோ? இந்த கெஞ்சுவது மிஞ்சு*

வது எல்லாம் பிடிக்காமல்தான் ரவியின் மீது உரிமையை அடுத்த மாதம் முதல்வாரத்தில் சம்பாதித்துக் கொள்ளப் போகிறேன். உடனே கிளம்பி வா. நீ இல்லா விட்டால் எனக்கு வேறு யாரு இருக்கிறார்கள்? நீயே சொல்லு.

இன்னொரு விஷயம். வெகு சீக்கிரத்திலேயே நானும், ரவியும் நாம் முன்பு அனுபவித்து வந்தோமே, அதே கஷ்ட நிலைக்கு தள்ளப்படப் போகிறோம். இந்த செகுசு ராஜகுமாரன் இந்த பணக்கார உலகிலிருந்து வெளியே வந்தால், உண்மையான கஷ்டம் எது என்று புரிந்து கொண்டு சீக்கிரத்தில் மாறி விடுவார் என்று எனக்குத் தெரியும். அந்த நம்பிக்கையுடன்தான் திருமணம் செய்துகொள்ளப் போகிறேன். வருவாய் இல்லையா.

சாரதாவின் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. சட்டென்று எழுந்து கொண்டு ஹெட் கிளார்க்கிடம் வேக மாகப் போனாள்.

"சார்! எனக்கு ஒரு மாதம் விடுமுறை வேண்டும்."

அவர் நிமிர்ந்து மூக்குக் கண்ணாடியைச் சரி செய்து கொண்டே "எதுக்கும்மா?" என்றார்.

"எங்க அக்காவுக்குக் கல்யாணம்."

அவர் சிரித்தார். "ஒரு வருஷமாக வேலை செய்து வருகிறாய். அதனால் ஒரு மாதம் விடுமுறை கிடைக்கும் என்று வைத்துக் கொள். ஆனால் எல்லா லீவையும் அக்கா வின் கல்யாணத்திற்கே செலவழித்துவிட்டால் அப்புறம் உன் கல்யாணத்திற்கு?"



அவள் வெட்கத்தோடு தலை குனிந்துகொண்டு "இப்போ அந்தப் பேச்செல்லாம் கிடையாது சார்" என்றாள்.

"கல்யாணம் நடப்பதற்கு பேச்சு எதற்கு? அந்த வேளை வந்துவிட்டால் நீயே நிறுத்தச் சொன்னாலும் அது நிற்காது."

* * *

உள்ளே யாருடைய திருமணமோ விமரிசையாக நடந்து கொண்டிருந்தது. மங்கள வாத்தியங்களின் ஓசை பலமாக கேட்டுக் கொண்டிருந்தது.

"இன்னும் தாமதம் ஏன்?" என்றான் ஒருத்தன். அவன் இடுப்பைச் சுற்றிலும் ஒரு கந்தல் துணியைத் தவிர வேறு எதுவும இருக்கவில்லை.

"நமக்காக சீக்கிரமாக போடுவார்களா என்ன?" என்றான் இன்னொருத்தன்.

இந்த உரையாடலில் பங்கெடுத்துக் கொள்ளாமல் இன்னொரு ஆள் குப்பைத் தொட்டியின் மீது சாய்ந்து கொண்டு கண்களை மூடிய நிலையில் அமர்ந்திருந்தான். யாரோ பரிதாபப்பட்டுக் கொடுத்த கோட்டை போட்டுக் கொண்டிருந்தான். அதுவும் கிழிந்து நைந்து போயிருந்தது. பைஜாமாவா அல்லது வேட்டியா என்று தெரியாத அளவுக்கு கிழிந்து தொங்கிக் கொண்டிருந்தது கீழ் ஆடை. இரண்டு நாட்களாக அன்ன ஆகாரமில்லை அவனுக்கு. ஆனாலும் இந்த விஷயம் அவனை அவ்வளவாக பாதித்த தாக தெரியவில்லை. அவன்தான் சைதன்யா!

பாட்னாவை விட்டு விட்டு வந்த பிறகு நாடு முழுவதும் சுற்றினான். ஏதாவது கிடைத்தால் சாப்பிடுவது, இல்லாவிட்டால் பட்டினிக் கிடப்பது வழக்கமாகி விட்டது. விரக்தி அவனை முற்றிலுமாக ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. அது வேதாந்தம் இல்லை. கள்ளப்பும் இல்லை. ஒரு விதமான ட்ரான்ஸ்!

முதல் பாதி சாப்பாடு முடிந்து விட்டது போலிருந்தது. இலைகள் காம்பவுண்ட் மேலேயிருந்து வெளியில் வந்து விழுந்தன. இரண்டு பிச்சைக்காரர்கள் ஓடினார்கள். நாய்களுடன் போராடி அவற்றைத் துரத்தி விட்டு இலைகளை வசப்படுத்திக் கொண்டார்கள். அதில் ஒருவன் அவனை வா என்று அழைத்தான்.

சைதன்யா போகவில்லை. மனதில் ஏதோ ஒரு மூலையில் எங்கேயோ கொஞ்சம் சுவாபிமானம் ஒட்டிக் கொண்டிருந்தது. பிச்சைக்காரர்கள் இருவரும் அவசர அவசரமாக எச்சில் இலைகளில் இருந்தவற்றை அள்ளி அள்ளி சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். கால்மணி நேரத்தில் இலைகள் காலியாகிவிட்டன. பசி தீர்ந்து விட்டது. அவர்கள் போய் விட்டார்கள்.

இரண்டாவது பந்தி இலைகளை நாய்கள் காலி செய்து விட்டுப் போய் சேர்ந்தன. சைதன்யா மட்டும் எஞ்சியிருந்தான். எதிரே பாதி வழிந்த குப்பைத் தொட்டி, மூன்றாவது முறை மறுபடியும் இலைகள் வந்து விழுந்ததில் முழுவதுமாக நிரம்பிவிட்டது.

வயிறு காலியாக இருந்தது. பசி காதை அடைப்பது போல் இருந்தது. பசி மனிதனை கீழ்த்தரமான நிலைக்குக் கொண்டு வந்து விடும். காலி வயிறு காண்ட்டிராடிக்ஷனைப் பற்றி யோசித்துப் பார்க்காது. குப்பைத் தொட்டி அருகில் சென்று இலையை கைகளால் எடுத்துக் கொண்டே தனக்குள் நினைத்துக் கொண்டான். அவன் அவன் மனதிற்குள் எந்த மூலையாவது மனைவியின் மீது அருவருப்பு இருந்தால் அது இந்த வினாடியே போய்விட்டது. பசி மனிதனை என்ன வேணுமானாலும் செய்ய வைக்கும்.



குனிந்து பரபரப்புடன் இலையில் இருந்ததை சாப்பிடப் போனவன் அதிர்ச்சி அடைந்தவன் போல் அப்படியே நின்றுவிட்டான். குப்பைத் தொட்டிக்கு அந்தப் பக்கம் யாரோ விழுந்து கிடந்தார்கள். பசி மயக்கத்தில் முனகிக் கொண்டிருந்தார்கள்.

சட்டென்று ஓடிப் போய் அந்த நபரை புரட்டினான்.

அவன்...

தன் மகனை மயானத்தில் குழி தோண்டி புதைத்த போது பக்கத்தில் நின்று ஆறுதல் சொன்ன கிழவன்...

"ஏன் சிரிக்கிறாய் தம்பி!" கிழவன் கேட்டான்.

"ஒன்றுமில்லை தாத்தா! கடல் வாழ் உயிரினங்கள் எல்லாம் பிரவாகத்தன் வேகத்தில் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு போய்க் கொண்டே இருக்கும். கால வெள்ளத்தில் மனிதன் கூட அப்படித்தான் நினைக்கிறேன். எங்கே பிரிந்து போனோம்? மறுபடியும் எங்கே சந்திக்கிறோம்?"

"எது எப்படி இருந்தாலும் என்னைக் காப்பாற்றிய தற்கு நன்றி. நீ சாப்பாடு போட்டிருக்காவிட்டால் அங்கேயே செத்திருப்பேன்."

"நான் போட்டது யாரோ விட்டெறிந்ததைதான்."

"சொல்லாதே. கசப்பான உண்மையை விழுங்க முடியாது." சிரித்துக் கொண்டே எழுந்தான் கிழவன். "வா தம்பீ! போகலாம். மலை மீது ஒரு வாரத்திற்கு சமாரா தனை நடக்கிறது. எங்கேயிருந்தோ நம்பளைப் போன்ற வர்கள் வருவார்கள். இவ்வளவு அருகில் இருந்து கொண்டு நாம் எதுக்காக வாய்ப்பை நழுபவிடணும்?"

இருவரும் மலை மீது பயணம் செய்யத் தொடங் கினார்கள்.

* * *

"தேன் நிலவுக்கு எங்கே போகலாம்?" ஆர்வத்தோடு கேட்டான் ரவி.

கிரண்மயி பதில் பேசவில்லை. யோசனையில் ஆழ்ந்து விட்டாள்.

"சொல்லு கிரண்மயி!"

அவள் அவனை யோசனையுடன் பார்த்துக் கொண்டே "போய்த்தான் ஆகணுமா?" என்றாள்.

அவன் அடியுண்டவன்போல் பார்த்துவிட்டு "அப்படி என்றால்?" என்றான்.

"இங்கே இருக்கும் நிலைமை உங்களுக்கு தெரியும் இல்லையா? அப்படி இருக்கும் போது நாம் இருவரும் இல்லாவிட்டால் என்ன ஆகும் என்று யோசித்துக் கூட பார்க்க முடியவில்லை."



"என்ன ஆகிவிடும்? பதினைந்து நாட்கள்தானே?"

"எது நடப்பதற்கும் பதினைந்து வினாடிகள் போதும்."

ரவி சிரித்துக் கொண்டே "அப்படி என்றால் பண காரர்கள் ஒருநாள் கூட ஓய்வு எடுத்துக் கொள்ளக் கூடாதா?" என்றான்.

கிரண்மயி சற்று நேரம் மௌனமாக இருந்துவிட்டு பிறகு சொன்னாள். "அப்படித்தான் போலும். இந்தப் பணம் மனிதனைத் தூங்கவிடாமல் செய்கிறது. வயிறார சாப்பிட முடியாமல் செய்கிறது. பணம் இல்லாத நாட் களில் அதற்காக, அது இருந்தால் வேறு எதற்காகவாவது கவலைப்பட்டுக் கொண்டே இருக்கிறோம். ஓய்வு என்பது எங்கே கிடைக்கும்? பணத்திற்கும் அதற்கும் கொஞ்சம் கூட பொருத்தம் இல்லை."

"கிரண்!" தீனமான குரலில் அழைத்தான் அவன். "இந்தப் பணத்தின் காரணமாக, அதை தக்கவைத்துக் கொள்ளும் சாமர்த்தியம் இல்லாத காரணத்தால் என்னை விட்டு விட்டு போய் விட மாட்டாயே?"

சிறு பையனைப் போல் கேட்டுக் கொண்டிருந்த அந்த இருபத்தைந்து வயது இளைஞனைப் பார்த்த போது அவள் இதயத்தில் தாய்மை உணர்வு ஏற்பட்டது. அவனது தலையை மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டு "மாட்டேன் ரவி! அநத் எண்ணத்தை கனவிலும் வர விட மாட்டேன்" என்றாள் குரல் கம்ம.

அந்த அன்பு பிடியில் ரொம்பநேரம் திளைத்திருந்து விட்டு அவன் மெதுவாக சொன்னான். "என் மனதில் இருக்கும் வேதனை உங்கள் யாருக்குமே தெரியாது கிரண்! ஒரு பக்கம் அண்ணனையும் இன்னொரு பக்கம் தங்கையையும் இழந்துவிட்டேன். அந்த வேதனை என் இதயத்தை ரம்பம் போல் என் இதயத்தை எப்படி அறுத்துக் கொண்டிருக்கிறது என்று உங்களுக்குத் தெரியாது."

சைதன்யாவைப் பற்றிய நினைவு வந்ததுமே இருவரின் மனமும கலக்கமடைந்து விட்டது.

## 13

"கோவிந்தா! கோவிந்தா!" கும்பல் பெரிய குரலில் கத்திக் கொண்டிருந்தது. கல்லையும் புதர்களையும் தாண்டிக் கொண்டு படியேறிக் கொண்டிருந்தார்கள்.

"கோவிந்தா! கோவிந்தா!" ஒரே நாதம். கால்கள் வலியால் பின்னிக் கொண்டிருந்தன. தொண்டை வரண்டுப் போய்க் கொண்டிருந்தது. ஆனாலும் பயணம் நிற்கவில்லை. ஏதோ உத்வேகம் முன்னால் தள்ளிக் கொண்டிருந்தது. பக்திப் பரவசம் வலியை மறக்கடித்துக் கொண்டிருந்தது.

தடுக்கி விழத் தெரிந்து, காலிலிருந்து வழியத் தொடங்கிய ரத்தத்தைத் துடைத்துக் கொண்டே "இன்னும் எவ்வளவு தூரம் தாத்தா?" கேட்டான் சைதன்யா.

"ரொம்ப தொலைவு இல்லை. இன்னும் இரண்டு மலைகள்தான் பாக்கி."



"கோவிந்தா! கோவிந்தா!"

அது ஒரு பிரவாகம். கிழவர்கள், சிறுவர்கள், பெண்கள், பணக்காரர்கள், ஏழைகள் எல்லோரும் அந்தக் குறிப்பிட்ட இடத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள். கணகணவென்று மணி ஓசை கேட்டுக் கொண்டிருந்தது. எங்கே பார்த்தாலும் மக்கள். உள்ளே மனிதர்கள்! வெளியே மனிதர்கள்! தர்ம தரிசனத்தின் க்யூவில் மனிதர்கள். எல்லோரிடமும் ஒரே பரபரப்பு, தெய்வத்தைப் பார்க்க வேண்டுமென்று. நீண்டுகொண்டே போகும் வரிசைகள்.

"எங்கே இருக்குப்பா சுவாமியின் சன்னிதி?"

"இன்னும் ஒரே ஒரு வரிசைதான். அதோ அந்த முனையைத் திரும்பிவிட்டால்..."

கால்கள் கடுத்தன. பதினைந்து மணி நேரம் நடந்து பத்து மணி நேரம் க்யூவில் நின்று– இவ்வளவு சக்தி எப்படி வந்தது? யார் தந்தார்கள்? இவ்வளவு கஷ்டப்பட்டால் தவிர கடவுளைப் பார்க்க முடியாதா? பின்னே கஷ்டப்படுவது போல் ஏன் தெரியவே இல்லை?

முனை திரும்பிவிட்டால்!

திருப்பம் வந்து விட்டது. திரும்பிவிட்டால் கடவுள் தென்படுவாரா? அந்த மூர்த்தியின் உண்மையான தரிசனம் தென்பட்டு விடுமா? தெய்வம் என்று ஒன்று உண்மையிலேயே இருக்கிறதா?

அகல் விளக்குகள் ஒளியை சிந்திக் கொண்டிருந்தன. விக்கிரகத்திற்குப் பின்னால் ஏதோ ஒரு ஒளி. முன்னுக்கு

நகர நகர மனம் இலேசாகிக் கொண்டிருப்பது போன்ற உணர்வு. பட்ட கஷ்டமெல்லாம் மறந்து போனாற்போல் ஏதோ உத்வேகம்.

மனதிற்கு புரிபடாத உணர்வு. ஆனால் அந்த உணர்வு தெய்வத்தைப் பார்ப்பதாலா? பார்ப்பதற்காக பட்ட கஷ்டத்தினாலா? ஒரு அடி முன்னோக்கி எடுத்து வைக்கப் போனான். யாரோ முக்கியமானவர் இன்னொரு வழியாக வந்து கொண்டிருந்தார். அவருக்கு வழி விடுவதற்காக அவனை வாலண்டியர்கள் நிறுத்திவிட்டார்கள். பின்னால் மக்கள் வெள்ளமாக வந்து கொண்டிருந்தார்கள். முன்னுக்கு போகவேண்டும் என்ற ஆசை. அந்த மங்கள விக்கிரகத்தைப் பார்க்க வேண்டும் என்ற துடிப்பு. கோவிந்தா கோவிந்தா என்ற கூச்சல்கள். இதயத்தில் கணகணவென்று ஒலிக்கும் மணியோசை.

சைதன்யா நிற்கவில்லை. போய்க் கொண்டே இருந்தான். மனம் உத்வேகத்தால் திக்குமுக்காடியது. மந்திரங்கள் உச்சஸ்தாயில் கேட்டுக் கொண்டிருந்தன. எங்கும் ஒரே சந்தடியாக இருந்தது. மனம் மட்டும் மௌனமாக இருந்தது. ஏதோ ஒரு சக்தி முன்னால் தள்ளிக் கொண்டிருந்தாற்போல போய்க் கொண்டிருந்தான். வாலண்டியர்கள் கழியால் தடுத்து நிறுத்த முயன்றார்கள். சாத்தியப்படவில்லை.

வாலண்டியர் வேகமாக தள்ளியதால் கீழே விழுந்தான். ஒரு வினாடி நினைவு தப்பி விடும் போல் தலை சுற்றிக்கொண்டு வந்தது. ஸ்பெஷல் பாதையில் வந்த வி.ஐ.பி. சன்னிதியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார். சைதன்யா கைகளை ஊன்றி, பலவீனமாக எழுந்து நின்று



கொண்டே தொண்டைக் கிழியும்படி கத்தினான். "பதினாறு மணிநேரமாக க்யூவில் நின்று கொண்டு வந்திருக்கிறேன். இபபோ தள்ளி விடுகிறாயா? டேய்! நீ நாசமாகப் போவாய்."

பின்னால் இருந்த கிழவன் உதவி செய்தான். மறுபடியும் முன்னோக்கிப் பயணம். தொலைவில் சுவாமியின் விக்கிரகம், கையை உயர்த்தி அபயமளிப்பதுபோல். கண்களை மூடிக் கொண்டான் எங்கும் இருட்டாக இருந்தது. பட்ட கஷ்டமெல்லாம் பறந்து போகும் விதமாக மனம் இளைப்பாறிக் கொண்டிருந்தது.

பூசாரி போகச் சொல்லி அவசரப் படுத்திக் கொண்டிருந்தார். அவன் கண்களைத் திறக்கப் போனான். அதற்குள் ஒரு வினோதம் நடந்தது. வேண்டிக்கொண்ட தொகையை உண்டியலில் போட்டால் கடவுளுக்குப் போய்ச் சேராதோ என்ற சந்தேகத்தில் பக்தன் ஒருவன் க்யூவின் நின்றபடி சுவாமியை நெருங்கியதுமே பைத்தியக்காரனைப் போல் இரண்டு கைகளாலேயும் நாணயங்களை எடுத்து விக்கிரகத்தின் மீது வீசினான்.

அடுத்த வினாடி சலசலப்புத் தொடங்கிவிட்டது. சைதன்யாவின் நெற்றியின் மீது ரூபாய் காசு வந்து விழுந்தது. அப்படியே அழுத்திப் பிடித்துக் கொண்டான். ஈரமாக கைக்கு தட்டுப்பட்டது. எடுத்துப் பார்த்தான். சிவப்பாய் இரத்தக் கறையுடன் இருந்த ரூபாய் நாணயம்! நெற்றியில் லேசாக புடைத்துவிட்டது.

அதற்குள் வாலண்டியர்கள் களத்தில் இறங்கிவிட்டார்கள். மக்களை அடக்கிக் கொண்டிருந்தார்கள்.

எங்கும் அமர்க்களமாக இருந்தது. யாரோ தள்ளியதும் இருவரும் வெளியே வந்து சேர்ந்தார்கள்.

"பார்த்தாயா தம்பி கடவுளை?" கிழவன் கேட்டான்.

"எங்கே தாத்தா! கண்ணை மூடியதுமே இது வந்து மேலே விழுந்தது" என்று சிரித்துவிட்டு உள்ளங்கையைத் திறந்தான். சர்வலோகரட்சகனின் சன்னிதியில் உலகத்தையே ஆட்டிப்படைக்கக் கூடிய ரூபாய் நாணயம்!

இரவு இரண்டு மணி ஆயிற்று குளிர் காற்று விர்ரென்று வீசிக் கொண்டிருந்தது. முதுகுத் தண்டிலிருந்து குளிர் தோன்றி உடல் முழுவதும் நடுங்கிக் கொண்டிருந்தது. சத்திரத்து திண்ணையில் உடலைக் குறுகிக் கொண்டு படுத்திருந்த சைதன்யா எழுந்து உட்கார்ந்து கொண்டான். பக்கத்திலேயே படுத்துக் கொண்டிருந்த கிழவன் மட்டும் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தான்.

எங்கும் நிசப்தமாக இருந்தது. இருள் திரை மலையை மறைத்துவிட்டது. கோவில் கோபுரத்தின் மேலே இருந்து ஏதோ ஒரு பறவை உறக்கத்திலிருந்து விழித்துக் கொண்டாற் போல் கூவி விட்டு திரும்பவும் தூங்கத் தொடங்கியது. அதற்கு பதில் குரல் கொடுப்பது போல் மெல்லிய காற்று காய்ந்த இலைகளை சலசலக்கச் செய்தது. பால் நிலவின் வெளிச்சம் எங்கும் பரவியிருந்தது.

மெள்ளமாக நடக்கத் தொடங்கினான். இயற்கையும் ஓய்வெடுத்துக் கொள்வது போல் மௌனமாக இருந்தது. குளத்தின் படிக்கட்டின் மீது உட்கார்ந்து கொண்டான். கால்களுக்கு அடியில் ஜில்லென்று தண்ணீர். பக்கத்தில் தங்க அரளிச் செடிகள். காற்றில் உதிர்ந்த இலைகள் நீரில் தெப்பம் போல் மிதந்தபடி சென்று கொண்டிருந்தன. சத்தம் கேட்டு, தவம் கலைந்த ரிஷியைப் போல் கண்களைத் திறந்த தவளை ஒன்று திரும்பவும் கண்களை மூடிக் கொண்டது.



தென்றல் காற்று வந்து அவனை நளினமாக தழுவி விட்டுப் போயிற்று. அவன் கண்களை மூடி சலனமில்லாமல் உட்கார்ந்திருந்தான். தொலைவில் யாரோ தூக்கம் வராமல் மென்மையான குரலில் பாடிக் கொண்டிருந்தார்கள். வீணையின் கம்பிகளை மென்மையாக மீட்டினாற்போல் அந்த ஓசை காற்றில் அலை அலையாக பரவிக் கொண்டிருந்தது.

அவன் உடம்பு சிலிர்த்தது. கண்களைத் திறந்தான். மேலே நீல வானம். கீழே சலனமில்லாத பூமி. வானத்தில் மினுக் மினுக்கென்று மின்னிய நட்சத்திரங்கள். மேகத் துணுக்கு ஒன்று மெதுவாக கிழக்குப் பக்கமாக ஊர்ந்தபடி சென்று கொண்டிருந்தது. சலனமில்லாத குளத்தின் தண்ணீரில் பிரதிபிம்பங்கள் ஆடாமல் அசையாமல் இருந்தன.

தங்க அரளி செடியிலிருந்து பூவொன்று உதிர்ந்தது. படியின் மேல் இருந்த தவளை இன்னும் அதே நிலையில் இருந்தது. அவனுள் ஏதோ, எங்கேயோ அசைவது போல தோன்றியது.

சுழலும் பூமி, வீசும் காற்று, அசையாத வானம், உறுதியாக நிற்கும் மலைகள், புனிதமான நீர், அசையும் மரங்கள் எல்லாம் ஒன்றாகி... எல்லோரும் உறங்கும்

வேளையில், உயிரினங்கள் எல்லாம் சேர்ந்து தன்னைப் படைத்த அந்தக் கடவுளை ஒரே குரலெடுத்து மௌன மாக தொழுது கொண்டிருப்பது போல் தோன்றியது.

அந்த நிசப்தம் அவனுக்கு எதையோ உணர்த்துவது போல தோன்றியது. அவன் நரம்புகளில் ஏதோ புரியாத உத்வேகம் பரவிக் கொண்டிருந்தது. லேசாக காற்று வீசியது. இலைகள் அசைந்து கொண்டிருந்தன. கிளைகள் உராயும் போது வினோதமான சத்தம் எழும்பியது.

சமாதி நிலையில் ஆழ்ந்துவிட்டாற்போல் சலன மில்லாமல் இருந்தான்.

காற்று வீசினாலும், கிளைகள் உராய்ந்து கொண்டா லும் ஒரே ஒலி! மெதுவாக மனதை வருடுவது போல் ஓம்கார நாதம்! ஓம்... ஓம்...

எல்லா பக்கங்களிலும் அதே நாதம், அலை அலை யாக. அவன்முகம் பிரகாசமாக ஒளிர்ந்து கொண்டிருந்தது. சூனியமான அவன் மனதில் சிறிய ஜோதி விஸ்வரூப மெடுத்து மனம் முழுவதும் பரவிக் கொண்டிருந்தது.

அவன் எழுந்தான். கிழக்கே ஒளிக் கற்றைகள் மெல்லப் பிரிந்து கொண்டிருந்தன. அவன் திரும்பிப் போனபோது கிழவன் எழுந்து உட்கார்ந்திருந்தான்.

"எங்கே போயிருந்தாய் தம்பி இரவு வேளையில்?

"கடவுளைப் பார்க்கப் போனேன் தாத்தா!

பொக்கை வாயால் சிரித்தான் கிழவன். "கடவுளைப் பார்த்தாயா?"

"பார்த்தேன். மின்னும் நீரில், ஓடும் மேகத்தில், நிற்கும் மலைகளில் பார்த்தேன் தாத்தா."

## 14

திருமணக் கூட்டத்தோடு சேர்ந்து போகாமல் இது போல வந்தது எவ்வளவு தவறு என்று சாரதாவுக்குப் புரிந்தது. வந்தது என்னவோ எல்லோரும் சேர்ந்துதான் வந்தார்கள், சிநேகிதிகளும், அவர்களுடைய குடும்பத் தாரும் சேர்ந்து. எல்லாமே நன்றாகத்தான் நடந்தது.

ஆனால் அந்தக் கூட்டத்தில் அவர்களைப் பிரிந்து விட்டதால் கலக்கமடைந்தாள். தனியாகவே போய் விட முடியும். அது ஒன்றும் கஷ்டமான விஷயம் இல்லை. அந்த எண்ணத்துடன் டிக்கெட் வாங்கிக் கொள்வதற்காக கௌண்டரிடம் போய் ஐம்பது ரூபாயை எடுத்துத் தந்த போது, அது கிழிந்திருக்கு என்றும், செல்லாது என்றும் சொல்லி விட்டார்கள். அதைத் தவிர வேறு பணம் இல்லை. பதற்றத்தோடு பர்சில் தேடிப் பார்த்தாள். சில்லரைதான் இருந்தது.

அவள் கண்களிலிருந்து கிர்ரென்று நீர் சுழன்றது. சட்டென்று க்யூவிலிருந்து வெளியே வந்தாள். ஓரிரு கடை களில் தந்து மாற்ற முயற்சி செய்தாள். யாருமே வாங்கிக் கொள்ளவில்லை. ஒரு பக்கம் இருட்டிக் கொண்டே வந்தது. அந்த பதற்றத்திலேயே இன்னும் நேரமாகி விட்டது. அவளுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. நெற்றியில்

வியர்வை அரும்பியது. கால்கள் தடுமாறின. அவளுடைய கலக்கத்தையும், மிரண்ட பார்வையையும் கவனித்து விட்டு இளைஞர் கூட்டம் ஒன்று அவளைச் சுற்றி சுற்றி வந்தது.

அதனால் அவள் பயம் மேலும் அதிகரித்துவிட்டது. பஸ் ஸ்டாண்ட் ஏறக்குறைய காலியாகிவிட்டது. குளிர் காலம் என்பதால் கொஞ்சம் இருட்டியதுமே மனுஷ சஞ்சாரம் குறைந்து விட்டது. யாரையாவது கேட்போம் என்றாலும் கூச்சம். அதோடு அப்படி கேட்டால் அவர்கள் வேறு விதமாக புரிந்துகொள்ளக் கூடும் என்ற பயம். இந்த இரு வேறுபட்ட எண்ணங்களுக்கிடையே அவள் தடுமாறிக் கொண்டிருந்த போதே போக்கிரி இளைஞன் ஒருவன் வந்து அவசரமாக போவது போல் அவள் மீது உராய்ந்து கொண்டே போனான்.

அவள் மேலும் கலவரமடைந்து அங்கிருந்து அவர்கள் வந்து கொண்டிருக்கிறார்களா இல்லையா என்று திரும் பிப் பார்த்தது. பிறகு நடையின் வேகத்தை அதிகரித்தது- எல்லாமாக சேர்ந்து அவர்களுடைய துணிச்சலை மேலும் கூட்டியது. இன்னும் கொஞ்சம் நெருங்கி வந்து வாய்க்கு வந்தபடி கமெண்ட் செய்யத் தொடங்கினார்கள்.

பஸ் ஸ்டாண்டைத் தாண்டியதும் தொலைவில் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்த காட்டேஜ்களை யும், இருட்டையும் பார்த்ததுமே தான் செய்து விட்ட தவறு அவளுக்குப் புரிந்துவிட்டது. தெரு விளக்கின் மங்க லான வெளிச்சத்தில் சத்திரத்தின் திண்ணையில் சிலர் படுத்துக் கொண்டிருப்பதைப் பார்த்த பிறகு அவளுக்குக் கொஞ்சம் தைரியம் வந்தது. ஆனால் அது அதிக நேரம் நிலைக்கவில்லை.



நால்வரில் ஒருத்தன் மேலும் துணிந்து அவள் கை யைப் பிடித்துக் கொண்டான். அவள் வீலென்று கத்த நினைத்தாள். ஆனால் பயத்தால் வாயிலிருந்து வார்த்தை கள் வெளிவரவில்லை. இதை அவகாசமாக எடுத்துக் கொண்டு அவன் அவளைப் பிடித்து இழுக்க முயன்றான். அவள் விடுவித்துக் கொள்ளக் கூட முயலாமல் பயத்தில் உறைந்து போய் விட்டாள்.

"யாரு?" என்ற குரலைக் கேட்டு விட்டு நால்வரும் திரும்பிப் பார்த்தார்கள்.

எழுபது வயதுக்கு மேல் மதிக்கக் கூடிய கிழவன் ஒருவன் நின்று கொண்டிருந்தான். ஒல்லியாக, ஒடிந்து விழுந்து விடுவது போலிருந்த அவனைப் பார்த்ததும் அவர் களுக்குத் திரும்பவும் துணிச்சல் வந்து விட்டது. அவர் களில் ஒருவன் "இது எங்க வீட்டுப் பெண்தான்" என் றான், அவளுடைய மௌனத்தைச் சாதகமாக எடுத்துக் கொண்டு.

அவள் சட்டென்று இந்த உலகிற்கு மீண்டு வந்த வளாக "இல்லை இல்லை" என்றாள். ஆனால் அவள் குரல் அவளுக்கே கீச்சென்று சன்னமாக கேட்டது.

கிழவனுக்கு ஏதோ சந்தேகம் வந்து அருகில் வரப் போனான். ஆனால் அவர்களுக்குள் ஒருத்தன் குறுக்கே நின்று கொண்டு கிழவனின் தோளைப் பிடித்துத் தள்ளி னான். ஏற்கனவே பலவீனமாக இருந்த கிழவன் கீழே விழுந்தான். தலை கல்லில் மோதியது. "ஐயோ!" என்றான்.

"யாரங்கே?" கேட்டுக் கொண்டே சைதன்யா அங்கே வந்தான். வந்தவன் நாலு பேருக்கு பதில் சொல்லக் கூடிய நபர்தான் என்று தெரிந்ததும் நால்வரும் ஓட்டம் பிடித்தார்கள்.

குனிந்து கைகொடுத்துக் கொண்டே "அடிபட்டு விட்டதா தாத்தா?" என்றான் சைதன்யா.

கிழவன் அவன் கை மேல் கையை வைத்து "என் விஷயத்தை விடு. அந்தப் பெண்ணை பாரு தம்பி! பாவம், பயந்துவிட்டாள் போலிருக்கு" என்றான்.

தெருவிளக்கின் நிழலில்தான் அவள் நின்று கொண்டிருந்தாள். இருளும் ஒளியுமாக சேர்ந்து அவள் முகத்தில் பிரதிபலித்துக் கொண்டிருந்தன. அவள் முகத்தில் சோகம் குடிகொண்டிருந்தது.

பத்து பேர் இளைஞர்கள் சேர்ந்து வீட்டைக் காலி செய்யச் சொல்லி இம்சித்த பொழுது எந்த விதமாக மு ஆதரவில்லாமல், வேதனையோடு, ஒன்றும் புரியாமல் நின்று கொண்டிருந்தாளோ, அதே நிலையில்தான் இப்பொழுதும் நின்றுகொண்டிருந்தாள்.

அவன் வியப்போடு "சாரதா!" என்றான்.

சாரதா குழப்பத்தோடு நிமிர்ந்தாள். அதுவரை நடந்த சம்பவங்கள் எல்லம் சேர்ந்து அவள் மூளையை மறத்துப் போகும்படிச் செய்துவிட்டன. தனக்கு முன்னால் நின்று கொண்டிருந்த ஆளைப் பார்த்ததும் அவள் இதழ்கள் மெள்ளமாக விரியத் தொடங்கின. அந்த தாடியை நீக்கி விட்டு, உடைகளையும் மாற்றிவிட்டால்... மெல்ல அவள்



கண்களில் ஒளி வந்தது. சட்டென்று ஓரடி முன்னால் வைத்து "சைதன்யா! நீங்களா?" என்றாள்.

அதற்குள் கிழவன் அவர்களிடம் வந்து சேர்ந்தான்.

"இந்த ராத்திரி வேளையில்... இதென்ன சாரதா? இங்கே?" சைதன்யா கேட்டுக் கொண்டிருந்தான்.

"என் விஷயத்திற்கு என்ன வந்தது? அது கிடக்கட்டும். சைதன்யா! இதென்ன வேஷம்? என்ன உடை இது?" அவள் குரல் தழுதழுத்தது. "எப்படி இருந்தவர் இப்படி ஆகிவிட்டீர்களே? ஒரே பார்வையில் பத்து பேரை ஆட்டிப் படைக்கக் கூடியவர் நீங்க. உங்களுக்கு இந்த கதியா?"

சைதன்யா சிரித்தான். உணர்வுகளையும், வேதாந்தத்தையும் ஒன்று கூட்டிச் சிரித்த சிரிப்பு அது.

கிழவன் அவனைக் கூர்ந்து பார்த்துவிட்டு "நான் நினைச்சுக்கிட்டே இருந்தேன். நீ பிறவி தரித்திரத்திலிருந்து வந்தவன் இல்லை என்று" என்றான். "இங்கே எதுக்கு தம்பீ! அங்கே போகலாம் வாங்க." சத்திரத்து திண்ணையை நோக்கி நடந்தான் கிழவன்.

சைதன்யாவைப் பார்த்ததுமே தோன்றிய முதல் கேள்வியைக் கேட்டாள் சாரதா. அது ஆயிரம் உருவம் எடுத்து அவளைத் துளைத்துக் கொண்டே இருந்தது.

சைதன்யா சிரித்தான். "என்னவென்று சொல்லட்டும் சாரதா! ஒருத்தர் என்னை விட்டும், இன்னொருத்தர் உலகத்தை விட்டும் போய்விட்டார்கள்" என்றான்.

அவள் ஏதோ கேட்கப் போன போது "வேண்டாம் சாரதா! இனி எதையும் கேட்காதே" என்றான், தடுப்பது போல். "நம்மவங்க எல்லோரும் எப்படி இருக்காங்க? எங்கே இருக்காங்க?" குசலம் விசாரித்தான்.

சாரதா அந்தக் கேள்விக்கு உடனே பதில் சொல்ல வில்லை. கொஞ்ச நேரம் மௌனமாக இருந்துவிட்டு மெதுவாக ஒவ்வொரு விஷயமாக சொல்லத் தொடங் கினாள்.

சுவரில் சாய்ந்தபடி உட்கார்ந்திருந்தான் சைதன்யா. ஒரு பக்கத்து கன்னத்தின் மீது விளக்கு வெளிச்சம் மங்க லாக விழுந்து கொண்டிருந்தது. சூனியத்தைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தான். முகத்தில் எந்த உணர்ச்சியும் இருக்க வில்லை. சாரதா மட்டும் நடந்ததை யெல்லாம் சொல்வ தற்கு மிகவும் வேதனையடைந்தாள், முக்கியமாக கௌசல்யா வின் விஷயத்தை.

அதையும் சொல்லி முடித்த பிறகு அவள் மௌன மாக இருந்தாள். ரொம்ப நேரம் அவர்களுக்குடைய நிசப்தம் தாண்டவமாடிக் கொண்டிருந்தது. சுற்றிலும் இருள். சைதன்யா ஆடாமல் அசையாமல் சுவரில் சாய்ந்த படி உட்கார்ந்திருந்தான். அவனுக்கு தங்கையைப் பற்றி நினைவுகள் ஒவ்வொன்றாக வரத் தொடங்கின.

விடியற்காலையிலேயே எழுந்து, குளித்துவிட்டு படிக்க உட்கார்ந்து கொள்ளும் தங்கை. வீட்டில் மகா லக்ஷ்மியைப்போல் வளைய வந்த தங்கை. அருவியைப் போல் துள்ளிக் கொண்டும், நிலவைப் போல் ஒளி வீசிக் கொண்டும் இருந்த தங்கை. எந்த அந்தகார நிலையத்தில்



சிக்கிக் கொண்டிருக்கிறாளோ? எந்தக் கயவனின் கையில் துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறாளோ?

கன்னத்தில் ஈரத்தை உணர்ந்ததும் தன்னையும் அறியாமல் துடைத்துக் கொண்டான். ஒரே ஒரு கண்ணீர் சொட்டு மெல்ல நழுவி கீழே வழிந்து கொண்டிருந்தது. விரலால் சுண்டிவிட்டு தனக்குள் சொல்லிக் கொண்டான்.

"கண்ணீர் துளியே! சொத்து முழுவதும் போன போது வரவில்லை. என் மகன் இறந்து போன அன்றும் வரவில்லை. மனைவி என்னை விட்டுப் பிரிந்து போன பொழுதும் வரவில்லை. இப்பொழுது மட்டும் ஏன் வந்தாய்?"

* * *

அவனை மறுபடியும் தம் மனிதர்களுடன் சேர்த்து வைத்து விட வேண்டும் என்ற சாரதாவின் ஆசை நிறை வேறவில்லை. பலவிதமாக முயன்றாள்.

சைதன்யா மறுத்து தலை அசைத்துவிட்டு "இல்லை சாரதா! நான் போய் கிரண்மயியின் சொத்தை அனுப விக்க முடியாது" என்று சொல்லி விட்டான்.

"சரி போகட்டும். அதை மேற்பார்வையிட்டு கொண்டு..." என்ற அவள் வார்த்தைகளை இடைமறித்து விட்டு "அது நடக்கிறகாரியம்தானா? என்னைப் பார்த்த துமே அவர்கள் இரண்டு பேரும் எல்லாவற்றையும் என் கையில் ஒப்படைத்து விடுவார்கள். நானே அவர்களுக்கு தலைவன்போல் நடந்து கொள்ளத் தொடங்கி விடுவேன். அதுதான் எனக்கு விருப்பமில்லை. ஒரே ஒரு முறை என்

மகன் சாகக் கிடந்த போது டாக்டரைத் தவிர வேறு யாரையுமே நான் கை நீட்டி யாசித்ததில்லை. அந்த நிலைமையை வரவழைத்து விடாதே."

"நீங்க யாசிக்க வேண்டிய நிலைமை என்ன? உங்களைப் பார்த்ததுமே அவர்களே உங்களை..." அவள் வார்த்தை இன்னும் முடியவில்லை.

"அதுதான் எனக்குப் பிடிக்காது" என்றான் சைதன்யா. "கடைசியில் அதுதான் நடக்கும். வேண்டாம் சாரதா! அவர்கள் சம்பாதித்தது அவர்களே அனுபவிக் கட்டும். அவர்களுடைய திருமணத்தைப்பற்றி நல்ல செய்தி சொன்னாய். அதுவே போதும். கௌசல்யாவைப் பற்றிய வருத்தத்தைத் தவிர வேறொன்றுமில்லை எனக்கு. வேறு என்ன இருக்குன்னு அந்த வீட்டு நான் வர முடியும்?"

"ஆனால் நீங்க இப்படி இருப்பது தெரிந்தால் ரவி சும்மா இருப்பாரா?"

"அது சரி. அவ்வளவு லட்சங்களுக்கு அதிகாரியான உங்க அக்கா, நீ இது போல் சின்ன வேலையில் இருந்து கொண்டு வேறு இடத்தில் கொள்வதற்கு எப்படி ஒப்புக் கொண்டாள்?"

"என்விஷயம் வேறு."

சைதன்யா சிரித்தான். "உனக்கு இருக்கும் சுவாபிமானம் என்னிடம் மட்டும் இல்லாமல் போய்விடும் என்று நினைத்து விட்டாயா சாரதா?" என்றான்.

அவளால் இந்தக் கேள்விக்கு பதில் சொல்ல முடியவில்லை. ஒரு கோணத்திலிருந்து பார்க்கும் போது அவன் சொன்னது கூட சரிதானோ என்று தோன்றியது.



அவன் இவ்வாறு தென்படுவான் என்று அவள் நினைக்கவில்லை. அது அவளுக்கு சந்தோஷமாக இருந்தது. இந்தச் செய்தி அக்காவுக்கும ரவிக்கும் தெரிந்துவிட்டால் போதும். அவர்களே வந்து அழைத்துக்கொண்டு போய் விடுவார்கள். தன்னோடு வாதாடினாற்போல் தம்பியோடு வாதாட முடியாது இல்லையா?

ஆனால் அவள் ஆசை நிறைவேறவில்லை. சைதன்யா முன் கூட்டியே அதற்கான ஜாககிரதைகளை மேற்கொண்டு விட்டான். அது எவ்வாறு நிகழ்நதது என்றால...

"வாங்க. போகலாம்" என்றாள் சாரதா.

"எங்கே?"

"எங்க வீட்டுக்கு."

சைதன்யா சிரித்துவிட்டு "அதறகுள் வீடடைக் கூட ஏற்பாடு செய்து கொண்டு விட்டாய் போலிருக்கு" என்றான்.

சாரதா வெட்கத்துடன் தலை குனிந்தாள்

சைதன்யா திரும்பவும் சொன்னான். "வேண்டாம் சாரதா! மறுபடியும் என்னை அந்த பந்தங்களில் சிக்க வைக்காதே."

அவள் வியப்படைந்து "இதென்ன? இப்படியே இருந்துவிடப் போறீங்களா?" எனறாள்

சைதன்யா பதில பேசவில்லை.

அதுவரை அவர்களுடைய உரையாடலை கேட்டுக் கொண்டிருந்த கிழவன் குறுக்கிட்டு "அவ்வளவு செய்ததை

வைத்துக்கொண்டு உனக்கு இந்த தலையெழுத்து ஏன் தம்பீ? கிளம்பு" என்றான்.

சைதன்யா மறுப்பது போல் தலையை அசைத்து விட்டு "அந்த சொத்து என்னுடையது இல்லை தாத்தா" என்றான்.

"ஆனாலும் உன்னைச் சேர்ந்தவங்க எல்லோரும் இருக்காங்க என்று சொன்னாய் இல்லையா. அவர்களுக் காகவாவது நீ போகணும்."

"இல்லை தாத்தா! எனக்கு யாருமே இல்லை. இருக்கிற வங்க என் மனிதர்கள் இல்லை."

கிழவன் சிரித்தான். "வேதாந்தாம் நிராசையிலிருந்து தோன்றாது தம்பீ! எல்லாம் அனுபவித்த பிறகு தான் அந்த நிலை வர வேண்டும்."

"நான் எல்லாவற்றையும் அனுபவித்துவிட்டேன் தாத்தா!"

"என்னால் நம்ப முடியாது. பெண்களின் பால் உன் மனதில் பூரணமான நம்பிக்கை இல்லை. அது மட்டு மில்லை. விதியின் பேரில் கூட உனக்கு முழு மதிப்பு இல்லை. உன்னிடமே நீ முழுவதுமா ஒன்றினால்தான் உனக்கு அந்த நிலை வரும்."

சைதன்யா மனதின் அடிவாரத்தில் எங்கேயோ அவன் அகம் அடியுண்டது. "அது உனக்கு வந்திருக்கா?" என்று கேட்டான்.

கிழவன் ஆழ்ந்த பெருமூச்சு விட்டான். கொஞ்ச நேரம் மௌனமாக இருந்துவிட்டு பிறகு சொன்னான்.



"ரொம்ப நாட்களுக்கு முன்னால் டில்லியில் ரஞ்சனி ஸ்டுடியோ ஒன்று இருந்தது. நினைவு இருக்கா? அதன் முதலாளி நிரஞ்சன்தாஸ். ஒரு நாள் நிரஞ்சன் தாஸுக்கு ஒரு வினோதமான எண்ணம் வந்தது.

வெளிநாட்டு நடிகர்களைப் போட்டு மகாபாரதம் சினிமா எடுக்கவேண்டும் என்று. எல்லோரும் எச்சரித்தார் கள். வேண்டாமென்று தடுத்தார்கள். ஆனாலும் அவன் கேட்கவில்லை. கையில் இருந்ததையெல்லாம் போட்டு படம் எடுக்க ஆரம்பித்தான். கிடைத்த இடத்தில் எல்லாம் கடன் வாங்கினான். கடைசியில் அந்தப் படத்தை முடித் தான். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அந்தப் படம் தோல்வி யைத் தழுவியது. கோடிக்கணக்கான பணத்தில் புரண்டு கொண்டிருந்தவன் விடிவதற்குள் நடுத்தெருவுக்கு வந்து விட்டான். தாம் சொன்னதைக் கேட்காமல் போனதற்கு தகுந்த தண்டனை கிடைத்தது என்று சந்தோஷப்பட்டார் கள் சிலர். இந்தத் துறையில் போட்டி கொஞ்சம் குறைந்தது என்று மகிழ்ந்து போனார்கள் வேறு சிலர். கொடுக்கும் கை கொடுத்துக் கொண்டே இருந்தபோது பெற்றுக் கொண்ட ஆயிரமாயிரம் கைகளில் ஒன்று கூட அவனுக்கு உதவிக்கரம் நீட்டவில்லை. வேண்டுகோள் விடுத்த போது சல்லிக்காசு கூட தரவில்லை.

ஆனால் அவன் தளர்ந்து போகவில்லை. உன்னைப் போல் வைராக்கியம்தான் வேதாந்தம் என்று ஆத்மவஞ் சனை செய்து கொள்ளவில்லை. எந்தச் சமுதாயம் அவனைப் பார்த்துச் சிரித்ததோ அதையே ஒரு உலுக்கு உலுக்கி விட வேண்டும் என்று முடிவு செய்தான். அறிவை யும், உழைப்பையும் முதலீடாக வைத்து இரவும் பகலும்

கஷ்டப்பட்டான். இருபத்தைந்து வருடங்களில் மறுபடியும் சென்ட்ரல் ஸ்டூடியோவை வாங்கும் நிலைக்கு உயர்ந் தான். அப்படித்தான் செய்யப போகிறான் இன்று என்று எல்லோரும் நினைத்திருந்தார்கள். ஆனால் அவன் என்ன செய்தான் தெரியுமா?"

இருவரும் கவனமாக கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

"தன் நண்பர்களை, முகப்பரிசயம் இருந்தவர்களை எல்லோரையும் அழைத்து பார்ட்டி தந்தான். மிகப் பெரிய பார்ட்டி அது. பல ஆயிரக்கணக்கான ரூபாய் செலவில் நடந்த அந்த பார்ட்டியின முடிவில் அவன் பேசத் தொடங்கினான். மனிதர்களை, அவர்களின் தந்திரமான சுபாவத்தை விலாவாரியாக எடுத்துரைத்தான். அரை மணி நேரம் விடாமல் சொற்பொழிவு ஆற்றிவிட்டு கடைசியாக தன் முடிவை வெளியிட்டான்.

லட்சக் கணக்கான சொத்துக்களை அப்படியே தர்ம ஸ்தாபனங்களுக்கும், அனாதை சரணாலயங்களுக்கும் எழுதி வைத்துவிட்டு சன்னியாசம் மேற்கொள்ளப் போவ தாக.

அதைக் கேட்டதும் சபையில் சலசலப்பு எழும்பியது. அவனைத் தடுத்து நிறுத்த எவ்வளவோ பேர் முயன்றார் கள். ஆனாலும் அவன் கேட்கவில்லை. அதற்கு மறுநாள் முதல் அவன் யார் கண்ணிலும் படவில்லை. சொன்ன சொல்லைக் காப்பாற்றி விட்டான். யாருக்கும் புரியாதது ஒன்றுதான்.



பணம் போன போதே சன்னியாசியாக போய் விடாமல், மறுபடியும் அதை சம்பாதிப்பதற்காக ஏன் இவ்வளவு கஷ்டப்பட்டான்? கஷ்டப்பட்டு சம்பாதித்து விட்டு, நினைத்ததை சாதித்த பிறகு மறுபடியும் ஏன் துறந்துவிட்டான் என்று."

"ஆமாம். ஏன் இழந்தான் அத்தனையும்?" கேட்டான் சைதன்யா.

"அதான் சொன்னேனே ஏமாற்றத்திலிருந்து வேதாந்தம் பிறக்காது என்று."

"அதுதான் காரணம் என்று எப்படி நம்புவது? வேறு ஏதாவது காரணம் கூட இருக்கலாம் இல்லையா?"

கிழவன் ஆவேசமாக "இல்லை இல்லை. வேறு எந்தக் காரணமும் இல்லை" என்றான்.

"அவ்வளவு உறுதியாக எப்படிச் சொல்ல முடியும்? உனக்கெப்படி தெரியும்?"

"அந்த நிரஞ்சன்தாஸ் நான்தான் என்பதால்."

அடியுண்டவன் போல் பார்த்தான் சைதன்யா. எதிரே கிழவன் சலனமில்லாமல் உட்கார்ந்திருந்தான். சைதன்யாவின் மனதில் எங்கோ ஒரு மூலையில் ஒட்டிக் கொண்டிருந்த அகம்பாவம், தன்னைப் போன்ற லட்சாதி பதிகளை சின்ன கண்ணசைவில் விலை கொடுத்து வாங்கி விடக் கூடிய கோடீஸ்வரனின் எளிமையைப் பார்த்த துமே நசிந்து விட்டது.

சாரதாவின் பக்கம் திரும்பினான். அவள் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவன் மெதுவாக "சாரதா! நான் உன்னுடன் வரு கிறேன்" என்றான். அவள் முகம் சந்தோஷத்தால் மலர்ந்து விட்டது.

"ஆனால் ஒரு நிபந்தனை" என்றான். "என்னைப் பற்றி என் வீட்டாருக்கு தெரியப்படுத்தக் கூடாது."

அவன் தன்னோடு வந்தாலே போதும் என்று நினைத் துக் கொண்டிருந்த சாரதா அதற்கு உடனே சம்மதித்து விட்டாள்.

"போயிட்டு வா தம்பி!" என்றான் கிழவன் முறுவ லுடன். தொலைவில் எங்கேயோ எட்டு மணி அடித்தது.

தன்னுடைய உடமை என்று எதுவுமே இல்லை எடுத்துச் செல்வதற்கு. வரும்போது மட்டும் என்ன கொண்டு வந்தான்?

எழுந்து நின்றான். "போயிட்டு வரேன் தாத்தா!"

"நல்லது தம்பி!"

சாரதா படியிறங்கினாள்.

"மறுபடியும் நாம் சந்தித்துக் கொள்ள முடியாதா தாத்தா?"

"நீதானேப்பா சொன்னாய், கால வெள்ளத்தில் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாறிப் போகிற பிராணிகள் நாம் என்று. சந்தர்ப்பம் வாய்க்கும் போது மறுபடியும் சந்தித்துக் கொள்வோம், அதற்குள் என் காலம் முடிவடையாமல் இருந்தால்."



அவன் நகர்ந்தான் அவளோடு சேர்ந்து முன்னால் அவள், பின்னால் மெதுவாக அவன் கொஞ்ச தூரம் நடந்த பிறகு அவன் திரும்பிப் பார்த்தான். அந்தக் கிழவன் இருட்டில் இன்னும் அதேபோல் உட்கார்ந்திருந்தான். சைதன்யா கையை ஆட்டினான்.

கிழவன் கூட கையைத் தூக்கி ஆசீர்வதிப்பது போல் ஏதோ முணுமுணுத்தான்.

அவ்விருவரும் இருளில் கலந்து மெல்ல மெல்ல கண் மறைவானார்கள்.

89978

* * *

சாரதாவின் சிறிய வீடு சைதன்யாவுக்கு மிகவும் பிடித்து விட்டது. சுற்றிலும் பூஞ்செடிகள்.

இரண்டு நாட்களில் அவனும் சின்ன வேலையைத் தேடிக் கொண்டான். அதைப் பெரிதாக உத்யோகம் என்று சொல்ல முடியாது. ஃபீலிங் யூனிட்டில் சரக்குகளில் இருப்பைப் பற்றி கணக்கு எழுதும் வேலை. அது கிடைத்த துமே அவன் தனியாக போய் விடலாம் என்று நினைத் தான். ஆனால் சாரதா சம்மதிக்கவில்லை.

சைதன்யாவுக்கு இந்த வேலை ஒன்றும் புதிதாக தோன்றவில்லை. அவன் பிசினெஸ் செய்து வந்த நாட் களில் இப்படிப்பட்ட சின்னச் சின்ன ஃபீலர்கள் அவனுக் குக் கீழே நிறைய பேர் இருந்து வந்தார்கள். அப்படிப் பட்ட ஃபீலரிடம் குமாஸ்தாவாக அவன்.

கோடிக் கணக்கான ரூபாய்களுடன் வியாபாரம் செய்து வந்த சைதன்யா, இப்பொழுது எல்லா படிகளும்

வட்ட நூலகம் ... 626 008.

கீழே இறங்கி வந்து மீனவர்களுடன் சேர்ந்து வேலைப் பார்ப்பது புதிய அனுபவம். அவன் அவர்களுடன் அறி முகத்தை வளர்த்துக் கொண்டான். அவர்களுடைய கள்ள மில்லாத சிரிப்பு, கஷ்டப்படுவதை விட வேறு எதுவும் தெரியாத குணம் அவனை வெகுவாக கவர்ந்தது. அவர் களுக்கு அவன் பெயர் வாயில் நுழையவில்லை. "சைது துரை" என்று அழைத்து வந்தார்கள். ஒரு நாள் அவர்கள் அவனை கடலுக்கு வரச் சொல்லி அழைத்தார்கள்.

சைதன்யா சிரித்துவிட்டு "சரி வரேன்" என்றான். ஐந்து நாட்களுக்குப் போதுமான உணவு பதார்த்தங்களை மூட்டைக் கட்டிக் கொண்டு கடல் மீது வேட்டைக்கும் போவது மிக அரிதான அனுபவம்.

அன்றைக்கு அவன் வீட்டுக்குத் திரும்பி வருவதற்கு தாமதமாகிவிட்டது. ஊர் முழுவதும் உறக்கத்தில் ஆழ்ந்து விட்டது. அவன் வரும் வரை சாரதா விழித்துக் கொண்டிருந்தாள். அவளைப் பார்த்து அவன் வியப்ப டைந்து "டைம் என்ன?" என்று கேட்டான்.

"பதினொன்றரை" என்றாள்.

"நீ இன்னும் விழித்துக் கொண்டு இருக்கிறாயா?"

அவள் தலையைத் திருப்பிக் கொண்டு "பரவா யில்லை" என்று தனக்கும் அவனுக்கும் சாப்பாடு பரி மாறத் தொடங்கினாள்.

"நாளைக்கு நீ ஆபீசுக்குப் போகணும் இல்லை? இப்படி எனக்காக தூக்கத்தைக் கெடுத்துக் கொண்டால் எப்படி?"



அவள் பொய் கோபத்துடன் "இனி அந்த விஷயத் தைத் தவிர வேறு எதுவும் இல்லையா பேசுவதற்கு?" என்றாள்.

அவன் சிரித்துவிட்டு "இருக்கு. நாளைக்கு கடலுக்கு போகிறேன், அவர்களுடன் சேர்ந்து. இரண்டு நாட் களுக்குத் திரும்பி வர மாட்டேன்" என்றான்.

அவள் கலக்கமடைந்தவளாக "எதுக்காக இப்போ கடலுக்குப் போகணும்? புயல் காற்று வீசக் கூடிய நாட்கள் வேறு" என்றாள்.

அவன் சாப்பிட்டு முடித்துவிட்டு கைகளை டவலில் துடைத்துக் கொண்டே "இரண்டு நாட்களுக்கே இப்படி சொல்கிறாயே? வாழ்நாளெல்லாம் கடலிலேயே கழித்துக் கொண்டிருக்கும் மீனவர்களைப்பற்றி ஏன் பேச மாட்டேங்கிறாய்?" என்று கேட்டான்.

"அது அவர்களுக்கு பழக்கப் பட்டுப் போய் விட்டது."

சைதன்யா சிரித்தான். "உயிர் போவது யாருக்குமே பழக்கப்படாது சாரதா! ஏன் என்றால் அது ஒரே ஒரு தடவைதான் போகும் என்பதால்."

அவள் பதில் பேசவில்லை.

அவன் வராண்டாவிலிருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான். அவள் வெளியே படியில் உட்கார்ந்து கொண்டாள். மூங்கில் கழிகளால் கட்டப்பட்ட வேலிக்கு அப்பால் இருந்த தெரு ஆளரவமில்லாமல் இருந்தது. லேசாக வீசிக் கொண்டிருந்த காற்றுக்கு துலுக்கச் சாமந்திப் பூக்கள் மெல்ல தலையாட்டிக் கொண்டிருந்தன. அவற்றின்

மீது விழுந்து கொண்டிருந்த நிலா வெளிச்சம் மேலும் அழகைக் கூட்டியது.

"நான் சொன்னதைப் பற்றி யோசித்துக் கொண்டு இருக்கிறாயா?"

அவள் தடுமாற்றமடைந்து "இல்லை இல்லை" என்றாள். கொஞ்ச நேரம் மௌனமாக இருந்துவிட்டு நிமிர்ந்தாள்.

சைதன்யா நாற்காலியில் பின்னால் சாய்ந்து அமர்ந்து கொண்டு கண்களை மூடிக்கொண்டான்.

அவள் கண்களில் தன்னை அறியாமல் நீர் துளிர்த்தது. எப்படி இருந்தவன் எப்படி ஆகிவிட்டான்? கடந்த காலத்தில் நடந்த விஷயங்களை அவள் இன்னும் மறக்கவில்லை. அவனுடைய ஒவ்வொரு அசைவிலும் ஒரு விதமான வினோதமானதவன். விதி எப்படியெல்லாமோ ஆட்டி வைத்த போதிலும் கண்களின் கூர்மையை இன்னும் இழக்கவில்லையே.

உண்மைதான். கொஞ்சம் கருத்துவிட்டிருந்தான். கன்னங்கள் குழி விழுந்திருந்தன. ஆனால் முகத்தில் முன்பு இல்லாத முறுவல் இப்பொழுது வந்திருக்கிறது. கொஞ்சம் தன்னம்பிக்கையையும், எதிர்காலம் நன்றாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தையும் தோற்றுவித்தால் போதும். படிப்படியாக முன்னுக்கு வந்து விடுவான்.

அவள் யோசனையில் ஆழ்ந்திருந்த போதே அவன் "எனக்குத் தெரியும் நீ என்ன யோசிக்கிறாய் என்று" என்றான்.



அவள் திடுக்கிட்டு "என்ன?" என்றாள்.

"என்னை எப்படியாவது சம்மதிக்க வைத்து ஊருக்கு அழைத்துப் போவது என்று."

அவளுக்குச் சிரிப்பு வந்தது. "அதெல்லாம் இல்லை. நான் சொன்னால் மட்டும் நீங்க கேட்பீங்களா என்ன?"

"யாரோ சம்பாதித்தப் பணத்தை நான் போய் அனுபவிக்கிற யோசனையைத் தவிர வேறு எதுவாக இருந்தாலும் கேட்கிறேன். ஆனாலும் இந்த வாதம் நமக்கிடையே நூறு தடவையாவது ஏற்பட்டிருக்கும்னு நினைக்கிறேன்."

"நான் அதைப் பற்றி ஒன்றும் யோசிக்கவில்லை" என்றாள்.

"பின்னே எதைப்பற்றி?"

"நான்றாக இருக்கு. நான் யோசிக்கிற ஒவ்வொன்றையும் உங்களிடம் சொல்லணுமா என்ன?"

அவனுக்கு சிரிப்பு வந்தது.

அதைப் பார்த்து அவள் மேலும் ரோஷப்பட்டுக் கொண்டு "எழுந்து கொள்ளுங்கள். ரொம்ப நேரமாகி விட்டது" என்றாள்.

"இல்லை சாரதா! நீ போய் படுத்துக் கொள். எனக்கு தூக்கம் வரவில்லை" என்றான்.

அவனுக்கு அது வழக்கம்தான் என்பதால் அவள் அதற்கு மேல் ஒன்றும் பேச முடியாமல் உள்ளே போய் கதவை ஒருக்களித்து சாத்திவிட்டு படுத்துக் கொண்டாள்.

அவன் நிலா வெளிச்சத்தைப் பார்த்தபடி ரொம்ப நேரம் உட்கார்ந்திருந்தான். வாழ்க்கையில் தன்னை விட்டுப் பிரிந்து போன ஒவ்வொருவரைப் பற்றியும் யோசித்துக் கொண்டிருந்ததில் எவ்வளவு நேரம்தான் கழிந்ததோ தெரியவில்லை. தொலைவில் எங்கிருந்தோ மணி இரண்டு முறை அடித்து அவன் யோசனையை சிதறடித்தது. நாற்காலியை விட்டு எழுந்துகொண்டு உள்ளே போகத் தொடங்கியவன் நின்றான்.

அறையின் ஒரு மூலையில் ஒருக்களித்தபடி சாரதா தூங்கிக் கொண்டிருந்தாள். ஜன்னல் வழியாக வந்து விழுந்த நிலா வெளிச்சம் அவள் கன்னத்தில் பிரதி பலித்தது.

அவனுக்குத் தன் தங்கையைப் பறறிய நினைவு வந்தது அடக்க ஒடுக்கமாக இதே போல்தான் படுத்துக் கொள்வாள் கௌசல்யா. அவளையே பார்த்தபடி கொஞ்ச நேரம் நின்றான். காந்திமதி, கிரண்மயி இருவரின் அழகோடு ஒப்பிட்டால் கௌசல்யாவும், சாரதாவும் சுமாரான அழகுதான். ஆனால் அவ்விருவரின் கண்களில் ஏதோ சாந்தம் இருந்தது. மெல்லிய வேதனை இருந்தது. ஆத்மார்த் தமான உணர்வுகளைத் துவண்டக் கூடிய அமைதி இருந்தது. தங்கையின் நினைவுகளில் அவன் மனம் வேதனை அடைந்தது.

அவன் தன் அறைக்குப் போனான். டம்ளரில் நீரை ஊற்றிக் குடித்தான். படுக்கையின் மீது தூய்மையான விரிப் பையும, சிறிய தலையணையையும் பார்த்ததும் அவனுக்கு காந்திமதியின் நினைவு வந்தது. படுககையில் படுத்தான். குளிராக இருந்தது. காலடியிலிருநத போர்வையை எடுத்துப் போர்த்திக் கொண்டான். கதகதப்பாக இருந்தது. அவனுக்குத் தன் தாயின் நினைவு வந்தது.

ஒரு ஆணுக்கு தங்கையை, மனைவியை, தாயை தன் ஒருத்தியிடமே உணர்த்தக் கூடிய அதிர்ஷ்டம் ஒரு சில பெண்களுக்கு மட்டுமே கிடைக்கும்.

## 15

நவீன வகையில் பொருத்தபபட்டிருந்த விளக்கு களின் வெளிச்சத்தில், பயிற்சி பெற்றிருந்த வெயிட்டர்கள் பரிமாறிக் கொண்டிருந்தார்கள். ரவி சூட் அணிந்திருந் தான் கிரண்மயி பட்டுப் புடவையில் ஜொலித்துக் கொண்டிருந்தாள். எங்கும் ஒரே சந்தடி. பஃபே என்பதால் சின்னச் சின்ன கும்பலாக கூடி பேசிக் கொண்டிருந் தார்கள்.

ரவி எல்லாம் சரிவர நடக்கிறதா என்று பார்த்துக் கொண்டிருந்தான். அதற்குள் ஜெயின் அவனிடம் வந்தான். "என்ன ரவி! வியாபாரம் எப்படிஇருக்கு?"

"உங்களுக்குத் தெரியாதது என்ன இருக்கு? போட்டி அளவுக்கு மீறி அதிகமாகிவிட்டது. தெருவுக்கு ஒரு 'சீ ஃபுட்' கம்பெனி வந்து விட்டது."

"ஒரே பிசிநெஸ் செய்தால் அப்படித்தான் இருக்கும். சைடில் இன்னொரு பிசிநெஸ் செயதால் நன்றாக இருக் கும். என்ன சொல்றீங்க?"

"எந்த பிசிநெஸ் தொடங்கினால் நல்லதுன்னு நினைக் கிறீங்க?"

"என் உத்தேசத்தில் பருத்திக்கொட்டை வியாபார மாக இருந்தால் நன்றாக இருக்கும். உங்களுக்கும் அந்த எண்ணம் இருந்தால் சொல்லுங்க. நானும் ஷேர் வாங்கிக் கொள்கிறேன்."

ரவியின் முகம் மலர்ந்தது. "கண்டிப்பாக. கிரணிடம் கலந்து பேசிவிட்டு சொல்கிறேன்."

ஜெயின் சிரித்துவிட்டு "பொம்பிளைகளிடம் பிசிநெசில் யோசனை கேட்கக்கூடாது. அவங்களை கேட்க வேண்டிய விஷயங்கள் வேறு" என்றான்.

ரவியும் அந்த ஜோக்கைக் கேட்டுச் சிரித்தான்.

"போயிட்டு வரேன். யோசித்து வையுங்கள்" என்று சொல்லிவிட்டு ஜெயின் விடைபெற்றுக் கொண்டான்.

ஒவ்வொருவராக போகத் தொடங்கினார்கள். தோட்டம் காலியாகி விட்டது. ரவி களைப்புடன் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான. உள்ளே கிரண்மயி ஹோட்டல் மேனேஜருக்குக் கணக்கைத் தீர்த்துவிட்டு வெளியே வந்தாள். வேன் போய் விட்டது.

பில்லைப் பார்த்ததிலிருந்து அவளுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. வேலைக்காரர்கள் நாற்காலி களை உள்ளே எடுத்துப் போட்டுக் கொண்டிருந்தார்கள். அவள் வந்து ரவியின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டே "பில் எவ்வளவு ஆச்சு தெரியுமா?" என்றாள்.

"எவ்வளவு ஆச்சு?"

"பத்தாயிரம்!"

அப்படியா என்பது போல் தலையை அசைத்தான்.



"உங்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லையா?"

அவன் வியப்புடன் "எதுக்கு?" என்று கேட்டான்.

அவள் கோபம் மேலும் அதிகரித்தது. "எதுக்காகவா? பத்தாயிரம் செலவாகி விட்டதற்கு."

"பார்ட்டி கொடுக்கணும்னு ஏற்கனவே முடிவு செய்த விஷயம்தானே?" என்றான் அவன் புரியாமல்.

"ஆனால் நீங்க கண்ணில்பட்ட அத்தனைபேரையும் கூப்பிடுவீங்கன்னு நினைக்கவில்லை. இந்த பார்ட்டியால் எதைச் சாதிக்கப் போகிறோம் என்று எனக்குப் புரிய வில்லை."

"பிசினெஸ் கம்யூனிட்டியில் இந்த மாதிரி பார்ட்டீக் கள் மூலம்தான் எல்லா வேலைகளும் நடக்கும்."

அவள் அவன் முகத்தைக் கூர்ந்து பார்துவிட்டு "புத்தகங்களைப் படித்துவிட்டு பிசினெஸ் எப்படி செய்வது என்பதைப் பற்றிப் பேசாதீங்க. பிசினெஸ் தியரி இல்லை" என்றாள்.

அவனுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. "சமையலறையில் இருக்க வேண்டிய பெண்கள் பிசினெஸ் விஷயத்தில் தலையிட்டால் இப்படித்தான். எந்தக் காரிய மும் உருப்படாது" என்றான்.

அவள் முகம் சிவக்க "என்ன சொன்னீங்க?" என்றாள்.

அவன் அமைதியான குரலில் "கிரண்மயீ?" நீ ரொம்ப அழகானவள். அடிக்கடி எரிச்சலையும், கோபத் தையும் உண்டாக்கிக் கொண்டு, அந்த அழகை போக்

கடித்துக் கொள்ளாதே" என்றான், எதற்கும் இருக்கட்டும் என்று சற்று தொலைவில் நகர்ந்து உட்கார்ந்து கொண்டே.

அவ்வளவு கோபத்திலும் அவளுக்குச் சிரிப்பு வந்தது. "பேச்சை மாற்றாதீங்க" என்றாள், முகத்தை சீரியசாக வைத்துக் கொண்டு.

"பேச்சை எங்கே மாற்றினேன்? இன்னிக்கு ஜெயினிடம் பிசினெஸ் விஷயமாக பேசினேன்."

அவள் வியப்புடன் "என்ன பிசினெஸ்?" என்றாள்.

அவன் பெரிய பிசினெஸ் மேக்னெட் போல் முகத்தை வைத்துக் கொண்டு "இருவரும் சேர்ந்து வியாபாரம் செய்யலாம்னு இருக்கிறோம். பருத்திக்கொட்டை வியாபாரம்" என்றான்.

"உங்களுக்குக் கொஞ்சமாவது மூளை இருக்கா?" என்றாள்.

அவன் முகம் சிவந்தது. "ஏன்?" என்றான்.

"அந்த ஜெயின் இன்றைக்கோ நாளைக்கோ திவாலாகும் நிலையில் இருக்கிறான். அவனோடு சேரப் போறீங்களா?"

"உனக்கு எப்படி தெரியும்?"

"இப்பொழுது பார்ட்டியில் சுபாஷின் மனைவி சொன்னாள்."

அவன் முகம் சந்தோஷத்தால் மலர்ந்தது. "பார்ட்டீக்களால் என்ன லாபம் என்று கேட்டாயே? எப்படி காப்பாற்றப் பட்டிருக்கிறோம் என்று பார்த்தாய் இல்லையா" என்றான்.



"தலையெழுத்து!" அவள் தலையில் அடித்துக் கொண்டாள்.

* * *

"ஐலேசா... ஏலேலோ.. ஐலேசா..."

மீனவர்கள் ஒரே கும்பலில் லயமாக பாடிக் கொண்டிருந்தார்கள். படகில் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தான் சைதன்யா. கரையை விட்டு தொலைதூரத்திற்கு மெல்ல மெல்ல போய்க் கொண்டிருந்தது படகு.

கடல் கம்பீரமாக சலனமில்லாமல் இருந்தது– படகில் சுமார் பத்து பன்னிரெண்டு பேர் இருந்தார்கள். துடுப்பைப் போடுவதாலும், கடுமையான உழைப்பினாலும் அவர்களுடைய தசைகள் முறுக்கேறியிருந்தன. தூய்மையான புன்னகை உதடுகளில் தவழ்ந்து கொண்டிருந்தது.

லயப்படி துடுப்பைப் போட்டுக் கொண்டே படகை செலுத்திக் கொண்டிருந்தார்கள். நீலக்கடல் வெண்மை நிறத்தை பூசிக் கொண்டது. சூரிய கிரணங்கள் செங்குத்தாக கடல் நீரில் பிரதிபலித்துக் கொண்டிருந்தன. வலையை வீசுவதற்காக ஏற்பாடுகளை செய்து கொண்டிருந்தார்கள்.

நால்வரும் சேர்ந்து வலையை வீசினார்கள். காற்றில் பறந்து விரிந்து சல்லடையைப் போல் கடலில் விழுந்தது. சைதன்யா ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான். வலை மெதுவாக நீரில் இறங்கி கண்மறைவாகிக் கொண்டிருந்தது. படகு மெல்ல ஊர்ந்து கொண்டிருந்தது. நேரம் கடந்தது.

"அதோ! அங்கே பாரு" என்றான் குப்பன். சைதன்யா பார்த்தான். தொலைவில் கடலில் ஏதோ உருவம் தென் பட்டது.

"அதுதான் ட்ராலர். பெரிய துரை ஏதோ தேசத்தி லிருந்து வரவழைத்திருக்கிறாராம்." குப்பன் சொன்னான். அவர்கள் பார்த்துக் கொண்டிருந்த போதே ட்ராலர் கடலுக் குள் மறைந்து விட்டது.

வலையை மெதுவாக மேலே இழுத்துக் கொண்டிருந் தார்கள். சைதன்யா ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந் தான். வலை முற்றிலுமாக மேலே வந்து விட்டது. எல்லோரின் முகத்திலும் ஏமாற்றம் வெளிப்பட்டது. வலை யில் சின்னச் சின்ன மீன்கள், கடற்பாசியைத் தவிர வேறு எதுவும் இருக்கவில்லை.

"சகுனம் சரியில்லை." முணுமுணுத்தான் குப்பன். சைதன்யாவுக்கும் இரக்கம் ஏற்பட்டது. துரதிர்ஷ்டம் இன்னும் தன்னைத் துரத்திக் கொண்டிருக்கிறதா? மேலும் இரண்டு மணி நேரம் வேட்டைத் தொடர்ந்தது– பலன் கொஞ்சமாகத்தான் இருந்தது. படகில் மீன்கள்தான் ஓரளவுக்கு நிரம்பியிருந்தன. இறால்கள் கிடைத்தால் வலை யில் சிக்கிய மீன்களைக் கூட மறுபடியும் கடலுக் குள்ளேயே விட்டு விடுவார்கள் மீனவர்கள். இந்த முறை குறைந்தபட்சம் மீன்கள் கூட சரியாக கிடைக்கவில்லை.

வெயிலின் தீவிரம் அதிகமாயிற்று. கருத்த உடல்களில் வியர்வை மினுமினுத்துக் கொண்டிருந்தது. கிழக்கில் கிடைக்காவிட்டால் வடக்கில், வடக்கில் கிடைக்கா விட்டால் தெற்கில் பயணம் செய்து கொண்டிருந்தார்கள்.



ஆனால் பலன்தான் இருக்கவில்லை. எல்லோர் முகத்தி லும் ஏமாற்றம் தாண்டவமாடிக் கொண்டிருந்தது.

"இந்த ட்ராலர்கள் வந்த பிறகு நம் வாயில் மண்தான்" என்றான் குப்பன். "அடுப்பிலிருந்து கரண்டியால் அள்ளு வது போல் இறால்களை அள்ளிக்கொண்டு போறாங் களாம். அப்புறம் நமக்கு எங்கிருந்து கிடைக்கும்?"

இந்த முறை வலை அவ்வளவு எளிதாக வெளியே வரவில்லை. மேலும் இருவர் பிடித்து இழுக்க வேண்டி யிருந்தது. சைதன்யாவின் பக்கத்தில் உட்கார்ந்திருந்த குப்பன் ஒரே பாய்ச்சலில் எழுந்து போய் "மெதுவாக... டேய்! மெதுவாக இழுங்க" என்று கத்தினான். சைதன்யா மூச்சை இழுத்து அடக்கிக் கொண்டான். வலையை ஜாக்கிரதையாக இழுத்துக் கொண்டிருந்தார்கள்.

எல்லோர் முகங்களும் ரத்தம் வற்றி விட்டார் போல் வெளிறி விட்டன. வலைக்கு ஒரு மூலையில் பெரிய பாறாங்கல் ஒன்று இருந்தது. தண்ணீருக்கு வெளியே வந்ததுமே அந்த பாரம் தாங்க முடியாமல் வலையைக் கிழித்துக் கொண்டு மறுபடியும் தண்ணீருக்குள் நழுவி விட்டது. வலை ஒரு மூலையில் முற்றிலுமாக கிழிந்து பயன்படாமல் போய்விட்டது. ஏழை மீனவர்களுக்கு அது சாமானியமான நஷ்டமில்லை. மயான அமைதி அந்தப் படகில் வியாபித்துக் கொண்டிருந்தது. மாலை இருள் மெதுவாக சூழ்ந்து கொள்ளத் தொடங்கியது. படகு பின்னால் திரும்பியது.

எல்லோரும் மௌனமாக உட்கார்ந்துவிட்டார்கள். இன்னும் ஆசை மடியாதவர்கள் வலையை வீசினார்கள். காலியாக வெளியே வந்த வலையைப் பார்த்து ஏமாற்ற

மடைந்து போனார்கள். படகு மட்டும் ஆசைக்கும் ஏமாற்றத்திற்கும் இடையே ஊசலாடும் மனித வாழ்க்கையைப் போல் கரையை நோக்கி போய்க் கொண்டிருந்தது.

"குப்பன்!" சைதன்யா அழைத்தான்.

"என்ன சாமி!"

"திரும்பிப் போக வேண்டியதுதானா?"

"வேறு என்ன செய்வது?"

சைதன்யா கொஞ்ச நேரம் மௌனமாக இருந்து விட்டு "இன்னொரு தடவை முயற்சி செய்து பார்க்கலாம்" என்றான்.

"இருட்டிவிட்டதே சாமி."

"இருட்டில் வலை வீசுவது பழக்கப்பட்ட விஷயம் தானே?"

"அது சரிதான். ஆனால் இன்னிக்கு கடல் தேவன் கருணைக் காட்டவில்லையே?"

"கருணைக் காட்டுவான் என்று எனக்கு ஏனோ நம்பிக்கை இருக்கு."

"எப்படி?"

எப்படியென்று சொல்லுவான்? சிக்ஸ்த் சென்ஸ் என்பதற்கு சரியான விளக்கம் தெரியாதே? மௌனமாக இருந்துவிட்டான்.

சைதன்யாவிடம் அவர்களுக்கு மதிப்பு இருந்தது. அவன் மௌனமாக இருந்ததைப் பார்த்து விட்டு, மனதை



நோகடித்து விட்டோமோ என்று எண்ணிக் கொண்டே "எந்தப் பக்கம் சொல்லு சாமி? வலது பக்கமா இடது பக்கமா?" என்று கேட்டான்.

சைதன்யா முறுவலுடன் "வலது பக்கம்" என்றான். படகு சர்ரென்று முனை திரும்பியது. எல்லோரும் வியப்புடன் பார்த்தார்கள். குப்பன் எழுந்து நின்று "வலையை வீசுங்கடா. கடைசி தடவையாக நம் அதிருஷ்டத்தைப் பார்த்து விடுவோம்" என்று கத்தினான். அவன் உடலும், நீலக் கடலும் பளபளவென்று மின்னிக் கொண்டிருந்தது. இளைஞர்களுக்கிடையே உற்சாகம் பொங்கியது. வலை மறுபடியும் வீசப்பட்டது.

ஐந்து... பத்து... பதினைந்து நிமிடங்கள்.

வலை மெல்ல மெல்ல மேலே வந்து கொண்டிருந்தது. சைதன்யா மூச்சை இழுத்து அடக்கிக் கொண்டான். வலை மேலுக்கு வந்து கொண்டிருந்த போது "ஓஹ்!" என்ற சத்தம் தன்னையும் அறியாமல் சைதன்யாவின் வாயிலிருந்து வெளிவந்தது.

வலை முழுவதும் பளபளவென்று மின்னியபடி லேசாக நெளிந்து கொண்டிருந்தன நூற்றுக்கணக்கான இறால்கள். குப்பன் தொண்டைக் கிழியும்படி "டேய்! பதினொன்றும் பதினைந்தும்டா" என்றான். சந்தோஷம் தாங்காமல். இது போன்ற சைஸ் இறால்கள் சாதாரணமாக கிடைக்காது.

ஜலத்துக்கு அடியில் பிரவாகத்தின் வேகத்தோடு கும்பல் கும்பலாக பயணம் செய்து கொண்டிருந்த இறால்கள் வலையில் சிக்கிக்கொண்டன. ஒரு மணி நேரத்திற்குள் படகு நிரம்பிவிட்டது. மீனவர்களின் சந்தோஷத்திற்கு

எல்லையே இல்லை. சைதன்யா உதட்டில் முறுவல் தவழ்ந்தது. குப்பன் முகத்தில் சிரிப்பு. வலையைப் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களில் கைகள் லயப்படி அசைந்து கொண்டிருந்தன. குப்பன் துடுப்பைப் பிடித்துக் கொண்டான்.

சைதன்யா பின்னால் சாய்ந்தபடி உட்கார்ந்து கொண்டு கண்களை மூடிக் கொண்டான். கடல் மீதிருந்து வீசிய காற்று மனதை வருடிக் கொண்டிருந்தது.

கரையில் வரிசையாக படகுகள் வந்து சேர்ந்து கொண்டிருந்தன. முதலில் வந்தவர்கள் எல்லோரும் ஏமாற்றத்தோடு இருந்தார்கள். சரக்கு வராததால் பிரோக்கர்கள் தொய்ந்த முகத்தோடு நின்றபடி பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

இவர்களுடைய படகு கரைக்கு வந்து சேர்ந்ததுமே செய்தி காட்டுத் தீயாக பரவிவிட்டது.

"எந்த இடத்தில் கிடைத்தது?" கேள்வி.

"பதினொன்றும் பதினைந்துமா!" வியப்பு.

"டேய் கருப்பா! வாங்கடா." கூக்குரல்.

படகிலிருந்து இறங்கியவர்கள் வெளியே நின்று கொண்டிருந்தவர்களுக்கு பதில் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஒரே நிமிடத்திற்குள் அந்த இடத்தின் சூழ்நிலை மாறிவிட்டது. வீட்டிற்கு திரும்பிப் போனவர்கள் ஓடிவரத் தொடங்கினார்கள். படகுகளில் லாந்தர்களை பொருத்தினார்கள்.

எங்கும் ஒரே சந்தடி பரபரப்பு.



வேடனின் அம்பிலிருந்து விடப்பட்ட அம்பு போல் ஒன்றையடுத்து இன்னொன்றாய் படகுகள் கடலுக்குள் விர்ரென்று புறப்பட்டன. இரவு பகல் பார்க்கவில்லை. இருட்டு வெளிச்சம் என்றும் பார்க்கவில்லை. கஷ்டத்திற்குத் தகுந்த பலன் கிடைக்குமா இல்லையா என்று யோசிக்கவும் இல்லை. அதிர்ஷ்டத்தைத் தேடிக் கொண்டு புறப்பட்டார்கள். கடின உழைப்பு ஒன்றுதான் தெரியும் அவர்களுக்கு.

புரோக்கர்கள் சரக்கைச் சுற்றிலும் கூடினார்கள்.

"எவ்வளவு?"

"உங்களுக்குத் தெரியாதா சாமீ?" கைகளை பிசைந்து கொண்டே சொன்னான் குப்பன்.

மீனவர்களின் கண்களில் ஆசையோடு கூடிய ஆர்வம். புரோக்கர்களின் கண்களில் சாமர்த்தியம் கலந்த குள்ளநரித்தனம்.

"நாற்பது ரூபாய்!"

மீனவர்கள் திடுக்கிட்டார்கள். "நாற்பது ரூபாய் தானா?"

"சீக்கிரமாக சொல்லுங்கள்." அவசரப்படுத்தினால் எதிராளியின் மனம் தளர்ந்துவிடும் என்றா தந்திரம் புரோக்கர்களுக்கு நன்றாகத் தெரியும்.

"ரொம்ப குறைச்சல் சாமீ!"

"நீதான் பார்த்தாயே? நூறு படகுகள் போயிருக்கு. அவை திரும்பி வந்துவிட்டால் விலை மேலும் இறங்கி முப்பத்தெட்டு ரூபாய் ஆகிவிடும்.

அதுவும் உண்மைதான். சரக்கு விற்பனை ஆகாதோ என்ற பயம் மீனவர்களை கீழே இறங்கி வரச் செய்யும். சரக்கை பாதுகாத்து வைக்க வசதி இல்லை அவர்களிடம்.

ஏதோ ஒரு விலைக்கு விற்று விட வேண்டும். கொஞ்ச நேரம் பிடிவாதமாக இருந்தால் இறங்கி வந்து விடுவார்கள் என்று புரோக்கர்களுக்கு இருந்த நம்பிக்கை மீனவர் களுக்கு இல்லை.

குப்பன் ஒரு வினாடி தடுமாறினான். புரோக்கர் களில் யாரோ "சரி, நாற்பதரை போட்டுக்கொள்" என்று சொன்னதை சைதன்யா கவனித்துவிட்டு குப்பனை எச்சரிப்பதற்குள்ளாகவே அவன் சொல்லிவிட்டான். "சரி சாமி."

மீனவர்களின் கண்களில் சந்தோஷம். தற்போதைக்கு கிடைத்த பணத்தைப் பார்த்து. எவ்வளவு இழந்தோம் என்ற பேச்சே இல்லை. கிடைத்த வரையில் ஆதாயம்.

பத்தே நிமிடங்களில் சரக்கு கைமாறி விட்டது. "போயிட்டு வரோம சைது துரை!" சைதன்யா தலை அசைத்தான். "சைது துரை வந்திருக்காட்டி அப்படியே வெறுங்கையோடு திரும்பியிருப்போம்" என்றார்கள் யாரோ.

ஆனால் அவனுக்கு அந்த ஆனந்தம் இல்லை. மனித னுக்கு மனிதன் இழைக்கும் அநியாயத்தைப் பார்ப்பது அதுதான் முதல் தடவை. ஏ.சி. அறைகளில் எடுத்துக் கொள்ளும் முடிவுகளின் வினைகள் அநியாயத்திற்கு வழி வகுக்கும் என்ற உண்மை, குமாஸ்தாக்கள், மேனேஜர்களால் இருட்டடிப்பு செய்யப்படுகிறது.

வலை வீசி பிடித்த இறால்களின் பணத்தை எடுத்துக் கொண்டு மீனவர்கள் வீட்டுக்குத் திரும்பினார்கள்.

வலை வீசி மீனவர்களைப் பிடித்துக் கொள்ள இன்னும் நிறைய பொழுது இருக்கிறது என்று நினைத்த புரோக்கர்கள் தேநீர் குடிக்கப் போனார்கள்.

சைதன்யா மட்டும் தனியாக கரையில் நின்றிருந் தான்.

## 16

"இன்றைக்கு நான் கணக்குகளை பார்க்கலாம்னு இருக்கேன்" என்றான் ரவி.

மேனேஜர் தலையை அசைத்துவிட்டு வெளியே போனார். ஐந்து நிமிடங்களில் லெட்ஜர் புத்தகங்கள் அவன் மேஜைக்கு வந்தன.

'டே' புத்தகத்தை எடுத்துப் பார்த்தான். சுமார் பதினைந்து நாட்களாக எழுதப்படவில்லை. "என்ன இது?" மேனேஜரிடம் கேட்டான்.

மேனேஜர் குமாஸ்தாவை அழைத்து விசாரித்தார். அவன் தலையைக் குனிந்து கொண்டானே ஒழிய வாயே திறக்கவில்லை.

"ஆபீசில் வேலை அதிகமாக இருக்கா? இரண்டு பேர் செய்ய வேண்டிய வேலை ஒருத்தரே செய்யறீங்களா?"

மேனேஜரும் குமாஸ்தாவும் பதில் பேசவில்லை.

"இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் மேலிடத்தி லிருந்து தட்டிக் கேட்டால் தவிர நீங்க வேலை செய்ய மாட்டீங்க. அப்படித்தானே."

"சீக்கிரமாக முடித்துவிடுகிறேன் சார்." குமாஸ்தா மென்று விழுங்கினான்.

"சீக்கிரமாக முடித்துவிடுகிறேன் சார்." குமாஸ்தா மென்று விழுங்கினான்.

ரவி சீறினான். "சீக்கிரமாக இல்லை. இன்றைக்கே முடித்தாகணும். எவ்வளவு நேரமானாலும் சரி, நான் இருக்கிறேன். உடனே தொடங்குங்கள்" என்றான். மேனேஜரைப் பார்த்து "கேஷியரைக் கூப்பிடுங்கள்" என்றான்.

கேஷியர் வந்தான்.

"கேஷ் பேலன்ஸ் எவ்வளவு இருக்கு?"

அவன் பேசவில்லை.

"ஏன் பேச மாட்டேங்கிறாய்?" அதட்டினான்.

"மூவாயிரம்."

"எவ்வளவு இருக்கணும்?"

"ப... பன்னிரெண்டாயிரம்" என்றவன் சட்டென்று காலில் விழுந்து சார்! பிள்ளைக் குட்டி இருப்பவன். இரண்டு நாட்கள் டயம் கொடுங்கள். கட்டி விடுகிறேன்" என்றான். இன்னும் கொஞ்சம் பேசினால் அழுது விடுவான் போலிருந்தது.



ரவி மேனேஜரைப் பார்த்து "இவருக்கு மெமோ கொடுங்கள். இதுதான் கடைசி எச்சரிக்கை" என்றான். கேஷியர் கும்பிடு போட்டு விட்டு போய்விட்டான்.

இனி தன்னுடைய முறை வந்து விட்டது என்று மேனேஜருக்குத் தெரிந்து விட்டது. ரவி எதுவும் பேச வில்லை. தானே அலட்சியமாக இருந்துகொண்டு மற்றவர் களை சொல்லுவதில் பயன் இல்லை.

அன்று கணக்குகளை முடிக்கும் போது இரவு பத்து மணியாகி விட்டது. அது வரையில் ஆபீசில் உட்கார்ந்து கொண்டு பேப்பர்களை எல்லாம் பொறுமையாக பார்த்து முடித்தான். ஊழியர்கள் அத்தனை பேரும் அவனுட னேயே தங்கி இருந்தார்கள். கடைசியில் கணக்கைப் பார்த்த போது அவனுக்குக் கலக்கம் ஏற்பட்டது. கரெண்ட் ரேஷியோ, டெபிட்—ஈக்விடி போன்ற பெரிய பெரிய வார்த் தைகள் எதுவும் அவனுக்குத் தெரியாது. ஆனால் இந்த நிலைமை இப்படியே தொடர்ந்தால் இன்னும் ஒரு வருஷத்திற்குள் ஃபாக்டரியை இழுத்து மூட வேண்டி யிருக்கும் என்ற விஷயம் மட்டும் புரிந்தது.

அதற்குப் பிறகு வெகுநேரம் மேனேஜருடன் பேசிக் கொண்டிருந்தான். பத்தரை மணிக்கு வெளியே வந்து கொண்டிருந்தபோது, முதல் ஆட்டம் சினிமா முடிந்து வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்த பழைய நண்பன் தென்பட்டான்.

"இப்பொழுதெல்லாம் கண்ணில்படுவதே இலலையே ஏன்?" கேட்டான் அவன்.

"பார்த்துக் கொண்டுதானே இருக்கிறாய். இதோ, வீட்டிற்கே இப்பொழுதுதான் திரும்பிக் கொண்டிருக் கிறேன்" என்றான் ரவி.

"கொஞ்ச நேரம் எங்கேயாவது உட்கார்ந்து பேசு வோம். ரொம்ப நாளாச்சு உன்னைப் பார்த்து."

ரவிக்கும் ரொம்ப களைப்பாக இருந்தது. காலையி விருந்து பார்த்த கணக்குகள், அவற்றின் விளைவுகள்! காரை பார் காம்பவுண்டிற்கள் நிறுத்தினான்.

இருவரும் அரைமணி நேரம் பேசி பொழுதை போக்கினார்கள். நண்பனிடம் விடைபெற்றுக் கொண்டு ரவி வீட்டிற்குத் திரும்பி வந்த போது ஏறக்குறைய பதினொன்றரை மணியாகிவிட்டது. அவனுக்கு அன்று ரொம்ப சந்தோஷமாக இருந்தது. தான் செய்த காரியத் தைப் பற்றி மனைவியிடம் சொல்லி பாராட்டைப் பெற வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் கூடிய சந்தோஷம்.

அதே நேரத்தில் கிரண்மயி வீட்டில் அவனுக்காக காத்திருந்தாள். அவளுக்கு ஆத்திரமாக இருந்தது. தான் என்னவோ இந்த விஷயத்தைப் பற்றி மூளையைக் கசக்கிக் கொண்டு யோசித்துக் குழம்பிக் கொண்டிருக்கும் போது, இந்த ரவி நள்ளிரவு வரையிலும் ஊர் சுற்றிக் கொண்டிருக் கிறான் போலும். இன்றைக்கு இரண்டில் ஒன்று முடிவு செய்து விட வேண்டும் என்ற கோபத்தில் இருந்தாள். அதனால்தான் ரவி வந்து கதவைத் தட்டியதுமே வந்து கதவைத் திறந்தாள்.

ரவி உள்ளே வந்ததுமே அவன் குடித்துவிட்டு வந்திருக் கிறான் என்று தெரிந்து கொண்டுவிட்டாள். அவள்



கோபம் கட்டுக்கு அடங்காமல் போய்விட்டது. "உங் களுக்கு கொஞ்சம் கூட புத்தியே இல்லை. இவ்வளவு பொறுப்பு இல்லாமல் நடந்து கொள்வதற்கு நீங்க வெட்கப் படணும்" என்றாள்.

அவள் அவ்வாறு பேசுவது புதிது ஒன்றுமில்லை. ஆனால் இதற்கு முன்னால் இருந்த நிலைமை வேறு. இன்றைக்கு அவன் நன்றாக உழைத்துவிட்டு வந்திருக் கிறான். மனதளவில் ஓய்வு எடுத்துக் கொள்ள விரும் பினான். அந்த நிலையில் அவள் அவ்வாறு பேசியது அவனுக்கு எரிச்சலைத் தந்தது.

"மூடு வாயை!" என்றான் கோபமாக.

எதிர்பாராத அந்த வார்த்தைக்கு அவள் அதிர்ந்து விட்டாள். சட்டென்று சமாளித்துக் கொண்டு "ஏன்? எதற்காக?" என்று எதிர்த்துக் கேட்டாள். கோபத்தால் அவள் முகம் சிவந்து விட்டது. "நான் சொன்ன வார்த்தை களில் தவறு என்ன இருக்கு? நீங்க நடந்து கொள்ளும் விதத்திற்கு..." ரவி திரும்பி சுட்டெரிப்பது போல பார்த்த தும் பாதியிலேயே நிறுத்திவிட்டாள்.

ரவி வினாடி நேரம் கூர்ந்து பார்த்தான் அவளை. சட்டென்று ஃபோனை நெருங்கி ஆபீசுக்கு டயல் செய்தான். "யாரு? வாட்ச்மேனா? நான்தான் ரவி" என்று மனைவியை நோக்கித் திரும்பி "இங்கே வா" என்றான். அவன் குரலில் தென்பட்ட அதிகாரத்திற்கு அவள் தன்னையறியாமலேயே முன்னோக்கி நடந்தாள்.

அவன் ஃபோனில் "வாட்ச்மேன்! நான் எவ்வளவு நேரம் உங்க ஆபீசில் இருந்தேன்னு உங்க எஜமானியம்

மாளிடம் சொல்லு" என்று சிலையாக நின்று கொண்டி ருந்த அவள் கையில் ரிசீவரை திணித்துவிட்டு மாடிக்குப் போய்விட்டான்.

கதவை படாரென்று சாத்திவிட்டு படுக்கையில் விழுந்தான். திடீரென்று தாங்க முடியாத ஏமாற்றம் வந்து அவனை சூழ்ந்து கொண்டது. தான் தனியன் என்ற உணர்வு.

கிரண்மயி ஃபோனை வைத்துவிட்டு வேகமாக மாடிக்கு வந்து அவன் இருந்த அறையின் ஜன்னல் வழியாக உள்ளே பார்த்தாள். அறை முழுவதும் நிசப்தமாக இருந்தது. கடியாரத்தின் ஓசையைத் தவிர வேறு எந்த சத்தமும் இருக்கவில்லை. கையை நெற்றிப்பொட்டில் அழுத்திக்கொண்டு தாறுமாறாக படுத்துக் கொண்டிருந் தான் அவன்.

அவன் கண்களிலிருந்து ஒரு சொட்டு கண்ணீர் கன்னத்தின் வழியாக தலையணையில் வந்து விழுந்தது. அவள் ஜன்னல் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு வெகு நேரம் நிசப்தமாக அப்படியே நின்று கொண்டிருந்தாள்.

தாய்க்கும், தங்கைக்கும் தராமல் பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டிருந்த அன்பை மனைவிக்கு அர்ப் பணிக்க எண்ணியிருந்த மிக மெளனமையான உள்ளம் படைத்தவன் அவன். அதை அவள் உணர்ந்து கொள்ளாத போது உலகத்திலேயே அவனை விட துரதிர்ஷ்டசாலி வேறு ஒருத்தன் இல்லை.

அன்பை பணத்தால் விலைக்கு வாங்கி விட முடியாது.

* * *



ஊசி விழுந்தாலும் கேட்கும் படியான நிசப்தம் அங்கே இருந்தது. சைதன்யா அங்கே அமர்ந்திருந்தான். அவனுக்கு எதிரே சிலர் உட்கார்ந்திருந்தார்கள் இன்னும் சிலர் கைகட்டி நின்று கொண்டிருந்தார்கள்.

எல்லோரின் கண்களிலும் ஏதோ கனவிலும் நினைத் திராத விஷயத்தைக் கேட்ட ஆச்சரியம். சிலரின் கண் களில் பிரமிப்பு. சிலர் முகத்தில் கேள்விக்குறி.

சைதன்யா எழுந்து கொண்டான். "நன்றாக யோசித் துக் கொள்ளுங்கள். அவசரம் இல்லை. ஆனால் ஒரு விஷயம் மட்டும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ஒரு தடவை முடிவை எடுத்துக் கொண்ட பிறகு பின் வாங்கு வது என்ற பேச்சே இருக்கக் கூடாது."

அவன் வீடு திரும்பியதும் சாரதா முறுவலுடன் கேட்டாள். "என்ன? ஸ்ட்ரைக் செய்ய வைக்கப் போறீங் களாமே?"

"அவ்வளவு பெரிய வார்த்தை எல்லாம் எதற்கு?" என்றான் சைதன்யா. "டிமாண்ட் சப்ளை இவற்றுக்கு இடையே விலை முடிவு செய்யப்படும் என்ற சின்ன உண்மை கூட தெரியாத நிலையில் இருக்கிறார்கள் மீனவர் கள். நான் செய்ததெல்லாம் சப்ளையை செயற்கையாகக் குறைப்பது ஒன்றுதான்."

"ஆனால் மறு பக்கத்தில் இருப்பவர்கள் ரொம்ப சந்தி வாய்ந்தவர்கள். பணக்காரார்கள்!"

"இந்த மீனவர்களுக்குப் பக்கபலமாக இருப்பவன் கூட அவர்களுக்குச் சளைத்தவன் இல்லை. இவர்கள் கொடுத்த வாக்கைக் காப்பாற்றினால் போதும். சின்ன தாக ஒரு நாடகத்தை அரங்கேற்றி விடுவேன்."

மறுநாள் வரையில் காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லாமல் போய்விட்டது. அன்றிரவு சுமார் பதினோரு மணியளவில் குப்பன் நாலு பேரை அழைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தான்.

"எல்லோரும் சேர்ந்து யோசித்தோம் தம்பீ! ஒரு முடிவுக்கு வந்து விட்டோம். நீ சொன்ன படியே செய்கி றோம்."

சைதன்யா உடனே ஒப்புக் கொள்ளவில்லை. "நன்றாக யோசித்துக் கொள்ளுங்கள். சிலர் பிரிந்து போனாலும் எல்லாமே நஷ்டமாகிவிடும்."

குப்பனுடன் வந்தவர்களில் ஒருவன் முன்னுக்கு வந்தான். "சைது துரை! கங்கம்மா தாயின் மீது ஒவ்வொரு வரையும் சத்தியம் செய்யச் சொல்வோம். ஒரு தடவை சத்தியம் செய்து விட்டால் பிறகு பேச்சு மாற மாட்டாங்க."

சைதன்யா தலையை அசைத்தான்.

மறுநாள் கடலில் பிடித்துக் கொண்டு வந்த இறால் களை விற்பனைக்கு வைத்தார்கள் மீனவர்கள்.

"எவ்வளவு?"

"எழுபது ரூபாய்."

புரோக்கர் திடுக்கிட்டு உடனே சுதாரித்துக் கொண்டு "இந்தக் கரையில் என்றைக்காவது ஐம்பதைத் தாண்டி யிருக்கா டா? உன் வாழ்க்கையில் என்றாவது பார்த்திருக் கிறாயா?" என்று கேட்டான்.



"பார்த்ததில்லை. அதான் உயிருடன் இருக்கும் போதே பார்த்து விடலாம்னு இருக்கிறோம்." இளைஞன் ஒருவன் துணிச்சலுடன் பதிலளித்தான்.

"சரி போகட்டும். ஐம்பத்தைந்து போட்டுக் கொள்."

"ஒரு பைசா குறைக்க முடியாது."

"இன்னும் நூறு படகுகள் வந்து சேர்ந்து விடும். அவை வந்து விட்டால் விலை நாற்பதாகிவிடும்."

"வரட்டும்."

நூறு படகுகளும் வந்து விட்டன. ஆனால் எல்லோரும் ஒரே விலை. எழுபது ரூபாய்!

"வாங்க முடியாது என்றால் என்ன செய்வாங் களாம்?" சுருட்டைப் புகைத்துக் கொண்டே கேட்டான் சுந்தரம். அங்கே இருப்பவர்களில் அவன்தான் பெரிய கை. அவன் கைவசம் நாலு பெரிய ஃபீலிங் யூனிட்டுகள் இருந்தன.

புரோக்கர் நக்கலாக சிரித்தான். "மறுபடியும் கடலுக் குள் வீசிவிடுவாங்களோ என்னவோ?"

இறால்கள் கடலுக்குள் வீசப்படவில்லை. லாரி ஒன்று வந்து அவற்றை எடுத்துச் சென்றது.

"எங்கே எடுத்துக் கொண்டு போறாங்களாம்?" சுந்தரம் கேட்டான்.

"கோல்ட் ஸ்டோரேஜுக்கு."

சுந்தரத்தின் கண்கள் வியப்பால் படபடத்தன. சட் டென்று சமாளித்துக் கொண்டு சிரித்தான். "எவ்வளவு

நாள் வெச்சிருப்பாங்க ஸ்டோரேஜில்? வாடகையை அவங்க பாட்டன் வந்து கட்டுவானா?"

அதே சமயத்தில் சைதன்யா கோல்ட் ஸ்டோரேஜ் முதலாளியுடன் பேசிக் கொண்டிருந்தான். "எங்களிடம் பணம் இல்லை. ஆனால் சரக்கு இருக்கு. தற்போதைய ரேட் படி விலை போடுங்க. உங்க வாடகையும் சரக்கின் விலையும் என்றைக்கு சமமாகிறதோ அன்றைக்கு நீங்களே சரக்கை எல்லாம் எடுத்துக் கொள்ளுங்கள். இப்போ மட்டும் வாடகையைக் கேட்காதீங்க."

ஸ்டோரேஜ் முதலாளிக்கு இதனால் நஷ்டம் எதுவும் இருப்பதாகத் தோன்றவில்லை. ஒப்புக் கொண்டார். ஒப்பந் தத்தில் கையொப்பமிட்ட பிறகு எழுந்து நின்று கொண்டு சைதன்யா சொன்னான். "சில பேருடைய வாழ்க்கைப் போராட்டம் இது. இதற்கு நீங்கள் கை கொடுத்ததற்கு நன்றி. இதே மனித நேயத்தோடு இன்னொரு உபகாரம் செய்யுங்கள். தயவு செய்து நம் ஒப்பந்தத்தின் விஷயத்தை இரண்டாம் பேர் அறியாமல் பார்த்துக் கொள்ளுங்கள். இதுதான் நாங்கள் கேட்டுக் கொள்ளும் உதவி."

அதற்கு அவர்கள் ஒப்புக் கொண்டார்கள்.

* * *

"எங்கிருந்து பணம் கொண்டு வந்து கட்டறாங் களாம்?" சுந்தரம் கேட்டான்.

"தெரியாது துரை."

"பார்ப்போம், எவ்வளவு நாளைக்கு பிடிவாதமாக இருப்பாங்கன்னு. டேய்! பக்கத்து ஊரில் ரேட்டைத்



தெரிஞ்சுக்கிட்டு கிடைத்த சரக்கையெல்லாம் வாங்கிக் கிட்டு வாங்க."

ஐந்தாவது நிமிடத்தில் அவன் முகத்தைத் தொங்க போட்டுக் கொண்டு வந்தான். "பக்கத்து ஊரில் விலை அறுபது ரூபாய் ஆகிவிட்டதாம். நம்ப ஊர் மிராசுதாரர் அதற்குள் அத்தனையும் வாங்கி விட்டாராம். அது மட்டுமே இல்லை சாமீ! அவங்க கூட நாளையிலிருந்து எழுபதுக்கு ஒரு பைசா குறைந்தாலும் விற்கப் போவ தில்லையாம்."

கரையோரங்களில் இருந்த கிராமங்களில் எல்லாம் இந்தச் செய்தி காட்டுத் தீயாக பரவிவிட்டது. அது வரை யில் சிலரால் மட்டுமே கண்ட்ரோல் செய்யபட்டு வந்த விலையில், இந்த தாக்கத்தால் திடீரென்று ஏற்ற இறக்கங் கள் ஏற்பட்டன. சிலர் அறுபதுக்கு விற்றார்கள். வேறு சிலர் எண்பது வரையில் போனார்கள்.

"இரு ஸ்ட்ரைக் இல்லை. சரக்கு இருக்கு. வேண்டும் என்பவர்கள் வாங்கிக் கொள்ளலாம். விலை எழுபது ரூபாய். இன்னும் சில நாட்கள் போனால் கோல்ட் ஸ்டோரேஜ் வாடகையுடன் சேர்த்து எண்பது ரூபாய் ஆகி விடும்." சைதன்யா எடுத்துச் சொன்னான்.

ஃபீலர்கள் இறங்கி வரவில்லை.

இறங்கி வர மாட்டார்கள் என்று தெரியும். அது அவ்வளவு சுலபம் இல்லை. இனி அதிக நாள் தன்னால் ஸ்டாக்கை வைத்திருக்க முடியாது. ஆனால் இந்தச் சமயத்தில்தான் உறுதியாக இருக்க வேண்டும்.

இந்த நடவடிக்கையால் பக்கத்து ஊர்க்காரர்கள் லாபமடைந்தார்கள். இறால்களின் விலை கூடியது. அந்த கொஞ்ச விலையேற்றத்திற்கே அவர்கள் திருப்தியடைந் தவர்களாய் சரக்கை விற்றுக் கொண்டிருந்தார்கள். அது தான் பாதித்தது. குறைந்த பட்சம் கடற்கரை பிரதேசத்தில் சில மைல் தூரமாவது இறால் விலையை கண்ட்ரோல் செய்ய முடிந்தால் நன்றாக இருக்கும். ஆனால் எப்படி?

சைதன்யாவின் மனம் குழம்பியது. முக்கியமாக தன் பேச்சை நம்பி இதில் இறங்கி இருக்கும் குப்பனின் நிலை மையை பார்த்தபோது, குப்பனின் நிலை இக்கட்டாக இருந்தது. கடற்கரை பிரதேசத்தில் படகுகள் நகரவில்லை. ஆனால் இவ்வளவு நாளைக்குத்தான் நகராமல் இருக்க முடியும்?

ஒரு விஷயத்தில் பரவாயில்லை. வேலை செய்யா விட்டால் உணவு கிடைக்காது என்ற பிரச்னை இவர் களுக்கு இல்லை. நான்கு மீன்களை பிடித்து வந்தால் வயிறு நிரம்பிவிடும்.

சுற்றுப்பக்கத்தில் வாழும் மீனவர்கள் தம் சரக்கை கொஞ்சம் அதிக விலைக்கு விற்றுக் கொண்டே இவர் களைக் கவனிக்கத் தொடங்கினார்கள். மீனவர்களின் பிடிவாதம் ஜெயித்து விலையைக் கூட்ட முடிந்தால் தாமும் அந்த விலைக்கே விற்பார்கள். இல்லாவிட்டால் நஷ்மடைவது சைதன்யாவைச் சேர்ந்தவர்கள்தான். அவ்வளவுதானே தவிர சக மீனவனுக்கு உடந்தையாக அவர்கள் எந்த உதவியும் செய்ய மாட்டார்கள்.

மீனவர்களின் வாழ்க்கை விசித்திரமானது. எதிர் காலத்தைப் பற்றிய யோசனையே கிடையாது. வழக்கமாக



ரொம்ப துர்பரமாக வாழ்க்கையைக் கழித்து வருவார்கள். அதிர்ஷ்டம் அடித்து, கை நிறைய மீன்கள் கிடைத்து ஐந்தாறு ஆயிரம் ஒரே நாளில் சேர்ந்து விட்டால் திடீர் பணக்காரர்கள் ஆகிவிடுவார்கள்.

இரண்டு நாட்களில் எல்லாவற்றையும் செலவழித்து விடுவார்கள். பிறகு மறுபடியும் முன் போலவே ஏழ்மை. தங்கையை, மனைவியை புரோக்கர்களிடம் ஒப்படைக்கும் ஏழ்மை. அந்த ஏழ்மையோடு விளையாடும் கந்துவட்டிக் காரர்கள்.

ஒரு காட்டுப்பாட்டுக்குள் அடங்காத மீனவர்களை தன் வார்த்தைகளுக்குக் கட்டுப்படும்படியாக செய்வதற்கு சைதன்யா ரொம்ப சிரமப்பட வேண்டியிருந்தது. அதிலும் எதிராளிகள் சாமானியமானவர்கள் இல்லை. சுந்தரம் போன்ற ஜாம்பவான்களின் வேன்கள் ஐஸ்கட்டிகளை நிரப்பிக் கொண்டு, தொலை தூரப்பிரதேசங்களுக்குப் போய் இறால்களை வாங்கிக் கொண்டு வந்தன. வியாபாரம் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. உள்ளூர் மீனவர்கள் இயலாமையுடன் அதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"கரெண்ட் கம்பிகளை இணைத்து விடலாம்" என்றான் குப்பன்.

"அதனால் என்ன நடக்கும்?"

"கரெண்ட் போய்விட்டால் ஐஸ் தயாரிக்க முடியாது. தூரத்திலிருந்து சரக்கைக் கொண்டு வரமுடியாது."

சைதன்யா சம்மதிக்கவில்லை. அப்படிச் செய்தால் உடனே போலீசார் களத்தில் இறங்கி விடுவார்கள்.

"அப்போ என்னதான் செய்வது?" குப்பன் கேட்டான்.

சைதன்யா யோசித்தான். என்ன செய்வது என்று புரியவில்லை. பிரச்னை கடல் போன்று பெரியது. எல்லோரும் அவன் சொல்லப் போகும் யோசனைக்காக காத்திருந்தார்கள்.

"நாளை வரையில் டயம் கொடுங்கள். யோசித்துச் சொல்கிறேன்" என்றான் சைதன்யா.

எல்லோரும் மௌனமாக அங்கிருந்து அகன்றார்கள். அந்த மௌனம்தான் அவனை வருத்தப்படுத்திக் கொண்டிருந்தது.

ஏதோ ஒன்றைச் செய்ய வேண்டும். மறுநாள் வரை டயம் இருந்தது. ஆனால் ஏதாவது அற்புதம் நிகழ்ந்தால் தவிர அதற்குள் பரிகாரம் கிடைக்காது. அவன் குழப்பத்துடன், வீட்டிற்குக் கிளம்பினான்.

வீணாக இதில் தலையைநுழைத்து விட்டோமோ என்று அவன் ஒரு நாளும் எண்ணியதில்லை. ஆனால் எந்த வழியிலிருந்தும் தான் எதிர்பார்த்த சப்போர்ட் கிடைக்காததால் சோர்ந்து விட்டான். அவன் வீடு திரும்பும் போது இரவு எட்டு மணியாகி விட்டது.

காம்பவுண்ட் கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான். நிலா வெளிச்சத்தில் துலுக்கச் சாமந்திப் புக்கள் இன்னும் அழகாக தென்பட்டன. உள்ளே நுழையப் போனவன் அப்படியே நின்று விட்டான். உள்ளே சாரதா வீணை வாசித்துக் கொண்டிருந்தாள். அந்த நாதம் அலை அலையாக மிதந்து வந்து கொண்டிருந்தது.



அவனைப் பார்த்துவிட்டு அவள் எழுந்து கொள்ளப் போனாள். வேண்டாம் என்று கையால் ஜாடை காட்டி தடுத்துவிட்டும் ஜன்னலுக்குப் பக்கத்தில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான். பின்னால் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டான்.

பத்து நிமிஷங்கள் வரை தன்னைச் சூழ்ந்திருந்த சகல வருத்தங்களையும், துளைத்தெடுத்துக் கொண்டிருந்த பிரச்னைகளையும் மறந்துவிட்டான்.

அவள் நிறுத்தியதுமே "ஆனந்த பைரவிதானே?" கேட்டான். சாரதா முறுவலுடன் "இல்லை. நீலாம்பரியில் சிருங்கார லஹரி" என்றாள்.

அவன் கண்களைத் திறந்து "எனக்கு ராகங்களைப் பற்றி அவ்வளவாகத் தெரியாது" என்றான்.

அவள் வீணையைக் கீழே வைத்து விட்டு உள்ளே போனாள். அவன் ஜன்னல் வழியாக வெளியே பார்த்தான். நிலா வெளிச்சம் மரங்களின் ஊடே தரையில் விழுந்து கொண்டிருந்தது.

ஏனோ நிம்மதியாக உணர்ந்தான். பலவிதமாக அலைக்கழிக்கப்பட்ட பிறகு, அந்தச் சின்ன பர்ணசாலையில் அத்தனை சுலபமாக அமைதி கிடைத்தது அவனுக்கு ஆச்சரியமாக இருக்கவில்லை.

* * *

"ரிலாக்ஸ்!" என்றான் ரவி. கிரண்மயி பதில் சொல்லவில்லை.

"எனைத் திட்டாதே. புரிந்து கொள். காலையிலிருந்து வேலை செய்து உடலும் மனமும் களைத்துப் போய்விடும். ஒரு பெக் போட்டால் ரிலாக்ஸாக இருக்கும்."

"தொடக்கத்தில் ஒரு பெக் ஆக இருப்பது போகப் போக முழு பாட்டில் என்றாகிவிடும்."

"உனக்குத் தெரியாது கிரண்! இந்த பிசிநெஸ் விவகாரங்கள்..." என்று அருகில் வந்து நயமாக ஏதோ சொல்லப் போனான்.

அவள் தன் இயல்பான குரலில் அவன் வார்த்தைகளை இடைமறித்து "எந்த பிசிநெஸ் விவகாரங்களைப் பற்றிச் சொல்றீங்க நீங்க? இன்னிக்கு ஐந்தாம் தேதி. இன்னும் நீங்க சம்பளமே தரவில்லையாம்" என்றாள்.

அவன் அந்தக் கடைசி வாக்கியத்தைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. "இன்னிக்கு ஐந்தாம் தேதியா?" சரேலென்று ஃபோனை நோக்கி ஓடினான். மறுமுனையில் மேனேஜரின் குரலைக் கேட்டதுமே மேனேஜர்! இன்னிக்கு ஐந்தாம் தேதி. இருபதாம் தேதிக்கும் ஷிப்மெண்ட் முடித்தாக வேண்டும். மறந்து விட்டீங்களா?" என்று கத்தினான்.

"இருபதாம் தேதியா? எனக்குத் தெரியாதே?" மேனேஜர் சொன்னார்.

அந்தக் காகிதம் தன் மேஜை டிராயரிலேயே இருப்பது நினைவுக்கு வரவே நாக்கைக் கடித்துக் கொண்டான். கிரண்மயி தன்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள் என்று உணர்ந்ததும் சமாளித்துக் கொண்டு "சரி போகட்டும் விடுங்கள். வேன்களை அனுப்பி எங்கே எவ்வளவு கிடைத்



தாலும், என்ன விலையாக இருந்தாலும் சரி வாங்கி விடச் சொல்லுங்கள்" என்றான்.

"என்ன விலையாக இருந்தாலும் சரியா?" சந்தேகத்தோடு கேட்டார் மேனேஜர்.

"இல்லாவிட்டால் காண்ட்ராக்டை எப்படித்தான் முடிப்பது?" உரத்தக் குரலில் கத்தினான் ரவி.

இங்கே ரவி எடுத்துக் கொண்டு இந்த முடிவு சரியான சமயத்தில் அங்கே சைதன்யாவுக்கு உதவி செய்தது. அன்று மாலையிலேயே ஒரு வேன் வந்து அந்த எல்லையில் இருந்த சரக்கை எல்லாம் எழுபது ரூபாய் வீதத்திற்கு வாங்கிக் கொண்டு போய் விட்டது.

இந்த சம்பவம் அந்த கடற்கரை பிரதேசத்தின் சூழ்நிலையை முற்றிலுமாக மாற்றிவிட்டது.

* * *

சரக்கை தான் சொன்ன விலைக்கே யாரோ வாங்கத் தயாராக இருந்தது தெரிந்ததுமே சைதன்யா வியப்படைந்தாலும், சட்டென்று அதை மறைத்துக் கொண்டு ஏற்கெனவே தனக்கு அந்த விஷயம் தெரியும் என்பது போல் நடந்து கொண்டான். அவன் நடவடிக்கைகளை ஊன்றி கவனித்துக் கொண்டிருந்த புரோக்கர்கள் விஷயம் புரியாமல் தலையைப் பிய்த்துக் கொண்டார்கள்.

அதற்குள் அமெரிக்காவுக்கு சம்பந்தப்பட்ட ஏற்றுமதியாளர் ஒருவர் டாலர்களில் இறால்களை வாங்கத் தயாராக இருந்தார் என்றும், அதனால்தான் சரக்கு அப்படி விற்றுப் போய் விட்டதென்றும் வதந்தி ஒன்று பரவியது. அதை உருவாக்கியதே சைதன்யாதான்.

சைதன்யாவின் பேச்சைக் கேட்டு அதுவரையில் சரக்குகளை பதுக்கி வைத்திருந்த மீனவர்களின் சந்தோஷத்திற்கு எல்லையே இல்லாமல் போய்விட்டது. அந்த மகிழ்ச்சி மேலும் அதிகரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை சைதன்யா மேற்கொண்டான்.

அப்பாவித்தனம் கூட சில சமயம் நல்லதிற்கே வழி வகுக்கிறது.

இரண்டு நாட்களுக்கு சரக்கை நிறுத்தி வைத்து ஒரு கிலோவுக்கு இருபது ரூபாய் லாபத்தைப் பெறமுடியும் என்ற உண்மையை கண்கூடாக பார்த்து விட்டதால் குறைந்த விலைக்கு விற்க யாருமே முன்வரவில்லை. ஒருத்தரைப் பார்த்து மற்றொருவர், அவர்களைப் பார்த்து இன்னொருவர் என்று எல்லோரும் சரக்கை நிறுத்தி வைத்துக் கொள்ளத் தொடங்கியதும் நிலைமை தாறு மாறாகி விட்டது.

விலை எண்பது தொண்ணூறுக்கு நடுவில் வந்து நின்றது. அதனால் புரோக்கர்கள் தவிக்கத் தொடங்கி விட்டார்கள். ஏற்றுமதியாளர்கள் என்ன செய்வதென்று புரியாமல் தலையைப் பிய்த்துக் கொண்டார்கள்.

சைதன்யா நிலைமையை கவனிக்கத் தொடங்கினான். கயிறு அறுந்து போகும் வரையில் இழுக்கக் கூடாது என்று அவனுக்குத் தெரியும். ஜப்பானில் பிரான்ஸ் கம்ஸ்யூமர்ஸ் சொசைட்டி ஏற்பட்டுள்ளது என்றும், குறிப்பிட்ட விலையை மீறி வாங்கக் கூடாதென்று முடிவு செய்திருக்கிறார்கள் என்றும் அதற்கு முதல் நாள் பேப்பரில் படித்திருந்தான்.



ஆனால் இன்னும் கயிறு அறுந்து போகும் நிலைக்கு வரவில்லை.

அதற்குள் இறால் ஏற்றுமதியாளர்களின் அசோசியேஷனிடமிருந்து பேச்சு வார்த்தைகளுக்கு அவனுக்கு அழைப்பு வந்தது.

சதுரங்க விளையாட்டில் எல்லா பக்கங்களிலும் பலத்தை உறுதிப் படுத்திக் கொண்டு மினிஸ்டரை நகர்த்தி ஷா சொல்லும் சமயம் வந்து விட்டது.

## 17

விசாலமான ஏ.சி. அறையின் நடுவில் விசாலமான மேஜை. வெண்மை நிறத்தில் மேஜை விரிப்பு. அதன் மீது மூன்று ஆஷ் டிரேக்கள், சிறிய ஃப்ளவர் வேஸ்.

ஒவ்வொரு மெம்பருக்கு முன்னாலும் ரைட்டிங் கேட், பென்சில், கண்ணாடி டம்ளரில் தண்ணீர்.

மேஜைக்கு இரு பக்கங்களிலும் மெம்பர்கள் உட்கார்ந்திருந்தார்கள். ஒரு பக்கத்தில் சேர்மென் பைரவ மூர்த்தி உட்கார்ந்திருந்தார். இந்தப் பக்கத்து நாற்காலி மீனவர்களின் பிரதிநிதிக்காக ஒதுக்கப் பட்டிருந்தது. அறையில் நிசப்தம் தாண்டவமாடிக் கொண்டிருந்தது. வலது பக்கத்து நாற்காலியில் சுந்தரம் உட்கார்ந்திருந்தான். அவன் போட்டுக் கொண்டிருந்த செண்டின் நறுமணம் அறை முழுவதும் பரவியிருந்தது. அதைப் போக்கடிப்பதற்காக சுருட்டை பற்ற வைத்துக் கொண்டான்.

பத்தடிக்க இன்னும் இரண்டு நிமிடங்கள் இருந்தன. சுந்தரம் எரிச்சலுடன் நாற்காலியில் நெளிந்தான். "ஊரும்

பெயரும் இல்லாத மீனவர்களுக்காக இவ்வளவு ஆர்ப் பாட்டம் எதுக்கு?" என்றான்.

பைரவமூர்த்தி பதில் சொல்லவில்லை. முறுவலித்து விட்டு பேசாமலிருந்தார். அந்தச் சிரிப்பில் நிறைய அர்த் தங்கள் இருந்தன. அந்தச் சூழ்நிலையை, அத்தனை பேர் கம்பீரமாக உட்கார்ந்திருப்பதைப் பார்த்தால் யாருக்குமே ஒரு விதமான பீதி ஏற்படும். பைரவ மூர்த்திக்குத் தேவை யானது அதுதான்.

வருபவன் வறுமைக்கு பிரதிநியாக இருப்பான். ஒரு முறை ஏர்கண்டிஷன் அறைக்குள் நுழைந்ததுமே பாதி தைரியம் போய்விடும். அழகான பீங்கான் தட்டுகளில் வைக்கப்பட்ட முந்திரிப் பருப்பை மென்றுகொண்டே கூட்டத்தைத் தொடங்குவார்கள். மேல் மட்டத்தினர் பேசும் மொழி, எட்டு பேர் ஒரு ஆளை கன்வின்ஸ் பண்ணும் விதம், அந்த ஆளைத் திணரடித்துவிடும். எது சொன்னாலும் ஒப்புக்கொண்டு விடுவான். அந்த மயக்கம் வெளியே போன பின்தான் விடுபடும். ஆனால் அதற்குள் எல்லாம் முடிவடைந்து விட்டிருக்கும்.

இந்த தந்திரத்தைத்தான் பைரவமூர்த்தி பயன்படுத்த நினைத்தார். இது சாதாரண தொழிலாளர்களின் தலைவர் களுக்குப் பொருந்தாது. ஆனால் இப்பொழுது பேச்சு வார்த்தைக்கு வருவது கீழ்நிலையில் உள்ளவர்களின் பிரதிநிதி. ரொம்ப சுலபமாக வலையில் வீழ்த்தி விடலாம்.

"இவர்களுக்கு நேரத்தின் மதிப்புக் கூட தெரியாது" என்றான் சுந்தரம் நாற்காலியில் பின்னால் சாய்ந்து கொண்டே.



"இன்னும் பத்தடிக்கவில்லையே?" என்று சொல்லிக் கொண்டிருந்த போதே கடியாரத்தில் பத்து மணி அடித்த தும், கதவு மெதுவாக திறந்துகொண்டதும் ஒரே நேரத்தில் நிகழ்ந்தன.

எல்லோரின் பார்வையும் அந்தப் பக்கமாக திரும்பியது.

சைதன்யா உள்ளே வந்து கொண்டிருந்தான். ரொம்ப சாதாரணமான உடையில் இருந்தான். ஆனால் அவன் கண்களில் இருந்த சுறுசுறுப்பையும், கூர்மையையும் பைரவ மூர்த்தி மட்டுமே கண்டுகொண்டார்.

யாருக்குமே அவனை விஷ் செய்யவேண்டுமென்று கூடத் தோன்றவில்லை. வேறு வழியில்லாமல் இந்த கூட்டத்திற்கு வந்திருப்பது போல் தென்பட்டார்கள். அவன் இந்த விஷயத்தை முதல் பார்வையிலேயே புரிந்து கொண்டு விட்டான்.

"உன் பெயர்?" பைரவமூர்த்தி கேட்டார்.

"சைதன்யா... கிருஷ்ண சைதன்யா."

"இதோ பாரு சைதன்யா!" கூட்டத்தைத் தொடங்கி வைத்துக் கொண்டே சொன்னார் பைரவமூர்த்தி. "இந்த வட்டாரத்தின் வரலாறு ரொம்ப புகழ் வாய்ந்தது. யாருக்கு எவ்வளவு தேவைப்பட்டாலும் இல்லை என்று சொல்லா மல் சரக்கை சப்ளை செய்யும் சக்தி நம் மீனவர்களுக்கு மட்டும்தான் உண்டு. அந்த விஷயம் எல்லோருக்கும் தெரிந்ததுதான். அப்படி இருக்கும் போது அந்தப் பெய ரைக் கெடுத்துக் கொள்வது நமக்கு நல்லது இல்லை."

"இடையே குறுக்கிடுவதற்கு மன்னித்துக் கொள்ளுங் கள்." பணிவான குரலில் சொன்னான் சைதன்யா. "எங்க மீனவர்கள் யாருக்காவது சரக்கு இல்லைன்னு சொன்னாங் களா? எனக்கு இது வரையில் இந்த விஷயம் தெரியாமல் போய்விட்டது. இந்த விஷயத்தை இப்பொழுதே கவனிக்க சொல்கிறேன். யாருக்கு எவ்வளவு சரக்கு தேவை என்று சொன்னால், எங்க ஆட்கள் இரவு பகல் பாராமல் கடலில் வலை வீசி இறால்களை கொண்டு வரச் சொல் கிறேன். இவ்வளவு நாட்களாக இருந்து வந்த பெயரை எங்க ஆட்கள் கெடுத்து விட்டார்கள் என்ற அபவாதத்தை நான் நம்பவில்லை."

அழகான மலர்கள் சுற்றப்பட்ட அம்புகள் வந்து தாக்கியது போல் அங்கிருந்த எட்டு பேருக்கும் ஒரு நிமிடம் என்ன பேசுவதென்று புரியவில்லை. முதலில் தேறிக் கொண்டவர் பைரவமூர்த்திதான். "நீ சொல்வது உண்மை தான். ஆனால் இந்த விலை?" என்றார். "உங்களுடைய விலையும் எங்களுடைய விலையும் ஒன்றாக இருந்து விட்டால், அப்புறம் எங்கள் செலவுகளும், லாபங்களும் என்னவாகிறது?" என்று கேட்டார்.

"நீங்கள் சொல்வதும் சரிதான். இங்கே இருப்ப தெல்லாம் ஒரு டன், இரண்டு டன்கள் கொண்ட மிஷின் கள். சின்ன சைஸ் இறால்கள்தான் நமக்கு லாபகர மானவை. ஐந்து டன் கொண்ட மிஷினாக இருந்தால் பெரிய இறால்களுக்கு லாபகரம். யாராவது வைக்கும் எண்ணத்தில் இருந்தால் சொல்லுங்கள். எவ்வளவு லாபம் வரும் என்று கணக்கிட்டு அரசாங்கத்திற்கும், வங்கிகளுக் கும் எடுத்துச் சொல்லுவோம். நீங்க பக்கத்து ஊர்களி



லிருந்து சின்ன இறால்களை வாங்கிக் கொள்ளலாம். நாங்கள் அந்தப் பெரிய மிஷினுக்கு சப்ளை செய்கிறோம். இதனால் நம் மீனவர்களின் புகழ் மேலும் கூடும். உங்களுக் கும் பிரச்னை இருக்காது." அமைதியான குரலில் சொன் னான் சைதன்யா.

சுந்தரத்தின் மூளைக்கு அவன் சொன்னது எதுவும் எட்டவே இல்லை. வெளிறிப் போயிருந்த பைரவமூர்த்தி யின் முகத்தைப் பார்த்து ஏதோ தரிசனம் இருக்கிறது என்று உணர்ந்து கொண்டான். அதனால் சபையின் மரியாதையைக் கூட மறந்து போய் நாற்காலியை விட்டு எழுந்து நின்று பெரிதாக கத்தினான். "இரவோடு இரவாக படகுகளை கொண்டு வந்துவிட முடியும். அவ்வளவு செல்வாக்குக் கூட இல்லை என்று நினைத்துவிட்டாயா?"

சைதன்யா நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான். "எப்படியும் உங்க செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டிய நிலைமை வரக்கூடும். நாங்க பெரிய பிளாண்டுகளுக்கு சப்ளை செய்தால் உங்களுக்கும் சப்ளை செய்ய ஆட்கள் இருப்பாங்க இல்லையா. ஆனால் இதில் ஒரு சிக்கல் இருக்கு. நாங்கள் எழுபது ரூபாய்க்கு விற்றால் அவங்க உங்களுக்கு ஐம்பது ரூபாய்க்கு விற்கணும். விற்கவும் செய்வாங்க. அவங்க உங்களுடைய ஆட்கள்தானே?" என்றான் தாழ்ந்த குரலில்.

அதையே வேறு விதமாக சொல்ல வேண்டுமென் றால் "டேய்! நீ யாரிடமிருந்து வாங்கினாலும், கொஞ்ச நாட்களில் எங்களைப் பார்த்து அவர்களும் ரேட்டை உயர்த்தி விடுவாங்க. ஜாக்கிரதை!" என்று அர்த்தம். சுந்தரம் கோபமாக ஏதோ சொல்ல வந்த போது பைரவ

மூர்த்தி தடுத்துவிட்டு "இப்படிப்பட்ட வாதவிவாதங் களால் லாபம் எதுவும் இல்லை" என்றார். சைதன்யா தலையை அசைத்துவிட்டு பேசாமல் இருந்தான்.

பைரவமூர்த்தி மேலும் சொன்னார். "நீங்க கேட்ட ரேட்டை நாங்க தந்தால் சகலமும் நஷ்டமடைய வேண்டி யிருக்கும்."

"உங்களுக்கு அவர்கள் தொண்ணூறு தருகிறார்கள் இல்லையா? இதில் நஷ்டம் எங்கே இருக்கு?" சைதன்யா கேட்டான்.

"ஜப்பான் கரென்ஸி பற்றி உனக்குத் தெரியாது. எந்த நாளில் எந்த ரேட் இருக்கும் என்று யாராலும் ஊகிக்க முடியாது. கத்தி மேல் நடப்பது போல் தான் நாங்கள் தொழிலை நடத்தி வருகிறோம். 'யென்' மதிப்பு நாளுக்கு நாள் மாறிக் கொண்டே இருக்கு."

"மன்னியுங்கள். எல்லா நாடுகளையும் விடவும் நல்ல பொருளாதார நிலைமை உள்ள நாடு ஜப்பான் என்று உங்களுக்கும் தெரியும். நீங்கள் அமெரிக்கன் டாலர் என்று சொல்ல நினைத்து வாய்த்தவறி 'யென்' என்று சொல்லி யிருப்பீங்கன்னு நினைக்கிறேன்" என்றான் சைதன்யா.

தனக்கு முன்னால் இருந்த கண்ணாடி டம்ளரி லிருந்து தண்ணீரை கடகடவென்று குடித்தார் பைரவ மூர்த்தி. தன் முன்னால் உட்கார்ந்திருப்பவன் சாதாரண மானவன் இல்லை என்று அவருக்குத் தெரிந்து விட்டது.

உண்மையில் இந்தக் கூட்டம் வெற்றியடையும் என்று அவருக்கு நம்பிக்கை இல்லை. இவ்வளவு நாட்களாக அவர்களை ஏமாற்றிக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்



களுடைய இயலாமையை, அறியாமையை சாதகமாக்கிக் கொண்டு லாபங்களை ஈட்டியிருக்கிறார்கள். ஒப்புக் கொள்ளாமல் என்ன செய்ய முடியும்?

பைரவமூர்த்தி யோசனையில் ஆழ்ந்திருந்த போதே சுந்தரம் ஜேபியிலிருந்து நோட்டுக் கட்டுகளை வெளியே எடுத்தான். "இதை எடுத்துக் கொண்டு போய்விடு. மேற் கொண்டு வாயைத் திறக்காதே" என்று முன்னால் தள்ளினான். ஒரு நிமிஷம் சைதன்யாவுக்குப் புரியவில்லை. புரிந்ததுமே முகம் சிவந்து விட்டது. விருட்டென்று நாற்காலியைப் பின்னால் தள்ளி விட்டு எழுந்து நின்றான். "அதை எடுத்து உள்ளே வையுங்கள்" என்றான்.

"தெருவில் போறவனை அழைத்து பெண்ணைக் கொடுக்கிறேன் என்று சொன்னால் இப்படித்தான்..." மேலும் ஏதோ சொல்லப் போனான் சுந்தரம். "முதலில் அதை எடுத்து உள்ளே வை" என்ற கர்ஜனையைக் கேட்டு, பேச்சைப் பாதியில் நிறுத்திவிட்டு பணத்தை எடுத்து உள்ளே வைத்தான். உடனே சுதாரித்துக் கொண்டு தன் வழக்கமான மிடுக்குடன் மற்றவர்களிடம் "டோன்ட் வர்றீ. மை பீப்பிளிவில் ஹேன்டில் ஹிம்" என்றான்.

அத்துடன் சைதன்யாவின் பொறுமை நசிந்து விட்டது. "யு ஆனரபிள் மெம்பர்ஸ் ஆஃப் தி பார்ப் பேரியன் சொசைட்டி! டோன்ட் யு திங் வி ஹேவ் மோரல்ஸ்?" வாழ்நாளில் என்றுமே வந்திராத அளவுக்கு கோபம் வந்து விட்டது அவனுக்கு. அருவருப்பும், கோபமும் கலந்த குரலில் மனிதனின் நிலையற்ற வாழ்க்கையைப் பற்றி அவன் ஆற்றிய பிரசங்கத்தைக் கேட்டு வாயடைத்துப் போய் நின்று விட்டார்கள். அவ்வளவு பிசிறில்லாத

ஆங்கிலத்தை அவ்வளவு சரளமாக பேசிக் கேட்பது அவர் களுக்கு அதுதான் முதல் தடவை.

"என்னை ஹேண்டில் பண்ணுவீங்களா நீங்கள்? எங்க மீனவர்களின் ஹேண்ட்ஸ் பற்றி உங்களுக்குத் தெரியாது. கடும் புயல் வீசிய போதும் கடலின் மையத்திற்கு படகைச் செலுத்தும் கைகள் அவை. நீங்க வாடகைக்கு வரவழைக் கிற ரவுடிக்களைவிட எங்க மீனவர்கள் பெரிய ரவுடிக்கள். உங்களுக்கு முன்னால் இந்த நிலைமையை நானே வேறு விதமாக ஹேண்டில் செய்ய நினைத்திருந்தால் உங்கள் குழந்தைகள் இந்நேரத்திற்கு அநாதையாகி விட்டிருப்பார் கள்."

அதில் இருந்து உண்மை அங்கிருந்த எல்லோருக்குமே தெரியும். தினதினம் கடலுடன் போராடிக் கொண்டிருக் கும் மீனவர்கள் சகஜமாகவே பலசாலிகள். அதோடு கொஞ்சம் குடியும் சேர்ந்து கொண்டால் மனிதர்களாக இருக்க மாட்டார்கள். இப்படிப் பட்டவர்களை ஒன்றாக இணைத்து, நிலைமையை இவ்வளவு தூரத்திற்கு அமைதி யாக கொண்டு வந்திருந்த சைதன்யாவிடம் தற்காலிகமாக எல்லோருக்கும் மதிப்பு ஏற்பட்டது.

பைரவமூர்த்தி சட்டென்று நாற்காலியை விட்டு எழுந்து கொண்டு "மிஸ்டர் சைதன்யா! இப்படி நடந்த தற்கு நான் ரொம்பவும் வருத்தப்படுகிறேன். அதற்காக மன்னிப்புக் கடிதம் எழுதித் தரச் சொன்னாலும் தரு கிறேன்" என்றார்.

சைதன்யா மெதுவாக நாற்காலியில் உட்கார்ந்து கொண்டே "நோ நோ. இட்ஸால் ரைட்" என்றான்.



சுந்தரம் ஏதோ வேலை இருப்பது போல் எழுந்து வெளியே போய்விட்டான்.

"இப்போ ரேட்டை எழுபதாக உயர்த்தினால் அதை அவர்கள் வெற்றியாக நினைத்து, கொள் நாட்களில் எண்பது கேட்க மாட்டார்கள் என்று என்ன நிச்சயம்?" மெம்பர் ஒருவர் கேட்டார்.

"டிமாண்ட் இல்லாவிட்டால் நீங்களும் வாங்க மாட்டீங்க" என்றான் சைதன்யா. "அப்பொழுது விலை அறுபத்துக்குக் குறையும். நான் கேட்டுக் கொள்வ தெல்லாம் டாக்ஸ் கட்டுவதற்குப் பதில் அந்தப் பணத்தை மீனவர்களுக்குத் தரச் சொல்கிறேன்."

"அந்த உத்திரவாதத்திற்கு நீங்க பொறுப்பு ஏற்றுக் கொள்ளணும்." யாரோ சொன்னார்கள்.

"கண்டிப்பா."

கூட்டம் முடிவடைந்தது. ஒவ்வொருவராக எழுந்து கொண்டார்கள்.

எல்லோருக்கும் பின்னால் பைரவமூர்த்தி சைதன்யா வோடு சேர்ந்து நடந்து கொண்டே "சைதன்யா! நீங்க ரொம்ப புத்திசாலியாக தென்படுறீங்க. பல விஷயங்கள் உங்களுக்கு தெரிந்திருக்கு. என்ன படித்திருக்கீங்க?" என்று கேட்டார்.

"வாழ்க்கையை!"

18

"என்னால் இந்த துன்பத்தைத் தாங்க முடிய வில்லை." கிரண்மயி சொன்னாள்.

"உங்களுக்குத் துன்பமா?" கேட்டாள் மிஸெஸ் சிங். "அழகான கணவன். குறைவில்லாத பணம்." அப்படி சொன்னதில் இன்னும் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற துடிப்பு வெளிப்பட்டது.

"உங்களுக்குத் தெரியாது. ஒரு பெண்ணுக்குத் தேவை யானது அது இல்லை. அன்பும், ஆதரவும்! பொழுதுப் போக்காக வெளியே அழைத்துப் போகணும் என்றும், மனைவியுடன் மனம் விட்டுப் பேசுவோம் என்ற நினைப்பே இல்லாத கணவனுடன் வாழ்வது கஷ்டம்."

"நம் கணவன்மார்களுக்கு நம்மோடு கழிப்பதைவிட பணம் சம்பாதிப்பதில் அதிக சந்தோஷம்" என்றாள் மிசெஸ் சிங்.

"பணத்தைத் தவிர இந்த உலகத்தில் வேறு எதுவுமே கிடையாதுன்னு நினைக்கிறவங்களைக் கண்டாலே எனக்கு வெறுப்பு" என்றாள் கிரண்மயி.

"நானும் தொடக்கத்தில் உங்களைப் போல் நினைத்து வருத்தப்பட்டுக் கொண்டிருந்தேன். இனி இவர்களுக்காக வருத்தப்படுவது அனாவசியம் என்று நினைத்து, என் வருத்தங்களை எல்லாம் போக்கிக் கொள்வதற்காக லைட்டாக குடிக்கத் தொடங்கினேன். ரொம்ப நன்றாக வேலை செய்கிறது" என்றாள் மிசெஸ் சிங்.



"நன்றாக வேலை செய்கிறதா?"

"இந்த ஆண்கள் எல்லோரும் குடிக்கிறது அந்த ரிலாக் ஸேஷனுக்காகத்தான்."

கிரண்மயி எழுந்து போய் ஃபிரிஜ்ஜிலிருந்து இரண்டு சோடாக்களையும், பீரோவில் ரவி வைத்திருந்த விஸ்கி பாட்டிலையும் எடுத்து வந்து மேஜை மீது வைத்தாள்.

மிசெஸ் சிங் வியப்புடன் "விஸ்கியா?" என்றாள்.

"ஏன்?" புரியாமல் கேட்டாள் கிரண்மயி.

"சாதாரணமாக முதலில் ஜின்னிலிருந்துதான் தொடங்குவார்கள். இது ரொம்ப கசப்பாக இருக்கும்."

"பரவாயில்லை. இந்த துன்பங்களை மறந்து போவ தற்கு இதைக் காட்டிலும் கசப்பான விஷயம் நன்றாக வேலை செய்யும் என்றால் அதையும் குடிக்க நான் தயாராக இருக்கிறேன். சியர்ஸ்!"

"சியர்ஸ்!"

அரைமணி கழிந்த பிறகு மிசெஸ் சிங் தள்ளாடியபடி எழுந்து நின்றாள். "போய் வருகிறேன்."

"சரி." கிரண்மயி சோபாவிலிருந்து எழுந்து கொள்ளா மலேயே பதிலளித்தாள். "நல்ல வழியைக் காட்டினீங்க. ரொம்ப தாங்க்ஸ். உங்களால் தனியாக போக முடியும் இல்லையா?"

"பரவாயில்லை. டிரைவர் இருக்கிறான்" என்றாள் மிஸெஸ் சிங். இருந்தாள். குடிக்கக் கடிக்க அவள் மனம் பஞ்சு போல பறக்கத் தொடங்கியது. தானும் சாரதாவும்

வந்ததுமே சைதன்யா காணாமல் போய்விட்டது, உடன் பிறந்த தங்கையும் தன்னை விட்டுப் பிரிந்தது, கணவ னுடன் எதிர்பார்த்தாற்போல் நிம்மதியான வாழ்க்கை அமையாதது எல்லாமாக சேர்ந்து அவள் மனதில் சந்தோஷம் இல்லாமல் செய்து விட்டன. இவ்வளவு நாட்களுக்குப் பிறகு அவளுக்கு அந்த வருத்தங்களிலிருந்து வெளியேறுவதற்கு ஒரு வழி கிடைத்துவிட்டது.

ரவி வரும் போது அவள் சோபாவில் தாறுமாறாக படுத்துக் கொண்டிருந்தாள்.

டீபாயின் மீது இருந்த பாட்டிலையும், கண்ணாடி டம்ளர்களையும் பார்த்த போது முதலில் அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. புரிந்ததுமே கையும் காலும் ஓட வில்லை. கடைசியில் எப்படியோ வாயைத் திறந்து "என்ன இது கிரண்?" என்றான்.

அந்த வார்த்தையைக் கேட்டு அவள் கண்களைத் திறந்தாள். "ஓ... நீங்களா ரவி! குட் ஈவினிங்!" என்றாள். அவள் வார்த்தைகள் குழறலாக வெளிவந்து கொண்டிருந் தன.

அவன் சட்டென்று அவளை நெருங்கி தோள்களைப் பிடித்து எழுப்பி உட்கார வைக்க முயன்றான். அவள் மறுபடியும் சரியத் தொடங்கினாள். "இப்பொழுது புரி கிறது நீங்க ஏன் குடிக்கிறீங்க என்று. பின்னே இவ்வளவு நாட்கள் எனக்கு இதைப் பற்றி ஏன் சொல்லவே இல்லை? நான் உங்களுடைய பிரியமான காதலி இல்லையா?" என்றாள் குழறலோடு.



"எழுந்திரு கிரண்!" என்றான். அவனுடைய பொறுமை நசிந்து போய்க் கொண்டிருந்தது.

"நன்றாக இருக்கு ரவி! நீங்களும் குடியுங்கள். ஃபேக்டரியை விற்று விடுங்கள். எல்லாவற்றையும் விற்று விடுங்கள். சேர்ந்து குடிக்கலாம் கவலைகளை மறந்து போய்."

சுளீரென்று அவள் கன்னத்தில் அறை விழுந்தது.

கொஞ்ச நேரம் மயான அமைதி அந்த அறையில் சூழ்ந்து கொண்டது. முதலில் தேறிக் கொண்டது கிரண மயிதான். "அடித்தீங்களா ரவி!" என்றாள். "எங்க அப்பா அம்மாவை அடிப்பார். ஆனால் அது வறுமையினால் ஏற்பட்ட இயலாமை! ஆனால் பணம் இருந்தும் கூட நீங்க... நீங்க எதுக்கு அடிச்சீங்க ரவி?" குடி மயக்கத்தில் கேட்டுக் கொண்டிருந்தாள்.

அவனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. சட்டென்று அவளை இரண்டு கைகளாலேயும் தூக்கிக் கொண்டு பாத்ரூமை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

பெரிதாக சிரித்தாள் கிரண்மயி. "இப்படித்தான் எங்க அம்மாவை அப்பா தூக்கிக் கொண்டார். சாப்பிடும் போது அடுத்த வேளை சாப்பாட்டுக்கு அரிசி இல்லை என்றும், அம்மா முணுமுணுத்தாள். சாப்பிட்டுக் கொண்டிருந்த தட்டை எடுத்து அம்மாவின் மீது வீசினார். நெற்றி பிளந்து ரத்தம் கொட்டியது. நானும் சாரதாவும் சின்னக் குழந்தைகள். பயந்து போய் பார்த்துக் கொண்டிருந்தோம். ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போகும் போதே இறந்து போய் விட்டாள். அம்மா... அம்மா..."

அவள் குரல் தழுதழுத்தது. "உங்களுக்குத் தெரியாது ரவி! வறுமை எவ்வளவு பயங்கரமானது என்று" அவள் முணு முணுத்துக் கொண்டிருந்தாள்.

பாத் டப்பில் படுக்க வைத்து ஷவரைத் திருப்பினான். திடீரென்று குளிர்ந்த தண்ணீர் மேலே விழுந்ததும் உடம்பை சிலிர்த்துக் கொண்டு லேசாக கத்தினாள். "என்ன செய்யறீங்க? ஷவர்பாத்! ரியல்லீ எக்ஸலென்ட் ரவி! பணம் இவ்வளவு சுகத்தைத் தரும் என்று தெரியாது. நீங்களும் குளியுங்கள்." கழுத்தைச் சுற்றிலும் கைகளை மாலையாக போட்டாள். அர்த்தமில்லாமல் சிரித்தாள். "ரொம்ப நன்றாக இருக்கு ரவி! அடடா... நீங்களும் நனைந்து விட்டீங்களே. எவ்வளவு அழகாக இருக்கீங்க?" அவளுக்கு ஏனோ திடீரென்று அழுகை வந்தது. "எதுக்கு ரொமான்ஸ்? எதுக்குப் பணம்? அன்பு வேணும் ரவி! எனக்குக் கொடுக்க மாட்டீங்களா? சின்ன வயது முதல் அதுக்காகவே ஏங்கிக் கொண்டிருக்கிறேன் ரவி! ப்ளீஸ்..." மெல்ல மெல்ல மயக்கம் அவளை ஆட்கொண்டு விட்டது.

* * *

"இவ்வளவு நாட்களாக இருட்டில் வாழ்ந்து கொண்டிருந்த எங்களுக்கு ஒரு வழியைக் காட்டினீங்க. எங்களுக்கு யோசனை சொல்றவங்க யாருமே இல்லாமல் போய்விட்டாங்க தம்பீ!" என்றான் குப்பன். அவனுக்குப் பின்னாலேயே சில மீனவ இளைஞர்கள் நின்றிருந்தார் கள்.

"நம் வாழ்க்கையை யாரோ வந்து சீர்திருத்த மாட் டாங்க குப்பன்! நமக்கு நாமே முன்னேறணும். சாதித் ததை தக்க வைத்துக் கொள்ளணும். அதுதான் பெரிய விஷயம்."



குப்பன் ஏதோ சொல்ல வந்து தயங்கினான். அதைக் கவனித்துவிட்டு "என்ன விஷயம் குப்பம்?" என்றான் சைதன்யா.

"ரேட் ஐம்பதிலிருந்து எழுபது ஆகிவிட்டது. நாங்கள் கனவில் கூட நினைத்துப் பார்க்காத விஷயம் இது" என்று நிறுத்திவிட்டு நிதானமாக சொன்னான் குப்பன். "நீங்க தவறாக நினைக்காதீங்க தம்பி! நீங்க வாங்கித் தந்த இந்த லாபத்தில் பாதியை இந்த சீசன் முழுவதும் உங்களுக்குத் தந்துவிடலாம்னு நினைக்கிறோம்.

சைதன்யாவுக்கு ஒரு வினாடி அவன் சொன்னது புரியவில்லை. புரிந்ததும் முகம் வெளிறிப் போய்விட்டது. சட்டென்று எழுந்து நின்று "இதென்ன? நான் இதை யெல்லாம் ஏதோ லாபத்தை எதிர்பார்த்து செய்கிறேன்னு நினைத்தீங்களா?" என்றான்.

"இல்லை சாமி! அப்படி இல்லை. நீங்க சம்மதிக்க மாட்டீங்க என்று தெரியும். அதனால்தான் கடல் முன்னாடி நின்று சத்தியம் கூட செய்துவிட்டோம். நீங்க எடுத்துக் கொள்ளணும். வேறு வழியில்லை" என்றான் ஒரு இளைஞன்.

சைதன்யாவுக்கு வினாடி நேரம் வாயிலிருந்து வார்த்தை வெளிவரவில்லை. கடலுக்கு முன்னால் நின்று சத்தியம் செய்த மீனவன் உயிரே போனாலும் தன் வார்த்தையைத் தவற மாட்டான். அவனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. அவர்கள் பணத்தை எடுத்துக் கொள்ளவும் மனம் ஒப்பவில்லை. இக்கட்டில் ஆழ்ந்தான்.

"இந்த ஒரு சீசனுக்கு மட்டும்தான் தம்பி! எவ்வளவு வந்து விடும்? எடுத்துக் கொள்ளுங்கள்" என்றான் குப்பன்.

"ஏன் வராது? மீனவர்கள் அத்தனை பேரையும் சேர்த்தால் பெரிய தொகை சேர்ந்துவிடும்."

அவன் அந்த யோசனையில் இருந்த போதே சாரதா "போகட்டும். அவர்கள் பெயரில் ஒரு வியாபாரத்தைத் தொடங்கி விடுங்கள்" என்றாள்.

சைதன்யாவின் முகம் மலர்ந்தது. அவ்வளவு நேரமாக உறுத்திக் கொண்டிருந்த பிரச்னைக்குப் பரிகாரம் கிடைத்து விட்டாற்போல் இருந்தது. "ஆமாம். அப்படியே செய்து விடலாம். உங்க அத்தனை பேரையும் ஷேர் ஹோல்டர் சாக போட்டு ஒரு கம்பெனியை தொடங்கி விடுகிறேன்" என்றான்.

அந்த யோசனை அவர்களுக்கும் பிடித்திருந்தது. "ஆனால் நீங்களும் லாபத்தை எடுத்துக் கொள்ளணும்" என்றான் குப்பன்.

"பட்ட கஷ்டத்திற்குக் கண்டிப்பாக எடுத்துக் கொள் கிறேன்."

பின்னாலிருந்து ஒரு இளைஞன் முன்னுக்கு வந்து பையைக் கவிழ்த்தான். நோட்டுகளும் நாணயங்களும். ரேட் ஐம்பதிலிருந்து எழுபதுக்கு ஏறியதால் வந்த லாபம் அது. இரண்டு நாளைய விற்பனை!

"எவ்வளவு இருக்கு இதில்?"

இரண்டு மூன்று பேர் எண்ணத் தொடங்கினார்கள்.



"இந்த சீசனில் இரண்டு மாதங்களும் இப்படி கொண்டு வந்து தருகிறோம் தம்பீ!" என்றான் குப்பன். அவனுக்கு சைதன்யாவின் நேர்மை பிடித்து விட்டிருந்தது. அவன் திட்டமும் பிடித்திருந்தது. இந்த ஏழை மீனவர் களிடம் இரக்கம் காட்டியவர்கள் இதுவரை யாரும் இல்லை.

"சீசன் இரண்டு மாதம் என்கிறாய். ஒவ்வொரு நாளும் இறால்கள் கிடைக்குமா என்ன?" யாரோ கேட்டார்கள்.

"சீசன் முழுவதும் கிடைக்காதுதான். கிடைத்த வரை யில் லாபம். மற்ற நாட்களில் கிடைத்ததை வைத்துக் கொண்டு திருப்திப் பட்டுக் கொள்ள வேண்டியதுதான்."

பணத்தை எண்ணி முடித்த பிறகு "தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றி ஒன்பது" என்றான் ஒரு இளைஞன்.

ஒரு வினாடி ஊசி விழுந்தாலும் கேட்கும் அளவுக்கு நிசப்தம்.

"இன்னொரு ரூபாயைப் போடுங்கடா. ஆயிரம் ரூபாய் ஆகிவிடும்" என்றான் ஒருத்தன்.

"நான் போடுகிறேன், என்னுடைய ஷேராக" என்றான் சைதன்யா. உள்ளங்கையை விரித்தான். அவன் கையில் கடவுள் சன்னிதியில் கிடைத்த ரூபாய் நாணயம் இருந்து. அதன் மீது அவனுடைய ரத்தக் கறை கூட இன்னும் அப்படியே இருந்தது.

* * *

ஜன்னல் வழியாக மழையைப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தான் சைதன்யா. சாரதா தேநீர் கொண்டு வந்தாள்.

"என்ன பார்த்துக்கிட்டு இருக்கீங்க?"

"மழையை!"

"சின்னக் குழந்தைகள்தான் அப்படிப் பார்ப்பாங்க."

"சின்ன வயதிலிருந்தே எனக்கு மழையைப் பார்த்தால் பயம். ஏதோ தெரியாது. என் வாழ்க்கையில் வேதனை மயமான சம்பவங்கள் எல்லாமே மழை பெய்யும் போது நடந்தவைதான்."

அவள் பதில் பேசவில்லை.

"என்ன யோசிக்கிறாய்? அப்படி என்ன சம்பவங்கள் நடந்தது என்றா?" அவன் வெளியே பார்த்துக் கொண்டே சொன்னான். "இதே போல் மழை பெய்த ஒரு நாள் இரவில் தான் சகலத்தையும் துறந்து வெளியேறினேன். மழை பெய்து கொண்டிருந்த இரவில்தான் மதுவை நானே குழி தோண்டி புதைத்தேன்."

அவள் சட்டென்று அவன் கை மேல் கையை வைத்து "அப்படிப் பேசாதீங்க ப்ளீஸ்" என்றாள்.

"எனக்கு ஒன்றுதான் ஆச்சரியமாக இருக்கு சாரதா! பிச்சைக்காரனாக இருந்த போது எதுவும் என்னை வருத்தப்படுத்தவில்லை. ஆனால் திரும்பவும் மனிதனாகி விட்டதுமே நினைவுகள் துன்பத்தைத் தருகின்றன.

சாரதா பேச்சை மாற்றியபடி "யாருக்குத் தெரியும்? இந்த மழையே உங்களுக்கு அதிர்ஷ்டம் கொண்டு வருமோ என்னவோ?" என்றாள்.

அவன் சிரித்துவிட்டு "நமக்கு அதிர்ஷ்டத்தைக் கொண்டு வந்தாலும் வராவிட்டாலும் மீனவர்களுக்கு



மட்டும் கொண்டு வரும் இந்த மழை" என்றான். மழை வந்தால் இறால்கள் மேலுக்கு வரும். அதோடு விட்டு விட்டு மழை பெய்தால் இன்னும் அதிகமாக வரும். தற்சமயம் அப்படித்தான் பெய்து கொண்டிருந்தது மழை.

நாட்கள் கழிந்து கொண்டிருந்தன. அடை மழை பெய்யாததால் மீனவர்களால் தினந்தோறும் கடலுக்கு போக முடிந்தது. வலை வீசியதுதான் தாமதம். குவியல் குவியலாக இறால்கள் வலையில் விழுந்து கொண்டிருந்தன. இரண்டு மாதங்கள் வரை இருக்கும் சீசன் நான்கு மாதங்கள் நீடித்தது. தேவையைச் சமாளிப்பதற்கு இரண்டு ஐஸ் ஃபாக்டரிகள் நிறுவப்பட்டன. ...நாளுக்கு இருபத்து நான்கு மணி நேரமும் வேலை செய்தாலும் சமாளிக்க முடியவில்லை.

எங்கிருந்தெல்லாமோ வேன்கள் வந்து சரக்கை எடுத்துப் போய்க் கொண்டிருந்தன.

வேலை! வேலை! வேலை!

மீனவர்கள் அளவுக்கு மீறிய உற்சாகத்துடன் கடல் மீது படையெடுத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் சேமித்துக் கொண்டிருந்த மூலதனம் அளவுக்கு அதிகமாக பெருகிக் கொண்டே இருந்தது.

* * *

"அப்படியே செய்வோம்" என்றான் ரவி.

மேனேஜர் தலையை அசைத்துவிட்டு வெளியே போய்விட்டார். மேஜை மீது இருந்த காகிதங்களை பார்வையிடத் தொடங்கினான் ரவி. அவனுக்கு இப்பொழுது வேலையில் நெளிவு சுளிவுகள் புரியத் தொடங்கின.

இன்ஷூரென்ஸ் விஷயங்கள், சரக்கு வாங்குவது விற்பது எல்லாம் அவனே பார்த்துக் கொண்டிருந்தான்.

அதற்குள் தபால் வந்தது. ஜப்பானிலிருந்து வந்த ஒரு தபாலில் அவனை கலங்கடிக்கக் கூடிய செய்தி ஒன்று இருந்தது. அவனிடமிருந்து வழக்கமாக சரக்கை வாங்கிக் கொண்டிருந்த கம்பெனி எழுதியிருந்தது. ஜப்பானில் ஃபிரான்ஸ் கன்ஸ்யூமர்ஸ் சொசைட்டி முடிவு செய்திருக் கும் விலையை விட அதிகமாக இருக்கும் பட்சத்தில் தம் எதிர்கால கான்ட்ராக்டுகள் அத்தனையும் ரத்து செய்ய வெண்டியிருக்கும் என்று எழுதியிருந்தார்கள்.

அதைப் பார்த்துவிட்டு ரொம்ப நேரம் நாற்காலியில் அப்படியே உட்கார்ந்திருந்தான். இந்த தொல்லை எல்லாம் ஏன்தான் வந்து சேர்ந்ததோ என்ற மயான வைராக்கியம்! மாலை ஐந்து மணிக்கு வீட்டுக்குப் போனான். வீடு முழுவதும் ஆளரவமில்லாமல் இருந்தது, அவன் மனதைப் போலவே வெறுமையாக.

அவன் தன் அறைக்குள் நுழைந்து கோட்டை அவிழ்த்தான். நாற்காலியில் பொத்தென்று சரிந்தான். பின்னால் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டான். கொஞ்ச நேரத்தில் சந்தடி கேட்டது. அவன் கண்களைத் திறக்கவில்லை.

தேநீர் கோப்பையை சத்தம் எழுப்பும் விதமாக டொக்கென்று மேஜை மீது வைத்து விட்டு கிரண்மயி போய்விட்டாள். அவள் ரொம்ப கோபத்தில் இருந்தாள். தான் செய்தது தவறாகவே இருக்கலாம். அதற்கு வாய் விட்டு திட்டிவிடலாம் இல்லையா? இப்படி சலனமில்லாமல் இருந்து கொண்டு துன்புறுத்துவானேன்?



அவன் அதைப் பற்றி பேச்செடுத்தால் கூட போதும். மன்னிப்பு கேட்டுக் கொள்ள தயாராக இருந்தாள் அவள். ஆனால் அவன் மௌனம் அவளை ரம்பத்தால் அறுப்பது போல் இருந்தது.

கொஞ்ச நேரம் வெளியிலேயே சுற்றிச் சுற்றி வந்து விட்டு பெண்களுக்கு உரிய சுபாவத்தோடு மறுபடியும் அறைக்குள் காலடி எடுத்து வைத்த போது, அவள் வைத்து விட்டுப் போன தேநீர் கோப்பை ஆறிப் போய் இன்னும் அப்படியே இருந்தது.

* * *

"மறுபடியும் மழை வரும போலிருக்கு. இப்பொழுது போகாவிட்டால் என்ன?" என்றாள் சாரதா, வெளியே பார்த்துவிட்டு.

"நினைத்ததை நினைத்த சமயத்தில் முடிக்கவில்லை என்றால் நன்றாக இருக்காது" என்றான் சைதன்யா, கிளம்புவதற்கு தயாராகிக் கொண்டே. வெளியே லேசாக தூறிக் கொண்டிருந்தது.

"இந்த மழை நாளை வரையிலும் விடாது போலிருக்கு" என்றாள் அவள்.

சைதன்யா சிரித்தான். "இந்த மழையே எனக்கு அதிர்ஷ்டத்தைக் கொண்டு வந்தாலும் வரும்னு நீ தானே சொன்னாய்?"

அவளும் சிரித்துவிட்டு "என் வார்த்தைகள் எப்போதும் பலித்து விடும்னு அப்பா சொல்லிக் கொண்டே இருப்பார்" என்றாள்.

அவன் சூட்கேசை எடுத்துக் கொண்டு படியிறங்கினான். இருள் மெதுவாகப் பிரிந்து கொண்டிருந்தது. கிழக்கு வெளுத்துக் கொண்டிருந்தது. அவன் தெரு முனை திரும்பும் வரையில் அப்படியே நின்று பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.

பதினோரு மணி நேரம் பயணம் செய்துவிட்டு அவன் தலை நகரை அடைந்தான். இரவு முழுவதும் ஓய்வு எடுத்துக் கொண்டு காலையிலேயே வேலையைப் பார்க்கப் புறப்பட்டு விட்டான்.

அவனுக்கு ரொம்ப பதற்றமாக இருந்தது. தான் சாதிக்க எண்ணியிருந்தது சாதாரண விஷயம் இல்லை என்று அவனுக்குத் தெரியும்.

எவ்வளவு தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், எந்த உத்தரவாதமும் இல்லாமல் அவ்வளவு பெரிய தொகையைக் கடனாகத் தருவதற்கு யாருமே முன் வரமாட்டார்கள். ஏற்கனவே இருந்த அனுபவம் அவனுக்கு எடுத்துச் சொல்லியது.

ஏதாவது அற்புதம் நடந்தால் தவிர அது நடக்காது. தான் வீணாக வானத்தில் ஏறுவதற்கு ஏணியை வைத்துக் கொண்டு நிற்கிறோமோ என்று கூடத் தோன்றியது. ஒரு வேளை இந்த விவகாரத்தில் தோற்றுப் போனாலும் நஷ்டம் டையப் போவது எதுவும் இல்லை என்ற உணர்வு இன்னொரு பக்கம்.

இந்த இரு வேறு உணர்வுகளுக்கிடையே அவன் விசிட்டர்களின் ஸ்லிப்பில் தன் பெயரை எழுதி உள்ளே அனுப்பினான். பதினைந்து நிமிடங்களுக்கு பிறகு அவனுக்கு அழைப்பு வந்தது.



அவன் தன்னுடைய பத்து வருட பிசினெஸ் வாழ்க்கையில் என்றுமே அனுபவித்திராத டென்ஷன் சேர்மெனின் அறையில் அடியெடுத்து வைத்த போது ஏற்பட்டது. அந்த குளிர்ந்த ஏர்கண்டிஷன் அறையில் கூட அவன் நெற்றியில் வியர்த்துக் கொட்டியது.

"சொல்லுங்கள். உங்களுக்காக நான் என்ன செய்யட்டும்?" கேட்டார் சேர்மென்.

மூச்சை நன்றாக இழுத்து விட்டுக் கொண்டு பிறகு சொல்லத் தொடங்கினான் சைதன்யா. தன் பகுதியில் வாழும் மீனவர்கள், அவர்கள் வாழ்க்கையில் வந்த மாற்றங்கள், அவர்களுடைய சேமிப்பு விவரங்கள் எல்லாவற்றையும் விவரித்துச் சொன்னான்.

"குட்! ரியலி எக்ஸ்லெண்ட்!" பாராட்டுவது போல் தலையை அசைத்தார் சேர்மென். "சொல்லுங்கள். இவ்வளவு கஷ்டப்பட்டு மூலதனத்தை சம்பாதித்துக் கொண்டுள்ள உங்களுக்கு எங்க வங்கி எந்த விதத்தில் உதவ முடியும்?"

சைதன்யா நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு "ஒரு கோல்ட் ஸ்டோரேஜ் வைக்கலாம்னு நினைத்துக் கொண்டிருக்கிறோம்" என்றான்.

எதிரே நாற்காலியில் உட்கார்ந்திருப்பவருக்கு ஐம்பது வயது இருக்கலாம். அதில் இருபத்தைந்து வருட அனுபவம் இருந்திருக்கும். தன் சர்வீசில் எத்தனையோ விதமான மனிதர்களைப் பார்த்திருக்கிறார். அனுபவத்தில் பழுத்தவர். அவ்வளவு அனுபவம் வாய்ந்தவர் கூட இந்த வார்த்தையைக் கேட்டு அதிர்ச்சி அடைந்து விட்டார்.

"என்ன?" தான் கேட்டுக் கொண்டிருப்பது உண்மை தானா என்று உறுதியாகத் தெரிந்து கொள்ள விரும்பி மறுபடியும் கேட்டார்.

"கோல்ட் ஸ்டோரேஜ் பிளாண்டை நிறுவி இறால் களை ஏற்றுமதி செய்ய நினைக்கிறோம். நீங்கள் கடன் தர வேண்டும்."

"எவ்வளவு?"

"பிளாண்டுக்கு இரண்டரை லட்சம். நிர்வாக வேலை களுக்கு ஆறு லட்சம்."

"உங்கள் சார்பிலிருந்து எவ்வளவு போடுவீர்கள்?"

"ஐம்பதாயிரம்."

தனக்கு முன்னால் உட்கார்ந்திருப்பவன் வெளியே மழை வருவதைப் பார்த்து, ஒதுங்கிக் கொள்ள உள்ளே வந்து தன்னிடம் வம்பு செய்கிறானோ என்ற சந்தேகம் சேர்மெனுக்கு வந்தது.

"ஐம்பதாயிரம் முதலீட்டை வைத்துக் கொண்டு எட்டரை லட்சம் கடன் தரச் சொல்றீங்களா? செக்யூரிடி என்ன?"

"உழைப்பு!"

வங்கி சேர்மென் பின்னால் சாய்ந்து கொண்டார். "மன்னியுங்கள். என்னால் ஒன்றுமே செய்ய முடியாது."

"அவ்வளவுதான் என்கிறீங்களா? செக்யூரிடீ இல்லா மல் கடன் தர மாட்டீங்களா?"



"அது முக்கிய பிரச்னை இல்லை. ஆனால் சரக்கை எப்படி விற்கறீங்க? ஃபாக்டரியை எப்படி நடத்துவீங்க? எல்லாமே பிரச்னைகள்தான்."

அதற்குள் ப்யூன் இன்னொரு விசிட்டிங் கார்டைக் கொண்டு வந்து மேஜை மீது வைத்தான். "வரச்சொல்லு" என்றார் அவர்.

அப்படி என்றால் இனி தன்னை போகச் சொல் கிறார் என்று அர்த்தம். சைதன்யா நாற்காலியை விட்டு எழுந்து கொண்டான்.

"ஐயாம் சாரி" என்றார் அவர்.

"இட்ஸ் ஆல் ரைட் சர்." அவனுக்கு இந்தக் காரியம் நடக்கும் என்ற நம்பிக்கை இல்லைதான். அவருடன் கையை குலுக்கிவிட்டு வெளியே புறப்பட்ட போது கதவைத் திறந்து கொண்டு விசிட்டர் உள்ளே வந்தான்.

சைதன்யா யோசனையில் மூழ்கியபடியே வெளியே போக அடியெடுத்து வைத்தான்.

"மழையால் பிளைட் கான்சலாகி தாமதமாகி விட்டது."

தனக்கு மிகவும் பரிச்சயமான குரலைக் கேட்டு சைதன்யா திரும்பிப் பார்த்தான்.

அதே நேரத்தில் அவனைப் பார்த்த ஹமாஷோ தோஷிமா, சீஃப் சேல்ஸ் எக்ஸிக்யூடிவ் "சைதன்யா! நீங்க இங்கேயா இருக்கீங்க?" என்றார்.

## 19

அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் அந்தக் கிழவன்.

அவள் ஆடைகள் கிழிந்து கந்தலாக தொங்கிக் கொண்டிருந்தன. உடலில் மாசு படிந்திருந்தது. தலைமுடி சடையாக தொங்கிக் கொண்டிருந்தது. கிழவியைப் போல் தென்பட்டாள்.

உடல் நலக் குறைவு அவள் முகத்தில் சுருக்கங்களை ஏற்படுத்தியிருந்தது. வறுமை அவற்றை மேலும் கூட்டியது.

இரண்டு பிச்சைக்காரர்கள் அவளையே கண்ணிமைக் காமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள். சாவுக்கும் வாழ் வுக்கும் அவர்கள் கண்ணோட்டத்தில் அதிக வித்தியாசம் இல்லை. கிழவன் அவள் தலையை மடியில் ஏற்திக் கொண்டு; மண் பாத்திரத்திலிருந்த நீரை அவள் வாயில் விட்டுக் கொண்டிருந்தான்.

ஐந்து நிமிடங்கள் ஆயிற்று. அவள் கண் திறந்ததைப் பார்த்ததும் கிழவனின் முகம் மலர்ந்தது.

அவள் பலஹீனத்தால் நடுங்கும் கரங்கள் இரண்டை யும் கூப்பி வணங்கினாள். "காப்பாற்றியதற்கு நன்றி" என்றாள்.

அவன் பேச வேண்டாம் என்பது போல் ஜாடை காட்டிவிட்டு தன்னிடமிருந்த கிண்ணத்தை அவள் முன்னால் நகர்த்தினான். அதைச் சாப்பிட்ட பிறகு அவளுக்குக் கொஞ்சம் தெம்பு வந்தாற் போல் இருந்தது. நன்றி நிரம்பிய கண்களோடு அவனைப் பார்த்து "உங்கள் நன்றியை இந்த



ஜென்மத்தில் தீர்த்துக் கொள்ள முடியாது தாத்தா! உங்களுடைய பெயர்?" என்று கேட்டாள்.

"நிரஞ்சன்தாஸ்" என்றான் கிழவன். "ரொம்ப தொலைவி லிருந்து வருகிறாய் போலிருக்கு. எங்கே போகணும் அம்மா?"

"இன்னும் ரொம்ப தூரம் பயணம் செய்யணும் தாத்தா! இப்போ அங்கே என்ன இருக்குன்னு தெரிந்து கொள்ளணும். ஆனால் சந்தேகமாக இருக்கு. போய்ச் சேர வேண்டிய இடத்தை அடைவதற்குள். இந்த உயிர் தான் போய்ச் சேர வேண்டிய இடத்திற்கு போய்ச் சேர்ந்து விடுமோ என்று."

"இவ்வளவு வேதாந்தம் பேசுகிறாயே? உன் பெயர் என்னம்மா?"

"பெயரில் என்ன இருக்கு தாத்தா?" என்றாள் அவள் தலையை அசைத்துவிட்டு. "ஒன்றுமே இல்லை" என்றாள். பிறகு எழுந்து கொண்டு "போய் வருகிறேன் தாத்தா! உங்களுக்கு இன்னொரு தடவை நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்" விடை பெற்றுக் கொண்டாள்.

"இவ்வளவு வெயிலில் எங்கே போகப் போகிறாய்?"

"ரொம்ப தூரம் போகணும். மாதக் கணக்கிலும் ஆகலாம். வருடங்களும் ஆகலாம். ஆனால போயாகணும். போய்த்தான் ஆகணும்."

முணுமுணுத்துக் கொண்டே போய்க் கொண்டிருந்த மெண்மணியைக் கண் மறைவாகும் வரையிலும் பார்த்துக் கொண்டே நின்றான் அவன்.

* * *

"இதென்ன? இவ்வளவு நாளாக எங்கே போயிருந் தீங்க?" கேட்டார் சீஃப். "உங்களைப் பற்றி விசாரித்த போது ஏதோ பிரச்னையில் இருக்கீங்கன்னு தெரியவந்தது."

வங்கி சேர்மென் யாருடனோ ஃபோனில் பேசிக் கொண்டிருந்தார். சைதன்யா தான் வந்த காரியத்தைச் சுருக்கமாக அவரிடம் தெரிவித்தான்.

"உங்களுக்கு கடன் தருவதற்குத் தயக்கம் ஏன்?"

"நான் பழைய நிலையில் இல்லை." சைதன்யா சிரித் தான். தன் நிலைமையை விவரித்தான்.

ஃபோனில் பேசி முடித்துவிட்ட சேர்மெனை நோக்கித் திரும்பினார் சீஃப். "மார்க்கெட் ஒன்றுதானே உங்களு டைய சந்தேகம்?"

"ஆமாம்" என்ற சேர்மென், சைதன்யாவை பார்த்து விட்டு "தாழ்ந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் தம் சொந்தக் கால்களில் நிற்பதற்காக முயற்சி செய்வது எங்களுக்கும் சந்தோஷம்தான். ஆனால் நடைமுறையைப் பற்றியும் யோசிக்கணும் இல்லையா?" என்றார்.

"ஓ.கே." மேஜை மீது இருந்த பேப்பர் வெயிட்டைச் சுழற்றிக் கொண்டே சொன்னார் சீஃப். "மூன்று வருடங் களுக்கு இவர்களுடைய சரக்கு மொத்தத்தையும் வாங்கிக் கொள்கிறேன். எக்ஸ்க்யூடிவ் காண்ட்ராக்ட் எழுதித் தரு கிறேன். எல்.சி. ஓபன் பண்ணுவோம். என்ன சொல் றீங்க?"

இங்கே இவ்வாறு உரையாடல் நடந்து கொண்டிருக் கும் அதே சமயத்தில். அங்கே ரவி தன் ஆடிட்டரோடு பேசிக் கொண்டிருந்தான்.



"பணம் நீங்க போட்டீங்களா? உங்க மனைவி யுடையதா என்ற கேள்விக்கு இடமில்லை. சைதன்யா போன பிறகு அவருடைய பிசினெஸ் எல்லாம் உள்ளது உள்ளபடி நீங்க எடுத்துக் கொண்டீங்க. அதனால் அந்தக் கடன்களுக்கெல்லாம் நீங்கதான் பொறுப்பாளி ஆவீங்க."

"ஆனால் அந்தச் சரக்கு முற்றிலும் நாசமாகி விட்டது. அப்படியும் அந்த சரக்கை அனுப்பி வைத்தவர்களுக் கெல் லாம் பணத்தை கொடுத்துவிட்டேன். என் உத்தேசம் என்னவென்றால், அந்த சம்பவத்தால் ஃபாக்டரி நின்று விடக் கூடாது என்றுதான்."

"நீங்க சொன்னது உண்மைதான். ஆனால் நீங்க கொஞ்சம் சாமர்த்தியமாக நடந்து கொண்டிருக்கணும். அந்த ஃபாக்டரியை சைதன்யாவிடமிருந்து உங்க மனைவி வாங்கிக்கொண்டதாக ஒப்பந்தப் பத்திரம் எழுதிக் கொண்டிருந்தால் உங்களுக்கு எந்தக் கஷ்டமும் வந்திருக் காது. அப்படிச் செய்திருந்தால் ஃபாக்டரியின் பழைய லாப நஷ்டங்களோடு உங்களுக்கு எந்த சம்பந்தமும் இருந் திருக்காது."

"அப்படிச் செய்யாததால் இப்பொழுது பழைய லாபத்தின் மீது கூட டாக்ஸ் கட்டணும் என்று சொல் றீங்க. அப்படித்தானே?" என்று கேட்டான்.

"கட்டணும் மிஸ்டர் ரவி! ஒரு வருஷம் நஷ்டம் வந்தாலும் அதற்கு முன் வருஷம் வந்த லாபத்திற்கு டேக்ஸ் கட்ட வேண்டியதுதான். அதுதான் சட்டம்."

"சட்டமா! அது ஒரு கழுதை!" சலித்துக் கொண் டான் ரவி. பிறகு எல்லாவற்றுக்கும் தயாராகி விட்டவன்

போல் பின்னால் சாய்ந்து கொண்டு "மொத்தம் எவ்வளவு கட்டணும்?" என்று கேட்டான்.

அவர் கொஞ்ச நேரம் கணக்கு போட்டு விட்டு "ஒரு லட்சத்து எழுதாயிரம்" என்றார்.

ரவியின் முகம் வெளிறிவிட்டது. "லட்சத்து எழுதாயிரம்!" முணுமுணுத்தான்.

எங்கிருந்து கொண்டு வருவான்?

* * *

சைதன்யாவுக்கு வியப்பாக இருந்தது. தங்களுடைய கம்பெனிக்கு ஜப்பான் சீஃப் உதவி செய்ததற்காக இல்லை. அந்த நிறுவனத்தின் சார்பில் இந்த நாட்டின் பிரதிநிதியாக தன்னை நியமித்ததுதான்.

"உங்களுக்கு என் நன்றியை எப்படிச் சொல்வதென்றே புரியவில்லை."

"இதில் நான் என்ன செய்துவிட்டேன்? உங்களைப் போன்ற அனுபவசாலிகள் கிடைத்தது எங்கள் அதிர்ஷ்டம். சாதாரண நிலையாக இருந்திருந்தால் நீங்கள் இவ்வளவு சின்ன வேலைக்கு ஒப்புக் கொண்டு இருப்பீங்களா?" என்றார் சீஃப்.

உண்மைதான். ஒப்புக் கொண்டிருக்கமாட்டான். அது வேறு விஷயம். ஆனால் இந்த வேலையும் அவ்வளவு குறைந்தது ஒன்றுமில்லை. கமிஷன் கூட நிறைய இருந்தது.

வீட்டிற்கு வந்த பிறகு சாரதாவிடம் விஷயத்தைச் சொன்னான். அவள் ரொம்ப சந்தோஷப்பட்டாள். "பார்த்தீங்களா? என் சகுனத்தை என்னவென்று நினைத்தீங்க? நீங்க எனக்கு நல்ல பரிசு தரணும்" என்றாள்.



அவன் மனம் பஞ்சை விட லேசாகிவிட்டது. "என்ன வேண்டுமோ சொல்லு" என்றான்.

அவள் மறுத்துத் தலையசைத்துவிட்டு "ஊஹூம். இப்பொழுது இல்லை. ஏதாவது வேண்டியிருக்கும் போது கேட்கிறேன்" என்றாள்.

அவன் சிரித்துவிட்டு "சரி" என்று அங்கிருந்து புறப்பட்டான், தன் தோழர்களுக்கெல்லாம் இதைப் பற்றிச் சொல்வதற்கு.

மீனவர்களிடையே இந்தச் செய்தி பரவியதுமே எல்லோரிடமும் உற்சாகமும் பெருக்கெடுத்தது. பாராட்டுக்கள் அவனைத் திணறடித்தன. மீனவர்களின் சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை.

பத்து நாட்களில் இடம் முடிவு செய்யப்பட்டது. அதற்குப் பிறகு இரண்டு மாதங்களுக்குள் ஃபாக்டரி தொடங்கப்பட்டுவிட்டது. மூச்சு விடமுடியாத அளவுக்கு வேலைகள் அவனைச் சூழ்ந்து கொண்டன. மறுபடியும் பொறுப்புகள். வீடு திரும்புவதற்கு இரவு பத்து மணி ஆகிவிடும்.

ஒருநாள் அவன் வீடு திரும்பும் போது மணி பதினொன்று அடித்துவிட்டது.

சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது சாரதா கேட்டாள். "இப்படி நேரம் காலம் பார்க்காமல் வேலை செய்து கொண்டிருந்தால் உடம்பு என்னத்துக்கு ஆகும்?"

அவன் கையை அலம்பிக் கொண்டே "இது எனக்குப் பழக்கப்பட்டதுதானே?" என்றான் முறுவலுடன்.

அவள் அவனிடம் டவலை நீட்டிக் கொண்டே "எனக்கு ஒரு சந்தேகம். இரவும் பகலும் பார்க்காமல் வேலை செய்யறீங்க இல்லையா? அவ்வளவு பணத்தைச் சம்பாதித்து என்ன செய்யப் போறீங்க?" என்றாள்.

அப்படி கேட்ட பிறகு அவன் முகத்தைப் பார்த்து விட்டு 'ஏன் கேட்டோம்?' என்று எண்ணிக் கொண்டாள். அவன் அதைச் சாதாரணமாக எடுத்துக் கொள்ளவில்லை. அந்தக் கேள்வி அவன் மனதில் ஏதோ ஒரு மூலையில் எதிரொலித்தது. உண்மைதான். எதற்காக இவ்வளவு சம்பாதிக்க வேண்டும்?

அவனுக்கு பதில் உடனே கிடைத்துவிட்டது. தம் குடும்பத்தாரை சந்தோஷப்படுத்துவதற்கு, நண்பர்களுக் கிடையே தலை நிமிர்ந்து நடப்பதற்கு, எதிர்காலத்திற்காக. அவனுக்குச் சட்டென்று சந்தேகம்! மனைவியைச் சந்தோஷமாக வைத்திருப்பது மட்டுமே வாழ்க்கையின் குறிக்கோள் இல்லையே? அவனை அவனுக்காகவே மனைவி நேசிக்க வேண்டும். கணவன் தனக்காக எதுவும் செய்யாவிட்டாலும் மனைவி அவனைக் காதலித்துக் கொண்டே இருப்பாள்.

நண்பர்கள்! ஸ்டேட்டஸ்!

இவற்றுக்காவா? இவை ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ளவைதானே?

எதிர்காலத்திற்காகவா? அதற்கு இவ்வளவு உழைப்பு ஏன்? ஏழு தலைமுறை உட்கார்ந்து சாப்பிட்டாலும் குறை யாத அளவுக்கு சம்பாதிக்க வேண்டியது எதற்காக?



சந்தோஷத்திற்காகவா? ஏ.சி. அறையில் தூக்கம் வராமல் படுக்கையில் அப்படியும் இப்படியும் புரளும் பணக்காரனைவிட, உடலால் கடுமையாக உழைப்பவன் வெறும் தரையில் நிம்மதியாக உறங்குகிறானே?

இல்லை இல்லை. இவை எதுவுமே காரணம் இலலை. பணம் சம்பாதிப்பது ஒரு பழக்கம். ஒரு முறை அதற்கு பழக்கப்பட்டு விட்டால் அதில் இருக்கும் சந்தோஷம் வேறெதிலும் கிடைக்காது. அது ஒரு சதுரங்க ஆட்டம். ஆடிக் கொண்டே இருக்க வேண்டும்.

ஆனால் இவ்வளவு காண்ட்ராடிக்ஷன்களைப் பற்றி யோசிக்கும் சக்தி அவனுக்கு இப்பொழுது இல்லை. எதிர் காலத்தைப் பற்றி யோசிக்கும் சக்தியை கொடூரமான அனுபவம் தயவு தாட்சியண்மில்லாமல் கொண்டு விட்டது.

அந்த அனுபவம் கற்றுத் தந்த பாடம் நினைவுக்கு வந்ததால் அவன் மேலும் சொன்னான். "இல்லை சாரதா! இந்தப் பணம் என்பது மிகவும் உயர்ந்தது. உறவுகளை உறுதியாக வைக்கவல்லது. நட்பை கூட்டும். மனிதனைத் தன் காலில் நிற்க வைக்கும். பணத்தை அளவில்லாமல் சம்பாதிக்க வேண்டும். அதற்காக மன அமைதியை இழக்க நேர்ந்தாலும் சரி."

சைதன்யாவுக்கு சாரதா பதில் சொன்னாள். "பணத்தை வெற்றிக் கொள்ளணும் என்றால் அளவில்லா மல் அதைச் சம்பாதிப்பது ஒன்றுதானா வழி? ஒரே ஒரு முறுவலால் பணத்தைத் திரணமாய் மதித்து நிரஞ்ஜன் தாஸ் அதை வெற்றிக் கொள்ளவில்லையா? அவரிடம் எந்த மன வருத்தமும் இல்லையே?

சைதன்யா பதில் பேசவில்லை. தான் பிச்சைக் காரனாக திரிந்து வந்த நாட்களில் நிச்சிந்தையாக இருந்தது நினைவுக்கு வந்தது. அடுத்த நிமிஷம் என்ன நடக்குமோ என்ற கவலை இல்லை. ஆனால் அவனால் மறுபடியும் அந்த நிலைக்குத் திரும்ப முடியுமா? இல்லை இல்லை. அந்த விரக்தி அவனுக்குக் கிடையாது.

அவனுக்கு அது வரை ஒரு சந்தேகம் இருந்தது. நிரஞ்சன்தாஸ் சகலத்தையும் உதறிவிட வேண்டுமென்று எடுத்துக்கொண்ட முடிவு அர்த்தமில்லாததாக இருக்குமோ என்று. ஆனால் இந்த நிமிஷத்தில் அந்த புதிர் விடுபட்டு விட்டது. எவ்வளவு முன் யோசனையுடன் நிம்மதியாக இருப்பதற்காக அவன் பணத்தை உதறித் தள்ளினான் என்று இப்போ புரிந்து கொள்ள முடிந்தது. ஆனால் தன்னால் அது போல் நடந்துகொள்ள முடியுமா? முடியாது. அவனைப் போன்றவர்கள் ஒவ்வொரு நிமிடமும் கவலைப்படாமல் வாழ முடியாது.

* * *

தான் கட்ட வேண்டிய டாக்ஸ் விவரங்களை கிரண்மயி தெரிந்துகொள்வதை ரவி விரும்பவில்லை.

தனக்குத்தான் வேறு வழியில்லை. அனுபவித்தாக வேண்டும். வீணாக அவளிடமும் சொல்லி அவளை வருத்தப் படுத்துவானேன் என்று அவன் நினைத்தான். ஆனால் அந்த ஆபத்திலிருந்து மீளுவதற்கு அவன் செய்த முயற்சிகள் எதுவும் பலிக்கவில்லை.

மேலிடத்தில் அவன் செய்து கொண்ட அப்பீலை கமிஷனர் மறுத்துவிட்டார்.

அதனால் நிலைமை இன்னும் மோசமாகிவிட்டது.

ரவி தத்தளித்துப் போய்விட்டான். அவன் நிலைமை எல்லோருக்கும் தெரிந்து போய்விட்டது. அவன் நிலைமை தருவதை நிறுத்திக் கொண்டார்கள். ஏற்கனவே கடன் கொடுத்தவர்கள் திருப்பிக் கேட்டு அவசரப்படுத்தத் தொடங்கினார்கள்.

எல்லா பக்கங்களிலிருந்தும் நிலைமை மோசமாக மாறி விட்டதால் அவன் ரொம்ப தளர்ந்து போய் விட்டான். இது இவ்வாறு இருக்கும் போது ஒரு நாள் அவனுக்கு நோட்டீஸ் ஒன்று வந்தது.

டாக்ஸ் கட்டாத காரணத்தால் வீட்டை ஏலம் விடப் போவதாக அறிவிக்கும் நோட்டீஸ்.

## 20

கிரண்மயி!

உன் கணவனாகவும், உன் சொத்து விவகாரங்களை பார்த்துக் கொள்ளும் மேனேஜராகவும் நான் என் தோல்வியை ஒப்புக்கொள்கிறேன். இதெல்லாம் என்னுடைய சாமர்த்திய குறைவினால் ஏற்பட்ட வினை என்ற உண்மையைக் கூட நான் மறக்கவில்லை. கிரண்மயி! என் மீது நம்பிக்கை வைத்து இந்தப் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தாய். ஆனால் நான்தான் அதைச் சரியாக நிர்வகிக்க முடியாமல் போய் விட்டேன்.

கொஞ்ச நாளில் நம் சொத்து முழுவதும் ஏலத்திற்கு வந்து விடப்போகிறது. அதைத் தடுப்பதற்கு நாம் செய்த முயற்சிகள் எல்லாம் தோற்றுவிட்டன. அண்ணன் எந்த நிலையில் வெளியேறினாரோ அதே நிலையில் நானும் போய் விடப் போகிறேன். ஆனால் நான் போகப்போவது இந்த உலகத்தையேவிட்டு. என் சாமர்த்திய குறைக்கு எடுத்துக் காட்டாக நீ அனுபவிக்கப் போகும் கஷ்டங்களை ஒவ்வொரு நிமிஷமும் பார்த்துக் கொண்டே வேதனையை அனுபவிக் கும் சக்தி எனக்கு இல்லை.

கிரண்! இருபத்தி இரண்டு வயது வரையில் அன்பு என்றால் என்னவென்றே தெரியாது. என் வாழ்க்கையில் நீ பிரவேசித்தாய். உன்னை மனதார நேசித்தேன். இந்தப் பணம் என்று ஒன்று நமக்கிடையே இல்லாமல் இருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்? படித்த படிப்புக்கு ஏதாவது சின்ன வேலை எனக்குக் கிடைத்திருக் கும். சின்ன வீடு! சின்ன குடும்பம்! எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்? என்னுடைய முட்டாள் தனத்தை நிரூபிப்பதற்காகவே அந்தப் பணம் வந்து சேர்ந்தது.

முடிந்து விட்டது கிரண்! நாளை காலையில் விடியும் போது நான் இருக்க மாட்டேன். அற்புத மான உன் அழகை இன்னும் கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருக்க வேண்டும் என்றும், உன்னுடன் பேச வேண்டும் என்ற ஆசை மனம் முழுவதும் நிரம்பியிருக்கிறது. ஆனால் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்.



ஒரு முறை அந்த அனுபவத்தைப் பெற்றால் சாக வேண்டும் என்ற இந்த என் தீர்மானம் தளர்ந்து போய்விடலாம். என் மீது உனக்குக் கொஞ்சமாவது நல்ல அபிப்பிராயம் இருந்தால் இனி அது கூட போய்விடும் என்று தெரியும். பணம் இருந்த நாட்களில் என்னோடு எல்லா வற்றையும் அனுபவித்தான். அது போய் விட்ட துமே என்னை விட்டு விட்டு தன் வழியில் போய்ச் சேர்ந்துவிட்டான் என்று நீ என்னைத் தூற்றக் கூடும். ஆனால் நான் உயிரோடு இருந் தால் நம் எதிர்காலத்தைப் பற்றி நினைத்துப் பார்க்கவே எனக்கு பயமாக இருக்கிறது. பணம் நமக்கிடையே ஏற்படுத்தியிருந்த வேற்றுமையை வறுமை மேலும் அதிகமாக்கி விடும்.

உன் நடவடிக்கைகளால் என் மீது இருந்த கோபத்தை உணர்ந்து கொண்டேன் இத்தனை நாளும். நான் இன்னும் உயிரோடு இருந்தால் வெறுப்பைத்தான் காண வேண்டியிருக்கும். அதை நான் விரும்பவில்லை.

உன் ரவி

கடிதம் எழுதுவதை முடித்துவிட்டு காகிதத்தை மடிக்கப் போனவன் ஏதோ சந்தேகம் வந்து திரும்பிப் பார்த்த போது... கிரண்மயி!

கடிதத்தை முழுவதுமாக படித்துவிட்டாள் என்று அவள் முகத்தைப் பார்த்தாலே தெரிந்தது. "கிரண்!" பல வீனமான குரலில் அழைத்தான். அவள் பதில் பேச வில்லை.

கொஞ்ச நேரம் அவனைப் பார்த்தபடியே நின்று கொண்டிருந்தாள். அவள் இதயத்தில் எரிமலை வெடித்துக் கொண்டிருந்தது. இதுவரை பார்த்திராத ரவியைப் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.

அப்பாவியாக, ஜாலியாக, எதையும் எளிதாக எடுத்துக் கொள்ளும் ரவியைத்தான் பார்த்திருக்கிறாள். இப்பொழு தெல்லாம் வேலையில் அதிக கவனம் செலுத்துகிறான் என்று கவனித்து சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தாள்.

ஆனால் நிலைமை இன்று தாறுமாறாகிவிட்டது. வேடிக்கை என்னவென்றால் தாம் பிச்சை எடுக்கும் நிலைக்கு வந்து விட்ட விஷயம் கூட அவளுக்கு அந்தக் கடிதத்தின் மூலமாகத்தான் தெரியவந்தது. ஆனாலும் இநத விஷயம் அவளை அவ்வளவாக பாதிக்கவில்லை. இந்தப் பணம் என்ற ஜுரம் எவ்வளவு சிக்கிரத்தில் விட்டுப் போகுமோ அவ்வளவு நலலது என்று நினைத்தாள் அவள்.

ரவியைப் பார்க்கும் போது பெண்மைக்கே உரிய கருணை பொங்கி வழிந்தது. துக்கமும் ஏற்பட்டது. எப்படிப் பட்ட உயர்ந்த குடும்பத்தில் பிறந்து விட்டு, அன்பாலும் இரக்கத்தாலும் தன்னை மணந்து கொண்ட இந்த இளைஞன் தன்னால்தான் மன அமைதியை இழந்து விட்டான். இந்த உண்மை அவள் இதயத்தைப் பிளந்து கொண்டிருந்தது. இரு வேறுபட்ட உணர்ச்சிகளால் அலைக்கழிக்கப்பட்ட அவள், அவள் அப்படியே அமர்ந்து அவன் முழங்காலில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விசும்பி விசும்பி அழத் தொடங்கினாள்.

அவன் அவள் தலை மீது கையை வைத்து "கிரண்!" என்றான்.



ரொம்ப நேரம் இருவரும் சலனமில்லாமல் அப்படியே உட்கார்ந்திருந்தார்கள். முதலில் கிரண்மயி சுதாரித்துக் கொண்டு முந்தானையால் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"என்னை மன்னித்து விடுங்கள் ரவி! உங்களை ரொம்பக் கஷ்டப்படுத்திவிட்டேன்" என்றாள்.

"இல்லை கிரண்! நீ தான் என்னை மன்னிக்கணும். இவ்வளவு லட்சக்கணக்கான ரூபாய்கள் இவ்வளவு சீக்கிர மாக கரைந்து போய்க் கொண்டிருக்கும் போது என்னால் ஒன்றுமே செய்ய முடியவில்லை" என்றான்.

அவள் நிமிர்ந்து பார்த்தாள். அவள் கண்களில் மெதுவாக ஒளி ஏற்பட்டது. "இதுதானா? இந்த ஒரு காரணம்தான் உங்களை வேதனைப் படுத்துகிறது?" என்றாள். பரபரப்பும், மகிழ்ச்சியும் கலந்த குரலில் "என் மீது இலலையா?" என்று கேட்டாள்.

ரவி குழப்பத்துடன் "கோபமா? அருவருப்பா? எதற்காக?" என்றான்.

"உங்களைக் கஷ்டப்படுத்தியதற்கு. பெண் என்ற விஷயத்தைக் கூட மறந்து போய்..." மேலும் அவள் ஏதோ சொல்லப் போன போது வாயைக் கையால் பொத்தி "நீயாக இருந்ததால் என்னை சகித்துக் கொண்டாய் கிரண்!" என்றான்.

அவள் அப்படியே அவன் கையை தன் கன்னத்தில் பொருத்திக் கொண்டாள். "இன்னும் வாதம் எதுக்கு ரவி! திருமணமான புதிதில் கணவன் மனைவிக்கு இடையில் இருக்க வேண்டிய அன்பையும், சந்தோஷத்தையும் இல்லா

மல் செய்து விட்டது இந்தப் பணம். காலம் போவது தெரியாமல் ஆனந்தமாக கழிக்க வேண்டிய நேரத்தை இந்தப் பணத்தைக் காப்பாற்றுவதற்காக நாம் வியர்த்த மாகி விட்டோம். இப்பொழுதும் ஒன்றும் மிஞ்சிப் போய்விடவில்லை. இந்தப் பாழும் பணம் நம்மிடமிருந்து சாசுவதமாக பிரிந்து போகப் போகிறது. அது போய் விட்டால் அதற்குப் பிறகு நாமிருவர் மட்டும் தான். ரவி! ஏழ்மை எனக்கு பழக்கப்பட்டதுதான். உங்களுக்குத் தான் முதலில் கொஞ்சம் கஷ்டமாக இருக்கும். ஆனால் அதைப் பற்றி பயப்படத் தேவையில்லை. உங்களுக்கு ஏதாவது வேலை கிடைத்துவிடும். மாலையில் களைத்துப் போய் வீடு திரும்புவீங்க. சமையலுக்கு ஆள் யாரும் இருக்க மாட்டாங்க இல்லையா? நானே காபி கலந்து கொண்டு வருவேன். நம் சின்ன உலகத்திற்குள் சீக்கிரத்திலேயே ஒரு குழந்தை வந்து விடும். அதற்குப் பிறகு எல்லாமே சுவர்க்கம் தான்."

ரவி ஒரு அபூர்வமான அனுபவத்தை பெறுவது போல் அவள் பேச்சை கேட்டுக் கொண்டிருந்தான். அவன் முதல் முறையாக புதிய கிரண்மயியைப் பார்க்கிறான். அவள் அந்த வீட்டுக்கு வந்த புதிதில் அவள் கண்களில் இனம் புரியாத வேதனை நிழலாடிக் கொண்டிருந்தது. அது முற்றிலுமாக வேதனை அல்ல. வெறுப்பு! ஊஹூம், அந்த மென்மையான உணர்வுக்கு அவ்வளவு கடுமை யான வார்த்தையை பயன்படுத்த வேண்டாம். மிக ஏழ்மை நிலையிலிருந்து வந்த காரணத்தால், திடீரென்று அந்தச் சூழ்நிலையோடு ஒப்பிட்டுப் பார்த்து ஒரு விதமான தாழ்வு மனப்பான்மையை வளர்த்துக் கொண்டிருந்தாள். அதற்குப் பிறகு விதி ஆடிய ஒரு சின்ன சதுரங்க ஆட்டத்



தில் அவளுக்கு அளவில்லாத சொத்து வந்த சேர்ந்து திணறச் செய்துவிட்டது. புயல் வந்து விட்டு ஓய்ந்த நிலை இப்பொழுது.

ஆனால் அது ஏற்படுத்திய நஷ்டத்தை விட அது போய்ச் சேர்ந்ததே என்ற உணர்வுதான் நிம்மதியைத் தந்தது அவளுக்கு. அந்த திருப்தியுடன் தன் கணவனின் மடியில் தலை வைத்துக் கொண்டு நிம்மதியாக உறங்க முடிந்தது அவளால்.

எங்கும் அமைதியாக இருந்தது. ஜன்னல் வழியாக வந்து வீசிக் கொண்டிருந்த தென்றல் காற்றுக்கு அவள் முன் நெற்றியில் கேசங்கள் மெதுவாக அசைந்து கொண்டிருந்தன. நிலவின் வெளிச்சம் அவள் கன்னத்தில் பிரதிபலித்துக் கொண்டிருந்தது. அபூர்வமான அந்த அமைதிக்கு கரைந்து போன ரவி, அவள் உறக்கத்திற்கு குந்தகம் விளைவிக்காதவாறு மெதுவாக குனிந்து மேஜை மீது இருந்த சின்ன பாட்டிலை எடுத்து ஜன்னல் வழியாக வெளியேவீசியெறிந்தான்.

* * *

பெரிய பரபரப்பு எதுவும் இல்லை. மக்கள் சிலர் அங்கே கூடியிருந்தார்கள். நாலைந்து கார்கள் இருந்தன. இன்கம்டாக்ஸ் டிபார்ட்மெண்டுக்கு சம்பந்தப்பட்ட இரண்டு அதிகாரிகள் ஏதோ குறிப்பு எடுத்துக் கொண்டிருந் தார்கள்.

தெருவில் யாரோ இரண்டு பேர் அந்த வீட்டைப் பார்த்தபடி ஏதோ பேசிக் கொண்டே போனார்கள். காம்பவுண்டுக்குள் வரிசையாக இருந்த குரோட்டன்ஸ்

செடிகள் சரியான பராமரிப்பு இல்லாமல் வாடிப் போயிருந்தன.

தொலைவில் எங்கோ மணி பன்னிரெண்டு அடித்தது. காகம் ஒன்று தாகத்தால் கரைந்து கொண்டிருந்தது. ரவி, கிரண்மயி இருவரும் சற்று தொலைவில் நின்று கொண்டிருந்தார்கள். நிகழ்ந்து கொண்டிருக்கும் சம்பவத்திற்கு சம்பந்தப்படாதது போல் மௌனமாக பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஏலம்போடத் தொடங்கினார்கள்.

"எழுபத்தையாயிரம்!"

இரண்டு லட்சம் விலை மதிப்புடைய பங்களாவை மலிவாக தட்டிக் கொண்டு போய் விட வேண்டுமென்று ஆசைப்பட்டார்கள் யாரோ.

இரண்டு குரல்கள் உடனே "எண்பதாயிரம்!" என்றன.

"தொள்ளாயிரம்."

சற்று நேரம் நிசப்தம்.

"லட்சத்து இருபதாயிரம்." ஒரு மூலையிலிருந்து ராமய்யா செட்டி கத்தினான். நானக்ராம் அவனைப் பார்த்து தலையை அசைத்தான். அவனுடைய குமாஸ்தா மெதுவாக குனிந்து "போதும் சாப்! இனி உயர்த்த வேண்டாம்" என்றான். நானக்ராம் யோசித்துக் கொண்டிருந்தான்.

"லட்சத்து ஐம்பதாயிரம்!"

ராமய்யா துணிந்து "இரண்டு லட்சம்" என்றான்.



ரவிக்கு வியப்பாக இருந்தது. இவர்கள் எல்லாம் தன்னுடைய நண்பர்கள்! இப்பொழுது தன்னை கவனிக்காதது போலவே நடந்து கொள்கிறார்கள். கூட இருந்த பறவை இறந்து போய்க் கொண்டிருந்தால் தங்களுடைய இனத்தைச் சேர்ந்ததுதானே என்று கூட யோசித்துப் பாராமல் கொத்தித் தின்னும் கழுகுகள்தான் நினைவுக்கு வந்தன. நள்ளிரவு நேரத்தில் சகலத்தையும் துறந்து விட்டு அண்ணன் ஏன் வெளியேறினான் என்று புரிந்து விட்டது. போட்டிக்கு இடையே ஏலப்பாட்டு தொடர்ந்து கொண்டே இருந்தது.

"இரண்டரை லட்சம்" என்றான் பகவான்தாஸ். அந்த வீட்டுக்கு அதைவிட அதிகம் கொடுக்க வேண்டியதில்லை. ஆனால் நானக்ராம் பக்கத்து வீட்டுக்காரன். வாங்கிப் போட்டால் தன் வீட்டோடு சேர்த்துக் கொண்டு விடலாம் என்று ஆசைப்பட்டான். கொஞ்சம் தயங்கி விட்டு மூன்று லட்சம்" என்றான்.

அதற்குப் பிறகு யாரும் பேசவில்லை.

"ஒரு தரம்!"

ஊசி விழுந்தாலும் கேட்கும்படியான நிசப்தம். பங்களா மூன்று லட்சத்திற்கு விற்றுப் போனால் தங்களுக்கு எவ்வளவு கிடைக்கும் என்றும், இன்னும் எவ்வளவு தர வேண்டியிருக்கும் என்றும் ரவி மனதிலேயே கணக்குப் போட்டுக் கொண்டிருந்தான். கிரண்மயி கடைசி தடவையாக பங்களாவை பார்த்தாள். எவ்வளவு கட்டுப் படுத்திக் கொண்ட போதிலும் துக்கம் மீறிக் கொண்டு வந்தது.

ஒரு நாள் நள்ளிரவு வேளையில், ஆதரவில்லாத நிலையில் தானும் சாரதாவும் அந்த வீட்டுக்கு வந்தது, சைதன்யா காட்டிய அன்பு எல்லாம் நினைவுக்கு வந்தது. விதியின் கொடுமையினால் அவன் இந்த வீட்டை விட்டுப் போய் விட்டான். இன்றைக்கு தம்மாலும் அதைக் காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை.

அவள் அந்த யோசனையில் இருக்கும் போதே ராமய்யா செட்டி "மூன்று லட்சத்து ஐம்பதாயிரம்" என்றான் அதுதான் கடைசி என்பது போல்.

எல்லோரும் நானக்ராம் பக்கம் பார்த்தார்கள், போட்டிக்கு உயர்த்துவானோ என்று. ஆனால் ஆவேசத்தில் நஷ்டமடைந்து விடாமல் எச்சரிக்கையாக இருக்கக் கூடிய வியாபார லட்சணம் அவன் இரத்தத்தோடு கலந்து விட்டிருந்தது. அதற்கு மேல் விருப்பமில்லாதவன் போல் அவன் முகத்தைத் திருப்பிக் கொண்டு விட்டான்.

"மூன்று லட்சத்து ஐம்பதாயிரம். ஒரு தரம்!"

யாரும் பேசவில்லை.

"இரண்டு தரம்."

இன்னும் நிசப்தமாகத்தான் இருந்தது.

டீல் முடியப் போவதாக அறிவித்தபடி மேஜை மீது இருந்த மணியை அடித்துவிட்டு மூன்று தரம் என்று சொல்ல வந்த போது பின்னாலிருந்து "ஆறு லட்சம்!" என்று அப்பொழுதுதான் வந்த ஆளின் குரல் கேட்டது.

ரவி சட்டென்று நிமிர்ந்தான். எல்லோரும் அந்தப் பக்கமாக திரும்பினார்கள்.

அங்கே சைதன்யா நின்று கொண்டிருந்தான். ரவிக்கு ஒரு வினாடி வாயிலிருந்து வார்த்தை வரவில்லை. கால்கள் தடுமாறின. சட்டென்று அந்தப் பக்கமாக ஓடப் போனான். நெருங்கியவர்களைப் பார்த்த சந்தோஷம்! கஷ்டங்கள் கடைத் தேறிவிட்டன என்ற தைரியம்!

கிரண்மயி கூட அதே நிலையில் இருந்தாள்.

ரவி சைதன்யாவை நெருங்கினான். இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்டு அழுத்தமாக உலுக்கிக் கொண்டே "அண்ணா!" என்று ஏதோ சொல்ல வந்தான். சிறு பையனை போல் அழுகை வந்துவிட்டது. தொண்டை அடைத்தது. வார்த்தை வரவில்லை. சைதன்யா அவனை அணைத்துக் கொண்டே தேற்றுவது போல் "டோண்ட் பி எக்ஸைடெட்" என்றான் முறுவலுடன்.

## 21

சொத்து விவகாரங்களை எல்லாம் ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்கு மூன்று மாதங்கள் பிடித்தன. இன்ஷ்யூர் பண்ணாததால் வந்த நஷ்டத்தை, அதற்குப் பிறகு ஜப்பான் கம்பெனி ஏஜெண்டாக வழங்கப்பட்ட லாபத்தோடு ஈடுகட்டிக் கொள்வதற்கு இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகாரர்கள் ஒப்புக் கொண்டு விட்டதால் இரண்டு வருஷத்து லாபத்திற்கு வரி கட்ட வேண்டிய தேவை இல்லாமல் போய்விட்டது.

அவனுடைய வியாபாரத் திறமையை அறிந்தவர்கள் மறுபடியும் அவனுக்குக் கடன் கொடுக்க முன் வந்தார்கள்.

அதோடு அவனுக்கு கடற்கரைப் பிரதேசத்துடன் தற்சமயம் நல்ல தொடர்பு இருந்து வந்தது. அது அவனுக்கு நல்ல பயனைத் தந்தது.

சாரதாவும் வந்துவிட்டாள். வீட்டில் பழைய களை திரும்பிவிட்டது. வாடிப் போன செடிகள் மீண்டும் தலை நிமிர்ந்தன. புதிய தளிர்கள் விடத்தொடங்கின. கேட்டுக்கு முன்னால் திரும்பவும் கூர்க்கா நிற்கத் தொடங்கினான்.

அன்று மாலை சைதன்யா பால்கனியில் வந்து நின்று கொண்டான். வானம் நிர்மலாக இருந்தது. கொக்குகள் வரிசையாக கூட்டை நோக்கிப் பறந்து கொண்டிருந்தன. எதற்காகவோ கீழே பார்வையை செலுத்திய சைதன்யா வின் புருவம் ஒரு வினாடி சுருங்கியது.

கிழவி ஒருத்தி நொண்டிக் கொண்டே அந்த வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தாள். அவள் உடைகள் கிழிந்து, கந்தலாக இருந்தன. தலைமுடி எண்ணெய் பசை இல்லாமல் பிரிபிரியாக தொங்கிக் கொண்டிருந்தது. உடம்பில் தெம்பு இல்லாததால் நடை தடுமாறிக் கொண்டிருந்தது. அந்த வீட்டை கூர்ந்து பார்த்தபடி வந்து கொண்டிருந் தாள்.

கோலிக் குண்டுகள் போல் வெளிறிய அந்த விழிகளில் ஏதோ ஆர்வம் கலந்திருந்தது. பலவீனம் அதை முடக்கி விட்டது. இருந்தாலும் பிடிவாதமாக அவள் முன்னேறிக் கொண்டிருந்தாள். அவள் வயிறு ஒட்டிப் போயிருந்தது. கட்டியிருந்த புடவை புழுதி படிந்திருந்தது. வீட்டிற்கு முன்னால் வந்து நிமிர்ந்து பார்த்தாள். புதிதாக பெயிண்ட் அடிக்கப்பட்ட வீடு மாலை வெயிலில் மின்னிக் கொண்டி ருந்தது. முன் பக்கத்தில் இருந்த அசோக மரங்கள் கம்பீர



மாக காற்றுக்கு அசைந்தாடிக் கொண்டிருந்தன. பாதைக்கு இரு பக்கமும் நடப்பட்டிருந்த சுண்ணாம்பு கற்கள் புதிய அழகை கூட்டிக் கொண்டிருந்தன.

"ஏய்! உள்ளே போகாதே. போ... போ."

பங்களாவை கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்த கிழவியை விரட்டினான் கூர்க்கா.

அவள் நகரவில்லை. "யாருப்பா இப்போ இதில் இருக்காங்க?" என்று கேட்டாள்.

"உனக்கு எதுக்கு? போய் விடு." எரிந்து விழுந்தான். முதலாளி பார்த்துவிட்டால் புதிதாக கிடைத்த வேலை போய்விடுவேமா என்ற பயம் அவனுக்கு.

அவள் இன்னொரு அடி முன் நோக்கி எடுத்து வைத்தாள். வாயால் சொன்னால் போகமாட்டாள் என்று எண்ணி மிரட்டுவதற்காக கழியைக் கையில் எடுத்துக் கொண்டான் கூர்க்கா. அதற்குள் உள்ளேயிருந்து வேலைக் காரன் வருவது தென்பட்டது.

அவள் ஆசையோடு பார்த்தாள்.

வேலைக்காரன் அருகில் வந்து "இந்தா. இதை எடுத்துக்கொள்" என்று கையில் வைத்தான்.

"போ. இனி போய்விடு" என்றான் கூர்க்கா.

அவள் உள்ளங்கையை விரித்தாள். நூறு ரூபாய் நோட்டு!

கூர்க்காவும் அதைப் பார்த்துவிட்டான். ஆச்சரியம் தாங்க முடியாமல் "இதென்ன?" என்று வேலைக் காரனிடம் கேட்டான்.

"என்னவோ தெரியாது. எப்போ வந்தாலும் இவளுக்கு இந்த மாதிரி தரச் சொன்னார் முதலாளி."

வேலைக்காரன் சொல்லிக் கொண்டிருந்தான். அவள் வியப்புடன் நிமிர்ந்து அந்தக் கட்டடத்தைப் பார்த்தாள். பால்கனி காலியாக இருந்தது. அவள் கண்களில் ஒரு வினாடி ஏமாற்றம் தெரிந்தது. அந்த பால்கனியை ஒட்டியே இருந்த பெட்ரூம் ஜன்னலின் அருகில் நின்றபடி சைதன்யா பார்த்துக் கொண்டிருப்பது அவளுக்குத் தெரியாது. அவன் உள்ளங்கையில் திரைச் சீலை பலமாக நலிந்து கொண்டிருந்தது. சலனமில்லாமல் இருப்பதற்கு அரும்பாடு பட்டுக் கொண்டிருந்தான்.

"யாருப்பா இதைக் கொடுத்தாங்க?"

"எங்க முதலாளி சைதன்யா."

அவள் முகத்தில் வினாடி நேரம் வெளிச்சம் தென் பட்டது. அவளை இவ்வளவு தூரம் தள்ளிக் கொண்டு வந்த கண்ணுக்குத் தெரியாத சக்தி திரும்பவும் தன் இருப்பிடத்தை நிரூபித்துக் கொண்டுவிட்டது.

வானம் இடிந்து விழவில்லை. பூமி சுழலுவது நிற்க வில்லை. கடல் பொங்கவில்லை.

அவள் மெதுவாகத் திரும்பினாள். கையில் இருந்த நோட்டு எதை குறிக்கிறது? அன்பையா இல்லை வெறுப் பையா?

"ஐயாவின் கருணை பட்டுவிட்டது. அதிர்ஷ்டசாலி!" பின்னாலிருந்து வேலைக்காரன் சொல்லிக் கொண்டி ருந்தது காதில் விழுந்தது.



அதிர்ஷ்டசாலி! அவளுக்குச் சிரிப்பு வந்தது. அத் துடன் அழுகையும் வந்தது. எதற்காக வந்தாள் இவ்வளவு தூரம்? ஒன்றுமே இருக்காது என்று தெரியும்.

என்ன இருந்தது என்று தெரிந்துகொள்ள வேண்டு மென்ற ஆசையா? ஏழு அடிகள் ஒன்றாக சேர்ந்து எடுத்து வைத்த பந்தம் நிமிட நாழிகையில் உதறித் தள்ளிவிட்ட மனம், ஏழு ஆண்டுகள் வசித்த பங்களாவை பார்க்க வேண்டும் என்று ஏன் இவ்வளவு தவித்தது? இங்கே அவன் தென்பட்டது யதேச்சையாக நிகழ்ந்ததுதானே? அவன் தன் பழைய வாழ்க்கையை விரும்பியதில் வியப்பு ஒன்று மில்லை. தான் வந்ததுதான் ஆச்சரியம்.

அவள் கையில் ரூபாய் நோட்டு கசங்கிக் கொண்டி ருந்தது. தாம்பத்தியத்தின் விலை நூறு ரூபாயா? பின்னே அன்பின் விலை சமன்லாலின் கார் இல்லையா? ஆனா லும் இவ்வளவு பெரிய தண்டனையா?

இதில் தண்டனை என்ன இருக்கிறது? வரும் பொழு தெல்லாம் நூறு ரூபாய் கிடைக்கும் இல்லையா? அவளுக்கு மறுபடியும் சிரிப்பு வந்தது. எதை எதிர்பார்த்து வந்தாள் அவள்? மனம்தான் எவ்வளவு விசித்திரமானது? கொஞ்சம் ஆதாரம் கிடைத்ததுமே இன்னும் கொஞ்சம் எதிர் பார்க்கத் தொடங்கி விடுகிறது.

சூழ்நிலையில் பாதிப்பினால் இப்படி ஆகிவிட்டாள். அது அவள் தவறு எதுவும் இல்லை. உடல் மாசுபட்டா லும் மனம் மட்டும்...

இல்லை இல்லை. மனம் கூட மாசடைந்து விட்டதே. இப்பொழுது நோய் உடலை செல்லரித்துவிட்ட பிறகு மனம் புனிதமடைந்தது. இல்லா விட்டால் பச்சாத்தாபம்

ஏற்பட்டிருக்குமா? அவன் கை நீட்டி அழைத்து விட்டால் மட்டும் அவளால் போய் விட முடியுமா? அழைப்பதற்கு அவள் வாழ்க்கை வெறும் கதை இல்லை. அவனும் கதா நாயகன் இல்லை. மனித நேயம் இருந்ததால் இவ்வள வாவது கருணை காட்ட முடிந்தது அவனால். அவளோ மனிதநேயம் கிடக்கட்டும், சம்பிரதாயத்தைக் கூட மதிக் காமல் போய்விட்டாள்.

எது சம்பிரதாயம்?

ரிஷிகளுக்கெல்லாம் வழிகாட்டியாக இருக்கும் மனுவே! நீயே சொல்லு, எது சம்பிரதாயம்? விவாக பந்தம் முறிவில்லாதது என்றாய். ஆனால் இரு தாரத்தை அனுமதித்தாய். பெண்கள் பூஜிக்கப்படும் இடத்தில் ஐஸ்வரியம் செழிக்கும் என்றாய். பெண்கள் சுதந்திரமாக இருக்க அருகதையற்றவர்கள் என்று சொன்னதும் நீதான்.

பிராப்தத்திற்கு சம்பந்தப்பட்ட வரையில் மனித னுக்கு சுதந்திரம் இல்லை. மனு சொன்னாலும் மார்க்ஸ் சொன்னாலும் தர்மசாஸ்திரத்தின் விதி விலக்குகளைப் பற்றியேதான். ஆனால் விதியை அனுசரித்து நடப்பதைக் காட்டிலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்த இன்னொன்று மனித வாழ்க்கையில் இருப்பதாக மனுநீதியே ஒப்புக் கொள்கிறது.

அதுதான் கடமை!

அவள் உதட்டில் முறுவல் மலர்ந்தது. பசியால் குப்பைத் தொட்டி அருகில் போய் நின்று எச்சில் இலை யைப் பொறுக்கப் போன சமயத்தில் மனிதனின் பல வீனத்தைப் பற்றிப் புரிந்துகொண்ட சைதன்யா அவளை எப்படி மன்னித்தானோ, அதே போல் அவளும் அவனை மன்னித்துவிட்டாள்.



அன்றிரவு உலகம் ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருந்த வேளையில் ஆளரவமில்லாத மயானத்தில் எரியும் சிதை களுக்கு நடுவில் ஒரு உயிர் தன் உடம்பிற்கு தீப்பற்றவைத் துக் கொண்டு சாம்பலாகிவிட்டது. அடர்ந்த காட்டிற்கு நடுவில் காட்டுப் பூவொன்று உதிர்ந்து போனால் யாருக் குத் தெரியப் போகிறது?

அதே நேரத்தில் சைதன்யா தன் அறையில் உட்கார்ந் திருந்தான். விடிவிளக்கின் மங்கலான வெளிச்சத்தால் இருளை முற்றிலுமாக விரட்டியடிக்க முடியவில்லை. அவனுக்கு முன்னால் இருந்த மேஜையின் மீது அன்றைக்கு தபாலில் வந்த கடிதங்களுக்கிடையே திருமண அழைப் பிதழ் ஒன்று இருந்தது. தீபக்கின் திருமணப் பத்திரிகை. அதை கையில் வைத்துக் கொண்டு அப்படியே உட்கார்ந் திருந்தான். அவன் மனம் முழுவதும் வேதனையால் நிரம்பி வழிந்தது, தங்கையின் நினைவும், வந்து விட்டு போன மனைவியின் நினைவும் வந்ததால்.

மனதில் எந்த மூலையிலேயோ சின்ன ஆசை இருந்தது. தங்கை செய்த தவறுதான் என்ன? வந்தால் மனைவியாக அவளை ஏன் ஆதரிக்கக் கூடாது? உட லுடன் மனமும் களங்கமடையாது என்று நம்பினால் போதும். தன்னுடைய மனைவியின் விஷயம் வேறு. அங்கே களங்கமடைந்து விட்டது மனம். ஆனால் தனக்கு மனம் எவ்வளவு முக்கியமோ அது போல் மற்றவர்களுக்கு உடலும் முக்கியமாக இருக்கலாம். தன்னைப் போலவே எல்லோரும் யோசிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது தவறு. யோசிக்க யோசிக்க மனப் போராட்டம்தான் மிஞ்சும். அவ்வாறு தோன்றியதுதான் தாமதம். அவன்

அழைப்பிதழை டிராயருக்குள்ளேயும், எண்ணங்களை மனதின் அடித்தளத்திற்குள்ளும் தள்ளிவிட்டான். தேவை யில்லாதவற்றை யோசிக்காமலிருக்க அவன் மனதை என்றோ பழக்கிக் கொண்டுவிட்டான். கட்டிலில் படுத்தப் பத்தாவது நிமிடம் தூங்கிவிட்டான்.

அதற்கு மறுநாள் கிருஸ்துமஸ்.

அன்றைக்கு சைதன்யாவின் வீட்டில் பார்ட்டிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்கு தூண்டுகோலாக இருந் தவள் சாரதாதான். பழைய சம்பிரதாயங்களை விட்டு விடுவதற்கு அவளுக்கு விருப்பமில்லை. அதோடு அந்த நாளில் சைதன்யாவை பழைய நினைவுகளிலிருந்து மீட்ப தற்காக ஏதோ ஒரு வியாபகம் இருக்க வேண்டும் என்று நினைத்தாள்.

அவள் யோசனையை ரவியும், கிரண்மயியும் ஒப்புக் கொண்டதால் வேறு வழியில்லாமல் சைதன்யாவும் இணங்க வேண்டியதாயிற்று. பார்ட்டி நடந்து கொண்டிருந்த போது தான் சாரதா எவ்வளவு நல்ல உத்தேசத்துடன் இதற்கு ஏற்பாடு செய்திருக்கிறாள் என்று அவனுக்குப் புரிந்தது.

ரொம்ப நாட்கள் கழித்து மறுபடியும் எல்லோரும் அவன் வீட்டில் சந்தித்துக் கொண்டார்கள். சைதன்யா உற்சாகத்துடன் அங்குமிங்கும் திரிந்து எல்லோரையும் உபசரித்துக் கொண்டிருந்தான். சாரதா உள்ளேயே இருந்து கொண்டு எல்லாம் சரிவர நடக்கிறதா என்று மேற் பார்வையிட்டுக் கொண்டிருந்தாள். யாருடனோ பேசிக் கொண்டிருந்த ரவியைத் தொலைவிலிருந்தே கவனித்தாள் கிரண்மயி. பெரிய பொறுப்பிலிருந்து விடுபட்டது போல் நிம்மதியாக தென்பட்டான்.



சைதன்யா உள்ளே போனான். புடவைத் தலைப்பை இழுத்துச் சொருகிக் கொண்டு சாரதா வேலை செய்து கொண்டிருந்தாள். அவள் நெற்றியில் வியர்வை அரும்பி யிருந்தது. தலைமுடி கலைந்திருந்தது. சைதன்யாவைப் பார்த்ததும் முறுவலுடன் "ஏன் இங்கே வந்தீங்க?" என்று கேட்டாள்.

அவன் அதற்குப் பதில் சொல்லாமல் அவளைக் கூர்ந்து கவனித்துவிட்டு "உனக்கு எதுக்கு இதெல்லாம், வேலைக்காரர்கள் இத்தனை பேர் இருக்கும் போது?" என்றான்.

"அவர்கள் செய்தால் நாம் சுயமாக பார்த்துக் கொண்டாற்போல் ஆகுமா?" என்றாள்.

"நீ வரக் கூடாதா? எல்லோருக்கும் அறிமுகப்படுத்தி வைக்கிறேன்" என்றான்.

"என்னவென்று அறிமுகப்படுத்தி வைப்பீங்க?"

அவன் ஏதோ சொல்ல வந்த போது வேலைக்காரன் வந்த காலியான கிண்ணத்தை மேஜை மீது வைத்துவிட்டுப் போனான். மேஜைக்கு அந்தப் பக்கத்திலிருந்த அவள் கையிலிருந்து உணவு பதார்த்தம் இருந்த கிண்ணத்தை வாங்கி பக்கத்திலேயே இருந்த வேலைக்காரனிடம் தந்து கொண்டே "நீ நாலு பேருக்கு முன்னால் வரணும். இனி முன் போல் இல்லை" என்றான்.

"முன் போல் எது இல்லை?"

"மறுபடியும் இந்த உலகத்திற்குள் வந்து விட்டோம் இல்லையா?"

"இந்த உலகத்திற்குள் வருவது என்றால் நாலு பேருக்கு முன்னால் வருவதா?" என்றாள் புரியாதது போல்.

அவன் இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று புரியாமல் குழம்பிப் போய் "நான் போகிறேன்" என்றான்.

அவள் சிரித்துவிட்டு "போய் விருந்தாளிகளைக் கவனியுங்கள். உங்களைக் காணவில்லையே என்று அவர்கள் கவலைப்பட்டுக் கொண்டிருப்பார்கள்" என்றாள்.

அவன் மறுபடியும் வெளியே வந்தாள். வானத்தின் தெற்குப் பக்கத்திலிருந்து மெல்ல மெல்ல கார்மேகங்கள் திரண்டு கொண்டிருந்தன. குளிர்ந்த காற்று வீசியது. டின்னர் முடிந்த பிறகு வேலைக்காரர்கள் ஃப்ரூட்சாலட் வழங்கிக் கொண்டிருந்தார்கள்.

"குட் ஈவினிங் ரவி!" என்றான் நானக்ராம்.

"குட் ஈவினிங்." சுருக்கமாகச் சொன்னான் ரவி. என்னதான் மறைத்துக் கொள்ள முயன்றாலும் முகத்தில் வெறுப்பு தோன்றிக் கொண்டே இருந்தது. ஆதரவற்ற நிலையில் தாங்கள் இருந்த போது அதை சுயநலத்திற்காக பயன் படுத்திக் கொள்ள முயன்றவன், இப்பொழுது ஒன்றும் தெரியாதது போல் தன்னை விஷ் செய்கிறான்.

"இவர் மிஸ்டர் விஸ்வநாதன், சினிமா தயாரிப் பாளர்." பக்கத்திலிருந்த விருந்தாளியை அறிமுகம் செய்து வைத்தான் நானக்ராம். பஞ்சகச்சம் கட்டிக் கொண்டு கம்பீரமாக இருந்தார் விஸ்வநாதன். அவர் ரவியிடம் கை குலுக்கி விட்டு "உங்களை இப்பொழுதுதான் சந்திக்கிறேன். உங்க அண்ணாவை எனக்கு நன்றாகத் தெரியும்" என்றார்.



"உங்க புதுப் படம் எப்போ ரிலீஸ் ஆகிறது?" உரையாடலைத் தொடங்கிபடி கேட்டான் ரவி.

அதற்குள் சைதன்யா அங்கே வந்தான். "ஹலோ விஸ்வநாதன்!" கையை நீட்டினான்.

"ஹலோ சைதன்யா! வியாபாரம் எப்படி இருக்கு?"

"கடவுள் கிருபையால் நன்றாகப் போய்க் கொண்டிருக்கிறது."

நானக்ராம் வியப்புடன் "நீங்க கடவுளை நம்புகிறீர்களா?" என்றான், அதற்கு முன்னால் சைதன்யா இவ்வாறு பேசி கேட்டிறாததால்.

அந்தக் கேள்விக்கு சைதன்யா உடனே பதில் சொல்லவில்லை. கொஞ்சம் நிதானித்து விட்டு பிறகு சொன்னான். "கடவுள் இருக்கிறாரா இல்லையா என்று எனக்குத் தெரியாது. ஆனால் சகலசராசரங்களை ஆட்டுவித்துக் கொண்டிருக்கும் சக்தி ஒன்று இருக்கிறது என்று மட்டும் நம்புகிறேன்."

விஸ்வநாதன் சிரித்துவிட்டு "ரொம்ப நம்பிக்கையாக சொல்நீங்களே?" என்றார்.

சைதன்யா சிரிக்கவில்லை. "ஆமாம்" என்றான்.

விஸ்வநாதன் ஜேபியிருந்து ஒரு ரூபாய் நாணயத்தை எடுத்தார். "பந்தயம் கட்டுங்கள் பூவா தலையா என்று. பூ விழுந்தால் கடவுள் இருப்பதாக நான் நம்புகிறேன். தலை விழுந்தால்?"

சைதன்யா உடனே பதில் சொல்லவில்லை. அவர் கையிலிருந்த நாணயத்தையே உற்றுப் பார்த்து விட்டு

மெதுவாக சொன்னான். "நான் என் நம்பிக்கையை வாபஸ் வாங்கிக் கொள்கிறேன்."

அவர் சிரித்துவிட்டு "இதென்ன பந்தயம்? வேறு ஏதாவது பெரிய பந்தயம் கட்டுங்கள்" என்றார்.

அதற்குள் இந்த விஷயம் எல்லோரையும் கவர்ந்து விடவும் சுற்றிலும் கூடிவிட்டார்கள். எல்லோருக்கும் ஆர்வம் பெருகிற்று.

ஆள் காட்டி விரலுக்கடியில் கட்டை விரலை வைத்து நாணயத்தைச் சுண்டப் போன விஸ்வநாதன் "சொல்லுங்கள்" என்றார்.

அதே கம்பீரமான குரலில் சைதன்யா திடமாகச் சொன்னான். "தலை விழுந்தால் என் சொத்துக்கள் முழுவதும் உங்களுக்கு விட்டுக் கொடுத்து விடுகிறேன்."

அங்கே காற்றும் ஸ்தம்பித்துவிட்டது. விஸ்வநாதன் சட்டென்று கையைப் பின்னால் இழுத்துக் கொண்டு "என்ன?" என்றார், சரியாக தன் காதில் விழவில்லையோ என்று.

சைதன்யா திரும்பவும் சொன்னான். யாரோ தடுக்க முயன்றார்கள்.

விஸ்வநாதனின் மனைவி இரக்கத்துடன் சைதன்யாவைப் பார்த்தாள். தன் கணவருக்கு இந்த பூவா தலையா விளையாடுவது ரொம்ப பிடித்த பொழுதுபோக்கு என்று அவளுக்குத் தெரியும். இந்த நாணயம் அவர் எடுத்த சினிமாவில் உபயோகித்தது. இரண்டு பக்கமும் தலை இருப்பது. இந்த நாணயத்தை வைத்துக் கொண்டு நண்பர்களை அழவைப்பது அவருடைய பழக்கம்.



சைதன்யாவின் சொத்துக்களை தன் கணவன் எடுத்துக் கொள்ளாமல் போகலாம். ஆனால் சைதன்யா மட்டும் எல்லோருக்குமிடையே அவமானப்படப் போவது நிச்சயம். அதுவும் கடவுள் இருக்கிறாரா இல்லையா என்ற விஷயத்தில். அவள் பயம் அதுதான்.

அதுவரையில் சிரித்துக் கொண்டிருந்த ரவியின் முகம் பதற்றத்தில் சிவந்துவிட்டது. சைதன்யா இந்த வார்த்தைகளை விளையாட்டாகச் சொல்லவில்லை என்று அவனுக்குத் தெரியும். கிரண்மயி நடந்து கொண்டிருப்பதை பார்வையாளராக பார்த்துக் கொண்டிருந்தாள்.

"நன்றாக யோசித்துவிட்டுத்தான் இந்தப் பந்தயம் கட்டுறீங்களா?" விஸ்வநாதன் கேட்டார். சைதன்யா தலையை அசைத்தான்.

அவர் கையிலிருந்த நாணயம் காற்றில் எழும்பியது. எல்லோரும் மூச்சை இழுத்து அடக்கிக் கொண்டார்கள். நாணயம் கீழே விழுந்ததுமே இரண்டு மூன்று பேர் பரபரப்புடன் ஓடிப் போய் குனிந்து பார்த்தார்கள்.

பூ!

ரொம்ப நம்பிக்கையுடன் இருந்த விஸ்நாதனின் முகத்தில் திகைப்பு தென்பட்டது. அவர் மனைவி கூட ஒரு வினாடி வியப்படைந்து விட்டாள். ஆனால் அதற்குள் ஏதோ புரிந்துவிட்டாற்போல் அவள் உதட்டில் குறுநகை படர்ந்தது. கணவன் பக்கம் திரும்பி "டாச்சிக்காரன் இரண்டு நாணயங்களைத் தந்தான் இல்லையா? உங்க சினிமா நாணயம் அதோடு கலந்து விட்டது போலிருக்கு" என்றாள்.

அது வரையில் குழப்பத்துடன் பார்த்துக் கொண்டிருந்த விஸ்வநாதனுக்கு ஏதோ ஆதாரம் கிடைத்து விட்டாற் போல் இருந்தது. சட்டென்று ஜேபியில் கையை விட்டு வேறு இரண்டு நாணயங்களை வெளியே எடுத்தார். அதில் சினிமாவில் பயன்படுத்தும் நாணயம் இருந்தது. இரண்டு பக்கமும் தலை இருப்பது.

எல்லோரும் அப்பாடா என்று நிம்மதியாக மூச்சு விட்டுக் கொண்டார்கள். ஓரிருவர் கைகளைத் தட்டவும் செய்தார்கள்.

"கடவுள் இருக்கிறார் என்று இப்பொழுதாவது நம்புறீங்களா?" நானக்ராம் கேட்டான். விஸ்வநாதன் ஏதோ சொல்ல வருவதற்குள் சைதன்யா இடைமறித்து விட்டு சொன்னான். "நான் சொன்னது கடவுளைப் பற்றி இல்லை. நம்மை ஆட்டுவித்துக் கொண்டிருக்கும் சக்தியைப் பற்றி. கடவுள் இருக்கிறாரா இல்லையா என்று எனக்குத் தெரியாது."

ஒப்புக் கொள்வது போல் விஸ்வநாதன் தலையை அசைத்தார். அதற்குப் பிறகு உரையாடல் அதீத சக்திகளைப் பற்றியும், ஆறாவது அறிவைப் பற்றியும் திரும்பியது.

"உங்களுக்கு இருக்கும் ஆறாவது அறிவை உபயோகித்து இப்பொழுது நடக்கப் போகும் ஏதாவது ஒரு விஷயத்தைப் பற்றிச் சொல்ல முடியுமா?" யாரோ கேட்டார்கள்.

"சொல்ல முடியும்" என்றான் சைதன்யா. "இன்னும் சற்று நேரத்தில் இங்கே அடைமழை பெய்யப் போகிறது."



மறுபடியும் சிரிப்பு அலை மோதியது. வானத்தில் முன்னைவிட அதிகமாக மழை மேகங்கள் சூழ்ந்திருந்தன.

ஒவ்வொருவராக விடைபெற்றுக் கொண்டு போகத் தொடங்கினார்கள். எல்லோரும் போன பிறகு உள்ளே வந்து கொண்டிருந்த சைதன்யாவைப் பார்த்து கிரண்மயி கேட்டாள். "எந்த தைரியத்தில் அவ்வளவு பெரிய பந்தயம் வைத்தீங்க?"

"என்னையே நான் சோதித்துக் கொள்ளணும் என்று தோன்றியது."

"அதற்காக அவ்வளவு பெரிய பந்தயம் தேவையா?"

"பெரியது! அவர்களுடைய கண்ணோட்டத்தில்." அவன் தன் அறையை நோக்கிப் போனான்.

தொலைவில் ஒன்பது மணி அடித்தது. ரொம்ப களைத்துப் போய்விட்டதால் தன்னை மறந்து தூங்கி விட்டான். ஆனால் கொஞ்ச நேரத்தில் தொலைவில் எங்கேயோ இடி இடித்ததால் விழிப்பு வந்துவிட்டது. வெளியே அடை மழை பெய்து கொண்டிருந்தது. மின்னல் மின்னிய போதெல்லாம் காரிடாரில் வெளிச்சம் நிரம்பி வழிந்தது.

அவனுக்கு ஏனோ மழையை வேடிக்கை பார்த்துக் கொண்டே உட்கார வேண்டும் போல் இருந்தது. கதவைத் திறந்து வராண்டாவுக்கு வந்தான். வராண்டா கோடியில் கண்ணாடி ஜன்னலுக்கு அருகில் சாய்வு நாற்காலியில் வந்து உட்கார்ந்து கொண்டான்.

தொலைவில் கீற்றுக் கொட்டகை ஒன்று பர்ணசாலை போல் இருந்தது. இவ்வளவு குளிரில் அதில் இருப்பவர்கள்

எப்படித்தான் இருப்பார்களோ என்று நினைத்தான். ஏர் கண்டிஷனர் குளிர்ந்த காற்றை கண்டிஷன் செய்து உள்ளே அனுப்பி வைத்துக் கொண்டிருந்தது. எழுந்து போய் அதை அணைத்துவிட்டு ஜன்னல் கதவைத் திறந் தான்.

பெரிய பெரிய கிளைகள் காற்றுக்கு அப்படியும் இப்படியுமாக ஆடிக் கொண்டிருந்த காட்சி மேலும் பீதியை தோற்றுவித்துக் கொண்டிருந்தது. அவன் சலன மில்லாமல் நின்று கொண்டிருந்தான்.

தொலைவில் எங்கேயோ இடி விழுந்தது. கொஞ்ச நேரத்தில் கதவைத் திறந்து சத்தம். பின்னால் சந்தடியைக் கேட்டு "யாரது?" என்றான்.

இருட்டில் அவள் தென்படாவிட்டாலும் குரலை அடையாளம் தெரிந்து கொண்டு "நான்தான்" என்றாள் சாரதா. "கரெண்ட் போய் விட்டது போலிருக்கு."

"ஆமாம்" என்றான் அவன்.

"என்ன செய்யறீங்க இருட்டில்?"

"மழையைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்."

அவள் பக்கத்தில் வந்து நின்று கொண்டாள். "மழை யைப் பார்த்தால் உங்களுக்கு பயம் இல்லையா?" என்றாள்.

"இப்போ இல்லை. ஒரு காலத்தில் பயம் இருந்தது. சில வருடங்களுக்கு முன்னால் இதே கிருஸ்துமஸ் அன்று இரவில் வந்த மழை எனக்கு எவ்வளவு நஷ்டத்தை ஏற்படுத்த முடியுமோ அவ்வளவு நஷ்டத்தை ஏற்படுத்தி



விட்டுப் போய் விட்டது. அத்துடன் அதன் மேல் எனக்கு இருந்த பயமும் போய்விட்டது." ரொம்ப நேரம் மௌன மாகக் கழிந்தது. "இன்றைக்கு மதுவின் பிறந்த நாள்" என்றான். அப்படிச் சொல்லும் போது அவன் குரல் நடுங்கியது.

அவள் நிமிர்ந்து பார்த்தாள். எந்த நினைவுகள் அவனை சூழ்ந்து கொள்ளக் கூடாது என்று முயற்சி செய்தாளோ, அந்த வேதனையின் நிழல் அவன் முகத்தில் பிரதிபலித்ததைப் பார்த்து கலக்கம் அடைந்தாள். பேச்சை மாற்றியபடி "உங்களுக்கு மழையைப் பார்த்துக் கொண்டு உட்காரனும் என்று தோன்றுவது போல் எனக்கோ இன்னொரு ஆசை தோன்றுகிறது" என்றாள், வந்து பக்கத்தில், கீழே உட்காரர்ந்துகொண்டே.

"என்ன ஆசை?"

"முடிந்தால் தூரிகையினால் இந்த இயற்கை அழகை கான்வாசில் வரைந்து ஃப்ரேம் போட்டு மாட்டணும் என்று."

அதே நேரத்தில் அரிக்கேன் விளக்கை ஏற்றி வைப்ப தற்காக அங்கே வந்த கிரண்மயி, வெளியே இருந்து வந்து விழுந்த மங்கலான வெளிச்சத்தில் ஏதோ அற்புதமான காட்சியைப் பார்ப்பது போல் அப்படியே நின்று விட்டாள்.

தங்கை சாரதா மண்டியிட்டு உட்கார்ந்துகொண்டு தரையில் விரலால் கோலமிட்டுக் கொண்டிருந்தாள். சைதன்யா பின்னால் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டு அமர்ந்திருந்தான். சந்தடி கேட்டு கண்களைத் திறந்தவன் "வா கிரண்மயி! ஏன் அங்கேயே நின்று விட்டாய்?" என்றான்.

89978

அவள் உள்ளே வந்து கொண்டே "இதோ அரிக்கேன் விளக்கை ஏற்றிக் கொண்டு வருகிறேன்" என்றாள். சாரதா சட்டென்று எழுந்து கொண்டு "நான் கொண்டு வருகி றேன்" என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றாள்.

கிரண்மயி வந்து நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள். சற்று நேரம் மௌனம்.

"என்ன யோசிக்கிறாய்?"

அவள் திடுக்கிட்டு "ஒன்றுமில்லை" என்றாள்.

அவன் சிரித்துவிட்டு "ஒன்றுமில்லாமல் எப்படி இருக்கும்?" என்றான்.

அவள் கொஞ்ச நேரம் மௌனமாக இருந்துவிட்டு தனக்குள் பேசிக் கொள்வது போல் சொன்னாள். "சில வருடங்களுக்கு முன்னால் இதே காரிடாரில் நான் ஒரு அபூர்வமான காட்சியைக் கண்டேன். கணவனுக்கு மனைவி வெற்றிலையில் சுண்ணாம்பைத் தடவி மடித்து கொடுத்துக் கொண்டிருந்தாள். மிகச் சாதாரணமான காட்சி அது. ஆனால் என் மனதில் ஏனோ ஆழமாக பதிந்து போய்விட்டது. எனக்கு அப்பொழுது தோன்றியது, பணம் இருந்தால்தான் அன்பும், பாசமும் ஏற்படும் என்று. அதையே உங்களிடம் சொன்னபோது, பணத்திற்கும் அன்புக்கும் சம்பந்தம் இல்லைன்னு அப்போ சொன்னீங்க. நினைவு இருக்கிறதா?" அவள் நிறுத்தினாள். "நீங்க சொன்னதுதான் உண்மை என்று எனக்கு இப்பொழுது தோன்றுகிறது. என் அபிப்பிராயம் தவறு."

"அன்று நீ எண்ணியதுதான் சரி கிரண்மயி! இந்த அன்பு என்பது பணத்தால்தான் வருகிறது என்று என்



அனுபவம் எனக்குக் கற்றுக் கொடுத்தது. பணம் இல்லை என்றால்" என்றவன் சற்று நிறுத்தி தாழ்ந்த குரலில் "மனிதன் சகமனிதனை மதிக்க மாட்டான். மனைவி கணவனை மதிக்க மாட்டாள். என் அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்கிறேன்" என்றான்.

"இதென்ன? நான் என்னுடைய அபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டு உங்களுடைய கருத்துடன் ஒத்துப் போக நினைத்தால் நீங்க உங்க அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்வதாவது? எவ்வளவு பணம் இருந்தாலும் அதில் அன்பை தோற்றுவிக்க முடியாது. நான் அனுபவபூர்மாக தெரிந்து கொண்ட உண்மை இது. பணம் கணவன் மனை விக்கு இடையே வேற்றுமையை தோற்றுவிக்கத்தான் பயன் படும்."

"அப்படி ஏன் நினைக்க வேண்டும்? பணம் இல்லா விட்டால் மருத்துவர் நோயாளியை கண்ணெடுத்துப் பார்க்க மாட்டார். பண்பு, படிப்பு எதுவுமே பெண்ணை எந்த விதத்திலேயும் காப்பாற்றாது. கணவன் சகலத்தை யும் துறந்துவிட்டு பர்ணசாலைக்குப் போனால் இந்தக் காலத்தில் எந்த மனைவியும் அவனைப் பின்தொடர மாட்டாள்."

"உங்களுக்குத் தெரியாதா பணம் ஏற்படுத்தும் மாயை யைப் பற்றி?" என்றாள் கிரண்மயி.

"மாயை என்று நீயே சொல்லிவிட்டாய் இல்லையா. பணம் அன்பை ஏற்படுத்துகிறது. அந்த மாயை மட்டும் இல்லை என்றால்..." ஏதோ சொல்ல வந்த சைதன்யா நிறுத்தி விட்டான்.

கதவு அருகில் நின்றபடி இவர்களுடைய உரையாட லைக் கேட்டுக் கொண்டிருந்த சாரதா, சைதன்யா நிமிர்ந்து பார்த்ததும் சட்டென்று சிரிப்பை அடக்கிக் கொண்டாள். ஆனாலும் அது அவன் கண்களில் பட்டு விட்டது.

பணத்தால்தான் அன்பு ஏற்படுகிறது என்ற அவன் வாதம் அனுபவத்தால் உருவானதுதான் என்றாலும், சாரதா அவன்பால் கொண்டிருந்த அன்பு அவனை கிரண்மயியின் வாதத்திற்கு அடிபணிய வைத்துவிட்டது. அதனால்தான் சாரதாவின் மாசற்ற முகத்தைப் பார்த் தவன், அந்த அன்பிற்கு அடிமையாகி பேச்சை நிறுத்தி விட்டான்.

அவன் சாரதாவைப் பார்த்தான். அவளும் அவனையே பார்த்தாள். இருவரின் பார்வையும் கலந்தன.

அதைப் புரிந்துகொண்ட கிரண்மயியின் முகம் சந்தோஷத்தால் மலர்ந்தது.

**நிறைந்தது**

89978